வரு.74 இல. 02 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2022 ஜனவரி 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

January 09 Sunday, 2022

32பக்கங்கள் 40/-

03 இளைஞனின் உயிரைப் பறித்த டிக்டொக் செயலி

06 நெருக்கடியிலிருந்து அரசு புதிய ஆண்டில் மீண்டெழும்!

11 திகனை சின்னப்பர் ஆலய செழுமைமிகு வரலாறு

பொதுநலவாய நாடுகளின் 24 விளையாட்டு விழாவிற்கான கோல் அலரி மாளிகையில்

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அரசினால் நிச்சயமாக நிறைவேற்றப்படும்

கொவிட் சவால்களுக்கு மத்தியில் அரசு எதிர்நீச்சல்

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சவால்களுக்கு மத்தியில் நிச்சயம் நிறைவேற்றுவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாவதகமவில் நிர்மாணிக்கப்பட்ட நீர்விநியோக செயற்றிட்டத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்துரையாற்றிய அவர்,... 04

செல்வம் MPயின் விடாமுயற்சி தொடர்கிறது; ஆவணத்தில் கையெழுத்திடாத கட்சிகளுடன் மீண்டும் சந்திப்பு

மலையக, முஸ்லிம் கட்சிகளுக்கு சந்தர்ப்பம்

இந்திய பிரதமருக்கான ஆவணத்தில் கையெழுத்திடாத தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளும் இணைந்த வகையில் தமிழ்பேசும் கட்சிகள் மீண்டும் சந்திக்கவிருக்கின்றன என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். 04

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரது விபரங்களை வழங்க கோரிக்கை

IGPக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழுத்தம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பிலான தகவல்களை வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ் மாஅதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அதன்படி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பின் வரும் தகவல்களைக் கோரியுள்ளது:

கைது செய்யப்பட்ட இடம், தடுத்து 04

தடுப்பூசி தொடர்பில் பொது மக்களிடையே

தவறான கருத்து, தகவல்களை பரப்புவோர் மீது நடவடிக்கை

தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கடும் சட்ட நடவடிக்கை

தடுப்பூசி திட்டத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் சில குழுக்கள் செயற்படுவதாகவும் சுட்டிக்காட்டு

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் வலியுறுத்தல்

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி வழங்கல் தொடர்பில் தவறான தகவல்களை பரப்புவோருக்கெதிராக தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொரோனா தடுப்பூசி திட்டத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் சில

குழுக்கள் திட்டமிட்டு செயற்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் (Dr. Senal Fernando) டாக்டர் செனல் பெர்னாண்டோ ஊடக 04

ஊடகவியலாளர்களுக்கான கொவிட் மூன்றாவது தடுப்பூசி (பூஸ்டர்) ஏற்றல் நேற்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அலகப்பெரும தடுப்பூசி ஏற்றிக் கொண்ட போது... (படம்: கயான் புஷ்பிக்க)

இந்தியா செல்வோருக்கு 07 நாள் தனிமைப்படுத்தல்

04

08 ஆவது நாள் PCR சோதனையும் அவசியம்

எங்கள் கருத்து...

இணக்கப்பாடின்றி தயாரிக்கப்பட்ட இந்தியப் பிரதமருக்கான ஆவணம்

தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள், நீண்ட கால முடக்க நிலைமைக்குப் பின்னர் கடந்த ஒரு மாத காலமாக வேகம் பிடித்துள்ளமை தமிழ் சமூகத்துக்கு புத்துணர்வை அளிப்பதாக உள்ளது. புதிய அரசியலமைப்பு வரைவு தயாராகி வருவதாக தகவல்கள் கசிந்த பின்னரே, 13 ஆம் திருத்தச் சட்டம் அவ்வரைவில் உள்ளடக்கப்படாமல் போகலாம் என்ற சந்தேகம் தமிழர் தரப்புக்குள் எழுந்துள்ளது.

அதனையொட்டியதாக ரெலோவின் அனுசரணையில் சகல விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு ஆவணத்தைத் தயாரித்து, அதில் சகல தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் கையெழுத்திட்டு பாரதப் பிரதமருக்கு அனுப்பி, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக யாழ்ப்பாணத்திலும் பின்னர் கொழும்பிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பாரதப் பிரதமருக்கான வரைவில் எவற்றை சேர்த்துக் கொள்வது, எவற்றை கைவிடுவது என்பது தொடர்பாக நெடிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு முதல் வரைவுக்கான தீர்மானங்கள் எட்டப்பட்டன.

கடந்த டிசம்பர் 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் ரவூப் ஹக்கீம் மற்றும் மனோ கணேசனும் கலந்து கொண்டிருந்தனர். இந்தியப் பிரதமருக்கான இவ்வரைவு கட்சித் தலைவர்களின் பார்வைக்கு அனுப்பப்பட்ட போது, மலையக மற்றும் முஸ்லிம் சமூகங்களின் நிலைப்பாடுகள் தொடர்பில் போதுமான கரிசனை செலுத்தப்படவில்லை எனக் கருதப்பட்டதால் பிறிதொரு ஆவணம் தயாரிக்கப்பட்டு அதுவும் தலைவர்களின் பார்வைக்காக அனுப்பப்பட்டது. 04

இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவரை விடுவிக்க கோரிக்கை

வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு மு.க. ஸ்டாலின் கடிதம்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்கள் 56 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலைமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

இலங்கை சிறைகளிலிருந்து தமிழ் நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக மத்திய அரசுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், கடந்த 04

சொய்சாபுர தொடர்மாடி வீடொன்றில் தீ

கல்லூரி மாணவன் கருகிப் பலி

சொய்சாபுர தொடர்மாடி குடியிருப்பொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயர்தர மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவில் சொய்சாபுர தொடர்மாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.உயிரிழந்தவர் 19 வயதுடையவராவார்.தீ விபத்திற்கான காரணம் இது வரை கண்டறியப் படாத 04

தோட்டப்பகுதி குடும்பங்களுக்கு 07 பேர்ச் காணி

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏழு பேர்ச் காணியை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே 04

வவுனியாவில் இரு சிறுமிகளை ஏமாற்றிய சஜித் அணியினர்

வவுனியாவில் சஜித்தின் கூட்டத்தில் நடனமாட அழைக்கப்பட்ட இரு சிறுமிகள் ஏமாற்றமடைந்த சம்பவம் ஒன்று நேற்று நிகழ்ந்துள்ளது. 04

லசந்த விக்ரமதுங்கவின் 13ஆவது நினைவு தினம்

மட்டக்களப்பில் நேற்று அனுஷ்டிப்பு

ஆரையம்பதி தினகரன் நிருபர்

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் 13வது ஆண்டு 04

தங்கத்தின் கையிருப்பு பெறுமதியில் வீழ்ச்சி

இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

இலங்கையில் கையிருப்பு தங்கத்தின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, கடந்த டிசம்பர் மாத இறுதியில் தங்கத்தின் கையிருப்பு பெறுமதி 175. 4 மில்லியன் டொலர் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாத இறுதியில், நாட்டின் 04

விக்கல் வீராச்சாமி

மோடி ஐயாவுக்கு ஆவணம் அனுப்பி எந்த பிரயோசனமும் இல்லை, தீர்வு எங்களோடதான் எண்டு அரசாங்கம் கிளியரா சொல்லிவிட் டுதுதானே...

அரசாங்கம் அவசரப்பட்டிருக்க தேவையில்லை , 30 வருவுமா ஒற்றுமைபடாதவ இனி ஒண்டா போவினம் எண்டு நினைக்கிறீங்களே...!!!

TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!

Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS

Anytime Data 1.5GB

மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)

செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்

*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே । நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09

Dialog எதிர்காலம் இன்றே.

நிந்தவூர் மக்கள் வங்கியின் புதுவருட சத்தியப் பிரமாண நிகழ்வு முகாமையாளர் பீ.நசுறுத்தீன் தலைமையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

(நிந்தவூர் தினகரன் விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு கணனிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் மூளாய், சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு கணனிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. யாழ்ப்பாணம் மூளாயை பூர்வீகமாக கொண்ட பிரித்தானியாவைச் சேர்ந்த ராஜபட்சம் சிறிரங்கபட்சம் கணணிகளை பாடசாலைக்கு அன்பளிப்பு செய்தார். பாடசாலை அதிபர் சிவமலர் தலைமையில் இந்நிகழ்வு பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த இவர் பாடசாலை அதிபருடன் கலந்துரையாடி பாடசாலைக்கு தேவையானவற்றை தெரிந்து, அதில் மாணவர்களுக்கு தேவையான கணனிகளை அன்பளிப்புச் செய்துள்ளார். கிராம மட்டத்தில் மிகவும் பின்தங்கிய பாடசாலையாக இருந்தபோதும்கூட தகவல் தொழில்நுட்ப பாடத்தில் இப்பாடசாலை மாணவர்கள் அதிசிறந்த பெறுபேறுகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதும் குறிப்பிடத்தக்கது.

(யாழ்ப்பாணம் குறூப் நிருபர்)

பிரம்மாண்டமான மாற்று மோதிர மணப்பெண் கண்காட்சி கொழும்பில்...!

அரிது அரிது மானிடராய் பிறப்பதரிது என்பது ஔவை சொல். ஆனால் அதிலும் அரிது என்ன தெரியுமா? இந்த காலத்தில் ஒரு நல்ல வாழ்க்கைத்துணையை தேர்ந்தெடுப்பதுதான். இந்த வாழ்க்கை அனைவருக்கும் ஒரு முறைதான் என்றால் அவ் வாழ்க்கையில் நம்மோடு இணையப்போகும் வாழ்க்கைத்துணை எவ்வாறிருக்க வேண்டும் என்ற கற்பனைகள் கொஞ்சம் அதிகம் தான். வாழ்வோடு இணைந்து பயணிக்கும் வாழ்க்கைத் துணையாக வரும் எதிர்பாலினம் சிறப்பாக அமைந்துவிட்டால் நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு தருணமும் சிறப்பானதே. அப்படிப்பட்ட வாழ்க்கைத் துணையை அமைத்து கொடுத்து பலரின் வாழ்க்கையை அழகான தருணங்களாக மாற்றி பல வருடங்கள் கடந்தும் மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று தம் சேவையை பரந்துபட்டளவில் வியாபித்து வருகிறது அருந்ததி இணைய திருமண சேவை. 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போது வரை அதன் சேவை பல வாடிக்கையாளர்களின் நல் வாழ்க்கைக்கு வழியமைத்துள்ளது.

திருமணமென்பது அனைவரினதும் வாழ்க்கை நெறியாகும். குறிப்பாக தமிழர்களுக்கு அது இன்றியமையாததொன்றே. ஆகையால் இலங்கை வாழ் தமிழர்களை மையப்படுத்தி அவர்களின் திருமண தேடலை எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்து வருவது அருந்ததி என்றால் அதற்கு மிகையாகாது.

ஏனைய திருமண சேவைகளிலிருந்து சற்று மாறுபட்ட வண்ணமாக திருமணத்திற்காக வாழ்க்கைத் துணை தேடலை இலகுபடுத்துவதோடு நின்றுவிடாமல் திருமணமொன்று இனிதே நிறைவுபெற தேவையான அனைத்து திருமண சேவைகளையும் வாடிக்கையாளருக்கு வழங்கி வருகின்றது.

இணைய வழியிலான வரன் தேடல் சேவையுடன், திருமணக்கண்காட்சி, மணப்பெண் அலங்கார கண்காட்சி என பன்முகப்பட்ட நிகழ்வுகளை நடைமுறைப் படுத்திவருகிறது. அப்படி மேற்கொள்ளப்பட்டு வரும் அருந்ததியின் பிரபலமான நிகழ்வுகளில் ஒன்று தான் 'மாற்று மோதிரம் திருமணக் கண்காட்சி'. ஒவ்வொருவருடமும் வெகுவிமர்சையாக நடைபெறும் இந்நிகழ்வு இவ்வருடமும் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளது. அனைவரும் ஆவலோடு காத்திருந்த அருந்ததியின் 'மாற்று மோதிரம்' மணப்பெண் அலங்கார காட்சி மற்றும் ஏனைய பல சிறப்பு நிகழ்வுகளோடு நடைபெறவுள்ளது. இன, மத, மொழி பேதமின்றி நாடுபூராகவுமுள்ள 50 இற்கும் மேற்பட்ட நிபுணத்துவம் வாய்ந்த அழகுக்கலை நிபுணர்கள் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வு தொடர்ந்தும் வெற்றிகரமாக நடைபெறும் என்பதற்கு சான்று அருந்ததியின் மேல் நம்பிக்கை வைத்து பங்களிப்பு செய்த திருமண சேவை வழங்குனர்கள், அழகுக்கலை நிபுணர்கள் ,வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தான். அதிலும் குறிப்பாக இந் நிகழ்வின் பிரதான அனுசரனையாளர்களாக Sri Vijayas ஆடையகம் மற்றும் Joy Glorious நகையகமும் சாரி ப்ளவுஸ் மற்றும் ஆரி வேலைப்பாடுகளுக்காக The Beads அலங்கார வேலைப்பாடுகளுக்காக Shahana Flowers மற்றும் புகைப்பட ஒழுங்கமைப்புகளுக்கு 3ADS Photography யும் இந் நிகழ்விற்கு உத்தியோகப்பூர்வ அனுசரனையாளர்களாக கரம் கோர்த்துள்ளனர்.

இருமணம் இணையும் திருமணத் தேடலை இலகுவாக்கும் அருந்ததி...!

மாவனல்லை கல்வி வலயத்தில்முறைசாரா கல்விப் பிரிவினர் நடத்திய ஆடை தயாரிப்பு பாடநெறியைப் பூரணப்படுத்தியோர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் பதுரியா கல்லூரியில் நடைபெற்றது. மாவனல்லை பிரதேச சபை உறுப்பினர் அப்துல் கப்பார், கிருங்கதெனிய பள்ளிவாசல் நிர்வாக சபையின் செயலாளர் டாக்டர் எம் .ரமீஸ், பதுரியா கல்லூரி பிரதிஅதிபர் ஏ.ஏ.நஸார் , செயற்திட்டப் பொறுப்பாளர் திருமதி. ஐன் இஸ்ஸதீன் உட்பட வலயக் கல்வி அலுவலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இளைஞனின் உயிரைப் பறிக்கக் காரணமான டிக்டொக் செயலி

வெல்லம்பிட்டி இளைஞனின் மரணத்தில் தொடரும் மர்மம்

இளமைப் பருவத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் பிள்ளைகள் செய்யும், சொல்லும் சில விடயங்கள் தொடர்பில் அவர்களுக்கே போதிய புரிதல் இருக்காது. சில நேரங்களில் அவை வன்முறையில் முடியும் . சில நேரங்களில் அமைதியின்மையில். வெல்லம்பிட்டி, சேதவத்தை வீதி, இல. 17/1 ம் இலக்க வீட்டில் வசித்த 17 வயதுடைய அப்துல் லத்தீப், இளைஞர்கள் மத்தியில் அதிகளவில் பிரபலமாகியுள்ள டிக் டொக் (Tik Tok) சமூக ஊடகத்துக்கு அதீத விருப்புக் கொண்ட ஒருவராகும். டிலா என்ற பெயரில் டிக் டொக்கில் பிரபலமடைந்துள்ள அப்துல் லத்தீப் கடந்த 3ம் திகதி மாலை படுகொலை செய்யப்பட்டார். கிராண்ட் பாஸ் பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி டி. ஜே. பீ. ஹேரத் தலைமையிலான கொழும்பு வடக்கு பிரிவின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் லத்தீபின் கொலையுடன் தொடர்புடைய ஆறு பேர் கடந்த 4ம் திகதி கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 14, 15 மற்றும் 16 ஆகிய வயதுகளையுடைய சந்தேக நபர்கள் வெலிகொட, பர்கியுஷன் வீதி மற்றும் ஹேனமுல்ல முகாமை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகும்.

கைது செய்யப்பட்ட சிறு வயது சந்தேக நபர்கள் ஆறு பேரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் திருமதி காஞ்சனா நெரஞ்சனி சில்வா உத்தவிட்டிருந்தார். இதனடிப்படையில் சந்தேக நபர்கள் 7ம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். அதுவரைக்கும் பாதுகாப்புடன் மாகோல சிறுவர் இல்லத்தில் தடுத்து வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அப்துல் லத்தீப் அதிகளவு வருமானம் இல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவராகும். லத்தீபின் தந்தை இறைச்சிக் கடை ஒன்றில் பணியாற்றுகின்றார். 39 வயதுடைய சித்தி பஸ்மிலா லத்தீபின் தாய்.

17 வயதுடைய லத்தீபுக்கு 22 வயதுடைய அப்துல் ரஸ்ஸாக், 15 வயதுடைய அப்துல் அஸீஸ் மற்றும் ஒரே ஒரு சகோதரியான 8 வயதுடைய பாத்திமா ஸபா ஆகிய சகோதர, சகோதரிகள் உள்ளனர். லத்தீபின் மூத்த சகோதரன் அப்துல் ரஸ்ஸாக் பேலியாகொடையில் பணியாற்றி வருகின்றார்.

கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரியில் 10ம் வகுப்பு வரை கல்வி கற்ற லத்தீப், முதலில் முச்சக்கர வண்டி திருத்துமிடத்தில் தொழிலுக்குச் சேர்ந்தார். அழகிய தோற்றமுடைய லத்தீப் கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்னர் "வன் கோல்பேஸ்"ல் தொழிலுக்குச் சென்றாலும் அதுவும் கடந்த 31ம் திகதியின் பின்னர் தடைபட்டுப் போயுள்ளது.

லத்தீப் இற்றைக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னரிலிருந்து டிக் டொக் உடன் இணைந்துள்ளார். கடந்த ஒரு வருட காலமாக காலத்திற்கு காலம் இணையத்தில் பிரபலமடையும் பாடல்களுக்கு நடனமாடி அதனை வீடியோ ஒளிப்பதிவு செய்து டிக் டொக்கில் பதிவறே்றி பிரபலமடைந்துள்ளார்.

ஒரு நாள் லத்தீப் தனது தாயிடம், "அம்மா... நான் ஜனவரி முதலாம் திகதி நண்பர்களுடன் ட்ரிப் ஒன்று போகப் போகிறேன்.... ஒவ்வொருவரும் 1500 ரூபாய் செலுத்த வேண்டும்...." எனக் கூறியுள்ளார்.

அதற்கு தாய் பஸ்மிலா, "மனதுக்கு பயமாக இருக்கு மகனே... இந்நாட்களில் அதிகமானவர்கள் எப்போதும் மது அருந்திக் கொண்டல்லவா இருப்பார்கள்.... கவனமாகப் போய் வாருங்கள்....." எனக் கூறியிருக்கின்றார்.

புது வருடப் பிறப்பான கடந்த முதலாம் திகதி லத்தீப் காலை 7.30 மணியளவில் பயணப் பையொன்றையும் எடுத்துக் கொண்டு காலி, மாத்தரை, கண்டி போன்ற பிரதேசங்களுக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்வதாக வீட்டில் கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இரண்டாம் திகதி மாலை 6 மணிக்கு வீட்டுக்கு வந்துள்ள லத்தீப், வந்த உடனேயே பயணக் களைப்பினால் தூங்கச் சென்றுள்ளார்.

3ம் திகதி காலையில் தான் வீட்டிலிருந்து வெளியே சென்ற போதும் லத்தீப் உறங்கிக் கொண்டிருந்ததாக லத்தீபின் தாய் பஸ்மிலா கூறியுள்ளார். லத்தீபின் தாய் தனது மகளது பாடசாலைக்குச் சென்று 12.30 மணியளவில் மீண்டும் வீட்டுக்குத் திரும்பி வந்த போது லத்தீப் வீட்டுக்கு அருகில் உள்ள பாலத்தின் கீழ் இன்னும் இரண்டு நண்பர்களுடன் நின்றுள்ளார்.

அந்நேரம் லத்தீபைக் கண்ட தாய் பஸ்மிலா, "மகனே.... அண்ணாவுக்கு சாப்பாட்டைக் கொண்டு போய் கொடுத்துவிட்டு வர முடியுமா?" எனக் கேட்டுள்ளார். "நான்தான் எப்போதும் முத்த மகனுக்கு சாப்பாட்டைக் கொண்டு போய் கொடுப்பேன்" எனக் கூறிய லத்தீபின் தாய், "என்றாலும் அன்று நான் அப்படி லத்தீபினிடம் கேட்டு விட்டேன்.... ஐயோ நான் அன்று அவ்வாறு கேட்டிருக்க கூடாது...." என அழுது புலம்பினார்.

கெதியா சாப்பாட்டு பார்சலைத் தாருங்கள் என தாயை வற்புறுத்திய லத்தீப், சாப்பாட்டு பார்சலைப் பெற்றுக் கொண்டு தனது நண்பர்கள் இருவருடன் முச்சக்கர வண்டியில் ஏறி தனது மூத்த சகோதரனுக்கு கொடுப்பதற்காக பேலியாகொடை டீ. எச். எல் நிறுவனத்திற்கு அருகில் சென்றுள்ளார். சாப்பாட்டுப் பார்சலைப் பெற்றுக் கொண்ட சகோதரன், "அம்மா கோல் பண்ணினார்.... கவனமாக உடனே வீட்டுக்குச் செல்லுங்கள் தம்பி...." என தனது சகோதரனிடம் கூறியுள்ளார்.

எனினும் லத்தீப் தனது நண்பர்களுடன் பேலியாகொடையிலிருந்து தொட்டலங்கவிற்கு நடந்து சென்றுள்ளார். அப்போது நேரம் பகல் 1.30 மணியாகியிருந்தது.

லத்தீபின் இரு நண்பர்களான அப்துல் ரஸாக் மற்றும் முஹம்மது மாஹிர் ஆகியோர் லத்தீபின் வயதையொத்தவர்களாகும். ரஸாக் சேதவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர். மாஹிர் அதற்கு அண்மித்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றாலும் தற்போது வசிப்பது திஹாரியிலாகும். எனினும் அவரது சித்தி மாதம்பிட்டி ரந்திப உயனவில் வசித்து வந்துள்ளார்.

சகோதரனுக்குச் சாப்பாட்டுப் பார்சலை வழங்கிவிட்டு தொட்டலங்கவுக்கு வந்த லத்தீப் மீண்டும் வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானார். இரு நண்பர்களும் மாதம்பிட்டி சந்திக்கு வந்து மஹவத்தை வீதியில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தமிழ் வித்தியாலய திசையில் சென்றுள்ளார். எவ்வாறாயினும் லத்தீப் வீட்டுக்குச் செல்லாமல் டவல சின்னா வீதிக்குச் சென்று கஞ்சி அருந்தியுள்ளார். அங்கு மாஹிரும் கஞ்சி அருந்தியுள்ளார். பின்னர் ரஸாக்கும் பாடசாலைக்குச் சென்று திரும்பி அவ்விடத்திற்கு வந்து கஞ்சி அருந்தியுள்ளார். அவர்கள் மூவரும் அவ்விடத்தில் கஞ்சி அருந்திக் கொண்டிருந்துள்ளர்.

கஞ்சி அருந்திய மூவரும் ஹேனமுல்ல ரந்திப உயனவில் வசிக்கும் மாஹிரின் சித்தியின் மாடி வீட்டுத் தொகுதிக்குச் சென்று கொண்டிருந்த போது அவர்களுக்குப் பின்னால் இருவர் பின் தொடர்ந்துள்ளனர். அவர்களுக்குப் பின்னால் மேலும் நால்வரும் பின்தொடர்ந்துள்ளனர். . அவ்வாறு வந்தவர்களில் ஒருவர் "டிக் டொக் வீரர்" எனக் கூறியவாறு லத்தீபின் கழுத்தில் தாக்கியுள்ளான்.

அதன் பின்னர் லத்தீப் உள்ளிட்ட மூவரும் இடுப்பிலிருந்து பெல்ட்டைக் கழற்றி அவர்களைத் தாக்க ஆயத்தமாகியுள்ளனர்.

லத்தீபை தாக்கிய நபரின் கையில் கத்தி ஒன்று இருந்துள்ளது. உடனே அவன் லத்தீபுக்கு அருகில் சென்று லத்தீபின் வயிற்றைக் குத்திக் கிழிக்குமளவுக்கு கத்தியால் குத்தியுள்ளான்.

கத்திக் குத்தினை மேற்கொண்டவர்கள் ஹேனமுல்ல கேம்பஸ் (குடியிருப்பு) திசையில் ஓடத் தொடங்கியுள்ளனர். மாஹிர் அவர்களைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்றுள்ளார். அந்த வழியே சென்ற முச்சக்கர வண்டியை நிறுத்தி அதில் லத்தீபை ஏற்றிக் கொண்டு வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக தொட்டலங்க சந்திக்குச் சென்றுள்ளனர். அங்கு அதிக வாகன நெரிசல் காணப்பட்டுள்ளது. அவ்விடத்தில் போக்குவரத்து கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம், லத்தீபுக்கு ஏற்பட்ட பிரச்சினை பற்றி கூறியதன் பின்னர் 1990 இலக்க அவசர அம்புலன்ஸ் சேவை வண்டியில் லத்தீப் தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்து பிரவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார். லத்தீபுடன் 1990 அம்புலன்ஸ் வண்டியில் ஏறிச் சென்ற மாஹிர் மற்றும் ரஸாக் ஆகியோர் லத்தீபுக்கு மேற்கொள்ளப்பட்ட அநீதி தொடர்பில் லத்தீபின் தாயிடம் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு தெரிவித்திருந்தனர்.

லத்தீபின் உயிரைக் காப்பாற்ற வைத்தியர்கள் பலத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் மாலை 4.20 மணியளவில் இவ்வுலக வாழ்க்கைக்கு விடை கொடுத்தார்.

லத்தீப் அதிகளவில் நேசித்த டிக் டொக் செயலிக்கு இன்று வரையில் சுமார் 2 பில்லியன் பயனாளர்கள் உள்ளனர்.

2017 மற்றும் 2018 ஆண்டுகளில் திடீர் அலையாக உருவான டிக் டொக் என்பது ஒரு நிமிடத்திற்கும் குறைந்த நேரத்தில் வீடியோக்கள் மூலம் பல்வேறு விடயங்களை பதிவிடக் கூடிய ஒரு கைபேசி செயலியாகும். இதிலுள்ள பிரதான அம்சம் பிரபலமான பல்வேறு வகையான பாடல்களுக்கு நடனம் ஆடுவதாகும். டிக் டொக் இந்தியா, அமெரிக்கா, பிரேசில், இந்தோனேசியா, குவைட் உள்ளிட்ட பல நாடுகளால் தடை செய்யப்பட்டுள்ள செயலியாகும். (Mobile app)

எப்படியோ, டிக் டொக் செயலி மீது அதிக ஈடுபாடு கொண்ட லத்தீபின் சிறந்த டிக் டொக் நண்பர் அவரது வயதையொத்த நாகலசந்தியில் வசிக்கும் டிக் டொக்கில் கஸ்ஸா (Kassa) என்ற பெயரில் புகழ்பெற்ற கசுன் என்ற இளைஞராகும். கடந்த நத்தார் தினமே இவர்கள் இருவரும் இணைந்து வீடியோ எடுத்த கடைசி நாளாகும். ஹேனமுல்ல மாடி வீட்டுத் தொகுதியே லத்தீப் குழுவினர் அதிகமாக டிக் டொக் வீடியோ பதிவு மேற்கொள்ளும் இடம் என கசுன் கூறியுள்ளார். கசுன் தனது நல்ல நண்பர் லத்தீபை பற்றி இவ்வாறு எம்மிடம் கூறினார்.

"லத்தீபும் நானும் சிறு வயதிலிருந்தே நண்பர்கள்.... நாம் இருவரும் டிக் டொக் செயலியுடன் ஒரு வருடத்திற்கு முன்னரே இணைந்திருந்தோம்.... நாம் காலத்திற்கு காலம் பிரபலமாகும் பாடல்களுக்கு நடனம் ஆடுவோம்..... அதிகமான வீடியோக்கள் எடுத்தது ஹேனமுல்ல மாடி வீட்டுத் தொகுதிக்குச் சென்றுதான்.... கடைசியாக வீடியோ எடுத்தது டிசம்பர் 25ம் திகதியாகும்...."

லத்தீப் டிக் டொக் மீது அதிக ஆர்வம் கொண்டிருந்தார். அவரின் தேவை அதிகளவிலான "லைக்" எடுப்பதாகும். வீடியோக்களுக்கு ஒரு மில்லியன், இரண்டு மில்லியன் "லைக்" களைப் பெறுவதற்கு விரும்பினார்.... லத்தீப் டிக் டொக்கில் பிரபலமடைவதற்கு நான் அவருக்கு அதிகளவில் ஒத்துழைப்பை வழங்கியிருக்கின்றேன்.... உண்மையைச் சொல்லப் போனால் எனது உயிரைப்போன்ற என் நண்பரை நினைக்கும் போது அதிக வேதனையாக உள்ளது.... நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றல்லவா இடம் பெற்றிருக்கிறது...." லத்தீபின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்த விடயங்களுக்கு அமைய, இரண்டு மாதங்களுக்கு முன்னர் மோதரை கடற்கரையில் வைத்து இடம்பெற்ற வாய்த்தர்க்கமே லத்தீபின் கொலைக்கு காரணமாக அமைந்துள்ளமை தெரியவந்துள்ளது. பின்னர் லத்தீபும், அவரது நண்பர்கள் இருவரும் கடந்த 3ம் திகதி ரந்திப உயன அடுக்குமாடி வீட்டுக்குச் செல்லும் வழியில் சந்தேக நபர்களை எதேச்சையாகச் சந்தித்துள்ளனர். பின்னர் சந்தேக நபர்கள், இவர்கள் மூவரையும் தாக்குவதற்கு திட்டங்களுடன் வந்துள்ளனர். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர்களுள் ஒருவரிடமிருந்த கத்தியினால் லத்தீபின் வயிற்றுப் பகுதியைக் கிழித்துச் செல்லுமளவுக்கு குத்தியிருப்பது தெரிய வந்துள்ளது. கத்திக் குத்தினை மேற்கொண்ட 16 வயதுடைய சந்தேக நபர் அந்தக் கத்தியை கடந்த 31ம் திகதி புறக்கோட்டையில் வாங்கியிருப்பதும் தெரியவந்துள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

அமில மலவிசூரிய...✍
தமிழில்: எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

பொருளாதாரத்தை தயார் செய்வது நமது பொறுப்பு

பொருளாதார பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண பொதியொன்றை வழங்குவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அரச ஊழியர்கள், ஓய்வூதியகாரர்கள், சமுர்த்தியாளர்கள் மற்றும் யுத்தத்தில் உயிர்த் தியாகம் செய்த பாதுகாப்பு பிரிவினர் அதில் அடங்குவார்கள். தோட்ட மக்களுக்கு கோதுமை மாவை சலுகை விலையில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்து வகைகளுக்கு விதித்திருந்த வரி முற்றாக நீக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு பிரச்சினையாக உள்ள வேளையில் கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வருமானம் குறைந்துள்ள மக்களுக்கு அவசியமான உதவியை வழங்கியுள்ளமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

நிவாரணங்களை பெற்ற மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பொருட்களின் விலையேற்றம் மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக காணப்பட்ட மக்களின் அதிருப்தி தற்காலிகமாக குறைந்திருக்கும். நிவாரணத்தோடு எழுந்துள்ள இன்னொரு பக்கமும் உண்டு. இந்த நிவாரணத்தை எவ்வாறு வழங்குவது? தேசிய வருமானம் பலவீனம் அடைந்துள்ள சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்பட்ட நிவாரணத்துக்கான பணத்தை உடனடியாக பெற்றுக்கொள்ள வேண்டி நேரிடும்.

அரச வருமானத்தை விரைவாக ஈட்டுவதற்கு வரியை அதிகரிப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. நேரடியாகவோ மறைமுகமாகவோ வரி திருத்தத்தை மேற்கொள்ள நேரிடும். இந்த வரியையும் துயரப்படும் பொது மக்களே செலுத்த வேண்டி நேரிடும். வரி விகிதத்தை இன்னுமொரு தடவை அதிகரிக்க வேண்டிய அவதானமுள்ள பின்னணியில் அன்றாட வாழ்க்கைச்சுமை சுமக்க முடியாத விதத்தில் மேலும் அதிகரிக்கும் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். நிவாரணத்துக்காக செலவிடப்படும் பணம் காரணமாக பணவீக்கம் ஏற்படும். அதற்கு முகம் கொடுக்கும் வகையில் உருவாகும் பொருளாதாரம் நடுத்தர மற்றும் வறிய மக்களை மேலும் பிரச்சினைக்குள் தள்ளும் அபாயமுள்ளது. எதிர்வரும் மாதங்களில் அதன் பலன் தெரியும். பாதாளத்திலிருந்து அதலபாதாளத்தில் விழுவதற்கு முன்னர் அதிலிருந்து மீளும் வழியை கண்டு பிடிப்பது அவசியமாகும். பிரபலமான முடிவுகளால் உடனடி லாபம் கிடைக்கக் கூடும். பொருளாதார வளர்ச்சியை நோக்காகக் கொண்டு கடுமையான முடிவுகளை எடுக்காவிட்டால் எற்படக் கூடிய மோசமான விளைவுகளையும் எதிர் கொள்ள நேரிடும்.

அரசின் பொருளாதார திட்டங்கள் கடினமான இடத்திலுள்ளது என்பதை மறந்து விடக்கூடாது. உள்ளேயும் மற்றும் வெளியேயும் என கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளது. அரச வருமானம் குறைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டம் அதற்கு சாட்சியாகும். அபிவிருத்தி திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அரச கட்டட நிர்மாணங்கள் கூட நிறுத்தப்பட்டுள்ளன. அரச வேலைவாய்ப்பு வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளது. அந்நியசெலாவணி தட்டுப்பாடு வெளியிலிருந்து வந்துள்ள அழுத்தமாகும். வெளிநாட்டு கையிருப்பு குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு கூட செலாவணி பற்றாக்குறை உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அரச வருமானம் குறைந்துள்ள, அந்நிய செலாவணி கையிருப்பு குறைவாகவுள்ள சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணம் 2022 ஆம் ஆண்டில் மொத்த பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

தற்போதுள்ள பன்முகத்தன்மை கொண்ட கட்டமைப்பிலிருந்து விடுபட புதிய நடவடிக்கைகள் அவசியம். வரியை அதிகரிக்காமல் அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. நாட்டிற்கு அதிக சந்தர்ப்பங்கள் இல்லை. அந்நிய செலாவணி கையிருப்பை வலுவானதாக்க வேண்டும். அவ்வாறான மாற்றத்திற்கு தேவையான உதவி உலகின் வேறெந்த நாட்டிலிருந்தும் கிடைக்காது. எல்லா நாடுகளும் கொவிடின் பிடியில் சிக்கியுள்ளன. சிரமப்பட்டு உழைக்க வேண்டும். உற்பத்தியை பெருக்க வேண்டும். மனித வளத்தை சரியான முறையில் உபயோகப்படுத்த வேண்டும். காணி,கடல்வளம்,மின்சாரம் போன்ற பிரிவுகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். உற்பத்தியை அதிகரிப்பதோடு அவற்றை உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய விதம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் வேளையில் தேவையான நிதியை பெற்றுக் கொள்வதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். வருமானத்தை பெருக்காவிட்டால் கடன் சுமை மேலும் அதிகரிக்கக் கூடும். எதிர்காலத்தில் மேலும் பிரச்சினையை ஏற்படுத்தக் கூடும். கடனை செலுத்தக் கூட வசதியில்லாத சந்தர்ப்பத்தில் உள்ள நாம் அவ்வாறான பக்கங்கள் குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டும். பொருளாதாரம் ஒருபக்கத்துக்கு வழங்கும் தீர்வு இன்னொரு பக்கத்துக்கு எதிர் பாராத விளைவுகளை ஏற்படுத்துவதோடு அதன் பலன் மோசமானதாக அமையக் கூடும். கடினமான சந்தர்ப்பங்களில் பொருளாதாரத்தை கட்டுப்படுத்துவது இலகுவான காரியமல்ல. செலவை குறைக்க வேண்டியதோடு உடனடியாக செய்யவேண்டிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளுக்கு அப்பால் எடுக்கப்படும் முடிவுகளில் ஆபத்து உள்ளது.

தமிழில்: வீ.ஆர். வயலட் ✍

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் 123 ஆவது ஜனன தின நிகழ்வுகள் நேற்று கொழும்பு காலிமுகத்திடலுக்கு முன்பாக அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு முன்பாக நடைபெற்றது. அன்னாரின் புதல்விகளான முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுனேத்ரா பண்டார நாயக்க ஆகியோர் மலரஞ்சலி செலுத்திய போது... (படம் ருக்மல் கமகே, துஷ்மந்த மாயாதுன்ன)

15 அடி பள்ளத்தில் வீழ்ந்து பஸ் விபத்து

சாரதிக்கும் நடத்துனருக்கும் காயம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

ஹற்றன், சலங்கந்தை பகுதியில் தனியார் பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி 15 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதியும், நடத்துனரும் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று (08) காலை 8.30 மணியளவில், சலங்கந்தை பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமையில் வைத்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

சலங்கந்தை பஸ் தரிப்பிடத்துக்கு பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இயந்திரக் கோளாறு காரணமாகவே விபத்து இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது. இவ்விபத்து தொடர்பில் ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நடிகர் ரொபின் பெர்னாண்டோ காலமானார்



சிங்கள திரைப்பட நடிகர் ரொபின் பெர்னாண்டோ தனது 84ஆவது வயதில் நேற்று (08) காலமானார்.

சிங்களத் திரைப்படங்களின் ஸ்டண்ட் நடிகராகவும் ஸ்டண்ட் மாஸ்டராகவும் பிரபல்யம் அடைந்திருந்த அவர் ஆரம்ப காலத்தில் சில திரைப்படங்களில் வில்லனாகவும் நடித்தவர் மட்டுமல்லாமல் திரைப்பட தயாரிப்பாளராக ஆக்ஷன் திரைப்படங்களின் இயக்குநராகவும் இருந்துள்ளார்.

அத்துடன் தொலைக்காட்சியில் அறிமுகமான பின்னர் பிரபல தொலைக்காட்சி நாடங்களிலும் நடித்துள்ளார்.

இறுதிக் கிரியைகள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா செல்வோருக்கு 07 நாள் தனிமைப்படுத்தல்

08 ஆவது நாள் PCR சோதனையும் அவசியம்

வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் அனைத்து பயணிகளும் கட்டாயம் 7 நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 8 வது நாள் கோவிட் பரிசோதனை செய்துக்கொள்வது கட்டாயம் எனவும் இந்திய சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பரிசோதனையில் கோவிட் தொற்றி இருப்பது உறுதியானால் மேலும் 7 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒமிக்ரோன் வைரஸ் திரிபு இந்தியாவில் வேகமாக பரவி வருவதுடன் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிரித்துள்ளது. இதனை கவனத்தில் கொண்டு இந்திய அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

பிரபல சமூக சேவையாளரும், வத்தளை அருண்மாணிக்கவாசகர் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகரும், தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது உழைத்தவருமான வத்தளை அருன்பிரசாத் மாணிக்கவாசகம் கடந்த புதன்கிழமை(5) காலமானார். அன்னாரது இறுதிச்சடங்கு நேற்று பொரளை கனத்தையில் நடைபெற்றது. கொழும்பு 4 லொரீஸ் வீதியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பூதவுடலுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஸ்வரம், மனோ கணேசன் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். படம்: கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்

சொய்சாபுர தொடர்மாடி வீடொன்றில்...

நிலையில், கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தீ விபத்தில் உயிரிழந்த மாணவன் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்பதோடு, பெப்ரவரி மாதம் நடைபெறவிருந்த கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் தோற்றவிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களது...

வைக்கப்பட்ட இடம் மற்றும் கைது செய்யப்பட்ட நேரம் பற்றி 48 மணி நேரத்துக்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கவும். கைதிகளை விடுவிப்பது அல்லது பிற தடுப்புக்காவல் இடங்களுக்கு மாற்றுவது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தங்கத்தின் கையிருப்பு...

தங்கத்தின் கையிருப்பின் பெறுமதி 382.2 மில்லியன் டொலராக காணப்பட்டது. இதன்படி, 206.8 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கம், மத்திய வங்கியினால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தங்கத்தின் கையிருப்பு 54 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்துள்ளதாக மத்திய வங்கியின் புதிய தகவல்களின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கம், கடந்த டிசம்பர் மாத இறுதியில் 3,137.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும், நவம்பர் மாத இறுதியில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கம் 1,588.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இரு சிறுமிகளை...

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த சஜித் பிரேமதாச பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார்.

அத்துடன் பொதுமக்களுடனான அரசியல் நிகழ்வொன்று மாலை 3.30 மணியளவில் வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், எதிர்க்கட்சி தலைவர் உரையாற்றி முடிந்ததும் கூட்டம் நிறைவடைந்தது. இதனையடுத்து, வெலிஓயா பகுதியில் இடம்பெறும் மற்றொரு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அவர் சென்றிருந்தார். பொது மக்களும் கலைந்து சென்றுவிட்டனர்.

குறித்த நிகழ்வில் நடனமாடுவதற்காக இரு சிறுமிகள் தயார்ப்படுத்தப்பட்டிருந்தனர்.

எனினும் கூட்டம் முடிவடைந்து அனைவரும் சென்றமையால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். எனினும் அவர்களது மனம் புண்படாத வண்ணம், அவர்களது நடன நிகழ்வு ஒரு சிலருடன் நடைபெற்றது,

எங்கள் கருத்து...

இணக்கப்பாடின்றி தயாரிக்கப்பட்ட இந்தியப் பிரதமருக்கான ஆவணம்...

எனினும் தமிழரசுக் கட்சி அதை நிராகரித்ததால் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. இதையடுத்து கடந்த முதலாம் திகதி சுமந்திரனின் கொழும்பு இல்லத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இறுதி வரைபு முடிவு செய்யப்பட்டு தலைவர்களின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. தற்போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் அதில் கையெழுத்திட்டு விட்டார். அடுத்த சில தினங்களில், 'தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதும் இலங்கை இந்திய ஒப்பந்தமும்' என்ற தலைப்பிலான இந்த ஆவணம் இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டு பாரதப் பிரதமரின் பார்வைக்கு அனுப்பப்படவுள்ளது.

சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தோடு தலைமன்னாரில் இருந்து இராமர் பாலம் வரை படகில் சென்று பார்வையிட்டுத் திரும்பியதையும், பின்னர் "இது முடிவல்ல; ஆரம்பம் மட்டுமே" எனக் கூறியதும் இந்தியாவினால் அரசியல் ரீதியாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்குமென்பதில் ஐயமில்லை. அதேசமயம் சீன வெளிவிவகார அமைச்சரும் இலங்கைக்கு வருகை தந்திருக்கிறார் என்பதும் கவனத்திற்குரியது.

இப்பின்னணியில் இலங்கை தமிழ் பேசும் சமூகத்தின் பிரச்சினைகளை இந்திய அரசிடம் தெரிவித்து இலங்கை அரசுக்கு அழுத்தம் தரச் சொல்வதற்கான சரியான தருணம் இது என்று தமிழ்த் தலைவர்கள் கருதியதில் தவறிருக்க முடியாது. ஆனால் இந்த ஆவணம் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பதாக இல்லை என்பது வருத்தத்துக்குரியது என்பதோடு, இது இனப்பிரச்சினை வரலாற்றில் மற்றொரு வரலாற்றுத் தவறாகவும் அமையவுள்ளது.

இந்த இறுதி ஆவணத்தில், மலையக சமூகத்தின் பிரதிநிதியாக செயல்பட்ட மனோ கணேசனும், முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதியாக ரவூப் ஹக்கீமும் கையெழுத்திடவில்லை. அச்சமூகங்களின் அபிலாஷைகளை உள்ளடக்குவதில் பிரச்சினைகள் தோன்றியதாலும், உள்ளடக்குவது தொடர்பாக தொடர்ந்து பேசுவதால் காலதாமதம் ஏற்படும் என்பதாலும் மனோவும் ஹக்கீமும் விலகிக் கொண்டு வெளியில் இருந்து ஆதரவு தருவதாக நல்ல உள்ளத்துடன் கூறியிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களின் போராட்டங்களுக்கும் உரிமைகளுக்கும் தொடர்ந்து மலையக மக்கள் ஆதரவு தந்திருப்பதாகவும், அதைத் தொடர்ந்து நல்குவோம் என்றும் மனோகணேசன் கூறியுள்ளார்.

மேலும் வடக்கின் சில முக்கிய தமிழ்க் கட்சிகளும் இந்த ஆவணத்தில் கையெழுத்திடவில்லை.வடக்கில் மேற்கொள்ளப்பட்ட அஹிம்சைப் போராட்டங்களும் ஆயுதப் போராட்டங்களும் இலக்கை ஏன் அடையத் தவறின என்பதற்கான காரணம், தமிழ் மக்களின் ஒட்டுமொத்த குரலாக அது அமையவில்லை என்பதுதான். இதுதான் தமது நிலைப்பாடாக இருக்கும் என்பதை முன்னரே புரிந்து கொண்டு தமிழ்க் கட்சிகள் மனோ, ஹக்கீமை சேர்த்துக் கொள்ளாமல் விட்டிருக்கலாம். மனக்கசப்பு ஏற்பட்டிருக்காது. எனினும் 'ஒன்றுபட்டால் மட்டுமே உண்டு வாழ்வு' என்பதை மறந்து விடலாகாது.

ஆவணத்தில் கையெழுத்திடாத...

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்திய பிரதமரின் தலையீட்டைக் கோரி தயாரிக்கப்பட்ட ஆவணம் எதிர்வரும் வாரத்தில் இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் குறித்த ஆவணத்தில் கையெழுத்திடாதபோதும், வெளியில் இருந்து தமிழ் பேசும் கட்சிகளின் நகர்வுகளுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ள மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு முன்னணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிசாத் பதியுதீன் தலைமையிலான இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன இணைந்த நிலையில் அடுத்த கட்ட சந்திப்பு நடத்தப்படும் என்று செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது இந்திய பிரதமருக்கான ஆவணத்தின் பொதுவான விடயமாக கூறப்பட்டுள்ள பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் தொடர்பில் கட்சிகள் கலந்துரையாடலை நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தோட்டப்பகுதி குடும்பங்களுக்கு,,,

தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி பௌஹில் தோட்டத்தில் 100 ஏக்கரை 100 இளைஞர்களுக்கு கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக பெருந்தோட்டபகுதி இளைஞர்களின்மாதாந்தவருமானத்தை அரசாங்கம் ரூ. 100,000 வரை அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு ஒரு ஏக்கர் காணியுடன் 300,000 ரூபா மானியமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கோப்பி மற்றும் பழங்கள் உள்ளிட்ட பல பயிர்கள் உற்பத்தி செய்ய தேவையான உபகரணங்கள் அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான சந்தையும் உருவாக்கப்படும்.

இலங்கையில் இவ்வாறானதொரு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படுவது இதுவே முதல் தடவை எனவும் அவர் தெரிவித்தார்.

லைன் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படும் காணிகளில் முறையான வீடுகளை நிர்மாணிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள்...

அத்தியாவசிய பொருட்களின் விலையினை குறைப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை தொடர்ந்து செயற்படுத்தும். முழு உலகினையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ள கொவிட் 19 வைரஸ் தாக்கத்திற்கு மத்தியில் அனைத்து சவால்களையும் சமாளிக்க நேரிட்டுள்ளது. அரசாங்கம் என்ற ரீதியில் சிறந்த முறையில் முன்னேறி செல்வோம்.

மாவதகம பகுதியில் வாழும் மக்கள் நீரின் அருமையினை நன்கு அறிவார்கள். இந்த நீர்வழங்கல் செயற்திட்டத்தை முன்னதாகவே மக்களிடம் கையளித்திருக்க வேண்டும் ஏனெனில் அந்தளவிற்கு இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்க்கொண்டுள்ளார்கள்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வழங்கும் செயற்திட்டம் 2025ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூரணமடையும்.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்ட பணிகளை நல்லாட்சி அரசாங்கம் இடை நிறுத்தியது. அதன் தாக்கத்தை நாட்டு மக்கள் எதிர்க்கொண்டார்கள். அரசியல் நோக்கிற்காக செய்த தவறை தற்போது திருத்திக் கொண்டுள்ளோம்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் போது தேர்தல் ஏதும் இடம்பெறவுள்ளதா என ஒரு தரப்பினர் வினவுகிறார்கள். தேர்தலை இலக்காக கொண்டு மக்களுக்கான அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கவில்லை. சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்ளும் இம்மக்கள் எந்த கட்சிக்கு ஆதரவு வழங்கினார்கள் என்பதை நாம் ஆராயவில்லை.மக்கள் எதிர்க்கொண்டுள்ள சிரமங்களை அரசாங்கத்தினால் நன்கு உணர முடிகிறது.அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதனால் தான் மக்களுக்கு நிவாரணம் வழங்க தீர்மானித்துள்ளோம்.

நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்திற்கு எதிர்தரப்பினர் அதிருப்தியடைந்துள்ளார்கள். அதற்கும் ஏதாவது குறிப்பிடுகிறார்கள். கொவிட்19 வைரஸ் தாக்கத்தை அரசாங்கம் கொண்டு வந்தது என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு எதிர்தரப்பினர் கருத்துரைக்கிறார்கள்.

அரசாங்கம் முன்னெடுத்த சிறந்த நடவடிக்கைகளினால் கொவிட் தாக்கத்திலிருந்து நாட்டு மக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பில் எதிர்தரப்பினர் கருத்து ரைப்பதில்லை. சிறந்த முறையில் முன்னோக்கி செல்வோம். சவால்களுக்கு மத்தியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம். நாட்டு மக்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்குவது அரசாங்கத்தின் பிரதான இலக்காகும் என்றார்.

தவறான கருத்து,...

சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் சில குழுக்கள் தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் பொது மக்கள் மத்தியில் அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துவதை தாங்கள் தொடர்ந்தும் அவதானித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற குழுக்கள் சில பொது மக்களை கொரோனா தடுப்பூசி மீது நம்பிக்கை இழக்கச் செய்கின்றன. நாட்டில் போதியளவு கொரோனா தடுப்பூசிகள் கையிருப்பிலுள்ள போதிலும், பொது மக்களின் ஆர்வம் குறைவாகவே காணப்படுகிறது.

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய காரணி வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளைப் பெறுவதாகுமென்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் (Dr. Senal Fernando) டாக்டர் செனல் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிறையிலுள்ள தமிழக...

2021 டிசம்பர் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் 56 மீனவர்களை விடுவித்து, பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்துவர தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை அரசின் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு இன்றியமையாத 75 மீன்பிடிப் படகுகளையும் மீட்டெடுக்கவும் முதல்வர் கோரியுள்ளார்.

வரவிருக்கிற பொங்கல் திருநாளை முன்னிட்டு, இலங்கை சிறைகளில் வாடும் 56 மீனவர்களை விடுவித்து, அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் மீண்டும் இணைவதை உறுதி செய்திடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்குரிய உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசாங்கத்துடன் நடத்திடக் கேட்டுக் கொள்வதாகவும் தனது கடிதத்தில் முதல்வர் எழுதியுள்ளார்.

லசந்த விக்ரமதுங்கவின்...

நினைவு தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த நினைவு தினம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு நகரில் மற்றும் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவாக மட்டக்களப்பில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து விக்ரமதுங்கவின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி, நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவஞ்சலி நிகழ்வும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் எஸ். சிவயோகநாதன், மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி தவிசாளர் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அனைவருக்கும் நன்மை பயக்கும் ரூ. 22,900 கோடி நிவாரணப் பொதி

இந்நாட்டு வரலாற்றில் முதற் தடவையாக இந்நாட்டு அரச ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், அங்கவீனமுற்ற படை வீரர்கள், சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் விவசாயிகளுக்காகவும், தோட்டத் தொழிலாளர்களுக்காகவும் ஒரே தடவையில் 22,900 கோடி நிவாரணப் பொதியினை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதனடிப்படையில் இதன் மூலம் 1450,000 அரச ஊழியர்கள், சமுர்த்தி உதவி பெறும் 17,93000 குடும்பங்கள், ஆறு இலட்சம் ஓய்வூதியம் பெறுபவர்களும் விசேடமாக நன்மையடைய உள்ளனர்.

இதற்கு மேலாக 17 இலட்சம் விவசாயக் குடும்பங்கள், 247,000 தோட்ட தொழிலாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான அங்கவீனமுற்ற படை வீரர்களும் இதன் மூலம் நன்மையடைவார்கள் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் செயற்பாட்டில் இந்த நிவாரணப் பொதி வழங்கப்படவுள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் குறைந்த பட்சம் இந்நாட்டில் வாழும் 46 இலட்சம் சிங்கள, தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் நேரடியாகவே நன்மையடைய உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். கொவிட் தொற்று, டொலர் பிரச்சினை என்பன இருக்கும் நிலையிலும் இவ்வாறாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டமை பாராட்டப்பட வேண்டிய விடயம் என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதன் கீழ் அரச ஊழியர்களுக்கு, ஓய்வூதியக்காரர்களுக்கு மற்றும் அங்கவீனமுற்ற படை வீரர்களுக்கும் இவ்வருடத்திலிருந்து 5000 ரூபாய் மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கும், சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை 1000 ரூபாவினால் அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் முக்கிய விடயம் யாதெனில், கடந்த வரவு செலவுத் திட்டத்தில் சம்பளம் அதிகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கும் இந்த 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளதாகும். இது தொடர்பில் ஆசிரியர்கள், அதிபர்கள் ஒன்றிணைந்த அமைப்புக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன.

தனியார் துறையின் ஊழியர்களுக்கும் இந்த 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொழில் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இது தொடர்பில் கருத்து தெரிவித்த நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுவாக நாட்டின் அனைவருக்கும் இந்த நிவாரணப் பொதியின் மூலம் நன்மை கிடைக்கவுள்ளது. இது இடம்பெறுவது, இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் போன்றன அனைத்து வரிகளிலிருந்தும் விடுவிப்பதற்கு இந்த செயற்பாட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்டதனாலாகும். மேலும் இந்நாட்டின் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்காக 80 ரூபா சலுகை விலையில் மாதாந்தம் 15 கிலோ மாவினை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் ஒரு கிலோவுக்கு 40 ரூபாய் இலாபம் அவர்களுக்கு கிடைக்கின்றது. அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்காக மேலதிகக் கொடுப்பனவை வழங்கும் போது அரச ஊழியர்களுக்காக 9700 ஆயிரம் கோடி ரூபாவும், ஓய்வூதியம் பெறுவோருக்காக 4000 ஆயிரம் கோடி ரூபாவும் மேலதிகமாக அரசாங்கத்தினால் ஒதுக்க வேண்டியுள்ளது.

இந்நாட்டில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் 1,793,000 உள்ளன. அவர்களுக்காக மாதாந்தம் ஒரு குடும்பத்திற்கு 3500 ரூபா அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. அவர்களுக்கு இம்மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் மேலும் 1000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மாதாந்தம் 179 கோடி ரூபாவினை அரசாங்கம் செலவிட வேண்டியுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் ஒரு கிலோ நெல்லுக்கான உத்தரவாத விலையினை 50 ரூபாவாக ஆக்கியுள்ளதை நினைவுபடுத்திய நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, விவசாயிகளின் நெல்லின் விளைச்சல் 50 வீதம் குறைவடைந்துள்ளது என கருதினால் அவ்வாறு நஷ்டமடைந்த நெல்லுக்காக விவசாயிகளுக்கு மேலதிகமாக 25 ரூபாவினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வகையிலும் அரிசி விலையினை அதிகரிக்காமல் விவசாயிகளுக்காக வழங்கப்படும் நிவாரணமே இந்த 25 ரூபாவாகும். இந்த போகத்தில் முன்னரைப் போன்று எல்லா வயல்களிலும் விளைச்சலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏதேனும் வழியில் விவசாயிகளுக்கு நஷ்டங்கள் ஏற்படுமாயின் ஒரு கிலோ நெல்லுக்கு 75 ரூபாவினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கு மேலாக வீட்டுத் தோட்டங்களை ஆரம்பிப்பதற்காக மேலதிகமாக 3100 கோடி ரூபாய் அரசாங்கத்தினால் ஒதுக்கிடப்பட்டுள்ளது. 20 பேர்சஸ்க்கு குறைந்த நிலத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையினை மேற்கொள்வதாயின் 5000 ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவும், 20 பேர்சஸ்க்கும் ஒரு ஏக்கருக்கும் இடையிலான நிலத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதற்கு மேலாக ஆறு மாதங்களுக்குப் பின்னராயினும் இந்த கொடுப்பனவு 5000 ரூபாய் மற்றும் 10 ஆயிரம் ரூபாய் என்ற வகையில் வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த அனைத்து நிவாரணங்களுக்காகவும் குறித்த துறைகளின் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்நாட்டில் அதிகமான கோதுமை மாவினை உணவுக்காகப் பயன்படுத்தும் மக்களான தோட்டத் தொழிலாளர்கள் கோதுமை மாவின் விலை அதிகரிப்பினால் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்ததாலும் அதற்கான தீர்வாக அரசாங்கம் இந்தப் பொதியின் ஊடாக அந்தக் குடும்பங்களுக்கு மாதாந்தம் 80 ரூபாய் சலுகை விலையில் கோதுமை மாவினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த கோதுமை மாவினை குறைந்த விலையில் வழங்குவது வாழ்க்கைச் செலவுச் சுமையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு பாரிய நிவாரணமாகும் என இது தொடர்பில் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஏ. முத்துலிங்கம் தெரிவித்தார்.

“எமது தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. 25 கிலோ தேயிலைக் கொழுந்து பறித்தால்தான் ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுகின்றது. எமது மக்களுக்கு உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. போட்டியிட்டு வெற்றி பெற்றும் உள்ளார்கள். எனினும் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு தோட்ட நிர்வாகங்களால் அனுமதிக்கப்டுவதில்லை. இந்த முறையினை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும் 2,4500 தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் இந்த கோதுமை மா நிவாரணத்தினால் நன்மை பெறும். இதற்காக அரசாங்கத்திற்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என முத்துலிங்கம் தெரிவித்தார்.

எமது நாட்டில் இன்னமும் கொவிட் நெருக்கடி குறையாமல் கொவிட் பிரச்சினைகள் உள்ள சந்தர்ப்பத்திலும், கொவிட் தொற்றுக்காக 3 தடுப்பூசிகளை வழங்கியுள்ள சந்தர்ப்பத்திலும், டொலர் கையிருப்பில் பற்றாக்குறை இருக்கும் நிலையிலும் நிதி அமைச்சரின் ஏற்பாட்டில் இந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டிருப்பது நாளைய தினம் பொருளாதார நிலை தொடர்பில் ஏதேனும் சாதகமான பண்புகள் தொடர்பில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு புரிந்துணர்வு உள்ளதாலேயாகும் என பொருளதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வீட்டுத் தோட்டச் செய்கையினை ஊக்குவிப்பதற்காக 5000 ரூபாவிலிருந்து பத்தாயிரம் ரூபாய் வரையில் வழங்குவது நாட்டின் உணவு உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முக்கியமான நடவடிக்கையாகும் என இது தொடர்பில் கருத்து தெரிவித்த முற்போக்கு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் கவுடுல்லே விவசாயத் தலைவர் எம். கே. ஜயதிஸ்ஸ எம்மிடம் கூறினார்.

“நாம் முன்னரிலிருந்தே காபனிக் செய்கையில் ஈடுபடுகின்றோம். காபனிக் செய்கைக்கு நிலத்தைச் சரி செய்திருந்தால் காபனிக் செய்கையினால் சிறப்பான அறுவடையினைப் பெற்றிருக்கலாம். 75 ரூபாய் என்பது எமது நாட்டில் நெல்லுக்காக அரசாங்கம் வழங்கும் அதிகூடிய விலையாகும் என்பதைக் குறிப்பிட வேண்டும்” என ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

“நெல்லுக்காக இந்த முறை 25 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது கடுவுல்லேவில் நெல் விலை 80 ரூபாயாகும். எவ்வாறாயினும் இந்த விலையினை அதிகரிப்பதை விடவும் எமது காபனிக் விவசாயத்தை சுற்றாடல் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்கள், வாகனங்களை சலுகை விலையில் வழங்குவது அவசியமாகும். விசேடமாக எமது நாட்டிற்கு நிலையான விவசாயக் கொள்கை ஒன்று அத்தியவசியமாகும். அத்துடன் நாட்டின் சுற்றாடல் விவசாயம், காபனிக் விவசாயம் போன்றவற்றின் வெற்றி, தரம் போன்றன தொடர்பில் நாட்டிற்கு எடுத்துக் கூறுவதற்கு எமது இலத்திரணியல் ஊடகங்கள் மிகவும் அக்கரை காட்ட வேண்டும்” என்றும் எம். கே. ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு தீர்வாக இந்த மாதத்திலிருந்து சம்பளத்தில் 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்குவது ஆறுதலான விடயமாகும் என அரச ஊழியர்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் டப்ளிவ். ஜே. கமல் கித்சிரி கருத்து தெரிவித்தார்.

“சில சில அத்தியவசிய உணவுப் பொருட்களைத் தெரவு செய்து அவற்றின் விலைகளைக் குறைத்தால் நாட்டு மக்கள் அனைவருக்கும் பெரும் ஆறுதலாக அமையும். எவ்வாறாயினும் நாட்டில் உள்ள பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் அரசாங்கம் 5000 ரூபாவினை அரச ஊழியர்களுக்கு அதிகரித்துள்ளமை தொடர்பில் எமது கிராம உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். எனினும் எமது பிரதான இலக்காக இருப்பது கிராம உத்தியோகத்தர்களின் சேவைப் பிரணயத்தினை கூடிய விரைவில் நடைமுறைப்படுத்துவதேயாகும்” என்றார்.

இது தொடர்பில் தினகரனுக்கு கருத்து தெரவித்த இலங்கை அரசாங்க மற்றும் உள்ளூராட்சி சேவை ஓய்வூதியம் பெறுவோரின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் கே. எம். கருணாரத்ன கருத்து தெரிவிக்கையில், “5000 ரூபாய் கொடுப்பனவு வழங்குவது இந்த சந்தர்ப்பத்தில் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுகளுக்கு சிறிய தொரு நிவாரணம் மாத்திரமேயாகும்” என்றார். “ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாட்டினை இல்லாமல் செய்வதே எமது தேவையாகும். இது நீண்டகாலமாக விடுக்கப்பட்டு வரும் எமது கோரிக்கையாகும். இந்த முரண்பாடு இல்லாமல் செய்யப்படுமானால் எமக்கு இதனை விட சம்பளம் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளது” எனக் கூறினார்.

நிவாரணப் பொதி தொடர்பில் கருத்து தெரிவித்த இந்நாட்டு அரச ஊழியர்களின் முக்கிய தொழிற் சங்கமான அரச சேவை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர் டப்ளிவ். எச். பியதாச, “ அரசாங்கத்தினால் இவ்வாறு வழங்கப்படும் நிவாரணத்தை பயன்படுத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும்” எனக் கூறினார்.

“கடந்த இரண்டு வருடங்களான எமது நாட்டைப் பீடித்துள்ள கோவிட் தொற்று நிலைக்கு மத்தியில் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் இல்லாமல் நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்திருக்கும் நிலையிலும் இந்நாட்டின் அரச துறையினருக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கும் மற்றும் அங்கயீனமுற்ற படை வீரர்களுக்கும் 5000 ரூபாய் வீதம் மேலதிக கொடுப்பனவை வழங்கி பொருளாதார நிவாரணைத்தை வழங்குவதற்கு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கொண்டுள்ள நடவடிக்கையினைப் பாராட்ட வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடைமுறைப்படுத்தும் உலகின் பாராட்டைப் பெற்ற கோவிட் தடுப்பூசி போடும் செயற்திட்டத்தின் மூலம் அந்த தொற்று நோய் தற்போது பெருமளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையில் வழங்கப்படும் இந்த நிவாரணங்கள் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு உந்து சக்தியாக அமையும் என எமது கூட்டமைப்பு நம்புகின்றது.

அத்துடன் அத்தியவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த அனைத்து வரிகளும் நீக்கப்பட்டதால் நாட்டின் அனைவருக்கும் நன்மையடைவார்கள். அத்துடன் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு சலுகை விலையில் கோதுமை மாவினை வழங்குவதும், சமுர்த்தி நிவாரணத் தொகையினை 1000 ரூபாவினால் அதிகரித்திருப்பதும், பல்வேறு காரணங்களினால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள அந்த மக்களுக்கு பெரும் நன்மையாக அமைந்துள்ளன.

“கோவிட் தொற்றின் காரணமாக எமது நாட்டின் இலக்குடைய வருமானம் இல்லாமைப் போனமை, தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காகத் திருப்பிக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டிருப்பவர்களின் வெற்று விமர்சனங்களுக்கு அஞ்சாமல் மக்களுக்கு இவ்வாறு முழுமையான நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை தொடர்பில் இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தைப் பாராட்டுவதாகவும் அரச பணியாளர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் டப்ளிவ். எச். பியதாச மேலும் கூறினார்.

இதனிடையே தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் ஆலோசனைக்கு அமைய தனியார் துறை ஊழியர்களுக்கும் இந்த 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்குத் தேவையான சட்டதிட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால் அண்மைய வரலாற்றின் பல்வேறு துறைகளின் பயனாலர்கள் அனேகமானோருக்கு ஒரே தடவையில் நிவாரணங்களை வழங்கிய சந்தர்ப்பங்கள் இல்லை. எனவே இந்த அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் எமது நாட்டினை பொருளாதார ரீதியிலும், விவசாயத் துறையிலும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது முக்கியமான கடமையாகும்.

நிஹால் பீ. அபேசிங்க
தமிழில்: எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

கொழும்பு சாரணரின் 56 ஆவது கெம்போறி

ருஸைக் பாரூக்

கொழும்பு சாரணரின் 56 ஆவது கெம்போறி நிகழ்வானது ஜனவரி மாதம் 05 ஆம் திகதி தொடக்கம் 09 ஆம் திகதி வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 42 ஆவது கொழும்பு றோயல் கல்லூரி சாரணர் படையின் ஜனாதிபதி சாரணரும், Dialog Axiata PLC நிறுவனத்தின் வலை யமைப்பு செயற்பாடுகள் மற்றும் சேவை உத்தரவாதத்துக்கான உப தலைவருமான இந்திக வல்பிடகே இதன் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

56 ஆவது கொழும்பு கெம்போறியின் ஒழுங்கமைப்பு ஆணையாளரும் கொழும்பு மாவட்ட உதவி சாரணர் ஆணையாளருமான (பொதுத் தொடர்புகள் / ஊடகம்) மிரால் ஆரியபால கருத்துத் தெரிவிக்கும்போது “ ‘உள்ளடங்கலான சமூகத்தை நோக்கி’ என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த ஆண்டு நடத்தப்படும் கெம்போறியானது, கொழும்பு சாரணர் வரலாற்றில் முதன்முறையாக உலகம் முழுவதிலுமிருக்கும் சாரணர்களின் பதிவுகளுக்கு அனுமதியளிக்கிறது. இது சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளதோடு 2022 ஜனவரி மாதம் 05 ஆம் திகதி இந்த கெம்பொறி தொடங்கப்பட்ட நாளில் எம்முடன் கைகோர்த்த அனைத்து சர்வதேச குழுக்களிற்கும் நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்றார்.

கொழும்பு மாவட்டத்தின் சிங்கிதி, குருளை, கனிஷ்ட சாரணர், சிரேஷ்ட சாரணர் மற்றும் திரிசாரணர்களும் ஏனைய மாவட்ட சாரணர்களும், சர்வதேச சாரணர்களும் பங்கேற்கக் கூடிய அவிதத்தில் வேடிக்கையும், சாகசமும் கலந்த விரிவான முறைசாரா கல்வித் திட்ட முறையில், ஒரு முழுமையான வெற்றிகரமான கெம்போறி அனுபவத்தை வழங்க ஏற்பாட்டுக் குழு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

ஒவ்வொரு வருடத்தின் முதலாம் திகதியன்றும் தமது தொழிலை ஆரம்பிக்கு முன் தேயிலை மலைகளில் தொழில் செய்யும் பெண்கள் தமது காவல் தெய்வங்களுக்கு பூஜை செய்து படையிலிடுவது வழக்கம். கண்டி மாவட்டம் புப்புரஸ்ஸ ஸ்டெலன்பேர்க் கந்தலா தோட்ட தேயிலை மலையில் காலைநேர வழிபாடு நடைபெறுவதை படம் சித்தரிக்கிறது.
படம் : தெல்தோட்டை தினகரன் நிருபர்

புது வருடத்தில் வடக்கிற்கு 02 புதிய RDB கிளைகள்

நாட்டின் முன்னோடி அரச அபிவிருத்தி வங்கியாக, கிராமிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான பாதைகளை திறந்த பிரதேச அபிவிருத்தி வங்கி 2022 புது வருடத்தில் நவீன தொழில்நுட்பத்துடனான புதிய தோர் வாடிக்கையாளர் உபசரணையுடன் தமது வாடிக்கையாளர்களை அணுகவுள்ளது.

நெல் மற்றும் சோளம் என்பவற்றுக்கு மேலதிகமாக ஏற்றுமதி விவசாயத்துறையில் சகல

பயிர்களுக்குமான அங்கீகாரம், பெறுமதி கூட்டும் தொழில் முயற்சிகளுக்கு நிதி நிவாரணம் மற்றும் மதியுரை சேவையுடன் அதிக பங்களிப்பினை வழங்குவதற்கு புது வருடத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் மீன்பிடி மற்றும்

வணிகத்துறை சம்பந்தமான பெறுமதி கூட்டும் கைத்தொழில்கள், நுண் மற்றும் சிறியளவு கைத்தொழில்களுக்கு தரமான கடன்களை வழங்குவதன் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கி தயாராகவுள்ளது.

விஷேடமாக சிறிய கைத்தொழில்கள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு உடனடியாக தேவைப்படும் நிதி வசதிகளை வழங்கும் போது RDB மிதுரு Plus எனும் பெயரில் விஷேட கடன் திட்டம் ஒன்றும் புது வருடத்தில் கொழும்பு மற்றும் மெனிங் சந்தையை மையமாகக் கொண்டு தொழிற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடபகுதியின் வாடிக்கையாளர் சமுகத்தின் கோரிக்கையின்படி, வணிக ரீதியாக கவர்ச்சிகரமான ஈர்க்கும் சக்தியுள்ள 02 இடங்களில் புதிய RDB கிளைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது.

வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை இல்லாதொழிக்கும் சட்டவிரோத அத்துமீறல்!

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபடும் விவகாரம் நீண்ட காலமாக தொடர்ந்து வருவதுடன், அவ்விவகாரமானது இன்று சிக்கலுக்குரியதாக மாறியுள்ளது. உள்நாட்டு யுத்தம் ஓய்ந்த பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்திருந்த நிலையில், அண்மைக் காலமாக அவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது.

இந்திய மீனவர்களின் இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக வடக்கின் பல்வேறு பகுதிகளில் உள்ள மீனவர் சமூக அமைப்புக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. இரு தினங்களுக்கு முன்னர் சண்டிலிப்பாய் பகுதியிலும் மீனவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தார்கள். இவ்விவகாரத்துக்கு இராஜதந்திர ரீதியில் விரைவில் தீர்வைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மீனவர்களுக்கு உறுதியளித்திருந்தார்.

கொவிட்19 தொற்று சூழல் காரணமாக மீன்பிடித் தொழில் உள்ளடங்கலாக பெரும்பாலான துறைகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவது மீனவ சமூகத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய மீனவர்கள் 'பொட்டம் ட்ரோலிங்' எனப்படும் தடை செய்யப்பட்ட முறையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். கடலின் அடிமட்டம் வரையில் செல்லும் வலைகள் கடற்பாறைகள், மீன்குஞ்சுகள் என அனைத்தையும் இழுத்துச் சென்று அழிவை ஏற்படுத்தி விடுகின்றன. இந்திய மீனவர்களைப் பொறுத்த வரையில் அவர்களது நாட்டு கடற்பரப்பில் இத்தொழிலில் ஈடுபட்டு அனைத்து வளத்தையும் அழிவடையச் செய்து விட்டு தற்பொழுது இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். 'ஈழத் தமிழர்கள் எமது தொப்புள் கொடி உறவுகள்' எனக் கூறிக் கொள்ளும் தமிழக மக்கள், யுத்தத்தினால் பல வருடங்கள் பாதிக்கப்பட்டு மீண்டெழ நினைக்கும் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் இவ்வாறான செயற்பாடுகளின் ஈடுபடுகின்றார்கள் என்பதே கவலைக்குரிய விடயமாக உள்ளது. இலங்கை தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னடைவுக்கு பல உலக நாடுகளின் உதவியை நாடி நிற்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. மறுபக்கத்தில் சீனா பல வழிகளில் இலங்கைக்கு மேற்கொண்டு வரும் உதவிகள் இந்தியாவுக்கு நெருடலை ஏற்படுத்தியுள்ளன. இதனால் இலங்கை விவகாரத்தில் தனது இறுக்கமான நிலைப்பாட்டை இந்தியா அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றது. இருந்தபோதும் பொருளாதார பின்னடைவுகளால் இந்தியாவின் உதவியையும் நாடும் நிலைக்கு இலங்கை இப்போது தள்ளப்பட்டுள்ளது.

யாழ்குடாவில் வலுவடையும் மீனவர் அமைப்புகளின் எதிர்ப்புப் போராட்டங்கள்!

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூட அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்திருந்தார். அதேபோல, பொருளாதார நெருக்கடிக்கு இந்தியாவின் உதவியை நாடவேண்டும் என எதிர்க்கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. இவ்வாறான பின்னணியிலேயே தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்தமீறி நுழைவதும் அதிகரித்துள்ளது.

மறுபக்கத்தில், இலங்கைக்கான சீனத் தூதுவர் அண்மையில் யாழ் குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், கடற்பகுதிக்குச் சென்றும் பார்வையிட்டிருந்தார். இலங்கை தற்பொழுது எதிர்கொண்டிருக்கும் பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவதற்கு உலக நாடுகள் முயற்சிக்கின்றனவா என்ற சந்தேகம் ஏற்படுவதையும் தவிர்க்க முடியாததாக உள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல்வளங்களை அழித்தொழிப்பது தவறென்பது தெரிந்திருந்தும், எல்லை தாண்டும் அராஜகம் முடிவின்றித் தொடருகின்றது

இருந்தபோதும் தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி விவகாரத்தை அந்நாட்டின் மத்திய அரசும், தமிழக அரசும் இலங்கை மீனவர்கள் மீதான கரிசனையுடன் அணுக வேண்டும். இவ்விவகாரம் தொடர்பில் தடைப்பட்டுப் போயுள்ள பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இரு நாட்டுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்வுகள் எட்டப்பட வேண்டியது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது.

அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 13 பேர் சில நாட்களுக்கு முன்னர் நீதிமன்றத்தின் ஊடாக விடுவிக்கப்பட்டிருந்தனர். இதுபோன்ற கைதுகள் இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான நல்லுறவில் விரிசல்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக உள்ளன.

எனவே, தமது நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான மாற்றுவழிகளை அறிமுகப்படுத்த அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது 'பொட்டம் ட்ரோலிங்' முறையில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு மாற்று மீன்பிடி முறையை அறிமுகப்படுத்துவது மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் கருத்தாடல்கள் இடம்பெற்றன.

(21ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...✍

புதிய ஆண்டில் அரசாங்கம் வலுவான நிலையில் முன்னோக்கி நகரும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். அரசாங்கம் தொடர்பில் வெளியிடப்படும் ஊகங்கள் பொய்யாக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். எமக்கு வழங்கிய பேட்டியிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நெருக்கடியிலிருந்து அரசாங்கம் புதிய ஆண்டில் மீண்டெழும்!

கே: கோப், கோபா மற்றும் அரசாங்க நிதி பற்றிய குழு ஆகிய கண்காணிப்புக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளை இடைநிறுத்தும் நோக்கிலேயே பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: பாராளுமன்ற வரலாற்றில் பல வருடங்களாக நாம் பின்பற்றி வருகின்ற சம்பிரதாயங்கள் மற்றும் நடைமுறைகளை மறந்து விட்டு எதிர்க்கட்சியினர் தமது சொந்த உலகத்தில் வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலும் அனைத்துப் பாராளுமன்றங்களிலும் பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. வரவுசெலவுத் திட்டத்தின் பின்னர் நாட்டின் தலைவர் சட்டவாக்க சபையில் உரையாற்றுவதுடன், இது நாடு முழுவதிலும் கொண்டு செல்லப்படும்.

நீண்ட மற்றும் இடைநிறுத்தப்பட்ட பாராளுமன்ற அமர்வுகளுக்குப் பிறகு அது நடைமுறையில் இருந்ததால், பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. பாராளுமன்றத்தின் சில குழுக்கள் கூட்டத் தொடர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் வேண்டுமானால் தொடர்ந்தும் செயற்படலாம். சில குழுக்கள் மீண்டும் நியமிக்கப்பட வேண்டும், அவை உறுப்பினர்களை மாற்றுவதற்கான விருப்பத்தை வழங்குகின்றன. இதனால் அவர்கள் ஏற்கனவே தங்கள் நிகழ்வுகளுக்கு ஏற்ப அமர்ந்துள்ளனர். எனவே, எதிர்க்கட்சியினரின் போலிப் பிரசாரங்களுக்கு மதிப்பு இல்லை.

கே: தற்போது நிலவுவது போன்ற இயற்கை பேரிடரின் போதுகூட அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படாத எதிர்க்கட்சியின் நடைமுறையை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்: உலகத்துக்கு முன்னெப்பொழுதும் ஏற்படாத சுகாதார நெருக்கடியாக கொவிட் 19 காணப்படும் நிலையில், மனித வாழ்க்கை பாதிக்கப்பட்டு ஆபத்தில் உள்ளது. இத்தகைய சர்வதேச நெருக்கடியில் பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கொண்ட நாடுகளில் எதிர்க்கட்சிகள் தனது ஆதரவை வழங்கி, மக்களின் உயிரைக் காக்க அரசாங்கங்களுடன் இணைந்து பணிபுரிகின்றன. எனினும், இலங்கையில் உள்ள எதிர்க்கட்சி இந்த நடைமுறையைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதியின் புதிய உணவுத் திட்டத்தின் விளைவாக சில பகுதிகளில் தன்னிறைவை அடைந்துள்ளோம். அத்தியாவசிய உணவுகளை சந்தைக்கு வழங்குவதை உறுதி செய்வோம்

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அளிக்கும் விளக்கம்

கே: தேர்தல் சட்டம் மற்றும் தேர்தல் முறைமை குறித்து அடையாளம் கண்டு தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவின் செயற்பாடுகள் எந்தளவு முன்னேற்றம் கண்டுள்ளன?

பதில்: தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவில் கடந்த மாதங்களில் நாம் பல தடவைகள் கூடியிருந்ததுடன், மார்ச் 31ஆம் திகதி வரை இக்குழுவிற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டங்களை மீண்டும் பரிசீலனை செய்வது தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அரசியலமைப்புத் தயாரிப்புத் தொடர்பான குழுவும் தனது பரிந்துரையை முன்வைக்கும்.

(21ஆம் பக்கம் பார்க்க)

அரசு வலுவான நிலையில் முன்னோக்கி நகருகின்றது

கொவிட் நெருக்கடியினால் பாதிப்படைந்த மக்களுக்கு கைகொடுத்த நிவாரணப் பொதி

இலங்கையின் பொருளாதாரம் சேவைத்துறையில் குறிப்பாக சுற்றுலாத்துறை போன்றவற்றில் அதிகம் தங்கியிருந்தது. எனினும், கடந்த இரண்டு வருடங்களாக உலகம் முழுவதிலும் நிலவும் கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக இத்துறை பாரிய பின்னடைவைச் சந்தித்தது.

ஒப்பீட்டளவில் சுகாதார நிலைமைகளில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டாலும், கடந்த காலத்தில் ஏற்பட்ட தாக்கங்களின் விளைவாக இத்துறை மாத்திரமன்றி பல துறைகளும் பாதிக்கப்பட்டன. 2020 ஆம் ஆண்டிலும், 2021 ஆம் ஆண்டிலும் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முடக்கங்களுக்குச் சென்றமையால் பொருளாதாரப் பின்னடைவுகள் ஏற்பட்ட போதும், உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் தொற்றினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் இலங்கையில் குறைவென்று தான் கூற வேண்டும்.

முடக்கங்களை முடிவுக்குக் கொண்டு வந்து பொருளாதாரத்தைத் திறப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், டெல்டா திரிபு மீண்டும் ஒரு எச்சரிக்கையை விடுத்தது. இதனால் மறுபடியும் முடக்கங்களுக்குச் செல்லும் நிலைமை அரசுக்கு ஏற்பட்டது.

ஆனால் எவ்வாறான தடைகள் ஏற்பட்ட போதும், அனைத்துக்கும் வெற்றிகரமாக முகங்கொடுத்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தன்னாலான முயற்சிகளை அரசு எடுத்து வந்ததையும் மறுக்க முடியாது. இரண்டு ஆண்டு கால தேக்க நிலைமையானது அந்நிய செலாவணி இருப்புகளை தக்க வைப்பதில் சவால்களை ஏற்படுத்தியுள்ளது, இது பொருளாதாரத்தின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் கடந்த சில மாதங்களாகப் பொதுவெளிகளில் விவாதப் பொருளாக மாறியுள்ளது. சமூக ஊடகங்களும் இவை குறித்த உள்ளடக்கங்களில் மூழ்கிப் போயுள்ளன. இதனால் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி நிலையொன்று காணப்படுகிறது. இவ்வாறான நிலையிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் கடந்த ஆண்டு இறுதியில், அதிகரித்த வெளிநாட்டுப் பணம் மற்றும் பிற வருமானங்களால் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பானது 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது என அறிவித்தார்.

இதுபோன்ற பின்னணியில், இந்த வாரம், பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், பொதுமக்களின் நிதி அழுத்தங்களைப் போக்குவதற்கும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பல்வேறு அதிரடி அறிவிப்புக்களை வெளியிட்டிருந்தார்.

229 பில்லியன் ரூபா செலவில் பல்வேறு சலுகைகளைக் கொண்ட 'நிவாரணப் பொதி' ஒன்றை அவர் அறிவித்தார். இதில் அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா சலுகைக் கொடுப்பனவு, விவசாயிகளுக்கான சலுகை உள்ளிட்ட விடயங்களை அமைச்சர் பசில் ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

'இந்த பாரிய நிவாரணப் பொதிக்கான நிதி வரவுசெலவுத் திட்டத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக எந்தவிதமான வரியோ அல்லது மேலதிக வரிகளோ மக்களுக்கு விதிக்கப்படாது' என நிதி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் இந்த நிவாரண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவிருக்கும் மாதாந்த உதவித் தொகையான 5,000 ரூபா ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கும் வழங்கப்படும். 24 வருடங்களின் பின்னர் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ததன் மூலம் அவர்கள் ஏற்கனவே சம்பள உயர்வைப் பெற்றிருந்தனர். இந்த நடவடிக்கையின் மூலம் 1.45 மில்லியனுக்கும் அதிகமான அரசு ஊழியர்கள், பெருநிறுவனங்களைச் சேர்ந்தோர்உட்பட பலர்பயனடைவார்கள் என்றும் அமைச்சர் விளக்கினார்.

'ஓய்வூதியம் பெறுவோர் மாதாந்த உதவித்தொகையாக ஒரு வருட காலத்திற்கு ரூபா 5000 ஆயிரம் ரூபாவைப் பெறவுள்ளனர். 600,000 க்கும் மேற்பட்ட ஓய்வூதியக்காரர்கள் இதன் மூலம் பயனடைவார்கள். இந்த நடவடிக்கைக்கு 87 பில்லியன் ரூபாதேவைப்படுகிறது. 42,000க்கும் மேற்பட்ட ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கும் இந்த கொடுப்பனவு வழங்கப்படும்' என அமைச்சர் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமுர்த்தி பயனாளிகள் தற்போது 1000 ரூபா கொடுப்பனவைப் பெற்றுக் கொள்கின்றனர். இந்தத் தொகை தற்பொழுது 3500 ரூபாவாக வழங்கப்படும். இந்த மாதத்தில் இருந்து 1,000 ரூபாவை இயன்றவரை சம்பள உயர்வாக வழங்குமாறு தனியார் துறையினரையும் அரசாங்கம் கோரும் என்றார் அமைச்சர். தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஏற்கனவே இது தொடர்பாக தனியார் துறையுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்த தொகுப்பின் மற்றுமொரு முக்கிய அம்சம் விவசாயிகளுக்கான நெல்லின் உத்தரவாத விலையாகும். இதற்கு முன்னர் அரசு சான்றளிக்கப்பட்ட விலையாக ஒரு கிலோ நெல்லுக்கு 50 ரூபாவை அறிவித்திருந்தது. இனிமேல் ஒரு கிலோவுக்கு மேலதிகமாக 25 ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கமைய ஒரு கிலோ நெல்லுக்கான உத்தரவாத விலை 75 ரூபாவாகும்.

விவசாயிகள் மற்றும் அரிசி நுகர்வோர் ஆகிய இருதரப்பினரும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த நடவடிக்கையை அறிமுகப்படுத்தியுள்ளார்.

'அறுவடையில் 20 முதல் 30 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கிறோம், எனவே ஒரு கிலோ நெல் 75 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுவதால் இது விவசாயிகளுக்கு நிவாரணமாக இருக்கும். மானியம் என்பது சந்தையில் அரிசி விலை கடுமையாக உயராமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்' என்று அவர் விளக்கினார்.

பல வருடங்களாக நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருந்து உழைத்து வரும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் பதிவு செய்யப்பட்ட பெருந்தோட்டத்துறைக் குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு 15 கிலோ கோதுமைமா கிலோ 80 ரூபா விலையில் வழங்கப்படும். அத்துடன், 20 பேர்ச்சுக்கு குறைவான நிலப்பரப்பில் வீட்டுத் தோட்டங்கள் செய்பவர்களுக்கு 5000 ரூபாவும், ஒரு ஹெக்டெயருக்கு மேற்படாத நிலப்பரப்பில் வீட்டுத் தோட்டம் செய்பவர்களுக்கு 10,000 ரூபாவும் மானியமாக வழங்கப்படவுள்ளது.

கிராம சேவை உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் பிரதேச செயலாளர்களினால் இந்த வேலைத் திட்டம் கண்காணிக்கப்படும். திருப்திகரமான முடிவுகளைப் பொறுத்து ஆறு மாத இடைவெளியில் இரண்டு கொடுப்பனவுகள் வழங்கப்படும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். இந்த திட்டத்திற்கு அரசுக்கு ரூ.31 பில்லியனுக்கு மேல் செலவாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கு அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுவதாக அவர் அறிவித்துள்ளார். உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இது செயல்படுத்தப்படவுள்ளது. இந்த நடவடிக்கைகள் கொவிட் தொற்றுநோயின் பொருளாதார தாக்கம் குறித்த அரசாங்கத்தின் அக்கறையை பிரதிபலிப்பதுடன், இதனைச் சரிசெய்யும் முயற்சியாகவும் அமைகிறது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளியிட்டிருக்கும் இந்த அறிவிப்புகள் நாட்டு மக்களுக்கு நிவாரணமாக அமைவது ஒருபுறமிருக்க, எதிரணியினருக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை. கொவிட் காரணமாக நாட்டில் பாவனைப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள விலையேற்றத்தை துரும்பாக வைத்து அரசுக்கு எதிராக மக்கள் மத்தியில் எதிரணியினர் சமீப காலமாக பிரசாரங்களை மேற்கொண்டு வந்தனர். அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்த அதிரடி அறிவிப்புகளால் எதிரணியினர் இனிமேல் விலைவாசி அதிகரிப்பு குறித்து மக்கள் மத்தியில் பிரசாரத்தை முன்னெடுக்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை துரும்பாகப் பயன்படுத்தியவாறு மக்கள் மத்தியில் அரசுக்கு எதிராக பிரசாரம் மேற்கொண்டு வந்த எதிரணியினருக்கு இனிமேல் அதுபற்றி பேசுவதற்கு எதுவுமில்லை!

இன்றைய பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியிலும், மக்கள் நலனுக்காக அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளியிட்ட அதிரடி அறிவிப்புகள்!

அரசாங்க ஊழியர்கள், ஓய்வூதியர்கள், விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், சமுர்த்தி பயனாளிகள் போன்ற பல தரப்பினருக்கும் பயன் தரும் உதவிகள்!

வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

கொரோனாவின் பின்னர் மலையக பெருந்தோட்டங்கள்

நிவாரணங்கள் அல்ல; வாழ்வியல் மேம்பாடே அவசியம்

‘நுவரெலியா மாவட்டத்தில் தோட்டங்களுக்கு வெளியே வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றிய சுமார் 11 ஆயிரம் வரையிலான தொழிலாளர்கள் இன்று வேலை வாய்ப்பை இழந்து அல்லாடுகிறார்கள்’

2022ஆம் ஆண்டும் பிறந்து விட்டது. இன்னும் சில தினங்களில் தைப்பொங்கல் தரிசனம் தரப் போகிறது. பெருந்தொற்றால் பெரும் தொல்லையாகிப் போன நெருக்கடி நிலைமை இன்னும் மாற்றமடைந்தபாடில்லை. அந்நியச் செலாவணி பற்றாக்குறை பல வழிகளிலும் பாதிப்பை உண்டுபண்ணி விட்டது. அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, உணவுப் பொருட்களின் விலையேற்றம் ஒரு பதற்றமான சூழலை உருவாக்கத் தவறவில்லை. தேற்றம் பெற வழியின்றி பொது மக்கள் ஏமாற்றத்துக்கு ஆளாகியுள்ளார்கள். இந்தப் பின்னணியில்தான் அரசாங்கம் சில நிவாரண ஏற்பாடுகளை அறிவித்துள்ளது. அந்த நிவாரண அறிவிப்புகள் பெருந்தோட்ட சமூகத்தை எந்தளவு சென்றடைப் போகிறது என்பதே பிரச்சினை.

முழு நாடுமே முடக்கப்பட்ட நிலையில் பெருந்தோட்டத்துறை மட்டும் இயங்கிக் கொண்டிருந்தமையை யாரும் மறந்துவிட முடியாது. உரிய பாதுகாப்பு வழிமுறைகள் ஏதுமின்றி தமது உயிரைப் பணயம் வைத்தே பெருந்தோட்ட மக்கள் தொழில்புரிகிறார்கள். இதன் பயனாக தேயிலை விவசாயம் தொய்வின்றி நடந்தது. சவால்களுக்கு மத்தியில் தேயிலை ஏற்றுமதியும் இடம்பெற்றது. இதன் மூலம் கிடைக்கப்பெற்ற அந்நியச் செலாவணி நாட்டுக்குக் கைகொடுக்கத் தவறவில்லை.

எனினும் இத்துறைசார் மக்களின் வாழ்வியல் இன்னும் வரலாற்றுத் தவறுகளை உளவாங்கிக் கொண்ட துன்பியல் தொடராகவே இருக்கிறது. தினக்கூலி வாழ்க்கை. அன்றாடம் தொழிலுக்குப் போனால் மட்டுமே வேதனம். தோட்டத் துறையைத் தவிர்ந்த இலட்சக் கணக்கானோர் நிலையும் இதுதான். ஆனால் அவர்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கின்றன. தேவையான சுகாதார வசதிகள் கிட்டுகின்றன. கடன் பெறுவதற்கான வழிவகைகள் காணப்படுகின்றன. எனினும் இதில் எந்தவொரு ஏற்பாடுகளையும் பெருந்தோட்ட மக்கள் அனுபவிக்க முடிவதில்லை.

கொரோனா கால நிவாரணத் தொகையாக வழங்கப்பட்ட 5000 ரூபா கொடுப்பனவு தோட்ட மக்களை சென்றடையவில்லை. ஏனெனில் சமூர்த்தி கொடுப்பனவு பெறுவோர் தோட்டப் பிரதேசங்களில் மிகக் குறைவு. இதனால் இம்மக்கள் அன்றாடம் வேலைக்குப் போவதன் மூலமே கடன் வாங்கக்கூடிய தெம்பினைப் பெறுகிறார்கள். வட்டிக்குப் பணத்தை வாங்கி வயிற்றுப் பாட்டினை கவனிக்க வேண்டிய நிலைமை. நுவரெலியா மாவட்டத்தில் தோட்டங்களுக்கு

பன். பாலா ...✍

வெளியே வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றிய சுமார் 11 ஆயிரம் வரையிலான தொழிலாளர்கள் இன்று வேலை வாய்ப்பை இழந்து அல்லாடுகிறார்கள். இவர்கள் அனைவரும் விவசாய காணிகளிலேயே தொழில்செய்து வந்தார்கள். உரப்பற்றாக்குறை காரணமாக நுவரெலியா மாவட்டம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் மரக்கறிச் செய்கை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது. உற்பத்தி குறைந்து விலையேறி விழிபிதுங்கச் செய்கின்றது.

தோட்டத்தொழிலை மட்டுமே நம்பி சுமார் ஒன்றரை இலட்சம் பேர் இங்கு வாழ்கிறார்கள். இங்கு சுயதொழில் செய்வதற்கான பின்புலம் தாராளமாகவே காணப்படுகின்றது. தரிசு நிலங்களையும் கைவிடப்பட்டு வரும் காணிகளையும் விவசாயம் செய்வதற்காக பயன்படுத்தலாம். கொரோனா முதலாவது அலை ஆர்ப்பரித்தபோது அதிகமான மலையக இளைஞர்கள் தோட்டங்களுக்கே திரும்பி வரவேண்டி நேர்ந்தது. இவர்கள் தோட்டத் தொழிலை புறக்கணித்துப் போனவர்கள். வெளியிடங்களுக்கு வேலைதேடி ஓடியவர்கள். மீண்டும் தோட்டப் பகுதிகளிலேயே விவசாயம் அல்லது சுயதொழில் ஏதாவது செய்து வாழலாம் என்னும் எதிர்பார்ப்பில் வந்தவர்கள்.

ஏற்கனவே பெருந்தோட்ட இளைஞர்கள் சுயதொழில் செய்யக்கூடிய நிலைமையை உருவாக்கப் போவதாக அறிவிப்புகள் வந்தன. காணிகள் பகிர்ந்தளிக்கப்படுமென செய்திகள் வெளியாகின. இதனை நம்பிக் கூட இந்த இளைஞர்கள் தோட்டங்களுக்குத் திரும்பி இருக்கலாம். ஆனால் இந்த எதிர்பார்ப்புகள் எதுவுமே இதுவரை ஈடேறியபாடில்லை. (20 பக்கம் பார்க்க)

மலையகத்தில் குரங்குத்தொல்லை

அவதிப்படும் மக்களுக்கு விமோசனம் என்ன ?

மனிதனால் விலங்குகளுக்கும், விலங்குகளினால் மனிதனுக்குமான போராட்டங்கள் கயிறிழுப்பு விளையாட்டு போலத்தான் காலங்காலமாக நடைபெற்று வருகிறது. வனவிலங்குகளின் வாழிடம் காடுகளே. ஆனால் அந்த காடுகளில் மனித பிரவேசம் அதிகமானதால், விலங்குகள் மனிதன் வாழும் பகுதிகளுக்கு வந்து வாழப் பழகிக் கொண்டுள்ளன.

ஆரம்ப காலங்களில் காட்டுப்பகுதிக்கு சென்றால்தான் வன விலங்குகள் மற்றும் வன ஜீவராசிகளை காணமுடியும். ஆனால் மனிதன் மிருகங்கள் வாழும் வனங்களுக்குச் சென்று அங்கே தமது தேவைகளுக்காக மரங்களை வெட்டுதல், காடுகளுக்கு தீ வைத்தல், விவசாயம் செய்தல் போன்றவற்றை மேற்கொண்டதால் காடுகள் அழிய ஆரம்பித்தன. இவ்வாறு மனிதன் விலங்குகளுக்கு பாதகம் விளைவிக்க முற்பட்டதால் விலங்குகளும் மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைய, மனித விலங்கு மோதல்கள் நிகழ ஆரம்பித்தன.

அந்தவகையில்தான் தற்காலத்தில் பேசப்படுகின்ற யானை, குரங்கு, மலைப்பாம்பு, குளவி போன்ற உயிரினங்களால் மனிதனுக்கு உண்டாகும் பிரச்சினைகளை பார்க்க வேண்டும். இவற்றில் குரங்குகளால் மனிதனுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை பார்ப்போம்.

கடந்த முப்பது வருடங்களுக்கு முன் அடர்ந்த காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்துவந்த குரங்குகள் இன்று மனிதனோடு சேர்ந்து வாழ ஆரம்பித்தமைக்கு மனிதனே காரணம். காட்டுப் பகுதியில் உள்ள மரங்கள் அழிக்கப்பட்டதால் அவை உணவுக்காக மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள உயர்ந்த மரங்களில் குரங்குகள் இரவு நேரங்களைக் களிக்கத் தொடங்கின. காலைப் பொழுது விடிந்ததுமே மக்கள் எழுவதற்கு முன் எழுந்து வீட்டு வாசல் பகுதிகளில் உலாவத் தொடங்கி விடுகின்றன.

குரங்குகள் மக்களுக்கு விளைவிக்கும் அட்டகாசங்களை இலகுவாக கூறிவிட்டு செல்ல முடியாது. ஒவ்வொரு நாளும் காலை எட்டு, ஒன்பது மணிக்கு கூட்டம் கூட்டமாக மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு வரும் குரங்குகள் அங்கு காணப்படுகின்ற பழமரங்களில் ஏறி காய், பிஞ்சு, பழம் என பறித்து சாப்பிட்டு குதூகலிக்கின்றன.

குரங்குகளால் விவசாயிகள் படும் வேதனை எண்ணிலடங்காது. தக்காளி, போஞ்சி உட்பட மரக்கறிகள், கீரை வகைகள், பழங்கள், காய்கள் என எல்லாவற்றையும் பிடுங்கி எறிந்துவிடுகின்றன. அதுமட்டுமல்லாமல் கரட், பீட்ரூட் போன்ற மரக்கறிகளையும் பிடுங்கி நாசப்படுத்தி வருகின்றன. இதனால் விவசாயம் செய்யும் நுவரெலியா, பதுளை போன்ற ஊர் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களுக்கு காலங்காலமாக முகங்கொடுத்து வருவதாக விவசாயி நாதன் என்பவர் கூறுகின்றார்.

வீட்டில் ஆட்கள் இல்லாததை அறிந்து வீட்டுக்குள் புகுந்து பொருட்களை எல்லாம் சேதப்படுத்தி, உணவுகளை எல்லாம் சாப்பிட்டு விட்டு செல்கின்ற சந்தர்ப்பங்கள் ஏராளம். ஒருநாள் வீட்டுக்குள் புகுந்து விட்டால் அதை வழமையாக கொள்கின்றன. வீட்டுக்கு வெளியில் உலர்வதற்காக போடப்பட்டிருக்கும் ஆடைகளையும் தூக்கிச்சென்று கிழித்தெறிந்து விளையாடுவதாக பாதிக்கப்பட்ட பெண் செல்லம்மாள் என்பவர் தெரிவிக்கின்றார். நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா நகரம், கிலன்டில் தோட்டப் பகுதிகளில் பாடசாலை செல்லும்போதும், வேலைக்கு செல்லும் வழிகளிலும் சிறார்கள் மற்றும் பொதுமக்களை விரட்டி கண்டிப்பதோடு அவர்களின் கைகளில் வைத்திருக்கும் பைகளை பிடுங்கி இழுத்துச் செல்கின்றன. குறிப்பாக உணவுப் பொருட்களை கையில் வைத்திருப்பதை கண்டாலே கொஞ்சம் கூட பயப்படாமல் வந்து பிடுங்கிக் கொண்டு ஓடுகின்றன.

டயகம நகரில் கடைத்தெருக்களுக்கு குரங்குகள் வருவதும் வழமையாகிவிட்டது. அங்குள்ள உணவுப் பொருட்கள் மட்டுமன்றி ஏனைய பொருட்களையும் திருடிச் சென்று சேதப்படுத்துகின்றன. இந்த குரங்குகள் யாருக்கும், எதற்கும் பயப்படுவதில்லை. கல் மற்றும் கம்புகளைக் கொண்டு அடித்தாலும் பயப்படுவதைப் போல் நடிக்குமே தவிர ஒருபோதும் அந்த இடத்தை விட்டு நகர்வதில்லை. எதிர்பாராவிதமாக அடிபட்டுவிட்டால் பொதுமக்களை விரட்டவும் செய்கின்றன. குரங்குகள் துரத்தியதால் ஓடி விழுந்து இறந்த சந்தர்ப்பங்களும் உண்டு. நோய்வாய்ப்பட்ட பெரியவர்களை குரங்குகள் துரத்தும்போது அவர்கள் பயத்தில் ஓடுவது வழமை. இதனால் பெண்ணொருவர் தடுக்கி விழுந்து இறந்தும் இருக்கிறார்.

வீதிகளில் குரங்குகளின் நடமாட்டம் அதிகமாகும்போது அங்கே சாரதிகளுக்கும் பயணிகளுக்கும் இடையூறு ஏற்பட்டு விபத்துகள் நிகழ்ந்து வருகின்றன. பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகள் பிரவேசிக்கக் கூடிய கதிர்காமம், சீகிரியா போன்ற இடங்களில் அதிகளவிலான குரங்குகளை காணலாம். பயணிகள் உணவுப் பொருட்களை வழங்கி பழக்கியமையால் குரங்குகளும் அதிகளவில் இவ்விடங்களில் நடமாடத் தொடங்கி விட்டன.

இந்த அனைத்து பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் மனிதனே. குரங்குகளின் வாழ்விடங்களை அழிக்கும்போது அவை உணவுக்காக என்ன செய்யும்? உணவு தேடி மக்கள் குடியிருப்புகளுக்கு வரும். எங்கேயாவது ஒரு இடத்தில் உணவு கிடைத்து விட்டால் தொடர்ந்து அந்த இடத்திற்கு ஒவ்வொரு நாளும் செல்லத்தான் செய்யும். இது மிருக இயல்பு.

கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக குரங்குகள் அதிகம் நடமாடும் விவசாய பகுதியிலுள்ள குரங்குகளை பிடித்து காடுகளில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி பலகைக் கூடுகளில் குரங்குகளை பிடித்து போட்டு அவற்றை அடர்ந்த காடுகளில் கொண்டு சென்று விட்டார்கள். என்றாலும் இந்த செயற்பாடு பயனளிக்கவில்லை.

காடுகளில் விடப்பட்ட குரங்குகள் மீண்டும் வழக்கமான இடங்களுக்கு வர ஆரம்பித்து விட்டன. சாப்பாடு வேண்டுமல்லவா!

இதைவிடுத்து கடந்த மூன்று வருடங்களாக குரங்குகளை விரட்டுவதற்காக குரங்கின் முகவடிவை ஒத்த முகமூடிகள் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டன. குரங்குகள் வரும்போது இந்த முகமூடிகளை மக்கள் அணிந்து கொண்டு வெளியில் செல்லும்போது குரங்குகள் பயந்து ஓடின. ஆனால் காலம் செல்லச்செல்ல முகமூடிகள் மீது இருந்த பயமும் குரங்குகளுக்கு ஓடிவிட்டது. உயர்ந்த மரங்களில் ஏறி நின்று முகமூடிகளை அவிழ்ப்பதை நோட்டமிட்டு விட்டன. தற்போது முகமூடிக்கு அஞ்சுவதில்லை. அவ்வாறானால் என்ன தான் தீர்வு?

அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் குரங்குகளை துப்பாக்கியால் சுடுவதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் காட்டு விலங்குகளை கொல்வது சாத்தியமானதல்ல. இந்நிலையில் மாத்தளையில் குரங்குகளுக்கு கருத்தடை செய்ய தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதுவும் கூட நிரந்தரத் தீர்வாக அமையாது. சில நேரங்களில் எல்லா குரங்குகளுக்கும் கருத்தடை செய்வது சாதாரண விஷயமல்ல. அப்படியே கருத்தடை செய்யப்பட்டாலும் ஒரு காலத்தில் குரங்குகள் என்ற இனமே இல்லாமல் போய்விடலாம் என்ற அச்சமும் உண்டு .

இந்நிலையில் வனஜீவராசிகள் திணைக்களம் கட்டாயம் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை மேற்கொள்வது அவசியமாகும். அந்த வகையில் மீண்டும் குரங்குகளை விரட்ட வேண்டுமென்றால் காடுகளில் அவற்றுக்கான உணவுகளை பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

அதற்கு காடுகளில் பழமரங்களை வளர்த்தல் அவசியம். இதனால் மீண்டும் காடுகளுக்கு சென்று வாழும் பழைய சூழ்நிலையை குரங்குகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம். காடுகளில் பழமரங்கள் இருக்குமானால் நாட்டுப்புறங்களுக்கு வரவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும். தனியார் நிறுவனங்களும், அரசும் திணைக்களத்துடன் இணைந்து பழமரங்களை வளர்க்கும் திட்டத்தை இப்பகுதிகளில் நடைமுறைப்படுத்தினால் குரங்கு தொல்லைக்கு முடிவு கட்டலாம்.

ந. திஸ்னாகுமாரி...✍
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

அமரர் எஸ். இராஜமாணிக்கம்

சொல்லிலும் செயலிலும் தூய்மைகாத்த தொழிற்சங்கவாதி

மலையகத்தில் உன்னத தொழிற்சங்கவாதிகளில் ஒருவராகத் திகழ்ந்த கே. இராஜமாணிக்கம் அமரத்துவமெய்தி இன்றுடன் 37ஆண்டுகள் நிறைவடைகின்றன. மலையக மக்களின் உரிமைகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் அவர்களின் உயர்வுக்காகவும் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட அன்றைய தலைவர்களான அமரர்கள் கே.இராஜலிங்கம், சௌமியமூர்த்தி தொண்டமான், எஸ்.சோமசுந்தரம், ஸி.வி. வேலுப்பிள்ளை, வி.கே.வெள்ளையன் போன்றோருடன் நெருக்கமாக இணைந்து இலட்சிய வேட்கையுடன் தம் இறுதி மூச்சுவரை பணியாற்றியவர் இராஜமாணிக்கம். தொழிற்சங்கவாதிகளில் இன்று அவரை நினைவில் வைத்திருப்பவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசிலரே.

மறைந்த தொழிற்சங்கவாதியும், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றிய அமரர் கே. வேலாயுதம், இராஜமாணிக்கத்தின் மறைவையொட்டி அன்று தேசிய முரசொலி பத்திரிகையில் 'மனிதருள் ஒரு மாணிக்கம்' என்ற தலைப்பில் எழுதியிருந்தார். சொல்லிலும் செயலிலும் தூய்மையுடன் இருந்த இராஜமாணிக்கம் ஒரு சிறந்த சமூக சிந்தனையாளர். ஆழ்ந்த ஆற்றல் வாய்ந்தவர். இசைப்பிரியர். இலக்கியவாதி.

இவருக்கு குடும்பம், கோயில், வீடு அனைத்துமே தொழிலாளர்கள் தான். நண்பர்களுடனும், சக தொழிற்சங்கவாதிகளுடனும் பழகுவதிலும், உபசரிப்பதிலும், தொழிலாளர் நலன் சார்ந்த விடயங்களில் உரையாடுவதிலும், விவாதிப்பதிலும் தனித்துவமான குணாம்சம் கொண்டவர் என்று அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

தனது 18ஆவது வயதில் 1950இல் இ.தொ.கா.வில் இணைந்து அன்றைய சிறந்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரான வீரையாவுடன் நாவலப்பிட்டி, மாவட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியாகப் பணியாற்றினார். பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டு சங்கத்தின் கணக்காய்வாளர் கதிர்வேலு வீரபுத்திரன் போன்றோருடன் மாத்தளை மாவட்டப் பிரதிநிதியாகவும் பணியாற்றினார். பின்னர் தலவாக்கலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு சில ஆண்டுகள் பணியாற்றிய பின் இரத்தினபுரிக்கு மாற்றல் பெற்றார். இக்காலப்பகுதியில் பல போராட்டங்களை நடத்தி தொழிலாளர்களின் உரிமைகளையும், சலுகைகளையும் வென்றெடுத்து தலைமைத்துவங்களின் பாராட்டுதல்களையும் அபிமானத்தையும் பெற்று தொழிற்சங்க வரலாற்றில் சிறப்பாக தடம்பதித்தார்.

1962இன் ஆரம்பத்தில் தொழிற்சங்கத் தலைவர்களான அமரர்கள் கே. ராஜலிங்கம், சங்கரன் சோமசுந்தரம் போன்றவர்களுடன் இவருக்கு நட்பு ஏற்பட்டு தொழிற்சங்க மற்றும் மலையக தொழிலாளர்களின் நலன்சார்ந்த விடயங்களில் அந்நியோன்யமாக செயற்பட்டு வந்தார். கே.இராஜலிங்கம், எஸ்.சோமசுந்தரம் ஆகியோருடனான கடித பரிமாற்றங்கள் நிறையவே இருந்தன. சோமசுந்தரம் தமிழ்நாட்டுக்குத் திரும்பிச் சென்ற பின்னரும் இந்தக் கடித பரிமாற்றங்கள் தொடர்ந்தன.

1968இல் அமரர் வி.கே.வெள்ளையன் தலைமையில் தொழிலாளர் தேசிய சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது அவர் அமரர் ஸி.வி. வேலுப்பிள்ளையுடனும் வேறுசில சிரேஷ்ட தொழிற்சங்கவாதிகளுடனும் தேசிய தொழிலாளர் சங்கத்தில் இணைந்து அதன் பொதுச்செயலாளராகப் பணியாற்றினார். ஹட்டன் லிபர்ட்டிபடமாளிகையில் சங்கத்தின் இரண்டாவது வருடாந்த மாநாடு இடம்பெற்றபோது அவரும் ஸி.வி.வேலுப்பிள்ளையும் அவர்களும் மேடையில் உரையாற்றிய புகைப்படங்களும் செய்திகளும் அன்றைய வீரகேசரி, தினகரன், தினபதி பத்திரிகைகளில் பிரசுரமாகின.

அவர் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் தொழில் உறவு இயக்குனராக இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்தபோது சுகவீனமுற்று தனது 52ஆவது வயதில் 1984 டிசம்பர் 26ம் திகதி காலமானார். ஜூலை 1983 இனக்கலவரத்தின் எதிர்விளைவுகளாலும் இந்தியா இலங்கைமீது படையெடுக்குமானால் அதுதான் இலங்கைவாழ் தமிழர்களின் இறுதிமுடிவு என்ற அமைச்சர் காமினி திஸாநாயக்காவின் பிரகடனமும் இவரை நிலைகுலையச் செய்தன. 1983 வன்செயல்களின் போது நுவரெலியா மாவட்ட தீவைப்பு சம்பவங்களின் பின்னணியில் காமினி திஸாநாயக்கா செயற்பட்டார் என்று வெளியான தகவலை அறிந்து அவர் மனதளவில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தார்.

தொழிற்சங்க முன்னோடி அமரர் இராஜமாணிக்கம் என்ற தலைப்பின் கீழ் அன்றைய புள்ளிவிபரக் கிளை பிரதம அதிகாரி கே. குமாரசாமி தேசிய முரசொலி டிசம்பர் 1981 இதழில் கீழ் கண்டவாறு அவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

1981ம் ஆண்டு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற உயர் மட்ட பேச்சுவார்த்தைகளின்போது ஆண் பெண் தொழிலாளர்களுக்கு சம சம்பளம் ரூபாய் கணக்கில் அதிகரித்தது. பண்டிகைக்கால முற்பணம் அதிகரிக்கப்பட்டது. வாரம் 6 நாட்கள் வேலைக்கான உத்தரவாதம் கிடைத்தது. இப் பேச்சுவார்த்தையின்போது சங்கத்தின் தொழில் உறவு அதிகாரியான அமரர் கே. இராஜமாணிக்கம் இக் கோரிக்கைகள் வெற்றி பெறுவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

அரசால் சுவீகரிக்கப்பட்ட இறம்பொடை தோட்டம் மீண்டும் தனியாருக்குக் கையளிக்க முடிவெடுக்கப்பட்டபோது தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்படாத பட்சத்தில் கையளிப்பென்ற பேச்சுக்கே இடமில்லையென்று தீவிரமாக நின்று வென்றெடுத்து அத் தோட்டத் தொழிலாளர்களை மகிழ்ச்சியுறச் செய்த பெருமை இராஜமாணிக்கத்தையே சாரும்.

தொழிலாளர்களின் சமுதாயத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காக தம் வாழ்வின் பெரும் பகுதியை செலவிட்ட இராஜமாணிக்கம் குழந்தையுள்ளமும், நேர்மைத் திறனும், செயல் வல்லமையும் கொண்டவர்.

1961இல் நாவலப்பிட்டி மல்லாந்தை விநாயகர் கோவிலில் மிகஎளிமையாகத் திருமணம் செய்து கொண்ட அவருக்கு குழந்தைகள் இல்லை. தற்போது 84 வயதான அவரது மனைவி தெய்வானை இராஜமாணிக்கம் சிலாபத்தில் உறவினறொருவரின் பராமரிப்பில் உள்ளார்.

எச்.எச். விக்கிரமசிங்க ...✍

சிறுபான்மைக் களங்களை குறுக்கிடும் பலவீனங்கள்!

நூற்பது வருடகால அரசியல் அபிலாஷைகளை அடைவதில் தாண்டவுள்ள தடைகள் இன்னும் எத்தனையோ இருக்கையில், உள்ளக முரண்பாடுகளுக்கே தீர்வின்றியுள்ளனர் தமிழ்மொழிச் சமூகத்தினர். ஒரு ஆவணத்தில் கூட தமிழ்மொழித் தேசியங்களாக ஒன்றுபடாதளவில்தான் இவர்களது இடைவெளிகள் இருக்கின்றன. இதனால், இந்தியாவின் அழுத்தங்களைக் கோரும் இவர்களது முயற்சிகள் ஒருதலைப்பட்சமாகுமளவுக்கு வந்துள்ளன. இந்த அரசாங்கத்திலா இவர்களது ஒற்றுமையின்மையை காட்டுவது? அடைந்துகொள்ள உள்ள இலக்குகளிலே இவர்களுக்குள் இழுபறிகள், 13க்கு மேலாகத்தீர்வு, 13 ஐ வைத்தே நகர்வு, இணைந்த வடகிழக்கில் எங்களுக்கென்ன? என்ற கேள்விகளால் ஒப்பமிடுவதிலிருந்து சில கட்சிகள் ஒதுங்கிக்கொண்டன. சமூகங்களை ஒருநிலைப்படுத்தும் கோட்பாட்டில் செல்லும் இந்த அரசாங்கம், இவர்களின் இந்த முயற்சிகளை எந்தளவு பொருட்படுத்துமென்பதும் தெளிவில்லாதுள்ளது.

"ஒரே நாடு, ஒரே சட்டம்" தான் தேசப்பற்றுக்கு வழி. இன, மத அடிப்படையிலான நிர்வாகப் பிரிவுகள் இனங்களுக்கிடையில் இடைவெளிகளை ஏற்படுத்துமென்கிறது இந்த அரசாங்கம். இது தவிர முஸ்லிம்களின் நிலைப்பாடு, இதைப் போன்று பெரும்பான்மை சமூகத்துக்குள் உள்ள கடும்போக்குகளின் மனநிலை, இன்னும் இவ்வாறு அதிகாரங்களை பகிர்வதில் இந்தியாவுக்குள்ள சிக்கல்கள், இவ்வாறு பலதரப்பட்ட விடயங்களை கடக்க வேண்டிய கடப்பாடுகளுக்குள் சிறுபான்மையினரின் குறிப்பாக, தமிழர்களின் அரசியல் தீர்வு சிக்கியிருக்கிறது. இச்சிக்கல்கள் சர்வதேச அளவில் ஏற்படுத்தப்போகும் அழுத்தங்கள் ஏதோ ஒரு தீர்வை நோக்கி நகர்த்தும். இந்த நம்பிக்கையில்தான் இன்று வரைக்கும் தமிழர் தரப்பு சளைக்காது முயற்சிக்கிறது. ஆனாலும், ஒருதளத்தில் ஒன்றுபட இயலாத பலவீனம், ஆட்சிக்கு வரும் அரசுகளை அரவணைத்துச் செல்லத் தவறும் கவனயீனம், புலம்பெயர் சமூகத்தில் இதுவரையும் முழுமையாகப் பெறப்படாத அங்கீகாரங்கள்தான், தமிழ் அரசியல் தளத்தை தளம்பச் செய்கிறது. ஈழக் கோரிக்கையிலிருந்து இறங்கி வர மறுக்கும் தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள், இன்னும் இந்த தமிழ் தேசியத்தை போராட்ட குணாம்சத்திலா வழிநடத்த விரும்புகிறது?

கனடாவில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்கள் வெளியேற்றப்பட்டதிலிருந்து, அவர்களது உணர்ச்சிகளை புரிந்திருக்கும் இந்த அரசாங்கம். வெளிநாடுகளிலிருந்து தங்களது தாயகத்தை பார்க்கும் இந்த அமைப்புக்கள் இன்றைய யதார்த்தங்களைப் புரிந்துகொள்ளப் பின்னடிப்பது ஏன்? கூட்டமைப்பினருக்குள்ள கவலை இதுதான்.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட புவியியல் ரீதியான அரசியல் பிணைப்பு, எந்த வகையிலும் இலங்கையைக் கூறுபோட உதவாது என்ற உணர்தலில்தான் தமிழ் தேசியம் இன்று சமஷ்டிக்கு இறங்கி வந்திருக்கிறது. இந்தப் புரிதல்களில் தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் செயற்பட வேண்டும்.

இந்த அமைப்புக்களுக்கு செய்ய வேண்டிய பணிகள் எத்தனையோ உள்ளன. இந்தியாவின் அழுத்தத்தை கோரும் நகல் வடிவில் சகல தமிழ் கட்சிகளையும் ஒன்றுபடுத்தியிருக்கலாம். நல்லாட்சி அரசாங்கத்தில் கொண்டுவரப்பட்ட மாகாண சபை திருத்தச் சட்டங்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவளிப்பதை தடுத்திருக்கலாம். இன்னும், அந்த அரசாங்கத்தில் எதிர்க்கட்சியில் இருப்பதை கைவிட வைத்திருக்கலாம். 2010 ஜனாதிபதி தேர்தலில் இருபது இலட்சத்தால் வெல்லவிருந்த மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்காதிருந்திருக்கலாம். இவ்வாறான நகர்வுகளே தமிழ் தேசியத்தின் நகர்வுகளை நலிவடையச் செய்தன.

அதிகாரப் பகிர்வின் முதல் அடையாளமான மாகாண சபைத் தேர்தல்கள், நான்கு வருடங்களாக நடத்தப்படாதுள்ளமைக்கு பொறுப்புக்கூறுமளவில் இந்தத் தரப்புக்களில் தவறு நடந்திருக்கிறது. இன்று கிழக்கை பிரிக்கக் கோரும் முஸ்லிம் தலைமையுட்பட சில பௌத்த கடும்போக்குகளும் இதைத்தானே தூக்கிப்பிடிக்கின்றன. உள்ளதையே காப்பாற்றத் தெரியாத உரிமை கோரிகள் தேசியத்தை பாதுகாப்பது எப்படி? இனங்களுக்காகப் பேசுவது இந்த நாட்டில் இனவாதத்தையே ஏற்படுத்தும்.

மானிடத்துக்காக அல்லது மாநிலங்களுக்காக பேசுவதுதான் இத்தனை காலமாக இழுத்தடிக்கப்படும் பிரச்சினைக்குத் தீர்வு. இதுதான் இவர்களது நிலைப்பாடு. இன்று தேசப்பற்றாளர்களும் இதுபற்றிச் சிந்திக்கவே தலைப்பட்டுள்ளனர்.

மதங்களின் இருப்பு, இனங்களின் கலப்பு, நிலங்களின் பரப்பு மற்றும் மொழிகளின் மரபுகள் பற்றிப் பேசித்தான் நமது நாட்டு உறவுகள் மாண்டுவிட்டன. இனி உள்ளோரது வாழ்வுக்கு ஒளியேற்ற சமூகங்களின் ஒருங்கிணைவுகளே அவசியம்.

இந்த ஒருங்கிணைவுகள் எந்த உணர்வுகளையும் தாண்டியதாக இருத்தல் அவசியம். இதில் ஏதாவது ஒன்று மேலெழ நேரிடின் அது பிரிவினைவாதமாகிவிடும். இவ்விவாதங்கள் தலையெடுக்குமளவிற்கு தமிழ், முஸ்லிம் தரப்புக்களது பலவீனமும், தங்களுக்குள்ளே கயிறிழுக்கும் தமிழ் கட்சிகளது நிலைமைகளும் வந்துள்ளன. இவர்களின் இந்தப் போக்குகளும், பிளவுகளும் தேசப்பற்றுக்குத்தான் பலம் சேர்க்குமே தவிர தேசியங்களைப் பலப்படுத்தாது. மட்டுமல்ல, இவ்விடயத்தில் ஒரு அடிகூட முன்னகர முடியாத நிலைமைகளையே இவர்களது பொதுவெளிகள் ஏற்படுத்தப்போகின்றன. இந்தப் பொதுவெளிகளுக்குள் எதிரிகள் நுழைவது தடுக்க முடியாமலாவதுதான் இந்த தேசியங்களின் பலவீனமாகப்போகிறது.

சுஜப் எம்.காசிம்...✍

யதார்த்தமில்லாத எந்தப் பேச்சும் வடக்கு,கிழக்கை இணைக்காது

அதாவுல்லா எம்.பி

- நாடு, இப்போதுள்ள நிலையில், இம்மாகாணங்கள் இன்றிருப்பது போன்று தனித்தனியாக இருப்பது தான், தென்னிலங் கையிலுள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு (தமிழ், முஸ்லிம்) பாதுகாப்பானது
- வெளிநாடுகளின் கைக்கூலிகளாகச் செயற்படாமல், தங்களை பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த மக்கள் சார்பில் செயற்படுவது அவசியம்.
- இங்கேயுள்ள எமது பிரச்சினைகளை, குளிரூட்டி அறைகளிலும், வெளிநாடுகளிலும் பேசி என்ன பலன்.

வெளிநாடுகளின் கைக்கூலிகளாக இல்லாது, வாக்களித்த மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக, வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி பேசுவதற்கு சிறுபான்மை கட்சிகளின் தலைமைகள் முன்வர வேண்டுமென, தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பிருமான ஏ.எல்,எம் அதாஉல்லா தெரிவித்தார். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்காணலில் அவர் தெரிவித்ததாவது,

கேள்வி: இந்திய, இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது, 13 திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டுவர, இந்திய பிரதமருக்கு நகல் வரையும் பணிகளில் உங்களது கட்சி பங்கெடுக்கவில்லை ஏன்?

பதில்: சாத்தியமில்லாத விடயங்களில் ஏன் பங்கெடுக்க வேண்டும். இதைவிட,வேறு ஏதும் பயனுள்ள விடயங்களில் ஈடுபடுவது சிறப்பாக இருக்கும்.

கேள்வி: வடக்கு, கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என்பதா உங்களது நிலைப்பாடு?

பதில்: சாத்தியப்படும் காலம் கடந்து விட்டது. சில கட்சிகள், இதில், விசுவாசமாகச் செயற்படாது அறிக்கைவிட்டு காலத்தை கடத்தி விட்டன.

கேள்வி: இதிலுள்ளதாக நீங்கள் கருதும் யதார்த்தங்கள் எவை,?

பதில்: இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம்தான் வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட்டன. கிழக்கில் எந்த முஸ்லிம்களிடமும் இதுபற்றி ஆலோசனை கேட்கப்படவில்லை. இதனால், முஸ்லிம்களின் முதுகில் குத்தப்பட்ட ஒப்பந்தமாகவே இதைக் கருதுகிறோம். எனவே, கிழக்கு முஸ்லிம்களின் சம்மதம் கட்டாயம் இதற்கு அவசியம். இதற்காகத்தான், இணைக்க ப்பட்டு பத்து வருடங்களுக்குள் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென, ஒப்பந்தத்திலும் எழுதப்பட்டுள்ளதே!

இவை, எதுவும் நடக்காததால்தான் இந்த விளைவுகள். நாடு, இப்போதுள்ள நிலையில், இம்மாகாணங்கள் இன்றிருப்பது போன்று தனித்தனியாக இருப்பதுதான், தென்னிலங்கையிலுள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு (தமிழ், முஸ்லிம்) பாதுகாப்பானது. வடக்கு, கிழக்கில் தமிழ்மொழிச் சமூகங்கள் இணைந்து செயற்படும் காலங்கள் கடந்துவிட்டன. ஆனால், இம்மாகாணங்கள் தனித்தனியாக இருக்கும் போது, தமிழ்மொழிச் சமூகங்கள் பரஸ்பர பலத்துடனும், புரிந்துணர்வுடனும் இணைந்து வாழ வழியேற்படும். கடந்த காலங்களில், தமிழ், முஸ்லிம் சகோதரர்கள் கிழக்கில் முதலமைச்சராக வரக்கிடைத்தமையும் இதனால்தான். தமிழ்மொழிச் சமூகங்களின் மண்ணில் இரண்டு சமஷ்டிகள் இருந்தால் இவர்களுக்கென்ன நஷ்டம். பெரும்பான்மை வாதம் தலையெடுப்பது, எத்தகைய ஆபத்து என்பதை, இன்னுமா இவர்கள் உணரவில்லை.

கேள்வி: அவ்வாறானால், இணைப்புக்கு முழு முயற்சியுடன் செயற்படும் தமிழ், முஸ்லிம் தலைமைகள், மற்றும் இந்தியாவை நாடும் செயற்பாடுகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்: முதலில், இவர்கள் வெளிநாடுகளின் கைக்கூலிகளாகச் செயற்படாமல், தங்களை பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த மக்கள் சார்பில் செயற்படுவது அவசியம்.இங்கேயுள்ள எமது பிரச்சினைகளை,குளிரூட்டி அறைகளி லும், வெளிநாடுகளிலும் பேசி என்ன பலன். சாதராணமாக கல்முனை வடக்கு செயலகம், வாழைச்சேனை,தோப்பூர் பிரச்சினைகளுக்கு இவர்களால் இதயசுத்தியுடன் தீர்வுகாண முடிந்ததா? தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் எத்தனை வருட உறவுகள் இருக்கின்றன. ஒரே மேசையில் பேசித் தீர்க்கமுடிந்த இந்தப் பிரச்சினைகள் இன்னும் இழுபறிக்குள்ளாவது யாரால். படம் காட்டும் அரசியலையும், நயவஞ்சக செயற்பாடுகளையும் முதலில் முஸ்லிம் காங்கிரஸ் நிறுத்துவது நல்லது. கிழக்கை பிரித்தபோது, அதாவுல்லாவுக்கு பைத்தியம் என்றனர் சிலர். இப்போது பிரிக்கப்பட்டதால் வந்த அனுகூலங்களை தமிழ் புத்திஜீவிகளும் அனுபவிக்கின்றனர். இனங்களுக்காகப் பேசும் கட்சியல்ல தேசிய காங்கிரஸ். மானிதங்களுக்காகவே நாங்கள் பேசுகிறோம்.வடக்குச் சமூகம், கிழக்குச் சமூகம்,மலையக, மேலக, தென்னக சமூகங்கள் என்பதுதான் எங்கள் பார்வை.இதற்குள் எத்தனை இனங்கள் இருந்தாலும் சந்தோஷம்தான். இதை விடுத்து, ஆங்காங்கே கேட்கும் சில தவளைச் சத்தங்களை நாங்கள் பொருட்படுத்தப்போவதில்லை.

கேள்வி: நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி,டொலர் பற்றாக்குறை என்பவற்றுக்கு எப்போது தீர்வு வரும்.?

கேள்வி: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோட்டைக்குள் (கிழக்கு) நீங்கள் நிலைப்படு வது,இனி வருங்காலங்களில் சவாலாக அமையலாம் என்கின்றனரே சிலர்?

பதில்: அதிகாரத்தை மாத்திரம் சிந்திப்பவர் களது பிரச்சினைதான் இது. உள்ள அதிகாரங்க ளை உரிய காலத்திற்குள் எப்படி பயன்படுத்தலாம் என்றுதான் நாங்கள் சிந்திக்கிறோம்.

> **தீர்வை வைத்துக்கொண்டே தீர்வு தேடப்பழகிவிட்டவர்கள் நாங்கள். பாலும், சோறும்தான் (கால்நடை,நெல்) நமது நாட்டுக்கு இறைவன் வழங்கிய அன்பளிப்பு. ஆதிமனிதனின் அருளும் அன்பும் இந்த பூமிக்குத்தான் சொரியப்பட்டுள்ளது. ஸ்ரீபாத, சிவனொளிபாத மற்றும் பாவா ஆதம் மலை என்ற ஒன்றையே, பலரும் பல மொழிகளில் உச்சரிக்கின்றனர்.**

பதில்: தீர்வை வைத்துக் கொண்டே தீர்வு தேடப் பழகிவிட்டவர்கள் நாங்கள். பாலும், சோறும்தான் (கால்நடை, நெல்) நமது நாட்டுக்கு இறைவன் வழங்கிய அன்பளிப்பு. ஆதிமனிதனின் அருளும் அன்பும் இந்த பூமிக்குத்தான் சொரியப்பட்டுள்ளது. ஸ்ரீபாத, சிவனொளிபாத மற்றும் பாவா ஆதம் மலை என்ற ஒன்றையே, பலரும் பல மொழிகளில் உச்சரிக்கின்றனர்.

இத்தனை வளமுள்ள இந்த பூமி எமக்கு கிடைக்க கூடாது என்றுதான் சில வெளிநாடுகள் சிலரைக் கைக்கூலிகளாக வைத்துள்ளன. இவர்கள் இருக்கும் வரை எமது நாட்டில் பஞ்சத்தை ஏற்படுத்தி அவர்களின் பங்குகளைப் பிடுங்கப் பார்க்கின்றனர் வெளிநாட்டினர். இதைப்புரிந்தால்,எல்லாப் பிரச்சினையும் தீர்ந்து விடும்.

இந்த நிலத்தின் பூர்விகத்திலுள்ளவர் இக்கட்சிக்கு தலைவராக உள்ளமையின் விளைவுகளை,இந்த மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். இதனால்தான், கடந்த பட்ஜட்டிலும் தலைமையை தனிப்படச் செய்துவிட்டு அரசுக்கு வாக்களித்துள்ளனர். சமூகங்களுக்கு நலவு செய்வதைத்தான் எமது தேசிய காங்கிரஸ் சிந்திக்கும். அதிகாரத்தில் அமர்வதென்பது எங்களால் முடியாதது. ஆண்டவன்தான் அவற்றை அமானிதமாக அன்பளிக்கிறான்.

இந்த அன்பளிப்புக்களை உரிய முறையில் பயன்படுத்தாவிடின், இறைவனுக்கு பதிலளிக்க முடியாமல்போகும்.

(ராஜகிரிய குறூப் நிருபர்)

கலைப் படைப்புக்கள் மூலமே இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது சாத்தியம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவுடன் ஒரு நேர்காணல்:

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 96 வருட நிறைவை கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் அதன் முன்னேற்றம், கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க தினகரன் வாசகர்களுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் இது! கலைகளின் மூலமே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும், அதற்கு வானொலி சிறந்த ஊடகமாகும்.

மக்கள் விரும்பும் நிகழ்ச்சிகளை வழங்குவதே எனது நோக்கம்

புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டு மக்கள் இரசிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் தொகுத்து வழங்கப்பட வேண்டும் அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்கிறார் அவர்.

கேள்வி: இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 90 வருட வரலாற்றில் நீங்கள் தலைவராக பணிபுரிந்த காலகட்டங்கள் தொடர்பில் தெரிவிப்பீர்களா? உங்கள் காலத்தில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும் அறியமுடிகிறது அது தொடர்பில் தெரிவிப்பீர்களா?

பதில்: தற்போதைய பதவிக்காலத்துடன் நான் ஐந்தாவது தடவையாக அந்தப் பதவியை வகித்துள்ளேன். நான் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்திலும் அந்தப் பதவியை வைத்துள்ளேன். கட்சி, அரசியலுக்கு இங்கு இடமில்லை. தரமான நிகழ்ச்சிகளை வழங்குவதே எனது நோக்கமாக உள்ளது.

அதனையே இன்றும் மேற்கொள்கிறேன். சில பழைய நாடகங்களை புது மெருகு படுத்தி வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். புதியவற்றை நேயர்களுக்கு வழங்க வேண்டும் அதுதான் இப்போதைய தேவை.

யார் என்ன சொன்னாலும் வானொலி தான் மக்களுக்கு ஓரளவு மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கொடுக்கின்ற ஊடகமாக விளங்குகிறது.

'ட்ரபிக்' லைட்டில் நிற்கும் பஸ்ஸிலும் வயலில் வேலை செய்கின்ற விவசாயிகளும் கேட்பது வானொலியைத் தான். அதனால் மக்கள் அதனை விரும்பிக் கேட்கும் விதத்தில் நிகழ்ச்சிகள் தரமானதாக ஒலிபரப்ப வேண்டும்.

அண்மையில், ஒரு சிங்கள மொழிப் பாடலோடு தமிழ் மற்றும் ஹிந்திப் பாடலையும் சேர்த்து வழங்கும் நிகழ்ச்சி யை ஆரம்பித்துள்ளோம்.

தமிழ் பாடல்கள் நாம் எதிர்பார்க்காத அளவு உச்சத்தை அடைந்துள்ளன. தமிழ் பாடல்கள் போன்றே ஹிந்திப் பாடல்களும் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளன. எனினும் இன்னும் எமது நாட்டு பாடல்கள் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை என்பதைக் கவலையுடன் தெரிவிக்க வேண்டி உள்ளது. அந்த வித்தியாசம் நன்றாகத் தெரிகிறது.

புதிய தொழில்நுட்பமே மக்களைக் கேட்கத் தூண்டும். நேயர்கள் வித்தியாசமாக எதிர்பார்க்கின்றனர்.

இந்தியாவில் தமிழ், கன்னடம் ஹிந்தி என பாடல்கள் உருவாக்கப்பட்டு வேறு மொழிகளுக்கும் மாற்றம் செய்யப்படுகின்றன. திரைப்படங்களும் அவ்வாறுதான். இங்கும் அவ்வாறான நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

கேள்வி: வானொலி நிகழ்ச்சிகள் மூலமாக இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என நினைக்கின்றீர்களா?

பதில்: நிச்சயமாக முடியும்! கலைப் படைப்புகள் மூலம் மட்டுமே அதனை மேற்கொள்ளவும் முடியும். சிங்களப் பாடல்கள் தமிழ்மொழியில் வர வேண்டும். அப்போதுதான் அதன் மூலம் இன நல்லிணக்கம் வளரும் என்பது எனது நம்பிக்கை. அவ்வாறான சிறந்த பாடல்கள் உள்ளன. அக்காலத்தில் நான் பிரபாகரனின் பாடகரையும் கலையகத்துக்கு அழைத்து அவரது பாடலை பதிவு செய்துள்ளேன். அவர் மிக இனிமையாகப் பாடக் கூடியவர். நாம் சற்று கடுமையாக முன்னோக்கி நகர வேண்டியுள்ளது.

கேள்வி: புதிய தொழில்நுட்பம், புதிய செயற்பாடுகள் என வரும்போது அதற்கு பெருமளவு நிதியும் தேவைப்படுமே?

பதில்: அந்தளவு பெரும் நிதி தேவைப்படாது. இசையில் மட்டுமே மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். இந்தியாவில் அதுபோன்று எத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை பார்க்க வேண்டும்.

இலங்கையில் பத்திரிகைகளை எடுத்துக்கொண்டாலும் ஓரளவு நல்ல செய்திகள் தமிழ் பத்திரிகைகளில்தான் வருகின்றன. ஏனென்றால் பெரும்பாலான சிங்களப் பத்திரிகைகளில் அந்த நிறுவனங்களின் உரிமையாளர்களே அந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களாகவும் செயல்படுகின்றனர். அவர்கள் சிந்திப்பது தான் அந்த பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இது பத்திரிகைகளை விட தொலைக்காட்சிகளில் மிக அதிகமாகக் காணப்படுகிறது. விடயங்களை தேர்ந்தெடுப்பதும் தயாரிப்பதும் அவர்கள்தான்.

இதனால் மக்கள் தான் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களால் உண்மையை தெரிந்து கொள்ள முடியாமல் போகின்றது.

கேள்வி: யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒலிபரப்பு நிலையத்தை முன்னேற்றுவதற்கு தாங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

பதில்: தமிழ்நாட்டில் எம் .ஜி. ராமச்சந்திரன் நடிக்கும் சினிமா திரைப்படத்திற்கு இலங்கை வானொலி மூலம் பிரசாரம் வழங்கப்பட்ட காலமும் உண்டு. இலங்கை மண்ணை இந்திய மக்கள் புனித மண்ணாக வணங்குவதுண்டு. இலங்கை வானொலிக்கு அதுபோன்றதொரு புனிதமான நிலையை அவர்கள் கொடுத்திருந்தனர்.

மீண்டும் இப்போது உள்ளவர்கள் என் அதனை ஆரம்பிக்க கூடாது? நான் அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒலிபரப்பு நிலையத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். எனினும் அங்கு அவர்கள் கடமை செய்ய விரும்புவதில்லை உடனடியாகவே இடமாற்றம் கேட்கின்றனர். அவ்வாறென்றால் நாம் என்ன செய்ய முடியும்? அதனால் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களையே யாழ்ப்பாணத்திலுள்ள ஒளிபரப்பு நிலையத்திற்கு நியமிப்பதற்கு தீர்மானித்துள்ளேன்.

அதிகமான தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்திலேயே வாழ்கின்றனர். அங்கு தமிழ் கலாசாரத்தை அதன்மூலம் மேலும் பலப்படுத்த முடியும். அதனை கொழும்புக்கும் கொண்டு வாருங்கள் என்று தான் நான் கேட்கின்றேன். யாழ்ப்பாணத்தில் நன்றாகப் படித்தவர்கள் உள்ளனர். அவர்கள் இத்தகைய பொறுப்புகளை எடுத்துச் செய்ய வேண்டும்.

கேள்வி: இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் தங்கள் கருத்து என்ன?

பதில்: நாட்டில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி உள்ளார். இந்தியாவை விட ஏன் அமெரிக்க ஜனாதிபதியையும் விட அதிகாரங்கள் தற்போதைய ஜனாதிபதிக்கு உள்ளன. நீதிமன்றத்திற்கு மேலாகவும் அவரால் செயல்பட முடியும். அத்தகைய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி இலங்கையில் மட்டுமே உள்ளார்.அவருக்கு இன்னும் மூன்று வருடங்கள் உள்ளன. இன்றைய ஜனாதிபதி ஒரு அரசியல்வாதி அல்ல. அவர் ஒரு சிறந்த அரச அதிகாரி.

கொரோனாவோடு உலகில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை நாம் அறிய முடிகிறது. உலக நாடுகள் பல ஸ்தம்பித்துப் போயுள்ளன. விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. சில நாடுகளில் மக்கள் பட்டினியை எதிர் நோக்கியுள்ளனர்.

எமது ஜனாதிபதி பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தடுப்பூசியை கொள்வனவு செய்து நாட்டு மக்களின் உயிர்களைப் பாதுகாத்துள்ளார் என்பதே நாம் பெருமைப்பட வேண்டிய விடயம்.

வேலை செய்ய முடியாத மக்கள் பிரதிநிதிகளே உள்ளனர். அவ்வாறானவர்களை மக்களே தேர்ந்தெடுத்துள்ளனர். சிறந்த சேவை செய்பவர்களைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக மிக மோசமானவர்களை தெரிவு செய்ததன் பிரதிபலனையே மக்கள் தற்போது அனுபவிக்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மூன்று வருட காலங்கள் உள்ளன. அவரால் இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும். அவருக்கு பக்கபலமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ போன்றோர் உள்ளனர். பெசில் ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன் சிறந்த பல தீர்மானங்களை வெளியிட்டுள்ளார். அது இன்னும் ஒரு வரவுசெலவுத்திட்டம் போன்றே அமைந்துள்ளது. மூவரும் ஒன்றாக இணைந்துள்ளதால் இது போன்ற பலம் சஜித் பிரேமதாசவுக்கோ அல்லது வேறு எந்த கட்சிக்கும் கிடையாது. இவர்களால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்பும் முடியும். காலை வாருவோரிடமிருந்து கவனமாக செயற்பட வேண்டியது அவசியம்.

லோரன்ஸ் செல்வநாயகம் ...✍

தமிழர் அரசியலின் "துடக்கு" மனோநிலை

தமிழ்பேசும் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம், இப்பொழுது வடக்குக் கிழக்கிலுள்ள சில தமிழ்க்கட்சிகள் மட்டும் இணைந்து கொடுக்கும் கடிதமாக மாறியுள்ளது. சில கட்சிகள் இதிலும் இல்லை. தமிழ்த்தேசியப் பசுமைக் கட்சி, ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழர் ஜனநாயகக் கட்சி, சமத்துவக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயக் கட்சி, கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு, அகில இலங்கைத் தமிழர் மகாசபை போன்றவையும் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற கட்சிகள்தான் இதில் இணைக்கப்பட்டுள்ளன என்றால் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (EPRLF) தமிழ்த் தேசியக் கட்சியும் எப்படி இணைக்கப்பட்டன என்ற கேள்வி எழுகிறது?

ஏனெனில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் தமிழ்த்தேசியக் கட்சியும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறவில்லை. இவை அங்கத்துவம் வகிக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் விக்கினேஸ்வரனே பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றவர். ஆனால் விக்கினேஸ்வரனுக்குத் தனியாக ஒரு கட்சி (தமிழ் மக்கள் கூட்டணி) உண்டு.

வடக்குக் கிழக்கு இணைப்பு, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல், இனப்பிரச்சினைத் தீர்வு, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றில் இந்தியாவின் பங்கேற்பையும் ஆதரவையும் தமிழ்த்தேசியப் பசுமைக் கட்சி, ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழர் ஜனநாயகக் கட்சி, சமத்துவக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயக் கட்சி, கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு, அகில இலங்கைத் தமிழர் மகாசபை போன்றவையும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இதில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சி மட்டும் அரசாங்கத்தோடு இணைந்திருக்கிறது. ஏனையவை அரசாங்கத்துக்கு "வெளியில்" இருப்பவை.

இங்கே ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக் குறிப்பிட வேண்டும். இதிலே உள்ள தமிழர் சமூக ஜனநாயகக் கட்சிக்கு இன்னொரு வரலாற்று முக்கியத்துவம் உண்டு. அது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) இன்னொரு பிரிவாகும். இந்தப் பிரிவினர் முன்பு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் (EPRLF) இருந்தபோது மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொண்டு அதிலே பங்கேற்றவர்கள். அதற்காக பெரும் விலைகளைக் கொடுத்தவர்கள். நெருக்கடிகளைச் சந்தித்தவர்கள். இன்னும் அதனுடைய தாக்கத்தை எதிர்கொள்ளும் நிலையில் இருப்பவர்கள். இவர்கள் இந்தக் கடிதத்தை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் நிச்சயமாகப் பங்கேற்கும் சூழல் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தத் தரப்பை இந்தக் கடித விடயத்தில் மறந்ததும் மறுப்பதும் நியாயமற்றது.

இதற்குப் பின்னே ஆழமான ஒரு "துடக்கு மனநிலை" செயற்பட்டுள்ளது. தமிழர்களுடைய அரசியலில் ஒரு பெரிய பண்பாகவும் விளைவாகவும் வளர்ச்சியடைந்து தொடர்ந்து கொண்டிருக்கும் "தீண்டத்தகாத – துடக்கு மனநிலை" யின் வெளிப்பாடே இவ்வாறு சில கட்சிகளைத் தவிர்த்து, சில கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு பயணிக்க முற்படுவதாகும்.

இந்தப் போக்கு ஒரு போதுமே வெற்றியளிக்கப்போவதில்லை. ஜனநாயக நெறிமுறைக்குரியதுமல்ல. ஜனநாயகப் போதாமை உள்ள எதுவும் வெற்றியளிப்பதுமில்லை. நீண்டகால வளர்ச்சிக்குக்குரியதுமல்ல. இதை தமிழ் அரசியலாளர்களும் சரி, ஆய்வாளர் என்போரும் சரி, தமிழ் ஊடகங்கள், ஊடகவியலாளரும் சரி புரிந்து கொள்வதே இல்லை. இதனால்தான் தமிழ்ச்சமூகம் எப்போதும் நெருக்கடிப் பட்டுக்கொண்டேயிருக்கிறது. இது பற்றி விரிவாக எழுத வேண்டும்.

இப்பொழுது இந்தியப் பிரதமரிடம் கொடுப்பதற்கு முன்பே இந்தக் கடிதம் சந்தித்த துயரக் கதைகளைப் போல, கொடுத்த பிறகும் இன்னும் என்னென்ன சோதனைகளைச் சந்திக்கப் போகிறதோ! என்ற கேள்வி எழுகிறது. ஏனென்றால், எதிர்காலத்தில் இந்தக் கடிதம் தொடர்பாக இந்தியாவுடன் உரையாடல் ஏதும் நடக்க வாய்ப்பிருந்தால், அதில் என்னென்னவெல்லாம் நடக்கும்? அதுவரையிலும் கூட இதில் ஒப்பமிட்டவர்களிடையே இந்தக் கடிதம் தொடர்பாக ஒற்றுமையும் ஒருமித்த நிலைப்பாடும் இருக்குமா என்பது கேள்வியே!

ஏற்கனவே இதில் மலையகக் கட்சிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தன. தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆரம்ப கட்டச் சந்திப்புகளில் பங்கேற்றிருந்தது. இறுதிக்கட்டம் வரையில் அதனுடைய ஒத்துழைப்பிருந்தது. ஒரு கட்டத்தில் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைக் கூடச் சேர்த்துக் கொள்ளலாம் என்று பேசப்பட்டது. அந்தளவுக்குப் பேசப்பட்ட சங்கதி, ஒடுங்கி தமிழ் முற்போக்குக் கூட்டணியைக் கூட தொடர்ந்து அனுமதிக்காத நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. அதற்கான அகப் புற நிலைமைகளை வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்திய இந்தக் கட்சிகள் புரிந்து கொண்டு இடமளிக்கவில்லை. இது வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும். ஆனாலும் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு எப்போதும் செயற்படும். அதற்கான ஆதரவை தமிழ் முற்போக்குக் கூட்டணி வழங்கும் என்று அது தெரிவித்துள்ளது.

இந்தக் கடித உருவாக்கத்தில் இணைந்து செயற்பட்ட இன்னொரு தரப்பாகிய முஸ்லிம் கட்சிகளும் இடை விலகியுள்ளன. குறிப்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்றவை பங்கேற்றிருந்தன. பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் விலகியது. அதைத் தொடர்ந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் விலகியது. இதற்குப் பிரதான காரணம், வடக்குக் கிழக்கு இணைப்பை இவை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் முஸ்லிம்களுக்கான விசேட அதிகாரம் குறித்த கரிசனையுமாகும்.

இப்படி பல சில்லெடுப்புகளுக்குள்தான் இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

ஆக கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்தக் கடிதத்தில் வடக்குக் கிழக்கில் உள்ள ஏனைய தமிழ்க்கட்சிகளின் பங்கேற்புமில்லை. முஸ்லிம் கட்சிகளின் பங்கேற்பும் இல்லை. சிறுபான்மைத் தேசிய இனத்தினர் என்ற வகையில் தமிழ், மலையக, முஸ்லிம் சமூகங்களின் பங்கேற்பும் இல்லை என்ற நிலையே உள்ளது.

ஆகவே இந்தக் கடிதத்தின் பெறுமதி என்னவாக இருக்கும்? இதை இந்தியத்தரப்பு எப்படி நோக்கப்போகிறது? எப்படி எடுத்துக் கொள்ளப்போகிறது? இதை இலங்கை எப்படி எடுத்துக் கொள்ளப்போகிறது? சர்வதேச சமூகம் எப்படி எடுத்துக் கொள்ளப்போகிறது? என்ற பல கேள்விகள் உள்ளன.

இதற்குள் நடந்த – நடந்து கொண்டிருக்கும் இழுபறிகள் கொஞ்சமல்ல. இதுதான் பெரும் பலவீனமாக உள்ளது. ஏற்கனவே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் இந்தக் கடித்தை பொருட்டென எடுத்துக் கொள்ளவே இல்லை. இது ஒரு கோமாளிக் கூத்து. 13 என்பதே செத்துப் போன பிணம் என்று அது காட்டமான விமர்சனத்தை முன்வைத்திருக்கிறது. இப்படி ஏராளம் சிக்கல்கள், சில்லெடுப்புகள்.

இது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஏனென்றால், தமிழ்க் கட்சிகளுக்குள்ளேயே புரிந்துணர்வும் இல்லை. நேர்மைத்தனமும் இல்லை. தமது அரசியல் நிலைப்பாட்டில் தெளிவும் உறுதியும் இல்லை. அர்ப்பணிப்பும் இல்லை. ஏன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை எடுத்துக் கொண்டாலே, அதற்குள் எப்போதுதான் ஒற்றுமை இருந்திருக்கிறது? ரெலோவும் தமிழரசுக் கட்சியும் புளொட்டும் இழுபறிப்படுவதொன்றும் ரகசியமுமல்ல. புதியதுமல்ல.

இந்தக் கடிதத்தில் கூட ரெலோவும் தமிழரசுக் கட்சியும் எத்தனை தடவை இழுபறிப்பட்டன? தமிழரசுக் கட்சி இதற்கும் தனக்கும் சம்மந்தமில்லை என்ற மாதிரி நடந்து கொண்டது. சுமந்திரன் இந்த முயற்சியைப் பற்றி எள்ளலாகக் கதைத்தார். தனக்கு எதுவுமே தெரியாது என்ற மாதிரி நடந்து கொண்டார் மாவை.

எப்படியே ஒரு கடிதம் இந்தியத்தூதுவருக்கூடாக இந்தியப் பிரதமருக்குச் சென்று சேரப்போகிறது. ஆனால், இதில் மகிழ்ச்சியடைவது சிங்களத் தரப்பும் அரசாங்கமுமே. உண்மையில் தமிழ், முஸ்லிம், மலையக் கட்சிகள் அனைத்தும் இணைந்த ஒரு கட்டமைப்பும் கோரிக்கையும் எழப்போகிறது. அது எதிர்கால அரசியலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தப்போகிறது என்ற ஒரு யோசனையும் எதிர்பார்ப்பும் அரசாங்கத்துக்கும் சிங்களத் தரப்புக்கும் இருந்தது.

அதை இந்தக் கடிதமும் கடித முயற்சியும் சிம்பிளாக இல்லாமல் செய்துள்ளது. மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்களுக்குள் உள்ள பலவீனத்தையும் தெளிவாக்கியுள்ளது.

இதைத்தான் இந்தியாவும் கவலையோடு நோக்கும். இலங்கையில் உண்மையான மாற்றத்தை விரும்புவோரும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் நலனில் அக்கறையுள்ளோரும் கூட இந்தத் துக்கத்தையே கொள்கிறார்கள். இது பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான இன்னொரு கதைதான்.

கருணாகரன் ...✍

திகனை புனித வனத்து சின்னப்பர் ஆலயத்தின் செழுமைமிகு வரலாறு

வனத்து சின்னப்பர் ஆலயம்

ஒல்லாந்தர் காலத்தில் பல கத்தோலிக்க மக்கள் தாங்கள் வாழ்ந்து வந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து, அமைதியும் பாதுகாப்பும் உள்ள வேறு இடங்களைத் தேடிச் சென்றனர். சிங்கள மன்னர்கள் ஆட்சி செய்த கண்டி இராச்சியத்தின் மீது ஒல்லாந்தருக்கு எவ்வித ஆதிக்கமும் இல்லாதிருந்தமையால் இலங்கையில் குடியேறியிருந்த போர்த்துக்கேயரும் உள்ளூர்வாசிகளான பல கத்தோலிக்கர்களும் ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக கண்டி இராச்சியத்தின் பல்வேறு இடங்களில் ஆங்காங்கே குடியேறி வாழ்ந்தனர். இவர்களில் சிலர் குண்டசாலை பகுதிகளிலும் குடியேறியதாக வரலாறு கூறுகின்றது. கண்டி இராச்சியத்தில் புனித யோசேப் வாஸ் அடிகளாரின் மகத்தான இறைபணியின் காரணமாக தழைத்தோங்கிய கத்தோலிக்க விசுவாசிகளுக்கு இறைபணியாற்ற மேலைத்தேய கத்தோலிக்க துறவிகள் இங்குவந்தனர்.

1815ஆம் ஆண்டு கண்டி இராட்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் மலையகமெங்கும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் கோலோச்சியது. 1867ஆம் ஆண்டில் தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பமானதும் பெருமளவிலான தொழிலாளிகள் தமிழகத்தில் இருந்து அழைத்து வரப்பட்டார்கள்.

மலையக வரலாற்றில் கண்டி மாவட்டத்தின் தனிச் சிறப்புமிக்கதாக பல்லேகலை பெருந்தோட்டத்தை குறிப்பிடலாம் பெருந்தோட்டபயிர்கள் அனைத்தும் இந்த தோட்டங்களில் பயிரிடப்பட்டதே இதற்கான காரணம். அம்பாள் கோட்டை (அம்பாக்கோட்டை) புதுதோட்டம் (அலுத்வத்த) இரஜவல்லை, மாபேரிதென்னை போன்ற தோட்டங்களே இவை. இத்தோட்டங்களில் குடியமர்த்தப்பட்ட மக்கள் அனைவரும் இந்து, கத்தோலிக்க மதங்களை பின்பற்றுகிறவர்களாகவும் தமிழ் கலாசாரங்களை அனுசரிப்பவர்களாகவும் காணப்பட்டன.

சுகாதார மருத்துவ வசதிகள் குறைவாக காணப்பட்ட இக்காலத்தில் இவர்கள் தமக்கு ஏற்படும் துன்ப துயரங்கள், தொற்று நோய்களில் இருந்தும், விஷ பாம்புகள், காட்டு விலங்குகளில் இருந்தும் தம்மை பாதுகாத்துக் கொள்ள தமது தெய்வங்களை நாடினார்கள் ஆனால் தமது மத அனுட்டானங்களில் ஈடுபடவோ, வழிபாடுகள் நடாத்தவோ அவர்களுக்கு ஓர் இடம் இருக்கவில்லை. இந்து மக்கள் பெரிய மரங்களுக்கு அடியில் சூலம், நடுகல் நட்டு தமது தெய்வங்களை வழிபடத் தொடங்கினர்.

கத்தோலிக்க மக்களும் மலைப்பகுதிகளில் திறந்த வெளியில் ஒரு பீடம் அமைத்து அதில் ஒரு திருச் சிலுவையை வைத்து வனங்கினர். இதனை குருசடி என அழைப்பர்.

தோட்டங்களில் வாழ்ந்த கத்தேலிக்க மக்களுக்கும் கத்தேலிக்க துறவிகளுக்கும்; தொடர்புகள் ஏற்பட குருசடிகளில் திருப்பலிகள் ஒப்புக்கொக்கப்பட்டதுடன் திருவருட்சாதனங்களும் வழங்கப்பட்டன. இவர்கள் காடுகளிலும் மலைகளிலும் தொழில் புரிந்ததால் மக்கள் தொழிலுக்கு செல்லும் போது புனித வனத்து சின்னப்பரிடம் பாதுகாப்பையும், துணையையும் வேண்டி மன்றாடிச் செல்லுமாறு சொல்லப்பட்டது. இவ்வாறாக கத்தேலிக்க விசுவாசிகள் இத்தோட்டங்களில் பல்கிப்பெருகினர்.

தேவாலய கட்டுமான பணிகள்

தேவாலயம் ஒன்றின் தேவையை உணர்ந்த மக்கள் ஆலயம் கட்டுவதற்கு உரிய இடம் ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் வணிகம் மற்றும் ஏனைய தொழில்களுக்கு வந்தவர்களும் இப்பகுதிகளில் நிலங்களை வாங்கி குடியேறினர்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இருந்து கண்டி மறைகோட்டத்தின் இப்பகுதி தும்பர மிஷன்

(Dumbara Mission) என்ற பரிபாலன பிரிவாக இறை மக்களுக்கான ஆன்மீக பணிகள் இடம் பெற்றதுடன், அதன் பின்னர் தென் இந்தியாவில் இருந்து வருகை தந்த கணிசமாக கத்தோலிக்க மக்களுக்கு சேவைகள் புரிவதற்காக பன்வில பகுதி தெரிவு செய்யப்பட்டது. 1838ஆம் ஆண்டு (Panvila Mission) ஊடாக பணிகள் ஆரம்பமாயின. புனித. ஆசீர்வாதப்பர் சபையை சேர்ந்த துறவிகளே பெரும்பாலும் கண்டி பிரதேசத்தில் சேவைகள் செய்தது வந்தனர் இவர்களில் ஒருவரான அருட். தந்தை. போல் பெரேரா O.S.B இப்பகுதி மக்களுக்கு தமது சேவைகளை தொடர்கையில், ஜோகிம் சந்தனம் கங்காணி என்று அழைக்கப்பட்ட அன்றைய செல்வந்தர் இரஜவெல்ல தோட்டத்திற்கு அருகாமையில் தமக்கு சொந்தமான காணியை ஆலயம் கட்டுவதற்காக வழங்கினார். 1886ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் திகதி இதற்கான ஆவணங்கள் கண்டி ஆயருக்கு அனுப்பிவைக்கப்பட்டதை அடுத்து புனித. வனத்து சின்னப்பர் தேவாலயத்தின் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இருந்து கண்டி மறைமாவட்டம் தனி ஒரு மறைமாவட்டமாக 1887ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட பின்னர் கண்டி மறைமாவட்டத்தின் முதல் ஆயராக அதி. மேதகு ஆயர் கிலமன் பஞ்சானி ஆண்டகை அவர்கள் நியமனம் பெற்றார். ஆயர் அவர்கள் இத் தேவாலயம் கட்டி எழுப்பப்பட உதவிகள் புரிந்து, இவ்வாலயதை கட்டுவதற்காக காணியை வழங்கிய ஜோகிம் சந்தனம் கங்காணி அவர்களக்கு தமது ஆசீரையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கையொப்பம் இட்டு அனுப்பப்பட் சான்றிதழில் 1897ஆம் அண்டு அக்டோபர் மாதம் 5ம் திகதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

புனித வனத்து சின்னப்பருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இத் தேவாலயமானது கற்கள், களிமண் என்பனவற்றைக் கொண்டு; கட்டப்பட்டுள்ளது. பெரும்பான்மையான விசுவாசிகள் தோட்டத் தொழிலாளர்கள் என்பதால் அவர்கள் தொழிலுக்கு சென்றுவந்து மாலைநேரங்களில் ஆலயம் கட்டும் பணியில் ஈடுப்பட்டதுடன், செபத்திலும் கடின உழைப்பிலும்; சிறியவர், முதியவர் அனைவரும் சேர்ந்து மிக பக்தியுடன் ஆலயத்தை கட்டி முடித்தார்கள். அன்றைய காலகட்டத்தில் கட்டப்பட்ட ஆலயங்களில் கண்டி மறைமாவட்டத்தில் கட்டப்பட்ட பெரியதொரு ஆலயமாக இது காணப்பட்டது.

தேவாலய பரிபாலனமும், பங்குத் தந்தையர்களும்

இத் தேவாலயத்தை கட்டிமுடிக்க அயராது பாடுபட்டுழைத்த அருட் தந்தை. போல் பெரேரா O.S.B அவர்கள் 1886ஆம் ஆண்டு முதல் இங்கு பணிபுரிந்ததுடன் 1898ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி நித்திய இளைபாற்றியை அடைந்தார். அவரது உடல் இத்தேவாலயத்தின் உள்ளே அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. அதன் அடையாளமாக 'Of Your Charity, Pray For The Soul Of Rev. Fr. D. Paul Perera O.S.B என்று எழுதப்பட்டிருப்பதையும் இங்குகாணமுடியும்.

1920ஆம் ஆண்டின் பின்னர் ஆலயத்தின் பராமரிப்பு மற்றும் மக்களுக்கான ஆன்மீக பணிகள் அனைத்தும் பன்வில பங்கின் கீழ் கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து, பன்வில பங்கின் பிரதான உப ஆலயமாக இத் தேவாலயம் காணப்பட்டது. இதன் காரணமாக பன்விலை, மடுல்களை, தொடாங்கொல்ல, ரங்கலை, உண்ணாஸ்கிரிய, தெல்தெனிய, மாபேரிதென்னை, திகனை, இரஜவெல்ல, அம்பாக்கோட்டை, பல்லேகலை போன்ற இடங்களில் இருந்து மக்கள் வருகைத் தந்ததுடன் இந்துக்களும், கிறிஸ்தவர்களும் ஒற்றுமையாக விழாக்களை கொண்டாடினார்கள்.

கண்டி மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக பணிகளை பொறுபேற்ற அதி. மேதகு. ஆயர். பீட் பேக்மேயர் அவர்களின் காலத்தில் இப்பிரதேசத்தில் உள்ள பிள்ளைகள் கல்வி கற்க 1924ஆம் ஆண்டில் இத் தேவாலயத்தில் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார்.

இப்பிரதேசத்தில் உள்ள பிள்ளைகளுக்கு பெரும் வரப்பிரசாதகமாக அமைந்த இப்பாடசாலை பல கல்விமான்களையும். உருவாக்கியது. 1924ஆம் ஆண்டு முதல் தனியார் பாடசாலையாக இயங்கிய இப்பாடசாலையை 1977ம் ஆண்டு ஜுன் மதம் 17ம் திகதி இலங்கை அரசு பொறுப்பேற்றது.

மறை மாவட்ட சபை

1947ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் 50வது பொன் விழா கொண்டாடப்பட்டது. 1948ஆம் ஆண்டு மெதமஹாநுவர தொடங்கொல்ல தோட்டத்தில் புனித. அந்தோனியார் தேவாலயம் அருட். தந்தை. ஹென்றி பொன்னுச்சாமி அவர்களினால் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

1964ஆம் ஆண்டு திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு பகுதி மலையக மக்கள் இங்கிருந்து அவர்கள் விருப்பத்திற்கு மாறாக இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர் இதன் காரணமாக எமது கத்தோலிக்க விசுவாசிகள் சிலரும் இங்கிருந்து இந்தியாவிற்கு திரும்பிச் சென்றார்கள். இது மலையகவாழ் மக்களுக்கு பெரும் துயரத்தை ஏற்படுத்தியது.

பன்விலை பங்குக்கு உட்பட்டிருந்த இத் தேவாலயம் 1961ஆம் ஆண்டின் பின்னர் சில காலம் அருட். தந்தை. D.B.கொடிபிலி. அவர்களினால் வத்தேகம தேவாலயத்தில் இருந்து பரிபால செய்யப்பட்டது. பன்விலை பங்கில் இருந்து பிரிந்து 1966ஆம் ஆண்டு படிவத்தை பங்கு உதயமாகியதையடுத்து அதன் கீழ் உப ஆலயமாக இத் தேவாலயத்தின் பரிபாலனம் ஆரம்பமானது.

1972ஆம் ஆண்டு திகனை புனித. வனத்து சின்னப்பர் ஆலயத்தின் 75வது ஆண்டு நிறைவு கொண்டாடப்பட்டது. 1973ஆம் ஆண்டு மாபேரியதெண்ன புனித. அந்தோனியார் தேவாலயம் அருட். தந்தை. டொன் ஹில்டர்பிரன்ட் O.S.B காலத்தில் கட்டப்பட்டது.

பல்லேகலை பெருந்தோட்ட (Rajawella Produce Company) முகாமைத்துவ மாற்றமும், கம்பனி காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்றதின் பின் அவைகள் கவனிப்பார் அற்ற நிலையில் கைவிடப்பட்டன. 1977ஆம் ஆண்டு தோட்டங்கள் கொலனிமயமாக்கல் எனும் பெயரில் பகிர்ந்தளிக்கும் திட்டம் ஆரம்பமானது. அதையடுத்து தோட்ட காணிகள் குடியேற்றங்களாக்கப்பட்டன.

1983ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத கருப்பு ஜுலை கலவரத்தின் காரணமாக இரஜவெல்ல தோட்ட குடியிருப்புகள் விஷமிகளினால் தீக்கிரையாக்கப்பட்டன. அங்கு வசித்து வந்த மக்கள் அனைவரும் வீடுவாசல் சொத்துகளை இழந்தனர். நிர்கதிகளாய் நின்ற இவர்களை நேசக்கரம் நீட்டி அழைத்த கட்டுகஸ் தொட்டை புனித. அந்தோனியார் கல்லூரியின் அன்றைய அதிபர் அருட். தந்தை. ஸ்டீவன் ஆபிரகாம் O.S.B அடிகளார் இம்மக்களை பாதுகாத்தார். பின்னர் அவர்களை அரசாங்கத்தின் உதவியுடன் அம்பாக்கோட்டை தோட்டத்தில் குடியேற வழிவகுத்தார். அம்பாக்கோட்டை தோட்டத்தில் வசித்த கத்தோலிக்க மக்களுடன் இரஜவெல்ல தோட்டத்தில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான கத்தோலிக்க மக்களுமாக இணைந்ததால் அம்பாக்கோட்டை தோட்டத்தில் கத்தோலிக்க சமூகம் வளர்ச்சி கண்டது. இதனால் திகனை. புனித வனத்து சின்னப்பர் தேவாலயத்தில் இரஜவெல்ல தோட்ட தமிழ் மக்களின் பங்களிப்பு என்பது இல்லாமல் போனது.

பங்குத் தந்தை கிறிஸ்டி போல்

துரித மஹாவலித் திட்டதில் விக்டோரியா நீர்தேக்கம் அமைக்கப்பட்டதால் திகனை நகரம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இதன் போது விக்டோரியா நீர்தேக்க கட்டுமான பணிகளைசெய்ய வருகைத்தந்த பிரித்தானிய நாட்டு பொறியியலாளர் மற்றும் தொழில் புரிகின்றவர்கள் தங்குவதற்காக திகனை கிராமம் அமைக்கப்பட்து. இது தற்போது உத்தியோகஸ்தர் கிராமம் என்று அழைக்கப்படுகின்றது. இதன் உள்ளே இரஜவெல்ல தோட்டத்தில் பணிக்காலத்தில் 1997 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி எமது திகனை புனித வனத்து சின்னப்பர் தேவாலயத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் சிறப்பாக இடம் பெற்றதுடன், நூற்றாண்டு விழா திருப்பலி அதி. மேதகு ஆயர். ஜோசப் வியானி பெர்ணன்டோ ஆண்டகை அவர்களினால் ஒப்புக்கொடுக்கப்பட்டு, நூற்றாண்டுவிழா சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

கண்டி மறை மாவட்ட ஆயர்
வண. ஜோசப் வியானி பெர்னாண்டோ

பல சந்தர்ப்பங்களில் செப வழிபாடுகள் இடம்பெறும் வீடுகளுக்கே சென்று இறை மக்களை வழிபாடுகளில் பங்கு பெறுவதற்கு அருட் தந்தை அவர்கள் உற்சாக மூட்டினார்.

1987ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா சிறப்பிக்க உழைத்த எமது ஆலயத்தின் விசுவாசிகள் பலர் இன்று எம் மத்தியில் இல்லை அவர்ளின் ஆன்ம இளைப்பாற்றிகாக மன்றாடுவோம்.

அருட். தந்தை. ஜோசப் மிராண்டா படிவத்தை பங்குத் தந்தையாக பொறுப்பேற்றதனை அடுத்து திகனை ஆலயத்தின் அபிவிருத்தி பணிகளை ஆவலுடன் ஆரம்பித்தார். மண் சுவர்களைக் கொண்ட பழமை வாய்ந்த இத் தேவாலயத்தை விரிவாக்கம் செய்யும் பணிகளில் இரவும் பகலும் பாடுபட்டு பங்கு மக்களின் ஆதரவையும், உதவிகளையும் பெற்று, அதனை செய்து முடித்தார்.

மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

அருட். தந்தை. மில்ரோய் பொன்சேகா

அருட் தந்தை திகனை மக்களுடன் அன்பாக, சுமுகமாகப் பழகியவர். பொது நிலையினர் திருப்பலிக்கான திருவழிப்பாடுகளை ஏற்பாடு செய்யவும், அதில் பங்குபற்றவும் உற்சாகமூட்டினார்.

அருட். தந்தை. கொல்வின் பெர்ணன்டோ புள்ளே

திருப்பலிகள், தூய வார வழிபாடுகள், நத்தார் நிகழ்ச்சிகள் அனைத்தும் தங்கு தடையின்றி இடம்பெறவும், விசேட நாட்களில் ஆலய திருவிழாவின்போது குருமட அருட் சகோதரர்களை வரவழைத்து பாடல் பயிற்சிகள், திருவழிபாடுகளில் அவர்களின் உதவிகளை பெற்றுத்தந்தார்.

அருட். தந்தை. எல்வின் பீற்றர் பெர்ணன்டோ

அருட். தந்தை எல்வின் பீற்றர் பெர்ணன்டோ, படிவத்தை பங்குத் தந்தையாக பணிபுரிய வந்த நாள் முதல் ஆலயத்தின் உள்ளே இட வசதி குறைவும், மழைக்காலங்களில் மறை பாடசாலை மணவர்கள் படும் கஸ்டங்களையும் கண்ட அவர் ஆலயத்தின் பின்புறத்தில் விரிவாக்கள் செய்ய நினைத்தார்.

வனத்து சின்னப்பர் திருவுருவம்

திகனை ஆலயம் எதிர்காலத்தில் ஒரு பங்காக மாற வேண்டும் என்பதால் ஆலயத்தின் பின்னால் இருந்த வெற்றுக் காணியை விலை கொடுத்து வாங்கும் யோசனையை ஆயர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல, ஆயர் அதை ஏற்றுக் கொண்டார். 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலயம் ஆயரினால் திறந்து வைக்கப்பட்டது.

திகனை ஆலயம் மட்டுமல்லாமல் தொடாங்கொல்ல புனித அந்தோனியார் ஆலயமும் இடிக்கப்பட்டு புதிதாக ஆலயம் கட்டப்பட்டது. மாபேரிதென்னை புனித அந்தோனியார் ஆலயம் சீர்திருத்தம் செய்யப்பட்து. திகனையில் பங்கு மனை கட்டப்பட்டு 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. திகனை ஒரு பங்காக உருமாற அனைத்து அடிப்படை வசதிகளும் அருட்தந்தை அவர்களால் செய்து முடிக்கப்பட்டது.

அருட். தந்தை. திமோத்தி ஞனபிரகாசம்

அருட் தந்தை திமோத்தி ஞனபிரகாசம் பாலத்துவ சபையை பங்கிலே மீள் உருவாக்கம் செய்து பல ஊக்குவிப்பாளர்களை பயிற்றுவித்து பங்கிலே அனைவரோடும் அன்பாய் பழகி மக்களை ஆன்மிகத்தில் வழிநடத்தி சிறப்பாக பணிசெய்தார்.

2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் திகதி திகனை புனித வனத்து சின்னப்பர் ஆலய வரலாற்றிலே ஒரு மறுமலர்ச்சி உதயமாகியது. படிவத்தை பங்கில் இருந்து தனி ஒரு பங்காக திகனை ஆலயம் இயங்க ஆரம்பித்தது. பங்கின் முதல் பங்கு தந்தையாக அருட். தந்தை. து. கிறிஸ்டி போல் அடிகளார் நியமனம் பெற்றார்.

2022ஆம் ஆண்டிலே 125வது ஜுபிலிவிழாவை கொண்டாடும் நாங்கள் எம் மூதாதையர் முதல் கொண்டு எங்களை பாதுகாத்து வழிநடத்தும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகள் கூறிடுவோம். இத்தனை ஆண்டுகள் எம்மை எல்லா விதமான இயற்கை அழிவுகள், தொற்று நோய்கள், ஆபத்துகளிலும் பாதுகாத்த எமது பாதுகாவலராம் புனித. வனத்து சின்னப்பரிடம் தொடர்ந்தும் எமக்காக பரிந்து பேச வேண்டிடுவோம்.

இந்த நூற்றாண்டு விழா சிறப்பு மலரை எமது ஆயர் அதி. மேதகு. ஜோசப் வியாணி பெர்ணன்டோ ஆண்டகையிடம் சமர்ப்பிக்கும் நாங்கள் எமது ஆயர் அவர்கள் கடந்த 39 வருடகாலம் எமக்குசெய்து வரும் அளப்பெரிய சேவையை ஆயர் அவர்களின் பார்வையில் திகனை புனித வனத்துச் சின்னப்பர் தேவாலயமும், மக்களும் ஆயனின் அன்பார்ந்த மந்தைகளாக என்றும் திகழ்கின்றனர். புனித வனத்துச் சின்னப்பர் தேவாலயம் இன்று ஒரு பங்காக உருவாக வியாணி பெர்ணன்டோ ஆண்டகைக்கு பங்கு மக்கள் என்றுமே நன்றி கடன் பட்டவர்களே! ஒரு ஆயராக இல்லாமல் ஒரு தந்தையாக எங்களுக்கு நல்வழிகளை காட்டி, மறை மாவட்டம் முழுவதும் புனித. யோசேவாஸ் அடிகள் விட்டுச்சென்ற மறைபறப்பு பணியினை அடிகளாரின் மறுரூபனாய் வந்து மகத்தான பணிகள் புரிந்திருக்கிறார். அவருக்கு

தமது வரங்களையும், ஆசீர்வாதங்களையும் பொழிந்து நீடூழி வாழச்செய்ய இறைவனை வேண்டுகிறோம்.

திகனை புனித வனத்து சின்னப்பர் தேவாலயத்தின் வரலாற்ரையும், அதன் வளர்ச்சியையும் பற்றிய இந்த பதிவினை தொகுத்து வழங்க உற்சாகமூட்டிய எமது பங்குத் தந்தை. அருட் திரு. து. கிறிஸ்டி போல், உதவிகள் புரிந்த அருட். தந்தையர்கள் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எனது இதய பூர்வ நன்றிகளையும், ஆலயத்தின் 125வது நூற்றாண்டு விழா நல்வாழ்த்துக்களையும், தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொகுப்பு:
எந்தனி பெனடிக் மொரிஸ் ...✍

டொலர் நெருக்கடியும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளும்

இலங்கையை வாட்டி வதைத்து வரும் டொலர் பற்றாக்குறைப் பிரச்சினையானது எதிர்பாராமல் திடீரென ஏற்பட்ட ஒரு பிரச்சினை அல்ல, மாறாக இலங்கை தானாகத் தேடிப்பெற்றுக்கொண்ட ஒரு பிரச்சினையாகும். விவேகபூர்வமற்ற கொள்கைத் தெரிவுகளும் அக்கொள்கைத் தெரிவுகள் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மைகளும் அந்த நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக அதிகரித்துச் சென்ற முதலீட்டு இடர்நேர்வுகளும் இலங்கையை முதலீட்டுக்கு அபாயாகரமான ஒரு நாடாக சர்வதேச முதலீட்டாளர்கள் கருதச் செய்துள்ளது. இதனால் இலங்கையின் பணச்சந்தையில் வெளிநாட்டவர்களுடைய பங்கு பற்றல் வீழ்ச்சியடைந்திருக்கிறது. ஒரு காலத்தில் கொடிகட்டிப்பறந்த கடன் கருவியான திறைசேரி பிணையங்கள் இப்போது கேட்போரற்றதாக மாறிவிட்டன.

வெளிநாட்டு குறுங்கால முதலீட்டாளர்கள் இலங்கையிலிருந்து தமது முதலீடுகளை மீளப்பெற்றுக்கொண்டமை டொலர் வெளிச்செல்கையை அதிகரித்தது. மறுபுறம் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்றுமதிகளில் தொய்வு எற்பட்டது. ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

இலங்கை இன்னமும் கைகொடுக்கும் என நம்பிக்கொண்டிருக்கும் சுற்றுலாத்துறை சார் டொலர் சம்பாத்தியங்கள் கொரேனா பெருந்தொற்றினால் சடுதியான வீழ்ச்சியைச் சந்திக்க நேர்ந்தது. இலங்கைப் பணியாளர்களை வெளிநாட்டில் வேலைகளுக்கு அனுப்பி அவர்கள் உழைத்து அனுப்பும் டொலர் சம்பாத்தியங்களும் கணிசமான ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டன. காலங்காலமாக ஒரு ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாக செயற்பட்டுவந்த இலங்கையைத் தற்சார்புப் பொருளாதாரமாக சுயதேவையைப் பூர்த்திசெய்யும் நிலைக்கு வலுப்படுத்தும் முயற்சிகள் பெரும்பாலும் தோற்றுப் போய்விட்டதாகவே கருதவேண்டும்.

உலகில் எந்த ஒரு நாடும் இறக்குதிகளைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதிகளை ஊக்குவித்து பொருளாதார வளர்ச்சியை அடைந்ததாக வரலாறு காட்டவில்லை. மாறாக வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்து ஏற்றுமதிச் சந்தைகளை நாடிய பல்வேறு நாடுகள் தாமாகவே சில வகைப்பொருள் உற்பத்தி தொடர்பில் சுயதேவைப் பூர்த்தியடைந்தது மாத்திர மன்றி உலகநாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளாகவும் மாறின. அதேவேளை இறக்குமதி பதிலீட்டு பொருளாதார வளர்ச்சி உபாயம் உலகின் பல்வேறு பிரதேசங்களில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு தோல்வியடைந்த வரலாறுகளே தென்படுகின்றன.

இலங்கையிலும் கூட 1970-1976 வரையிலான காலப்பகுதியில் தீவிரமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் உள்நாட்டிலேயே எல்லாவற்றையும் உற்பத்தி செய்யும் உபாயம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. மோசமான பொருட் தட்டுப்பாடும் நீண்ட வரிசைகளும் மக்களை வாட்டவே 1977 நடைபெற்ற பொதுத்தேர்தலில் படுமோசமான தோல்வியைப் பரிசாக வழங்கி குறித்த அரசாங்கத்தை ஜனநாயக ரீதியில் மக்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். 1970களில் நிலவிய உலகபொருளாதாரச் சூழ்நிலைகளுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்ட ஓர் உலகிலேயே இப்போது நாம் வாழ்கிறோம்.

இன்றைய நிலையில் இறக்குமதிகளை அனுமதிக்காத நாடுகளால் ஏற்றுமதி செய்யவும் முடியாது. இலங்கை போன்றதொரு நாட்டினால் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்து முன்னேற்றத்தைக் காண முடியாது. இலங்கை இன்று ஏற்றுமதி செய்யும் பொருட்களில் பெரும்பாலானவை இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளிலேயே தங்கியிருக்கின்றன. எனவே இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கையின் ஏற்றுமதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

டொலர் உள்வருகை குறைந்த வேளை கடன் மீளச் செலுத்தல்கள் கழுத்தை இறுக்கியபோது கடுமையான டொலர் பற்றாக்குறை ஏற்பட்டு டொலரின் பெறுமதி சடுதியாக எகிறியது. மத்திய வங்கி 203 ரூபாவுக்குமேல் போக விடமாட்டேன் என்று அதனைக் கட்டி வைத்திருக்கிறது. சந்தையில் அந்த விலைதான் நிலவவேண்டும் என்றால் டொலருக்கு நிலவும் கேள்வி நிரம்பல் நிலைமைகளே அதனைத் தீர்மானிக்க வேண்டும். மத்திய வங்கி கட்டிவைத்துள்ள 203 ரூபா விலையில் சந்தையில் டொலர் கிடைக்கவில்லை என்றால் அந்த விலையில் டொலரின் நிரம்பலைவிட கேள்வி அதிகமாக உள்ளதென்றே அதாவது அவ்விலையில் டொலர் பற்றாக்குறை நிலை நிலவுவதாகவே கருதவேண்டும்.

இந்நிலையில் 203 ரூபா விலையைப் பேணிச்செல்ல வேண்டுமாயின் சந்தையில் பற்றாக்குறையாக உள்ள டொலர்களை மத்திய வங்கி சந்தைக்கு விற்பனை செய்ய வேண்டும்.

'இறக்குமதிகளை அனுமதிக்காத நாடுகளால் ஏற்றுமதி செய்–யவும் முடியாது. இலங்கை போன்றதொரு நாட்டினால் இறக்–குமதிக் கட்டுப்பாடுகளை விதித்து முன்னேற்றத்தைக் காண முடியாது. இலங்கை இன்று ஏற்றுமதி செய்யும் பொருட்களில் பெரும்பாலானவை இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளி–லேயே தங்கியிருக்கின்றன. எனவே இறக்குமதிக் கட்டுப்–பாடுகள் காரணமாக இலங்கையின் ஏற்றுமதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன'

'நாட்டின் பொருளாதாரத்தை ஒரு நிச்சயமற்ற நிலையில் நீண்டகாலத்திற்கு இயக்கிச் செல்வதனால் ஏற்படும் பொரு–ளாதாரப் பாதிப்புகளைவிட சந்தை முறைமைக்கு மாறுவத–னால் ஏற்படும் வலி குறைவாகவே இருக்கக் கூடும். நாட்டின் வணிக சமூகத்தினர் தொழில் முயற்சியாளர்கள் உட்பட நாட்டின் பெரும்பான்மையினரான நுகர்வோர் இந்த டொலர் நெருக்கடியினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்'

அப்படி செய்வதற்கு மத்திய வங்கியிடம் போதியளவு டொலர் கையிருப்பு இருக்க வேண்டும். அவ்வாறு போதிளவு கையிருப்புகள் இருந்தாலும் கூட இந்த நடவடிக்கையை நீண்டகாலத்திற்கு தொடர்ந்து செய்ய முடியாது. காரணம் வெகு சீக்கிரமே மத்திய வங்கியின் டொலர் கையிருப்புகள் தீர்ந்து போய்விடும்.

எனவே மத்திய வங்கியிடமிருந்து டொலரைப் பெறமுடியாத நிலையில் மாற்று வழிகளை நாட வேண்டிய கட்டாயத்திற்கு இறக்குமதியாளர்கள் தள்ளப்படுவர். எங்கெல்லாம் சந்தைப்பிறழ்வுகள் ஏற்படுமோ அங்கெல்லாம் கள்ளச் சந்தைகளும் தொழிற்படும். இங்கும் நடந்திருப்பது இதுதான். கள்ளச்சந்தையில் மிக அண்மையில் ஒரு டொலர் 245 ரூபாவுக்கு விற்கப்படுவதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன. மத்திய வங்கி என்னதான் சட்டம் போட்டு தடுக்கிற செயற்பாட்டில் ஈடுபட்டாலும் ஒரு டொலருக்கு மிகப் பெரிய இலாபம் கிடைக்கிற காரணத்தால் திட்டம் போட்டு செய்கிற கூட்டம் அதனைச் சிறப்பாகவே செய்து வருகிறது. இருக்கிற டொலரைக் கொண்டு வாங்கோ 10 ரூபா கூடுதலாகத் தருகிறோம் என்று என்னதான் மத்திய வங்கி கூவினாலும் அந்த விலையிலும் தம்மிடமுள்ள டொலரை மத்திய வங்கிக்கு விற்க ஒரு விவேகபூர்வமான நபர் முன்வரமாட்டார். காரணம் சந்தையில் 213 ரூபாவை விடக் கூடுதலான விலைக்கு அதனை விற்க முடியும் என்பதாகும். தன்னுடைய வாலைத் தானே விழுங்கிய பாம்பின் நிலைதான் இப்போது இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது. ஒன்றில் விழுங்கியதைக் கக்கிவிட வேண்டும். ஆனால் வாலுக்கு டெமேஜ் ஏற்படுவதைத்தடுக்க முடியாது. அதேவேளை தொடர்ந்து விழுங்கவும் முடியாது. இதேபோல நெடுங்காலம் நீடிக்கவும் முடியாது. கடன்வாங்கி கழுத்து வலிக்கு தைலம்தான் தடவலாம். இலங்கை மத்திய வங்கி கட்டிவைத்துள்ள டொலர் பெறுமதியை அவிழ்த்துவிடவேண்டிய சூழல் வெகுவிரைவிலேயே ஏற்படலாம். நாடுகளிடம் கடன் வாங்கி டொலர் கையிருப்புகளை சேகரித்துக்கொண்டு அப்படிச் செய்தால் சந்தையில் டொலர் பெறுமதி சரிவதை ஓரளவுக்கு மெதுவானதாக மாற்றலாம்.

இப்போதுள்ள நிலையில் ஏற்றுமதி மூலமான டொலர் உள்வருகையையும் இலங்கையர்கள் வெளிநாடுகளில் உழைத்தனுப்பும் பணவருகைகளையும் அதிகரிக்க வேண்டுமாயின் இப்போதைய நாணய மாற்று வீதம் சந்தை மாற்றுவீதத்திற்கு மாறவேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக டொலரின் விலை செயற்கையாக அதிகரித்துள்ளது. நாடு மீண்டும் சந்தையினால் தீர்மானிக்கப்படும் நாணயமாற்று வீதத்திற்கு மாறினால் அந்த விலை குறைவடையக்கூடும். இவ்வாறு செயற்கையாக 203 ரூபா மட்டத்தில் டொலர் விலையை மத்திய வங்கி வைத்திருப்பதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. ரூபாவின் பெறுமதியை சந்தையில் நிலவும் விலைக்கு சரிய அனுமதித்தால் முதலாவது இலங்கை ரூபாவிலான கடன் மீளச் செலுத்தல் பெறுமதிகள் கணிசமாக அதிகரிக்கும். இரண்டாவது இறக்குமதிகளின் விலைகள் அதிகரிக்கும் இதனால் உற்பத்திச் செலவுகள் கூடும். வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருமானங்கள் கணிசமான வீழ்ச்சியைச் சந்திக்கும். இது தவிர வேறுபல தாக்கங்களும் ஏற்படும் இவற்றைச் சந்திக்க முறையான திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும் அவசியம்.

நாட்டின் பொருளாதாரத்தை ஒரு நிச்சயமற்ற நிலையில் நீண்டகாலத்திற்கு இயக்கிச் செல்வதனால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகளைவிட சந்தை முறைமைக்கு மாறுவதனால் ஏற்படும் வலி குறைவாகவே இருக்கக் கூடும். நாட்டின் வணிக சமூகத்தினர் தொழில் முயற்சியாளர்கள் உட்பட நாட்டின் பெரும்பான்மையினரான நுகர்வோர் இந்த டொலர் நெருக்கடியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டொலர் நெருக்கடியானால் பெருந்தொகையான கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக அறியவருகிறது. அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட இடைநிலை மற்றும் மூலப்பொருள்களும் அவற்றில் இருக்கலாம். உரிய காலத்தில் அவை சந்தைக்குச் சென்றாலே நாட்டின் உற்பத்தி வினியோகம் மற்றும் நுகர்வு நடவடிக்கைகள் ஒழுங்காக இயங்க முடியும்.

நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை டொலர் நெருக்கடியைக் காரணம் காட்டி முடக்க நிலைக்கு இட்டுச் சென்றால் அப்பாதிப்புகளில் இருந்து மீள்வது அவ்வளவு இலகுவானதாக இருக்காது. அது ஒரு விவேகபூர்வமான செயலும் அல்ல. சீனாவிடமும் இந்தியாவிடமும் இலங்கை பெறுகின்ற கடன்கள் வலிக்கு களிம்பு தடவ மட்டுமே பயன்படலாம். விழுங்கிய வாலைக் கக்கித்தான் ஆகவேண்டும். அதற்கு தேவையான மருத்துவ உதவிகளை அதற்கான கென சிறக்குமியல்பு பெற்ற மருத்துவரான சர்வதேச நாணய நிதியத்தை நாடலாம்.

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

வடகொரிய ஏவுகணை பரிசோதனையும் பிராந்திய அரசியல் சமநிலையும்

வட, தென்கொரிய கொதிநிலை அரசியல் தொடர்ச்சியாக பேணுகின்ற வகையில் வடகொரியா ஆயுத பரிசோதனைகளையும் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிட்டும் வருகின்றது. இவ்வாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் அணுவாயுத பரிசோதனைகளை விட உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமெனக் கூறிய வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன், கடந்த 05.01.2021அன்று கிழக்கு கடற்கரை நோக்கி ஏவுகணை பரிசோதனை மேற்கொண்டதாக தென்கொரியாவும் ஜப்பானும் அறிவித்துள்ளன. இக்கட்டுரையும் வடகொரியாவின் சமகால போக்கினையும் அது மேற்கொண்டுள்ள ஏவுகணை பரிசோதனை வெளிப்படுத்தும் அரசியலையும் தேடுவதாக அமைந்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் வடகொரியாவின் கிழக்கு கடற்கரை நோக்கி மேற்கொண்டுள்ள ஏவுகணை பரிசோதனை நடவடிக்கையானது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பரிசோதனை என சந்தேகம் கொள்ளப்படுகிறது. கடந்த ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக வடகொரியா இவ்வகை பரிசோதனையை மேற்கொள்வதான ஜப்பானிய பிரதமர் பியூநியோ கிசிடா தெரிவித்துள்ளார். இவ் ஏவுகணை சுமார் 500கி.மீ பறந்து ஜப்பானிய பிரத்தியோக பொருளாதார வலயத்துக்கு அப்பால் விடிந்து வெடித்துள்ளதாக ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் நபுவோ கிஸிடா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது இவ்ஏவுகணை பலஸ்டிக் வகை என்று சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், இவ்ஏவுகணை தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகவில்லை எனவும், அணுவாயுதங்களை சுமந்து செல்லும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வடகொரியா பரிசோதனை செய்ய முடியாதென ஐக்கிய நாடுகள் சபை தடை விதித்துள்ளது. ஆனால் அவற்றை எல்லாம் மீறி வடகொரியா ஏவுகணை பரிசோதனையை மேற்கொண்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை இவ்ஏவுகணை தாக்குதல் நிகழ்த்தப்பட்ட காலப்பகுதியை அண்டி தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜோ இன் கிழக்கு கரையோர பகுதியில் வடகொரியாவின் எல்லையோரமாக புதிய ரயில் பாதையொன்றை ஆரம்பித்து வைக்கின்ற நிகழ்வுக்காக இருகொரியாக்களையும் பிரிக்கின்ற பகுதியில் விஜயம் செய்ய தயாராக இருந்தாரெனவும் அச்சந்தர்ப்பத்திலேயே கிழக்கு கரையோரத்தை தாண்டி இவ் ஏவுகணை வீசப்பட்டதாகவும் தென்கொரிய தகவல்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, மூன் தென்கொரிய கிழக்கு கரையோர நகரமான கோஸிங் நகரத்தை நோக்கி பயணம் செய்ய திட்டமிட்டிருந்தார். இத்தாக்குதலுக்கும் அவரது பயணத்துக்கும் இடையில் மணித்தியால இடைவெளியே காணப்பட்டது. இதுபற்றி மூன் குறிப்பிடுகின்ற போது இருநாட்டுக்குமான பதற்றத்தை இவ்வாறான ஏவுகணை தாக்குதல்கள் அதிகரிக்கும் என்றும் வடகொரியா உரையாடலுக்கான உண்மையான எண்ணங்களை கொண்டிருக்க வேண்டுமென்றும் இந்நிகழ்வு உரையாடலுக்கான அடிப்படை நியமங்களை மீறியுள்ளதென்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும் தெரிவிக்கையில், இரு கொரியாக்களும் ஒன்றுசேர்ந்து நம்பிக்கையையும் சமாதானத்தையும் என்றோவொரு நாள் கட்டியெழுப்ப வேண்டிய சூழல் ஏற்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடகொரியாவின் ஏவுகணை நடவடிக்கை திட்டமிடப்பட்ட தாக்குதல் முயற்சியாக இருக்குமா என்ற சந்தேகம் ஒருபுறம் இருக்க மறுபக்கத்தில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பரிசோதனை நிகழ்த்தப்பட்டதாகவும் அதனை உறுதிப்படுத்தாத சூழலிலும் அதன் இயல்புகள் உள்ளார்ந்த அரசியல் தாற்பரியங்களை கொண்டுள்ளதாகவும் சொல்லப்படுகின்றது. அதன் தன்மையை நுணுக்கமாக அவதானித்தல் வேண்டும்.

ஒன்று, வடகொரியாவின் ஏவுகணை நடவடிக்கையானது, தென்கொரியா மற்றும் ஜப்பானுக்கான அச்சுறுத்தல் பொறியாகவே அமைகின்றது. வடகொரியாவின் ஏவுகணை நடவடிக்கை பற்றிய செய்திக்குறிப்பேட்டில் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடுவது போன்று ஜப்பானின் பொருளாதார வலயத்திலிருந்து 500கி.மீ தூரத்தில் வெடித்துள்ளமையானது, நேரடியாக ஜப்பானுக்கான எச்சரிக்கையாகவே அமைகின்றது. மேலும் தென்கொரிய ஜனாதிபதி மூன் பயணம் செய்ய திட்டமிட்ட பிரதேசத்தினூடாக அவரது விஜயத்துக்கு மணித்தியால இடைவெளிக்கு முன்னர் ஏவுகணை நடவடிக்கையை வடகொரியா மேற்கொண்டுள்ளமையும் தென்கொரியாவுக்கும் சவால் விடும் நடவடிக்கையாகவே அமைகின்றது. வடகொரியா அரசாங்கம் தனது அணுவாயுத அரசியலூடாகவே கடந்த காலங்களிலும் தமது அரசியல் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறானதொரு மரபிலேயே இம்முறையும் ஒரு ஏவுகணை நடவடிக்கையூடாக தனது பிராந்திய முரண்பாட்டு தரப்புகளான தென்கொரியா மற்றும் ஜப்பானுக்கு எச்சரிக்கை அரசியலை வடகொரியா மேற்கொண்டுள்ளது என்பதையே விளங்கிக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

இரண்டு, சமகால சர்வதேச அரசியலில் அமெரிக்காவின் தலைமை உலக அதிகாரத்திற்கு சரியான தலைமையை வழங்கக்கூடிய ஆளுமையை கொண்டிருக்கவில்லை என்ற பார்வை காணப்படுகின்றது. இக்காலப்பகுதியை தனக்கு சாதகமான களமாக பயன்படுத்திக் கொள்ள வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜோங் உன் எத்தனித்துள்ளார் என்பதையே வடகொரியாவின் ஏவுகணை நடவடிக்கை புலப்படுத்துகிறது. அதாவது, அமெரிக்காவின் ஜனாதிபதி பைடனது நடவடிக்கைகள் உலக அதிகாரத்திற்கு வலுச்சேர்ப்பதாக காணப்படவில்லை. குறிப்பாக ஆட்சிபீடமேறி ஒரு வருடத்தினுள் ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை வெளியேற்றியமை ஐரோப்பாவுக்கு தலைமை தாங்க முடியாமை ஆக்காஸ் உடன்பாட்டில் பிரான்ஸ் ஜேர்மனி என்பனவற்றை அரவணைத்து செயல்படாமை தொடர்பில் எதிரான விமர்சனங்களை மாத்திரமே பெற்றுள்ளார். மறுதலையாய் வலுப்பெற்றுவரும் சீனா மற்றும் ரஷ்யாவின் சர்வதேச அரசியல் நெருக்கடிகளுக்கு சரியான பதில் வழங்காத ஆளுமையற்ற தலைமையாகவே உருவகப்படுத்தப்பட்டுள்ளார். இவ்வாறான சூழ்நிலையினை கிம் ஜோங் உன் பயன்படுத்திக்கொள்ள முனைவதனையே சமீபத்திய நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

மூன்று, சர்வதேச அரசியலில் சமகாலத்தில் ரஷ்யா உக்ரைன் விவகாரமும் மற்றும் சீனா, தைவான் விவாகாரமுமே முதன்மையான விவகாரங்களாக உள்ளன. அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகள் இவ்விவகாரங்களிலேயே அதிக கவனத்தை குவித்து வருகின்றன. இச்சூழ்நிலையில் வடகொரியா தனது பிராந்திய முரண்பாட்டு அரசுகளுக்கு நெருக்கடியை உருவாக்குவதனூடாக தனது அதிகாரத்தை பிராந்தியத்தில் பலப்படுத்தி கொள்வதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்வதனை இராணுவ பலத்தாலும் ஆயுத வலுவாலும் நடவடிக்கையூடாக அறிய முடிகிறது.

நான்கு, ரஷ்யா மற்றும் சீனாவுக்கான ஆதரவுத் தளமாகவும் வடகொரியாவின் ஏவுகணை நடவடிக்கைகளை விளங்கிக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. அதாவது, ரஷ்யா, உக்ரைன் விவகாரத்தில் உக்ரைனுக்கு சார்பாகவும் மற்றும் சீனா, தைவான் விவகாரத்தில் தைவானுக்கு சார்பாகவும் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் ரஷ்யா மற்றும் சீனாவிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில், வடகொரியா மேற்கு சார்பான தென்கொரியா மற்றும் ஜப்பானுக்கு எதிரான செயற்பாடுகளை அதிகரிப்பது அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளுக்கு நெருக்கடியை அதிகப்படுத்துவதாக காணப்படும். இதனூடாக தனது நட்பு நாடுகள் மீது குவிந்துள்ள நகர்வுகளையும் எதிர் கூட்டுக்களின் உத்திகளையும் முறியடிக்க முயலுகின்றதைக் காணமுடிகிறது. இதன் மூலம் சீனா ரஷ்யா மீதான மேற்கின் உத்திகள் நெருக்கடிக்குள்ளாகும் நிலை தவிர்க்க முடியாததாகும்.

ஐந்து, வடகொரியாவின் ஏவுகணைத் தாக்குதல் தென்கொரிய ஜனாதிபதியை இலகுவாக இலக்கு வைத்திருக்க முடியும். ஆனால், வடகொரியாவை பொறுத்தவரை அப்பிராந்தியத்தில் தனது இராணுவ பலத்தை வலுப்படுத்துவதோடு எதிரிகளுக்கு நெருக்கடி கொடுப்பதுவும் அவர்களின் இலக்குகளை அடையவிடாது தடுப்பதுவும் மற்றும் புவிசார் பூகோள அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்துவதும் அடிப்படை உத்தியாக தெரிகிறது. அதுவே வடகொரியாவின் இருப்பை உத்தரவாதப்படுத்தும். அதுமட்டுமன்றி தென்கொரிய ஜனாதிபதி கிழக்கு கடற்கரையை நோக்கி விஜயம் செய்கின்றார் என்ற செய்தி இரும்புத்திரையுள்ள வடகொரியாவிற்கு கிடைத்துள்ளதென்பதே முக்கியமான செய்தியாகும். ஏறக்குறைய தென்கொரிய, ஜப்பான் போன்ற நாடுகளின் அனைத்து நகர்வுகளையும் வடகொரியா கண்காணிக்கின்றது என்பதுவே இந்நடவடிக்கையின் சாரம்சமாகும்.

ஆறு, வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனையோ அல்லது ஏவுகணை தாக்குதலோ அதன் மீதான பொருளாதார தடைக்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது. அதனைப்பற்றிய உரையாடல்கள் ஐக்கிய நாடுகள் சபையில் ஜப்பான் தென்கொரியா நாடுகளாலும் மேற்கு நாடுகளாலும் உரையாடப்படுகிறது. அதன் விளைவுகள் வடகொரிய மக்களின் இருப்பிலும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளுகின்ற சூழலை ஏற்படுத்தக்கூடியது. உணவுக்கான தட்டுப்பாடு என்பது கொவிட் தொற்றுக்கு பின்னால் உலகளாவிய ரீதியில் அதிகரித்துவரும் சூழலில் ஓர் அபாயமான கட்டத்தை வடகொரியா நெருங்குகின்றது.

எதுவாயினும், இராணுவ பலக்கோட்பாட்டை முன்னிறுத்தி செயற்படும் வடகொரியா உணவினையும் ஆயுத தளபாடங்களையும் ஒரே தளத்தில் வைத்து மதிப்பிடுவது ஆயுத தளபாடங்கள் இல்லாத போது உலகத்தால் கைப்பற்றப்படும் நாடாக மாறிவிடும் என்ற அச்சமும் காணப்படுகின்றது. அதேநேரம் உணவுக்கட்டுப்பாடு என்பது மக்கள் இல்லாத நாட்டை நோக்கி இட்டுச்செல்லும் என்ற அச்சமும் வடகொரியாவில் காணப்படுகிறது. எனவே, இவையிரண்டும் வடகொரிய என்ற தேசத்தின் இருப்புக்கு அத்தியவசியமானது. இவ்ஏவுகணை பரிசோதனை அல்லது தாக்குதல் வடகொரியாவிற்கு மட்டுமல்ல சீனர,ரஷ்ய நலன்களுக்கும் தந்திரோபாயமான நகர்வாகவே தெரிகின்றது.

தினகரன் வாரமஞ்சரி
மஞ்சரி மாருதம்

தமிழரின் தனிப்பெரும் பண்டிகை தைப்பொங்கல் பெருவிழா

தை முதலாம் திகதி அன்று தமிழர்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழாவாக தைப்பொங்கல் விழா விளங்குகிறது. தமிழர் திருநாளாக இலங்கை, தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, மொரிசியஸ், கனடா, ஐக்கிய ராஜ்யம், அவுஸ்திரேலியா என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இவ்விழா சமயங்கள் கடந்து அனேக தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகவே கருதப்படுகிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை. பொங்கற் பண்டிகை உழவர் திருநாள் என்றும் உழைப்பின் உயர்வை எடுத்துக் கூறும் திருநாள் என்றும் அறுவடைத் திருநாள் என்றும் போற்றப்படுகிறது. தைமாதம் முதலாந்திகதி பொங்கல் பண்டிகை நாளாகும். பொங்கலன்று சூரியன் தென் திசையிலிருந்து வடதிசைக்குத் திரும்புவதாக ஒரு ஐதீகம். வான சாஸ்திரத்தின் படியும், சோதிட சாத்திரத்தின் படியும் சூரியன் இம்மாதத்தில் கும்ப லக்கினத்தில் இருந்து மகர லக்கினத்திற்கு வருவதாக கூறப்படுகின்றது. இதை மகர சங்கிராந்தி என்பர். இதுவே பொங்கல் தினமாகும். உத்தராயணத்தின் ஆரம்பம் என்கின்ற இந்த வேளையில் சூரியனுக்கு அர்ப்பணம் செய்து வணங்கும் மரபும் இணைந்திருப்பதனால் இத்தமிழர் பண்டிகை சைவ சமய ரீதியிலும் முக்கியம் பெறுகின்றது.

தை மாதம் உத்தராயண புண்ணிய காலம் என்பர். அதாவது சூரியன் தை மாதம் முதல் ஆனி மாதம் வரை வடதிசையில் சஞ்சரிக்கும் காலம் உத்தராயண காலம் எனவும், ஆவணி முதல் மார்கழி வரை தென் திசையில் சஞ்சரிக்கும் காலம் தட்சிணாயணம் எனவும் சொல்லப்படும்.

சங்ககாலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் பெண்கள் இவ்விரதத்தினைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி, பகலவன், உதவிய கால்நடை போன்றவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர். இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் பொங்கல் கொண்டாட்டமாக மாறி வந்தது. பொங்கல் பண்டிகையைப் பொறுத்தவரையில் எக்காலத்திலும் விவசாயம் சம்பந்தபட்டதாகவே இருந்துள்ளது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாக இருந்து வருகிறது. மணிமேகலையின் ஆரம்பமான விழாவரை காதையில் இந்திர திருவிழா என்ற பெயரில் பொங்கல் கொண்டாடப்பட்டது. இப்போது, பொங்கல், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என்ற மூன்று நாட்கள் மட்டுமே கொண்டாடப்படுகிறது. ஆனால், அந்த காலத்தில் இருபத்தி எட்டு நாட்கள் நடந்துள்ளதற்கான சான்றுகள் உள்ளன.

முதல் வருடத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சக்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப்பானையிலிட்டுப் புத்தடுப்பில் கொதிக்க வைத்துப் பொங்கல் சோறாக்கிக் முதல் நாள் சூரியனுக்கும் இரண்டாம் நாள் மாலை மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும்.

மனித குலத்தின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமான உணவை உற்பத்தி செய்யும் தொழிலை மனதில் கொண்டு அதற்கு உதவிய சூரியனையும், உழுது உரம் கொடுத்த மாட்டையும், வணங்கி நன்றி செலுத்தி கொண்டாடப்படும் தினம் என்பதே இதற்கு முக்கிய காரணம். உழைப்பை அறுவடை செய்து செல்வம் வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் பலன் பெறக் காரணமாக இருந்த

இராசையா மகேஸ்வரன் ...✍
கல்விசார் நூலகர்,
பேராதனை பல்கலைக்கழகம்,
இலங்கை

நிலம், நீர், காற்று, சூரியன், கால்நடைகளுக்கு நன்றிப் பெருக்கோடு எடுக்கும் விழாதான் பொங்கல் பெருவிழா!

தைமாதம் கொண்டாடப்படுவதால் “தைத் திருநாள்“ என்றும் அழைக்கிறோம். உழுது, நாற்று நட்டு, களை எடுத்து, உரமிட்டு, நீர் பாய்ச்சி, கண்ணின் கருமணி போல பாதுகாக்கின்ற காலங்களில் பணம் இருக்காது. அறுவடை முடிந்தால்தான் அவன் கையில் பணம் நிறைந்திருக்கும். அதனால்தான் மகன், மகள்மாருக்கு தையில் திருமணம் செய்விக்கும் வழக்கம் விவசாயிகள் மத்தியில் நிலவியது. “தை பிறந்தால் வழி பிறக்கும் “ என்ற பழமொழியின் அர்த்தம் இதுதான்.

நன்றி தெரிவிக்க கொண்டாடும் இந்நன்றி திருவிழா மூன்று வகைப்படும்.

அவற்றுள் ஒன்று, தைப்பொங்கல் விழாவுக்கு முதல்நாள் நடைபெறும் போகிப் பொங்கல். போகி என்பது இந்திரனைக் குறிக்கும். அவன் மேகங்களை இயக்கி மழையை வழங்கும் இறைவனாக கருதப்பட்டான். தமிழ் நாட்டார் காலத்திலிருந்தே இந்திரனை விளை நிலங்களின் தெய்வமாக வைத்து வழிபட்டு வரலாயினர். சோழ வள நாட்டில் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. இப்போகிப் பொங்கலுக்கு அடுத்து வருவது தைப்பொங்கல் பெருநாளாகும். இப்பெருநாள் மேற்குறிப்பிட்டபடி சூரியனை வழிபடும் நாளாகும். இப்பொங்கல் பெருநாளுக்கு அடுத்த நாள் நடைபெறுவது மாட்டுப்பொங்கல் திருநாளாகும். நாட்டுப்புறங்களில் இப்பொங்கல் மிகச்சிறப்பாக நடைபெறும். பண்டை காலத்தில் மாடே செல்வமாக கருதப்பட்டது. மாடு என்ற சொல்லுக்கு செல்வம் என்ற பொருளுமுண்டு.

ஒவ்வொரு சமயத்தினதும் அடிப்படைத் தத்துவமானது, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டது. அவ்வகையில் உழவர்களுக்கு நன்றி செலுத்தும் முகமாக கத்தோலிக்கர்களும், கிறிஸ்தவர்களும் தைப்பொங்கல் திருநாளை கொண்டாடுவதை யாழ்ப்பாணத்திலும், தமிழ் நாட்டிலும், மலையகத்திலும் ஏனைய சில பிரதேசங்களிலும் கண்கூடாகக் காண முடிகிறது. ஏனெனில் இப்பண்டிகை தமிழரின் தனிப்பெரும் பண்டிகை, கலாசார சிறப்பு பெற்றது.

இந்தியாவில் தமிழ்நாடு, தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் மகர சங்கராந்தி எனும் பெயரில் பொங்கல் பண்டிகையைத் தமது கலாசாரத்திற்கேற்ற வகையில் கொண்டாடுகின்றனர். மலையகத்திலும் கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர் மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் கொண்டாடுகின்றனர். ஒரு காலத்தில் மலையக தோட்டங்களில் ஜல்லிக்கட்டு. சிலம்பாட்டம், கரகாட்டம் போன்ற போட்டிகளையும் பொங்கல் காலத்தில் நடாத்தினர். இது தற்போது மாறி கரப்பந்தாட்டம், கிரிக்கட், கபடி, கால்பந்தாட்டம், பட்டம் விடுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. பெருந்தோட்டங்களில் சிறுதெய்வ வழிபாடுகளும் இக்காலத்தில் நடைபெறுவது வழக்கம்.

இன்றைய தினம் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். யாவரும் வாழ்வில் விழுமியங்களை அவ்வாறே கடைப்பிடித்து சிறந்த முறையில் இத்தைத்திருநாளைக் கொண்டாடி மகிழ்வோம்.

ஜல்லிக்கட்டு என்றால் என்ன?

ஜல்லிக்கட்டு என்ற சொல் மிக சமீபத்திய வழக்கம்தான். சங்க இலக்கியங்களில் இதனை ஏறு தழுவுதல் என்கின்றார்கள். மஞ்சுவிரட்டு என்ற சொல்லும் உண்டு. ஆனால் இவற்றுக்கிடையே நுட்பமான வேறுபாடுகள் உள்ளன. சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். புளியங் கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவது தற்போது வழக்கத்தில் உள்ளது .

அத்தோடு 50 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த 'சல்லிக் காசு' எனும் இந்திய நாணயங்களை துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டி விடும் பழக்கம் இருந்தது. மாட்டை அணையும் வீரருக்கு அந்த பணமுடிப்பு சொந்தமாகும் . இந்த பழக்கம் பிற்காலத்தில் 'சல்லிக்கட்டு' என்று மாறியது. பேச்சு வழக்கில் அது திரிந்து 'ஜல்லிக்கட்டு' ஆனது என்றும் கூறப்படுகிறது.

சிந்து சமவெளியில் ஜல்லிக்கட்டு

உலகின் பழமையான நகரங்களில் ஒன்றான சிந்து சமவெளி நகரத்தில் அகழாய்வுகளில் அங்கு ஜல்லிக்கட்டு நிகழ்ந்திருப்பதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. அங்கு கிடைத்த முத்திரை ஒன்றில் ஒரு வீரன் துள்ளிவரும் எருதின் எதிர் நின்று அதன் கொம்பை பிடித்து தடுத்து நிறுத்துவது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

சிந்துசமவெளி நாகரிகத்தில் கிடைத்த தொல்லியல் பொருட்களில் உள்ள குறியீடுகளை நவீன முறையில் வாசித்தறிந்து சொன்ன ஐராவதம் மகாதேவன் போன்ற ஆய்வாளர்கள் அந்த பழைய நாகரீகத்திலேயே ஜல்லிக்கட்டு இருந்திருக்கிறது என்றும், அது தமிழர் நாகரீகமாக இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என்றும் தெரிவிக்கின்றார்கள்.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஜல்லிக்கட்டு

ஜல்லிக்கட்டு பற்றி பழந்ததமிழ் இலக்கியங்கள் பலவற்றில் விரிவாக பதிவாகியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எட்டுத்தொகை நூலான கலித்தொகையில் இதனைப்பற்றி பாடல்கள் உள்ளன. மலைபடுகடாம், பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் ஆகியவற்றிலும்

விரிவான சித்திரங்கள் உள்ளன .

தொல்காப்பியம் தமிழர் வாழ்வை குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என ஐந்து நில வாழ்வாக வகுத்துச் சொல்கிறது. இதில், முல்லை எனப்படும் காடும் காடு சார்ந்த நிலப்பகுதியில் நிகழ்வது ஜல்லிக்கட்டு என்று கலித்தொகை காட்டுகிறது. காட்டில் வாழும் மக்களுக்கு மேய்ச்சல்தான் முக்கிய தொழில். இந்த மேய்ச்சல் சமூக மக்களை ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர் என்று தொல்காப்பியம் சொல்கிறது.

கலித்தொகையில் முல்லைநில வாழ்வைச் சொல்லும் முல்லைக்கலி என்ற பகுதியில் முதல் மூன்று பாடல்கள் ஜல்லிக்கட்டு பற்றி மிகத் தெளிவாக காட்டுகிறது. இதற்கு அடுத்து பாடல்களில் குரவைக் கூத்து பற்றிக் குறிப்பிடப்படுகிறது

ஏறு தழுவலுக்கும் குரவைக் கூத்தும் தொடர்புள்ளது. குரவைக்கூத்து ஏறு தழுவல் உரிய நாளுக்கு முதல் நாள் மாலையிலோ ஏறு தழுவும் நாளின் மாலையிலோ ஊருக்குப் பொதுவான இடத்தில் நிகழும். முதல் நாள் என்றால் தம் காதலரை ஏறுதழுவுவதற்கு தூண்டும் பாடல் பாட்டுகளையும், ஏறு தழுவிய நாளாயின் தம் காதலர் வெற்றியை கொண்டாடும் பாட்டுகளையும் ஆயர் குல மகளிர் பாடுவர்.

சங்ககால மேய்ச்சல் சமூகத்தில் ஏறுதழுவுதல் என்பது வெறும் வீரவிளையாட்டு மட்டுமன்று. அது திருமணத்தோடு தொடர்புடையது. பெண் குழந்தை பிறந்ததுமே தாங்கள் வளர்த்துவரும் கால்நடை செல்வத்திலிருந்து நல்ல வலுவான காலைக் கன்றைத் தேர்ந்தெடுத்து, அதை பொலி காளையாய் வளர்ப்பர் பெற்றோர். பெண் திகைத்து மண வாழ்வுக்கு தயாரானதும் வரம் கேட்டு வரும் மாப்பிள்ளையைத் தாங்கள் வளர்த்து வரும் காளையை அடக்க சொல்லி தேர்வு வைப்பர். அந்த போட்டியில் வென்றால் தான் அவனால் மணவாளனாக முடியும்.

கொல்லேற்றுக் கோடஞ்சு
வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்

என்ற கலித்தொகையின் வரிக்குள் 'கூடி கொல்லுகின்ற ஏறு எனும் கொம்புடைய காளைக்கு அஞ்சுபவனை மறு பிறப்பிலும் விரும்பமாட்டாள் பெண்' என்பது பொருள்.

இந்த சங்ககால ஆதாரம் கொண்டு நோக்கும்போது ஜல்லிக்கட்டு என்பது முல்லை எனும் காடும் காடு சார்ந்த பகுதியிலிருந்துதான் மருதம் எனும் வயலும் வயல் சார்ந்த பகுதிக்கு நகர்ந்து வந்தது என்பது உறுதியாகின்றது. விவசாயம் நன்கு தழைத்தோங்கி ஆதிப் பொதுவுடைமை சமூகம் எனும் பழங்குடி வாழ்வு நீங்கிய, நிலப்பிரபுத்துவம் அல்லது சொத்துடைமை சமூகத்தில் தான் இந்த சடங்கு முறையில் இருந்து மருதத்துக்கு இடம்பெயர்ந்து இருக்க வேண்டும். முல்லை நிலத்துக் குடிகள் மருதம் வந்து அங்குள்ள குடிகளோடு கலந்த போது இந்தக் கலையும் இங்கு நிலை கொண்டிருக்க வேண்டும்.

ஏறுதழுவுதல் ஜல்லிக்கட்டும்

ஏறுதழுவுதல் ஜல்லிக்கட்டு இரண்டும் ஒன்றே என்பர் உளர். ஆனால் இரண்டுக்கும் சின்னசின்ன வித்தியாசங்கள் உள்ளன என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஏறுதழுவுதல் பழங்கால சடங்கு என்றால் அதன் நவீன வடிவமே ஜல்லிக்கட்டு. பழங்கால ஏறுதழுவுதல் ஆயர் குடிகளுக்கு இடையே முல்லை திணையில் நடந்தது. ஜல்லிக்கட்டில் பல்வேறு சமூக மக்களும் பங்கேற்கிறார்கள். குறிப்பாக போர் சமூகங்கள் ஊக்கமுடன் பங்கேற்கின்றனர்.

இரண்டிலுமே மாட்டின் கொம்பில் கட்டப்பட்டுள்ள பண முடிப்பும் தைத்திருநாள் முடிந்தபின் விழா நிகழ்வதும் ஒற்றுமைகள். ஆனால், ஏறுதழுவுதல் எனும் பழைய விளையாட்டு தெய்வ நம்பிக்கையோடு தொடர்புடையதாக இருக்கவில்லை. மேலும் , அது மணமகனை தேர்ந்தெடுக்கும் வீர விளையாட்டாகவும் இருந்திருக்கின்றது.

ஜல்லிக்கட்டு கிராமிய தெய்வங்களின் வழிபாட்டுடன் தொடர்புடையதாக திகழ்கிறது.

அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய்கள் பரவிய காலத்திலும், மழையில்லா வறட்சி காலங்களிலும் பிள்ளை வரம் கேட்கும் நிலையிலும் இந்த ஜல்லிக்கட்டு வேண்டுதல் நடைபெறும். இக்குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டுகிறோம் என்பதை வேண்டுகோளாக இருக்கிறது. இந்த பண்பு பழங்கால ஏறுதழுவலுக்கு இல்லை. ஆனால் இவை எல்லாம் ஒரு வீர விளையாட்டு, ஒரு திணையை விட்டு இன்னொரு திணைக்கு நகர்ந்து வரும் போது நிகழும் இயல்பான மாற்றங்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தொகுப்பு:
எஸ்.மங்களதர்ஷினி ...✍

பொங்கல் வாழ்த்து

நல்லை அமிழ்தன்

கழனியை உழுதவன்
கவிதை வாழ்த்து

உழைத்து வியர்தவன்
தேனிசை வாழ்த்து

முற்றத்தில் பொங்கும்
குடிசைகளின் வாழ்த்து

முற்போக்கை நோக்கும்
ஏழைகளின் வாழ்த்து

கற்றிடும் மாணவர்களின்
கணனி வாழ்த்து

விண்ணை வெளிச்சமாக்கும்
தினகரன் வாழ்த்து

விடிந்தால் இனித்திடும்
இலங்கையின் வாழ்த்து

மண்ணை பொன்னாக்கும்
மனிதங்களின் வாழ்த்து

மாயங்களை விரட்டிடும்
தோள்களின் வாழ்த்து

ஒற்றுமையை சிகரமாக்கும்
உறவுகளின் வாழ்த்து



தைமகளே வா

இணுவில் வாகீசன்

தை மகளே வா புன்னகையுடன் வா
தையல்களின் வாழ்வு செழிக்க வா
தைபிறந்தால் வழி பிறக்கும்
தைரியத்தை தந்து விடு

தைப்பாரின்றி கிழிந்த பூமி
தையல் உன் வருகைக்காய்
தைத்து விடு பூமிப்பந்தை
புதைந்த வாழ்வு மீளெழும்ப

தொற்றற்று வருகவே
பற்றற்று போகவே கடந்தகாலம்
உற்றோரும் மற்றோரும்
சற்றேனும் சிரிக்கவே வருகவே

தையும் பிறந்ததுவே....

எஸ்.மங்களதர்ஷினி

தையும் பிறந்தது தரணி செழித்திட
மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பெருகிட
துன்பங்கள் நீங்கி புதுத் தளிர் துளிர்த்திட
தையும் பிறந்ததுவே

பீடித்த பிணியும் ஓடி ஒழிந்திட
வாடிய மலர்களெல்லாம் புதுவசந்தம் பூத்திட
வாரீர் மக்களே வாரீர்
வரவேற்போம் தைத்திருநாளை...

கதிரவன் ஒளிவீசி விடியலைத் தந்திட
மாவிலை தோரணத்தால் இல்லம் அலங்கரித்து
மங்களக் கோலமிட்ட முற்றத்து வாசலில்
பொங்கலோ பொங்கல் பொங்கியதே....

பொங்கித் ததும்பிய புன்னகை அமுதத்தை
அள்ளியெடுத்து இறைவனுக்கு அன்னமிட்டு
இன்பமாய் இனிப்புண்டு
இன்முகம் காட்டி வரவேற்போம் தைத்திருநாளை

உழவர்த் திருநாளை ஊரெல்லாம் கொண்டாடி
உவகைக் கொண்டு பூரிப்படைந்து
உலகம் வளம் பெற உருகி உனைப்பாடி
வரவேற்போம் நல் தைத்திருநாளை.....

அன்பிலே அகிலம் நிறைந்தாச்சு

சுந்தரராஜ் சுபாஷினி, வோல்ட்றிம், லிந்துல.

ஏர்கலப்பை ஏர்பூட்டி உழுதாச்சு...
உழுதவயல் தண்ணீரில் நிறைந்தாச்சு...
விளைநிலத்தில் விதைவிதைச்சாச்சு...
விதைச்ச விதை நாற்றும் நட்டாச்சு...
நட்டபயிர் நல்லினமாய் வளர்ந்தாச்சு...
வளர்ந்த பயிர் வாடாமல் காத்தாச்சு...
உழவரெல்லாம் ஓடிஓடி உழைச்சாச்சு...
உழைச்சதெல்லாம் நெல்மணியாய் நெறஞ்சாச்சு...
நெறஞ்சதெல்லாம் வீட்டில் கொண்டு சேர்த்தாச்சு...
மார்கழியும் கழிந்து தையாச்சு...
மஞ்சள் இஞ்சியுடன் மகிழ்வாச்சு...
பொங்கலிட பானையும் மெருகாச்சு...
மாடுகளும் மணிகட்டி அழகாச்சு...
மனையெங்கும் மகிழ்ச்சி மலர்ந்தாச்சு...
உறவுகளும் வீட்டில் வரவாச்சு...
அதுகேட்டு எல்லோர்க்கும் இனிப்பாச்சு...
கதிரவனும் களைகட்டி உதித்தாச்சு...
பச்சரிசி பக்குவமாய் பானையிலிட்டாச்சு...
கொதிவந்த பானை விருந்தாச்சு...
அன்பிலே அகிலமெல்லாம் நிறைந்தாச்சு...

பொங்கலோ புதுப் பொங்கல்..!

ஷெல்லிதாசன்

புத்தம் புதுப் பானையிலே
புத்தரிசி பால் கலந்து
முற்றத்திலே அடுப்பு மூட்டி
பொங்கலோ பொங்கல் எங்கும்!

சர்க்கரையும் பயறு மிட்டு
ஏலக்காய் முந்தி ரியும்
கலந்து கம கமக்க
பொங்கலோ பொங்கல் எங்கும்!

இப்படி இப்படி யாய்
எங்க வீட்டு முற்றத்திலும்
பொங்கி நாமும் மகிழ்வதற்கு
கொள்ளை ஆசை எங்களுக்கும்...

துண்டு நிலமு மில்லை
துணிவாய் நாம் படுத்தெழும்ப
குச்சுக் குடிசை கூட
சொந்தமாய் எமக்கு இல்லை...

தினம் உழைக்கும் கூலியென
பெயர்பெற்ற ஏழைகள் நாம்
உழைக்கின்ற கூலி எமக்கு
ஒருநேர ரொட்டிக்கும் போதாதாய்...

ஒழுங்காக எமது பிள்ளைகள்
பள்ளி சென்று வரவேண்டும்
உயர்ந்த கல்வி கற்றவர்கள்
ஈடேற்றம் பெற வேண்டும்...

வறுமைத் துயர் தொலைந்து
வாழ்வில் மேன்மை யுறவேண்டும்
என்றே தினமும் ஏக்கத்தில்
மிதக்கின்ற பஞ்சைகள் நாம்...

பண்டிகை கொண்டாட் டங்கள்
பட்டாடை அணிக ளென எமக்கும்
ஆசைகளோ நிறைய வுண்டு
ஆனாலும் அவையாவும் பகற்கனவாய்...

உழைக்கின்ற ஏழைகள் நாம்
உன்னத வாழ்வு பெற்ற
புலரும் ஒருகாலை வேளை
பொங்கி வரும் காலமெப்போ?

இல்லாமைக் கொடுமை நீங்கி
எல்லாமே எல்லோர் காக புதுப்
பொங்கலே நீயும்வா நாமும்
புதுவாழ்வுப் பொங்கல் காண!

இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துகள்...

ஆர். ரெஜீனா

வீறுடன் தையும் வருகிறாள்

கு. சண்முகம் – வந்தாறுமுலை

மங்களம் தந்திடும் மார்கழி திங்களும் போகுதடி
கொட்டு கொட்டென்று கொட்டிய மழையும் தணிந்தடி
வெங்கலம் போலினி துலங்கும் இவ்வையகம் பாரடி
காரணம் வீறுடன் தை மகள் வந்திடப் போறாளடி

வெட்டு வெட்டென்று மின்னலும் வெட்டியபோதும்
விட்டு விட்டுத்தானே மாரியும் கனமாய் பொழிந்ததடி
வெப்பம் தணிந்து பூமி குளிர்ந்திட மழை போதாதடி
பொத்து பொத்தென்று தோன்றிய நோயும் வாட்டுதடி

கிடுகிடென்று விலையேறியதால் வாழ்வு குலைந்ததடி
புட்டிப்பால் இல்லாமல் பிள்ளையோ பசியால் வாடுதடி
கிறுகிறுக்குதடி மண்டையெல்லாம் விறுவிறுக்குதடி
பொங்கலுக்கு புத்தாடை வாங்கப்போனா தலை சுத்துதடி

சேதனப் பசளை தூவிட வயலில் புல் முளைத்ததடி
நல்லாய் விளையுமென்றிருந்தேன் பாழாய்ப்போனதடி
செயற்கை பசளையில் ஊறியதால்மோசம் வந்ததடி
தொற்றா நோய்களும் வந்து வாட்டி வதைக்குதடி

சர்க்கரை விலையைக் கேட்டா மயங்கி விழுவாயடி
பொங்கலுக்குப் பயறு தேடினா அதுவும் இல்லையடி
சருகாய் புல்தரை வரண்டதடி பசுவிலும் பால் இல்லையடி
தேங்காய்ப் பால் பிழிந்தால் அதுவும் வரண்டு போனதடி

என்னதான் வந்தாலும் பொங்கல் பொங்கியே ஆவேண்டி
புதுப்பானையொன்றை நானே கச்சிதமாய் செய்துவிட்டேண்டி
எங்கள் துயர் தீர்த்திட தை மகளே உன்னால் முடியுமடி
நாமும் கதிரவன் உதயமாகிட பொங்கல் படைப்போமடி

பாட்டன் பூட்டன் முன்னோர் சொன்னதைக் கேளுங்கடி
நாகரிகம் என்று உதறி விட்டதால் நாசமாப்போனமடி
பாரினில் நிம்மதி தோன்றி நல்ல காலமும் கனிந்ததடி
வீறுடன் தையும் வருகிறாள் வந்தனம் பண்ணுங்கடி

பட்ட துயரின் மாறும் இந்தப் பாரினிலே இன்பம்பொங்கும்
கெட்ட குணத்தையெல்லாம் நெருப்பில் சுட்டுப் பொசுக்கிடடி
சுட்ட வடு மாறிட நீண்ட காலமும் ஆக மாட்டாதடி
தைமகள் வந்திட இந்த புண்ணி தரையும் வெளிக்குமடி

தேசமெங்கும் தைப்பொங்கல் பொங்கி வழிந்திட
மக்கள் உள்ளத்தில் மங்களம் பொங்கி வழியுமடி
தேசத்தை விட்டு வாட்டும்கொரோனா விலகி ஓடுமடி
சுந்தரத் தைமகள் தந்திடும் சுகத்தை பருகிச் சுவையடி

தைத்திருநாள் கூடி வந்தது
முற்ற வாசலில்
சாணம் நீர் தெளிந்து
மாக்கோலமிட்டு
மாவிலையில் தோரணம்
கட்டி...

புதிய நெல்லை
அறுத்து வந்து.....
உமி அகற்றி அரிசியாக்கி
மண்பானையில்
வண்ணமிட்டு.....

பொங்கி வரும் தித்திக்கும்
பொங்கலை
தெவிட்டாமல்
உண்டு.....
உழவனின் திருநாளாம்
பொங்கல் எனும் நன்நாளை
சமூக இடைவெளியுடன்
கொண்டாடுவோம்...

சிறைப்பட்டேன் உன்னில்..

ஷப்ரா இல்முத்தீன் அட்டாளைச்சேனை..

நீ கெஞ்சும் நொடிகளில்
கொஞ்சமாய் ஒட்டிக் கொள்கிறது
புன்னகையின் மெல்லிய
ரேகைகள் அலையலையாய்...

நீ சிரிக்கும் தருணங்களில்
சப்தமின்றி சண்டை செய்கிறது
என் இதழ்களிரண்டும்
அடுத்தடுத்ததாய்..

நீ பேசும் வார்த்தைகளில்
மௌனத்தை விலை
கொடுத்து வாங்க
வேண்டியுள்ளது கொஞ்சம்
அதிகமதிகமாய்..

அழும் நொடிகளில்
அற்புதமாய் முன் நிற்கும்
உன் முகமும்
ஆங்காங்கே விழி மூட வைக்கும்
உன் கரங்களும்
அடிக்கடி அணைக்க வைக்கும்
உன் மழழைப் பேச்சுமாய்
அத்தனைக்குள்ளும்
சிறைப்பட்டுப் போன நான்
குழந்தைகளின் உலகத்தை
பெரிதும் விரும்புமோர்
பெண்ணாக...
உன் இரண்டாம் தாயாக
என்னுயிரே...

பூக்கள்

7. 2022.01.12 ஆம் திகதியிலிருந்து 2022.02.11 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெசேவ அடங்கலாக மூன்று இலட்சம் ரூபாவை (300,000 ரூபா) செலுத்திய பின்னர், மேற்குறிப்பிட்ட முகவரியான பத்தரமுல்ல, 1 ஆம் படிநிலை, 'செத்சிரிபாய' 7 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை பெறுகை அலகின் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. 2022.02.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பத்தரமுல்ல, சுஹுருபாய, 18 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் தொழில்நுட்பத்திற்கான மேலதிக செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியின் மேலதிக செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 189 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கோரல் தரவின் 16.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் இரண்டு கோடி இலங்கை ரூபாவிற்கான தொகைக்கானதும் (200,000 ரூபா) 2022.09.28 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது தொழில் வழங்குநருக்கு ஏற்புடையதான முகவரான்மையொன்றினால் இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் பத்தரமுல்ல, 1 ஆம் படிநிலை, 'செத்சிரிபாய', 6 ஆம், 7 ஆம் மற்றும் 9 ஆம் மாடிகளின் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் விலைமனுக்கோரல் ஆவணத்தின் V ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. 1 ஆம் விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2022.01.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பத்தரமுல்ல, 1 ஆம் படிநிலை, 'செத்சிரிபாய', 9 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பின்னர் தளவிஜயமொன்றும் இடம்பெறும். 2 ஆம் விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2022.02.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மேலேயுள்ள அதே இடத்தில் நடைபெறும்.

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,
நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு,
18 ஆம் மாடி, சுஹுருபாய,
பத்தரமுல்ல.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 343

01	02	03	04		05
06		07	08	09	10
11	12	13	14		15
		16		17	18
19	20		21	22	
23	24			25	26

பெயர் .....
வகுப்பு .....
பாடசாலை பெயர் .....
பாடசாலை முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(01) ஒலி, பாம்பு ஆகிய இரு பொருள் தருகின்ற சொல் இது.
(07) மகன், புதல்வன், புத்திரன் என்றெல்லாம் சொல்லக் கூடிய மற்றொரு சொல்.
(11) மாணவர்களாகிய உங்களுக்கு மிகவும் பரிச்சயமான சொல் இது. உங்கள் பாடத்தில் பல விடயங்களை மனதில் நினைவில் வைத்திருக்க பாடமாக்கிக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அவ்வாறு பாடமாக்கிக் கொள்வதை குறிக்கும் சொல் இது. (தலைகீழான சொல்)
(17) ஊட்டச்சத்துகள் நிறைந்த திரவநிலை நிறையுணவு.
(19) அரிசி, பருப்பு, மா போன்றவற்றை சாக்கு ஒன்றினுள் இட்டு கட்டினால் அதனை இவ்வாறு கூறலாம்.
(21) கவிதையையும், கவிஞனையும் இச்சொல்லால் பொதுவாகக் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(23) உலகில் மக்கள் அனைவருக்கும் ஊட்டச்சத்து ஆகாரம் வழங்குகின்ற சாதுவான மிருகம். (தலைகீழான சொல்)
(25) இந்த காட்டுவிலங்கு இலங்கைக் காடுகளிலும் வசிக்கின்றது. தாவரஉண்ணியான இந்த அப்பாவி விலங்கு இறைச்சிக்காக பெருமளவில் வேட்டையாடப்படுகின்றது. (தலைகீழான சொல்)

மேலிருந்து கீழ்

(01) வீடு, மனம், உட்பக்கம் ஆகிய அர்த்தங்கள் தருகின்ற சொல்.
(03) முகம் என்பதன் ஒத்தபொருள் சொல்.
(04) உடல் மாத்திரமன்றி, இதுவும் தூயதாக இருக்க வேண்டும். (தலைகீழான சொல்)
(05) இதமாக வீசுகின்ற காற்று இது. உடலுக்கு இதமாக இருக்கும்.
(17) யானையைப் பராமரிப்பவனையும், தேர்ச் சாரதியையும் குறிக்கின்ற பொதுவான சொல்.
(19) பலாவின் இளம் பிஞ்சு இவ்வாறு கூறப்படும்.
(20) இராணுவ அணியை இவ்வாறு குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)

போட்டி இல. 343
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834.
கொழும்பு

குறுக்கெழுத்துப் போட்டி இல. 342

விடைகள்

இடமிருந்து வலம்

01. புத்தாண்டு 10. தானியம் 14. கைதி
18 குரு 21. குடை 23. முகில்

மேலிருந்து கீழ்

01. புன்னகை 03. தாத்தா 08. துரும்பு
11. பனி 15. குருதி 20. கிளை

தற்போதைய சூழ்நிலை காரணமாக குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படாது என்பதை எமது சிறார்களுக்கு அறியத் தருகின்றோம். ஆனாலும் ஆர்வம் கொண்ட சிறார்களுக்காக குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்ந்தும் இடம் பெறும். (ஆர்)

கொழும்பு டீ. எஸ். சேனாநாயக்க கல்லூரியின் இஸ்லாமிய தின நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பொறுப்பாசிரியர் திருமதி பிர்தௌஸியா பாறூக்கின் வழிகாட்டலில் நடைபெற்ற இவ்விழாவில் சிரேஷ்ட சட்டத்தரணி நத்வி பஹாவுத்தீன் பிரதம அதிதியாகவும் சிறப்பு விருந்தினராக ரியாஸ் சங்கானியும் கலந்து கொண்டனர். கல்லூரி அதிபர் பிரசன்ன உடமுகாந்திரம், தமிழ்ப்பிரிவு உப அதிபர் திருமதி யோ. சிவபாலன், கல்லூரி ஆசிரியர்கள், மஜ்லிஸ் உறுப்பினர்கள், மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் 'அல் இக்ரா ' சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் கொரோனா விடுமுறையின் போது தகவல் தொழில்நுட்ப உதவியுடன் நடாத்தப்பட்ட இஸ்லாமிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறளமுதம் :

ஈதல்: இசைபட வாழ்தல்: அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

தெளிவுரை :
வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

உலகிலுள்ள நீளமான ஆறுகள்

நைல் நதி : ஆபிரிக்காவில் அமைந்துள்ள நைல் நதியானது உலகில் மிக நீளமான ஆறாகும்.

அமேஸன் : தென் அமெரிக்காவில் அமைந்துள்ள அமேஸன் நதியானது பல கிளைகளைக் கொண்டது. இது விசாலமான வனங்களை ஈரமாக்கிக் கொண்டு பெரிய நீர் மலைகளைக் கொண்டு பாயும் பரந்த ஒரு ஆறாகும். இதுவும் உலகிலுள்ள பெரிய ஆறாகக் கணிக்கப்படுகிறது. இதன் நீளம் 3,900 மைலாகும்.

மிஸிசிபி : வட அமெரிக்காவில் அமைந்துள்ள மிஸிசிபி ஆறு இரண்டு கிளைகளைக் கொண்டது. இதன் மொத்த நீளம் 5460 மைலாகும்.

ஒப் ஈர்டிக் : சோவியத் ரஷ்யாவில் அமைந்துள்ள ஒப் ஈர்டிக் ஆறு 4500 மைல் நீளமானது.

யங்டிஸி : சீனாவில் அமைந்துள்ள யங்டிஸி ஆறு 3200 மைல் நீளமானது.

மிஸொரி : அமெரிக்காவில் அமைந்துள்ள மிஸொரி ஆறு 2950 மைல் நீளமானது.

ஆமூர் : ஆசியாவில் அமைந்துள்ள ஆமூர் ஆறு 2900 மைல் நீளமுடையது.

லீனா : சோவியத் ரஷ்யாவில் உள்ள லீனா ஆறு 2860 மைல் நீளமுடையது.

கொங்கோ : ஆபிரிக்காவில் அமைந்துள்ள கொங்கோ ஆறு 2900 மைல் நீளமுடையது.

யெனிஸி : ரஷ்யாவில் அமைந்துள்ள யெனிஸி எனும் ஆறு 2800 மைல் நீளமுடையது.

எஸ்.எம்.எம். மொஹமட் ஷெய்ன்,
வெலிப்பன்ன.

கழுதையின் தந்திரம்

ஒரு வியாபாரி உப்பு வாங்குவதற்காக தன் கழுதையைக் கடற்கரைக்கு ஓட்டிச் சென்றார். போகும் வழியில் ஓர் நீரோடை இருந்தது. திரும்பி வரும் போது கால்தவறி கழுதை ஓடையில் விழுந்தது. தண்ணீரில் உப்பு கரைந்து போனதால், கழுதை எழுந்தபோது சுமையின் கனம் மிகவும் குறைந்திருந்தது.

வியாபாரி திரும்பிப்போய், இன்னும் கூடுதலாக உப்பைத் தனது கோணிகளில் நிரப்பிக்கொண்டான். வேண்டுமென்றே கழுதை மீண்டும் விழுந்து தனது பாரத்தைக் குறைத்துக் கொண்டது. எனவே அது வெற்றிகரமாகக் கனைத்தது.

வியாபாரிக்குக் கழுதையின் தந்திரம் புரிந்து போகவே, மூன்றாம் முறையாக ஓடைக்கு அதை ஓட்டிச் சென்றான். அங்கே உப்புக்கு பதிலாகக் கடற்பஞ்சு மூட்டைகளை வாங்கினான். ஓடையை அடைந்ததும், மீண்டும் அதே தந்திரத்தைக் கழுதை செய்தது.

ஆனால் கடற்பஞ்சு தண்ணீரை உறிஞ்சிக் கொண்டு மிகவும் கனத்துப் போனது. தான் செய்த தந்திரம் தன்மீதே பாயவே, கழுதை இரண்டு பங்கு பாரத்தைச் சுமந்தது.

புத்தாண்டுக் கனவு!

புத்தாண்டு பிறக்கையில்
புதுமை எங்கும் பூத்திடும்
விதியும் நலமாய் மாறிடும்
வினை எல்லாம் தீர்ந்திடும்
மதியும் கூர்மை தந்திடும்
மடமை எல்லாம் நீங்கிடும்
சாதி பேதம் கலைந்திடும்
நல்ல கனவு பலித்திடும்
நாளும் நன்றே இனித்திடும்!

ஸாதிக் பாரிஸ்,
மள்வானை.

பழமொழியும் விளக்கமும்

குப்பையில்
கிடந்தாலும் குண்டுமணி
நிறம் போகுமா?

விளக்கம் எங்கிருந்தாலும் உயர்ந்த விஷயங்கள் உயர்ந்த விஷயங்களாகவே இருக்கும். இடத்தைப் பொருத்து அதன் தன்மையோ, தரமோ மாறாது என்பதற்காக சொல்லப்பட்ட விஷயம்தான் இது. ஆனால் இங்கு சரியாக சொல்லப் போனால் இந்தப் பழமொழியின் வடிவம் குப்பையில் கிடந்தாலும் குன்றி மணி நிறம் போகுமா என்று வரவேண்டும். உச்சரிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக பழமொழியின் அந்த குறிப்பிட்ட வார்த்தை வடிவம் மாறி விட்டது. இருப்பினும் குண்டுவோ குன்றியோ இங்கு பழமொழி தரும் விளக்கம் மாறிப்போக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுஷ்மிதன் ஆனந்தன்,
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.

எனது தங்கைப் பாப்பா..!

சின்னப் பாவைப் பிள்ளையைப்போல்
சிரிக்கும் எங்கள் தங்கையைப்பார்
என்ன அழகு அவளழகு
எந்த மலரும் தோற்றுவிடும்.

என்னை அருகே அவள் அழைப்பாள்
இறுகப் பற்றி ஆசையுடன்
கட்டி முத்தம் அவள்தருவாய்
கற்கண் டாக அதுஇனிக்கும்..

இசையி னோடு நான்பாட
இரண்டு கையையும் அவள்வீசி
அழகாய் ஆடும் அவளாட்டம்
அனைவரையும் மயங்க வைக்கும்.

மெல்ல மெல்ல நடைபயில்வாள்
மிட்டாய் கேட்டு அடம்பிடிப்பாள்
மழலை மொழியில் அவள்பேசி
மனசில் தேனை ஊற்றிடுவாள்.

அன்புத் தங்கை அவளுடனே
அகலா திருப்பேன் என்றென்றும்
எங்கள் பெற்றோர் அகம்மகிழ
இனிதே வாழ்வோம் உலகத்தில்.

ஷெல்லிதாசன்,
திருகோணமலை.

சீனப்பெருஞ்சுவர்

உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது சீனப் பெருஞ்சுவராகும். பண்டைய சீன அரசர்கள் தங்களின் பாதுகாப்பிற்காக வலிமையான கோட்டைகளையும், சுற்றுச்சுவர்களையும் எழுப்பினர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதே சீனப் பெருஞ்சுவர்.

சீனப் பெருஞ்சுவரின் நீளம் 5,500 மைல்கள். உயரமான சிறுசிறு கண்காணிப்புக் கோபுரங்கள் ஆங்காங்கே அதிக அளவில் காணப்படுகின்றன. சுவரின் அடிப்பகுதி அகலம் 8 மீட்டர். மேற்பகுதி அகலம் 5 மீட்டர். சுவரின் இடையில் மண், செங்கல், கருங்கல் நிரப்பிப் பாதைபோல் செய்துள்ளனர். சுவரின் மேலுள்ள இருப்புப் பாதை, குதிரை வீரர்கள் செல்ல ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது.

இச்சுவரை எழுப்புவதற்கு நாட்டின் மூன்றில் ஒரு பகுதி மக்கள் இரவு பகல் பார்க்காது வேலை பார்த்துள்ளனர். சீனப் பெருஞ்சுவரில் இரு உருவப் பாறைகள் காணப்படுகின்றன.

வினோ மதிவதனி,
லுனுகலை.

மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் .....
பிறந்த திகதி .....
வகுப்பு .....
பாடசாலை .....
.....
.....
வகுப்பாசிரியர் கையொப்பம்

வர்ணப் புகைப்படம்

மாணவர் கழகம்
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834 கொழும்பு.

இவ்வார மழலை

டி. தனுஷ்கா,

டொனிராஜ் - கோகிலா
கொழும்பு 15.

க. கமலேந்திரன் நிந்தியா,
தரம் 05,
மட்/அரசடிப்பிள்ளையார் கனிஷ்ட வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

எஸ். திவ்யாணி,
தரம் 12, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.

என்.ஏ. ஜனனிகா,
தரம் 03, தலுப்பிட்டிய வித்யசந்ரா வித்தியாலயம்,
தலுப்பிட்டிய.

வைஷ்னி நிரஞ்சன்,
லிட்டில்ஏஞ்சல் பாலர் பாடசாலை,
வத்தளை.

விளையாட்டு

பொதுநலவாய நாடுகளின்

விளையாட்டு விழாவிற்கான கோல் அலரி மாளிகையில்

பிரித்தானியாவின் பர்மிங்ஹாம் நகரில் இம்முறை நடைபெறவுள்ள 22ஆவது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை முன்னிட்டு உலகளாவிய ரீதியில் 72 நாடுகளுக்கு கொண்டுசெல்லப்படுகின்ற மாகாராணியின் கோல் கடந்த (05) பிற்பகல் அலரி மாளிகையில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் வரவேற்கப்பட்டது.

25ஆவது நாடாக கடந்த 03ஆம் திகதி மாலைதீவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட கோல் மூன்று தினங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு அண்மையில் அலரி மாளிகைக்கு கொண்டு வரப்பட்டது.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்த கோலினை வரவேற்று காட்சிபடுத்துவதற்கான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொறுப்பு இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதி பர்மிங்ஹாமில் ஆரம்பமாகும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவின் உத்தியோகபூர்வ சின்னம் மற்றும் கோலின் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்தினை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் முன்வைத்தார்.

அதனை தொடர்ந்து தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் அவர்களினால் பிரதமரிடம் கோல் வழங்கப்பட்டது.

"2022 Queen's Baton Relay" (QBR) என நடைபெறும் இந்த விசேட காட்சிப்படுத்தல் திட்டம் பிரித்தானிய மகாராணியின் தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இக்கோல் இலங்கையிலிருந்து பங்களாதேஷிற்கு கொண்டு செல்லப்பட்டது.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோன், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் விக்ரமசிங்க, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய, தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம், தேசிய விளையாட்டு கவுன்சில் உறுப்பினர் யஸ் வந்த் முத்தெட்டுவேகம, தேசிய ஒலிம்பிக் சங்க செயலாளர் மெக்ஸ்வெல் த சில்வா, தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் சந்தன லியனகே, நிலு பெர்னாண்டோ, காமினி ஜயசிங்க, பளு தூக்கும் விளையாட்டு வீரர் சிந்தன விதானகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கொழும்பு ஹமீட் அல்ஹுசைனி தேசிய பாடசாலையில்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொக்ஸிங் அரங்கு திறப்பு

கொழும்பு ஹமீட் அல்ஹுசைனி தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களின் 82 ஆவது குழுவினர் ஏற்பாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொக்ஸிங் அரங்கு அண்மையில் கல்லூரி அதிபர் அத்னான் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

வாழ்வின் ஒளி அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த பொக்ஸிங் அரங்கம் புதிதாக திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம அதியாக வாழ்வின் ஒளி அமைப்பின் தலைவர் ஜெயினுல் ஆப்தீன் கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்த பொக்ஸிங் அரங்கு நிர்மாணிப்பதற்கு 2 மில்லியன் ரூபா செலவானதாக அமைப்பின் பணிப்பாளர்களில் ஒருவரான பைஷால் புஹாரி தெரிவித்தார். இந்த பொக்ஸிங் அரங்கில் பயிற்சி பெறுவதற்கான சந்தர்ப்பத்தினை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அதிதிகள் வேண்டிக் கொண்டனர். அத்துடன் கல்லூரி மாணவர்கள் பயன்படத்தக்க வகையில் கரம், செஷ் போட்டிகளில் பயிற்சி பெறுவதற்கான நிலையமும் அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டன. அத்துடன் கல்லூரியில் ஸ்மாட் வகுப்பறையையும் அதிதிகள் திறந்து வைத்தனர். இதற்கான நிதி உதவியை கல்லூரியின் கட்டார் பழைய மாணவர்கள் கிளையினால் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அவர்கள் 10 லட்சம் ரூபா நிதியை லைட் போ லைப் அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க அன்பளிப்பாள வழங்கினர்.

ஹுசைனி கல்லூரி கடந்த 77 ம் ஆண்டு காலப்பகுதியில் பொக்ஸிங் விளையாட்டில் கொடி கட்டிப் பறந்தமையும் விசேட அம்சமாகும்.

அத்துடன் வாழ்வின் ஒளி அமைப்பின் பணிப்பாளர் இம்தியாஸ் பாரூக், கல்லூரியின் பிரதி அதிபர் பத்ம சிறி ஜயசூரிய ஆகியோரும் கலந்து கொண்டனர். கொழும்பு ஹமீட் அல்

அவுஸ்திரேலியாவின் எல்லையில்

ஜோகோவிச்சை உண்மையில் வீழ்த்தியது எது?

டென்னிஸ் சூப்பர் ஸ்டார் நோவக் ஜோகோவிச்சின் அவுஸ்திரேலிய விசா விவகாரம், அவுஸ்திரேலிய பகிரங்கத்தில் விளையாடுவதற்கோ அல்லது நாட்டிற்குள் நுழைவதற்கோ, கோவிட்19 தடுப்பூசி விதிகளில் நுட்பமான ஆனால் முக்கியமான வித்தியாசமாக இருக்கலாம்.

ஒன்பது முறை அவுஸ்திரேலிய பகிரங்க சம்பியனான அவரது நுழைவு விசா வியத்தகு முறையில் பறிக்கப்பட்டு, இந்த வாரம் மெல்போர்னில் உள்ள அரசாங்க தடுப்பு மையத்தில் வைக்கப்பட்டது, அவரது இரசிகர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து ஒரு மன உளைச்சலை தூண்டியது.

அவர் அங்கு வெள்ளிக்கிழமை கிறிஸ்மஸ் தினத்தை கழித்தார்.

எவ்வாறாயினும், 34 வயதான செர்பியாவைச் சேர்ந்த இவர் கடந்த புதன்கிழமை இரவு மெல்போர்ன் விமான நிலையத்தின் வழி 2 இல் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டில் தனது கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்களை ஒப்படைத்தபோது என்ன நடந்தது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

அவுஸ்திரேலியாவிற்கு வரும் வெளிநாட்டினருக்கான கடுமையான கொவிட்19 தடுப்பூசி தேவைகளை ஜோகோவிச் பூர்த்தி செய்யத் தவறிவிட்டார் என்பது அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கண்ணோட்டத்தில் இருந்து இப்போது வெளிவருகிறது.

முக்கியமாக, வீட்டிலேயே கொவிட்19 தடுப்பூசிகளில் இருந்து விலக்கு பெற விரும்பும் அவுஸ்திரேலியர்களை விட, எல்லையை கடக்க முயற்சிக்கும் வெளிநாட்டினருக்கான தேவைகள் மிகவும் கடுமையானவை.

அவுஸ்திரேலியாவில் உள்ள முக்கிய வேறுபாடு என்னவென்றால், நோய்த்தடுப்பு தொடர்பான அதிகாரபூர்வ அவுஸ்திரேலிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் வழிகாட்டுதலின் கீழ், கடந்த ஆறு மாதங்களில் உங்களுக்கு கொவிட்19 தொற்று இருப்பதைக் காட்ட முடிந்தால், தற்காலிக தடுப்பூசி விலக்கு பெறலாம்.

நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வரும் வெளிநாட்டவராக இருந்தால், உங்களால் முடியாது.

இரட்டை தடுப்பூசி போடப்படாததற்கு ஜோகோவிச் உண்மையில் முந்தைய தொற்றுநோயைப் பயன்படுத்தினார் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

அந்த அடிப்படையில் அவர் விதிவிலக்கு அளித்திருந்தால், டென்னிஸ் அவுஸ்திரேலியா மற்றும் விக்டோரியா மாநில அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட செயல்பாட்டில் அவுஸ்திரேலிய பகிரங்கத்தில் விளையாட அவருக்கு விலக்கு கிடைத்தால் போதுமானதாக இருந்திருக்கும்.

ஆனால் நாட்டிற்குள் செல்ல இது போதுமானதாக இருக்காது.

ஏனென்றால், டென்னிஸ் அவுஸ்திரேலியா அதன் விலக்கு அளவுகோல்களை வீட்டில் உள்ள அவுஸ்திரேலியர்களுக்குப் பொருந்தும் ATAGI வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டது.

'விக்டோரியாவில் டென்னிஸ் விளையாடுவதற்கு விக்டோரியா அரசாங்கம் விதித்துள்ள விலக்கு, அவுஸ்திரேலியாவின் நோக்கங்களுக்காக எந்தவொரு விலக்கு அல்லது நுழைவுத் தேவைக்கும் முற்றிலும் வேறுபட்டது' என்று உள்துறை அமைச்சர் கரேன் ஆண்ட்ரூஸ் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய, உங்களுக்கு விசா தேவை, ஆனால் நீங்கள் நுழைவுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்: எதிர்மறையான கொவிவிட்19 PCR சோதனை மற்றும் முழுமையான தடுப்பூசி அல்லது தடுப்பூசி போட முடியாது என்பதற்கான மருத்துவ ஆதாரம்.

'டென்னிஸ் அவுஸ்திரேலியாவுக்கு ஒரு கேள்வி'

டென்னிஸ் அவுஸ்திரேலியா அமைப்பின் தலைமை மருத்துவ அதிகாரி கையொப்பமிட்ட மருத்துவத் தலைப்பில் ஜோகோவிச் எல்லை காவல் அதிகாரிகளுக்கு மருத்துவ விலக்கு அளித்ததாக தேசிய ஒளிபரப்பு சேவையான ஏபிசியிடம் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. இது, நிராகரிக்கப்பட்டது என்றனர். இது குறித்து டென்னிஸ் அவுஸ்திரேலியாவை ஏற்கனவே எச்சரித்திருந்ததாக அரசு கூறுகிறது.

ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட ஒரு கடிதத்தில், சுகாதார அமைச்சர் கிரெக் ஹன்ட் நவம்பர் மாதம் டென்னிஸ் அவுஸ்திரேலியாவின் தலைமை நிர்வாகி கிரேக் டைலிக்கு எழுதிய கடிதத்தில் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயற்சிக்கும் வீரர்கள் சமீபத்திய கொவிட் 19 தொற்று காரணமாக தடுப்பூசி விலக்கு பெற மாட்டார்கள் என்று எச்சரித்தார்.

டபுள் ஜாப் இல்லாமல், கடந்த ஆறு மாதங்களில் கொவிட்19 நோயால் பாதிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைய முயற்சிக்கும் வெளிநாட்டு வீரர்கள் 'முழுமையாக தடுப்பூசி போடப்பட்டதாக கருதப்படவில்லை' என்று அவர் எழுதினார்.

'இது டென்னிஸ் அவுஸ்திரேலியாவுக்கு கோடிட்டுக் காட்டப்பட்டது,' ஆண்ட்ரூஸ் வெள்ளிக்கிழமை கூறினார். 'அவர்கள் அதை எப்படித் தொடர்புகொண்டார்கள், அதுகுறித்து நான் உங்களுக்கு எந்தத் தெளிவையும் அளிக்க முடியாது. இது டென்னிஸ் அவுஸ்திரேலியாவைப் பற்றிய ஒரு கேள்வி.'

டென்னிஸ் அவுஸ்திரேலியா இந்த கேள்விக்கு கூடுதல் விவரங்களை வழங்கவில்லை, இருப்பினும் வீரர்களுக்கு விலக்கு அளிக்கும் செயல்முறையை அது ஆதரித்துள்ளது.

'டென்னிஸ் வீரர்களைப் பொறுத்தவரை, இது அவுஸ்திரேலியாவிற்கு வரும் எவரும் அனுபவித்திருப்பதற்கும் மேலாகவும் செல்லும் ஒரு செயல்முறையாகும்' என்று டைலி இந்த வாரம் கூறினார்.

டென்னிஸ் அவுஸ்திரேலியா, விக்டோரியா மாநில அரசாங்கத்துடன் வரையப்பட்ட விதிகள், ஏதேனும் விதிவிலக்குகள் இரண்டு மருத்துவக் குழுக்கள் மூலம் அழிக்கப்பட வேண்டும் என்று கூறியது.

ஆனால் அவுஸ்திரேலிய பகிரங்கத்தின் கோவிட்19 விலக்கு விதிகள் மற்றும் அவுஸ்திரேலியாவின் குடிவரவு விதிமுறைகளுக்கு இடையே உள்ள வேறுபாடு மற்ற டென்னிஸ் வீரர்கள் அல்லது ஊழியர்களையும் பிடிக்கக்கூடும்.

அவுஸ்திரேலிய பகிரங்கத்தில் கலந்து கொள்ளும் மற்ற இரண்டு வீரர்கள் அல்லது ஊழியர்கள் இப்போது விசாரிக்கப்படுகிறார்கள் என்று உள்துறை அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜோகோவிச்சைப் பொறுத்தவரை, விசாவைத் திரும்பப் பெறுவதற்கும், அவுஸ்திரேலிய பகிரங்க பட்டத்தைப் பாதுகாப்பதற்குமான வாய்ப்புகள் திங்கட்கிழமை காலை விசாரணைக்கு எடுக்க திட்டமிட்டுள்ள பெடரல் நீதிமன்ற நீதிபதியின் முடிவின் பேரில் உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

வாழ்வாதாரமா சேதாரமா 205

தமிழ்க் கவி பேசுகின்றார்

காலச்சக்கரம் வேகமாய் சுழன்றோடுதே தர்மம் வாடுதே

'பனையால விழுந்தவனை மாடேறி மிதிச்சுதாம்' என்றொரு பழமொழி எங்கள் மண்ணில் உண்டு. இதேபோல கஷ்டங்கள் அடுத்து வருவதையிட்டு புலவர்களும் பாடல்களை இயற்றியுள்ளனர். யார் என்ன சொன்னாலும் நடப்பது நடந்தே தீரும்.

மீண்டும் அத்தியாவசியப் பொருட்களான அரிசி மிளகாய் மா,பால்மா போன்றவற்றின் விலை அதிகரித்து வருகிறது. யாராலும் எதனாலும் கட்டுப்படுத்த முடியாதபடிக்கு வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருகிறது. அதாவது வந்து கொண்டே இருக்கிறது. எந்த இடத்தில் தரித்து நிற்குமோ என்று சொல்லத் தெரியவில்லை. எங்கே எந்தப் பொருள் என்ன விலை என்பதும் தெரியவில்லை. ஒருவகையான ஒருகிலோ அரிசி ச.தொ.சவில் நூற்றிஐந்து ரூபா, தனியார் கடையில் நூற்றி பதினைந்துரூபா. கூட்டுறவுக்கடையில் நூற்றி நாற்பத்தைந்து ரூபா.

முன்னெல்லாம் பஞ்சம் வரும் போது வெள்ளாமை விளையுது கொஞ்சநாள் கஷ்டம்தானே என நினைத்து ஆறுதலடைவோம். இப்போது அது இல்லை. விவசாயி பட்டகடனுக்கும் விளைவது போதாமற்போகும். பசளை இல்லை என்பதுபோக இம்முறை பசளை மருந்து என ஒருவகை மருந்தை விவசாயத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. நைதரசன் செறிவுள்ள மருந்து எனவும் கூறுகிறார்கள். அதன் அளவுத்திட்டத்தை குறித்திருக்கிறார்களாம். ஆனால் பரவலாக அந்த மருந்தை அடித்த தோட்டப் பயிர்கள் முற்றாக அழிந்துவிட்டதாக ஒரு விவசாயி கூறினார். அவரது பயிர் முள்ளங்கி என்றார். வயலில் அதைப் பாவித்தவர்கள் பயிர் தொட்டம் தொட்டமாகக் கருகி வருவதாக கூறினர். பலர் தமது பயிர் எரிந்துவிட்டதாகவும் முறைப்பாடு சொன்னார்கள்..

இதுசார்பாக பதிலளிக்கக்கூடிய ஒருவரிடம் கேட்டபோது ஆம் அப்படித்தான் மருந்தை திரும்பப் பெறப் போவதாக நிறுவனம் அறிவித்துள்ளதாக கூறினார்.

இது இப்படி இருக்க கிளிநொச்சியின் ஒரு அனுபவமுள்ள விவசாயியிடம் கேட்டபோது. தனக்கு அப்படி ஒரு அனுபவமும் ஏற்படவில்லை. என்றும், அந்த கொள்கலனில் உள்ள அறிவுறுத்தல் படிதான் மருந்தை பாவித்ததாக கூறினார். தான் அறிந்தவகையில் நூற்றி இருபது மில்லி கலக்கவேண்டிய மருந்தை முந்நூறு நாநூறு எனக் கலந்து அடிப்பது தெரிகிறது என்றார். நைதரசன் கலவை திரவமாக இருந்தாலும் அது நைதரசன்தானே என்றார். எது எப்படியோ அந்த மருந்தை அடித்தபின் பயிருக்கு நோய் வந்துவிட்டது. என்ற பலருடைய அபிப்பராயம் மருந்து பற்றிய தெளிவை, அவர்கள் அறியவில்லை என்பதை தெரிவிக்கிறது. எதுஎப்படியோ ஒரளவுக்கு பயிர்கள் நாசமாகியுள்ளது தெரியவருகிறது. இது இதைத்தான் பனையால விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல என்றேன். இப்போதெல்லாம் இலங்கைச் செய்திகளை வெளிநாட்டவர்களே முற்றாக அறிந்து சொல்கிறார்கள் அப்படி அநேகமான தகவல்கள் கசிகின்றன. இலங்கை மக்களின் எதிர்காலத்தை கணித்துச் சொல்லக்கூடிய சோதிடர்கள் வெளிநாட்டவர்களே.

இந்த லட்சணத்தில் தேர்தலுக்கான ஆயத்தம் நடக்கிறது. அதையும் அவர்களே தீர்மானிக்கும் சக்தியாக உள்ளார்கள். வாழ்வது நாங்கள். வாக்களிக்கப் போவது நாங்கள். வாக்களித்து விட்டு வரும் விளைவுகளை அனுபவிக்கப் போவதும் நாங்கள். ஆனால் தீர்மானிக்குமளவுக்கு நம்மிடம் எதுவுமில்லை. நாம்தான் தூங்கிவிட்டோமே. அதாவது நாம் உண்ட மயக்கத்தில் உறங்கவில்லை. பசி மயக்கத்தில்தான் உறங்கியிருக்கிறோம். மெள்ளத் துயில் கலைந்து எழுவோம். எம்மைநாமே காப்பாற்றும் வழி எதுவோ அதைநாமே செய்வோம்.

புற்றீசல்களைப்போல பறந்துகொண்டிருக்கும் ஒளி, ஒலிபரப்புச் சேவைகள், பத்திரிகைகள் என. ஏராளமானவை நம்மவர்கள் நடத்தினாலும் அவற்றின் சூத்திரதாரிகள் வெளியிலிருந்தே இயக்குகிறார்கள். கிளிநொச்சியில் மட்டும் எத்தனை ஊடகங்கள் யாழ்ப்பாணத்திலும் மூலைக்குமூலை ஊடகங்கள். வவுனியாவிலும் இதேயளவு ஊடகங்கள் இயங்குகின்றன. இவை புரிந்துகொள்ளக் கூடியஅளவில் பிரசார நேக்கங்களுக்காகவே நடாத்தப்படுகின்றன. பல அரசியல் சார்புடையவை. இப்போதெல்லாம் மக்கள் பத்திரிகையை படித்து வானொலியைக் கேட்டு தொலைக்காட்சியைப் பார்த்து செய்திகளை அறிவது மிகக்குறைவு. அவர்களுக்கான செய்திகள் கைபேசிகளில் யூரியூப், இன்டர்காம், பேஸ்புக், ட்விட்டர் எனப் பல வழிகளில் வருகிறது. அத்தனையும் செய்தி என்கிற பெயரில் மக்களை குழப்பிவிடுகிறது. நேற்றொருவர் சொன்னார். இலங்கையை இராணுவம் பொறுப்பெடுக்கப் போகிறது என்று. பெரிதாகச் சிரித்துவிட்டேன். அதுபோகட்டும் இன்னொரு கைபேசி வாசகர் இனிமேல் பாத்து கிலோ அரிசிதான் கொள்வனவு செய்ய முடியுமாம் என்றார். அப்போ இனி அன்னதானம்,கலியாணம் செத்தவீட்டுச் சடங்கு என்று எதுவும் நடத்த முடியாது. அப்படித்தானே என்றேன். இப்படித்தான் எமது மக்களின் மனநிலையை அறிந்து விசேட செய்திகள் பலப்பல தலைப்புகளில் கவர்ச்சிகரமாக ஒளிபரப்பாகின்றன. ஆனால் மக்கள் தமக்குத் தேவையான விவசாய செய்திகளையோ இயற்கை வேளாண் முறைகளையோ அல்லது தொழில் முயற்சிகள் பற்றியோ பார்த்து அறிந்து கொள்வதில்லை. அதிகமானவர்கள் சினிமா நட்சத்திரங்களின் வாழ்க்கையை அந்தரங்கங்களை அறிவதில் உள்ள ஆர்வத்தை தமது வாழ்க்கையை வறுமைக்குள் செலுத்தப்பட்டுக் கொண்டிருப்பதை அறிவதில் செலுத்துவதில்லை.

விவசாயம் கால்நடை வளர்ப்பு எல்லாம் பாதுகாப்பற்ற தொழிலாக மாறிவருகிறது. தரமான கோழிக் குஞ்சுகள் வரவில்லை. ஆடுகள் போதியளவு இல்லை அவற்றை வளர்ப்போருக்கு மேச்சற்றரவைகள் இல்லை. மாடுவளர்ப்பு என்பது இப்போது அவசியமாகி வருகிறது காரணம் பால் சாணம் இறைச்சி எல்லாமே தேடியடைய வேண்டிய நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன.. அந்தக்காலம் நாங்கள் கையில் அரிவாள் கொண்டு அறுவடை செய்வோம். கதிர்க்கட்டுகளை சூட்டில் வைத்து காற்றுவரும் காலம் தூற்றுவோம். அதன் பின் அந்த வயல்வெளியெங்கும் இடையறாது மாடுகள் மேயும். அது போடும் சாணம் சாணுக்கொன்று முழத்துக்கொன்றாக இருக்கும். வெற்றுநிலத்தில் எருக்கு முளைத்து பூத்திருக்கும். புரட்டாசி மாதம் முதல் மழைகண்டபோதே அந்த நிலத்தை உழுதுவிடுவோம். எருக்கும் எருவும் மண்ணுடன் கலந்துவிடும். மாரிமழை வரும்போது, மீண்டும் உழுது நெல் விதைத்தால் அதை விட விசேடமாக எந்த ரசாயன உரமும் போடுவதில்லை ஏனெனில் அப்போது அது வரவில்லை. ரசாயன உரங்கள் பாவனைக்கு வந்தபோது அதை மானியமாகத்தான் கொடுத்து மக்களை பழக்கப்படுத்தினார்கள்.

அப்போதே நமது ஊரில் இருந்த படித்த மனிதர் சொன்னார் 'சொந்தக் காசில சூனியம் வைக்கிறீங்களடா...உழுது, வயல் நிலத்தை நாசமாக்கிப் போடுமடா'.. என்று நாங்கள் கேட்டோமா?. 'கிழவனுக்கு அறளை பேந்திட்டுது' என்று சிரித்தோம். ஐம்பது வருடங் கழித்து இன்று திகைத்துப் போய் நிற்கிறது விவசாயி மட்டுமல்ல வயல்களுந்தான். .

இம்முறை வெட்டுமிசினுக்கு நெல் எட்டாதாம். ஏனெனில் அவை கட்டையாக நிற்கிறது. கதிரும் கட்டைதான். அப்போ தாக்கத்தியில்தான் வெட்ட வேண்டுமா தாக்கத்தி என்றால் என்னவென்று தெரியாத இளைஞர்கள் இப்போது என்னசெய்வார்கள.; எல்லாவற்றையும் யந்திரமயமாக்கி சோம்பலை வளர்த்துக் கொண்டுள்ள மக்கள் இப்போதெல்லாம் வேலைசெய்ய விரும்புவதில்லையே...

'காலச்சக்கரம் வேகமாய் சுழன்றோடுதே தர்மம் வாடுதே.'

'எண்ணம் போல் வாழ்க்கை' மன்றத்தின் ஒன்றுகூடல்

எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் படைப்பாளிகள் ஒன்றுகூடலானது கடந்த 26.12.2021ஆம் திகதியன்று திருகோணமலையில் மூத்த படைப்பாளிகளான திருமலை சுந்தா, நீங்களும் எழுதலாம் தனபாலசிங்கம், ஷெல்லிதாசன் ஆகியோரின் முன்னிலையிலும் கவிஞர்கள் கோணேஸ்வரன், கேணிப்பித்தன், கௌரிதாசன் ஆகியோரின் ஆசிகளுடனும் எண்ணம் போல் வாழ்க்கை குழுமத்தில் இணைந்து பயணிக்கும் இளம் கலைஞர்களின் பங்குபற்றுதலுடனும் நடைபெற்றது.

இம்மன்றம் தனது விஸ்தரித்த செயற்பாடுகளுடனும், தன்னகத்தே கொண்ட இளம் கலை, இலக்கியகர்த்தாக்களின் படைப்புக் களுடனும் வெற்றிப்பாதையில் முன்னோக்கிச் சென்று திருமலையில் அழகிய கலை இலக்கிய உலகம் காணும் என்பது கண்கூடு.

பானு சுதாகரன்

பறவை ஆனேன்

வயற் காடு விரிந்திருந்தது; முதிர்ந்து நின்ற சோளக் கொண்டைகளில் குருவிகள் அமர்ந்து சென்றன; கொல்லை மூங்கில் தடுப்பைத் திறந்து அப்பால் இருந்த காய் கறித் தோட்டத்தில் எனது குட்டிச் சாறன் விளிம்பைத் தூக்கிப் பிடித்துத் தாண்டித் தாண்டிச் சொல்லும்போது, பட்டாம் பூச்சிகள் எம்பிப் பறந்தன; கத்தரி, வெண்டை, பீர்க்கு, சுரை அநேக பாத்திகளில் காய்த்து முற்றிருந்தால் வாப்பா தெறித்துப் பார்த்து ஆய்வார்;

ஒட்டி, விழிக் கடையோரம் பார்வை பறிந்துத் தலை குனிந்து நின்றிருக்கும் தும்பிகள், வாலில் பிடிக்கக் கையைத் தூக்கினால் கிளைகளில் கை பட்டு நீர் பொலபொலவெனக் கொட்ட ஆரம்பிக்கும்; காற்று எதுவும் இல்லாமல் அதிகாலை ஆரவாரம் இன்றிப் பெய்த மழை இந்தச் சாரலுக்குத்தானோ என்று நினைத்துக் கொள்வேன்...

குருட்டுவேலாம் மரத்திலும் பள்ளிக் கூடக் கூரை இடுக்கிலும் சிட்டுக் குருவிகள் கூடு கட்டியிருக்கும்; தேன் சிட்டுகள் எருக்கம் செடியில் மட்டுமே கூடுகள் கட்டும்; ஒரு முட்டை முதல் மூன்று முட்டைகள் வரை இடும்; எருக்கங் காய் வெடித்த பிறகு விதைகளில் பூரித்திருக்கும் பஞ்சை வைத்துச் சொகுசான வீடுகள் அமைக்கும்; கிராமங்களில் எரிக்கலம் செடிகள் அழிக்கப்பட்டு விட்டால் சிட்டுக் குருவிகள் வேறு இடங்களுக்குப் புலம் பெயர்ந்து விடும்....

கருவேல், குடைவேல், மரங்கள் வளரும் இடைகளில் செம்பகம் அடைகாக்கும்; ஒடுங்கி ஒடுங்கித் தன்னுடலைக் கொடுக்கிப் பிடித்துப் போர்த்தினாற்போல் நகரும் போத்துப் பறவை மனிதர்களை ஒளிந்து நின்று புதினம் பார்க்கும்; கருங்குருவிகள் பள்ளப் பக்கம் மேய்கின்ற ஆடு மாடுகளின் முதுகுகளில் உட்கார்ந்திருந்து சவாரிபோகும்; அறுவடைக் காலங்களில் வாப்பாவுடன் வயல்களுக்குப் போகும்போது சின்ன தாய் குழிதோண்டி இலை, சாமையின் ஈர்க்குகள், தழைகளை வைத்து மூன்று நான்கு முட்டைகளை இட்டிருக்கும்; குஞ்சு பொரித்ததும் இறகுகள் முளைத்தவையாகவும் இருக்கும்; ஆள் அரவம் கண்டால் ஓட்டம் பிடித்துவிடும்; கருங்குருவிகள் எப்போதுமே "குர்ர்ர்..." என்று அழகான குரலில் சத்தமிடும்...

பள்ள வயல்களில் சாமை, தினை, கொள்ளு, நரிப்பயறு என்பனவே விளைந்து நிற்கும்; சோளம்,, கம்பு விளையும் காட்டில் காடைகளும் கௌதாரிகளும் தன் குஞ்சுகளுடன் கூட்டம் கூட்டமாக நிறையத் திரியும்; அதிலும் கௌதாரிகள் மிகவும் அரிதான இனம்; அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காண முடியாது; கள்ளி மரத்தடியில் வெயில் நேரங்களில் படுத்திருக்கும்; காலை வேளைகளில் உயரமான கல்லின் மேல் ஏறி நின்று கொக்கரிக்கும்; சிறகுகள் இருந்தாலும் தரையிறங்கி வந்து தத்தித் தத்தித் தாவித் தாவி உடன் ஒலியெழுப்பித் திரியும்....

ஒரு பறவைக்கு பல பெயர்கள் பழக்கத்தில் இருந்திருக்கின்றன; கிழக்கில் ஒரு பெயரால் அழைக்கப்படும் பறவைக்கு வடக்கில் வேறு பெயர் இருக்கும்; காட்டுக் கோழிக்கு அடவிக் கோழி, கானகக்கோழி என்ற பெயர்களும் உண்டு; அது போலவே கூழைக்கடா என்றறியப்படும் பறவையை மத்தாளிக் கொக்கு என்கின்றனர்; குளிர் காலத்தில் சில அரிய பறவைகளை காண நேர்ந்தால் அவை புதினமாக எமது கண்களுக்கு விருந்தாகும்; இவை நம் பிரதேசத்துப் பட்சிகள் என்று இலகுவில் நம்பி விடுகின்றோம்; அது அவ்வாறில்லை; மேலை நாடுகளில் தரையில் பனி படர்ந்து இரை தேடுவது சிரமம்; அதனால் கடல்கடந்து, இரை கொள்ளவே இங்கு வருகின்றன; கிளுவை, சிறவி, போன்ற நீர் வாத்துகள் உள்ளான் எனும் புள்ளினம் ஏரிகளின் கரைகளில் அடர்ந்திருக்கும் கடப்ப மரங்களில் அலாதியாக வாசஞ் செய்கின்றன; எங்கள் உள்ளாத்துக் காடுகளில் கூடு கட்டாது தங்கிப் போகும் பட்சிகள் கோடை காலம் முழுக்கத் தமக்கு தண்ணீர் தாமதமாகத்தான் கிடைக்குமென்ற மாயத்தையும் காற்று வேறு மாதிரியாகத் தொடங்கி மீளத் திரும்பும் வழி கெட்டுவிடுமோ என்ற ஏக்கத்தையும் ஒரு விதியின் செயலாகவே எதிர் கொள்கின்றன...

வீடுகளையும் பெரிய மரங்களையும் பறந்து கடந்து பின்பாக ஒரு வானாந்தரம் அதையும் தாண்டிப் பாறைகள் வெட்டவெளி யாவையும் கடந்து கடந்து பறக்கும் புறாப் பாட்டத்தின் பின்னே மனமும் பறப்பதை உணர்ந்திருக்கிறேன்...

பறவை இனத்தைப் பொதுவாக உம்மா சிறகோர் என்றுதான் அழைப்பார்; சேவல்கள் சிறகசைக்கும் போதெல்லாம் வேறு வேறு புதர்களில், மரங்களில் வாழுகின்ற புள்ளினங்கள் ஆர்ப்பரிக்கும்; கூவும் ஒலி கேட்கும்வரை காத்திருப்பார்; அதிகாலை இறை வணக்கத்துக்கு முதலில் துயில் எழுப்பும் அதிகாரி சேவல்தான்; உம்மா கோழிகளை அள்ளித் தூக்கும் பாங்கு, அது ஒரு நெருக்கமான உறவை முன்மொழியும்; கக்கத்தில் பதித்து அதன் தலையை முழங்கைக்கு மேலேவிட்டுப் பஞ்சுப் பொதிபோல் தூக்கிச் செல்வார்; அடிக்கடி சிறகு விரித்து "கர் கர்" என்கிற அண்டங்காக்கையார் பகலில் சில வேளைகளில் அரைத் தூக்கத்திலிருந்தால் அரட்டி விடுவார்; காக்கைகளைப் பார்த்து ஆகாயத் தோட்டி என்பார்; கழுகு அது ஆதிக்கவாதி; மயில் சுதந்திர ஆட்டக்காரன் என்பார்; கோவைக் கொடி சுற்றிய சீமைக் கருவேலம், புதர் மண்டிய புளியந் தோப்பு இவைகளின் எல்லைப் புறக் காவலன்தான் மாம்பழக் குருவி; இது வாழும் இடங்களில் மஞ்சநெத்தி மைனாவும் கோட்டானும் துணையிருக்கும்; கோட்டான் சத்தமிட்டால் மரங்கள் அதிரும்...

முற்றத்தில் சிறிய சிறிய கூழான் கற்களின் விளிம்பில் வண்ணத்துப் பூச்சிகள் அமர்ந்து தமக்குள் பேசிக் கொள்வதை ரசித்திருக்கிறேன்; சில இன வண்ணத்துப் பூச்சிகள் பறவைகள்போல உயரப் பறப்பன; ஜெசபல் எனும் மஞ்சள், சிவப்புப் பட்டாம் பூச்சிகள் ஆயிரக் கணக்கில் காற்றில் மிதந்து செல்வதைக் கண்டு ஆவென்றிருக்கிறேன்; அந்நாளில் நானும் ஒரு பட்டாம் பூச்சிப் பைத்தியம்; அது உடலையொட்டி ஒடுங்கி என் விரல்களுக்குள் வசப்பட்ட நொடியில் உயிரின விஞ்ஞானியாக மாறுவேன்...

தனித்த மரமொன்றில் துளை போட்டு அதில் கூடு வைத்துக் குஞ்சு பொரிக்கும் பறவைதான் செந்நிற மரங்கொத்தி; இறகு முளைத்த காலத்திலிருந்து, அதனைப் பாதுகாத்து வைத்திருப்பது தாய்பறவை என்றா நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை! கொட்டைப் பாக்கான் என்ற சிறு குருவிகள் சேர்ந்து சரியாக மரங்கொத்திப் பறவை குஞ்சு வைத்திருக்கும் பொந்தின் அருகேதான் கூடு வைக்கும்; இப்படி மரபு வழியான குருவியின் நடத்தைக்கு 'மூலக்குடி' என்று பெயர்...

நாங்கள் நட்டிருந்த மூங்கில் புதரில் கிழக்குப் பார்த்தது எங்கள் வீடு; அதனூடே தலை கீழாகத் தொங்கிக் கொண்டு சிலந்தி வலை பின்னுவது போல் கதிரவன் எழுவது தெரியும்; அடுத்தடுத்த செடி கொடிகளில் சிக்குப் பிரிப்பதுபோல் சொண்டால் கொத்திக் கொத்தி தன் இறகாலேயே ஸ்பரிசத்தை உணரும் பறவையே கரிச்சான்; முன்னிலவு நாட்களில் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டெழும் ஆள் காட்டிப் பறவையின் குரலைக் கேட்கும் போதெல்லாம் ஒருவித ஏக்கம் நெஞ்சைக் கவ்விக் கொள்வதை மறுக்க முடியவில்லை.

சிறப்பாக நடைபெற்ற APIIT கல்வியகத்தின் பட்டமளிப்பு விழா–2021

இலங்கையில் வெளிநாட்டு பட்டங்களை வழங்குகின்ற மிகப் பெரிய நிறுவகமாக திகழ்கின்ற, ஆசியா பசுபிக் இன்ஸ்டிடியூட் ஒஃப் இன்போமேஷன் டெக்னோலஜி ஸ்ரீலங்கா கல்வியகம் தனது வருடாந்த பட்டமளிப்பு விழாவை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான மண்டபத்தில் 2021 டிசம்பர் 21ஆம் திகதி நடாத்தியது.

இந்நிகழ்வில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உப வேந்தரான சிரேஷ;ட பேராசிரியர் சுதந்த லியனகே பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான திருமதி. ஹஜர் அலாபைபி கௌரவ அதிதியாக கலந்து கொண்ட அதேவேளை, ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டெஃபோட்ஷயர் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான பேராசிரியர் லிஸ் பார்னஸ் இணையவழி மெய்நிகர் முறைமையின் ஊடாக இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் APIIT கல்வியகத்தின் 397 பட்டதாரிகள் ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டெஃபோட்ஷயர் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் வியாபாரம், கணணி மற்றும் சட்டம் ஆகிய துறைகளிலான இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு பட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில், மென்பொருள் பொறியியல் துறையில் பொறியியல் இளமானி (சிறப்பு), கணணி வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு துறையில் பொறியியல் இளமானி (சிறப்பு), சர்வதேச வியாபார முகாமைத்துவ துறையில் பொறியியல் இளமானி (சிறப்பு), சட்டத் துறையில் எல்.எல்.பி. (சிறப்பு), வியாபார முதுமானி, கணணி விஞ்ஞானத் துறையில் (வியாபார கணணியியல்) வியாபார விஞ்ஞான முதுமானி மற்றும் சர்வதேச வியாபார சட்டத் துறையில் சட்ட முதுமானி ஆகிய பட்டச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை ஆடை கைத்தொழில், தொழிற்சங்கங்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கையின் ஆடைத் தொழில்துறை மற்றும் அது தொடர்பான தொழிற்சங்கங்கள், தொற்றாநோய் தடுப்பு தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் இருப்பதற்கு பரஸ்பர நலன் சார்ந்த பிரச்சினைகளை பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண வர்த்தக உரிமையாளர்களும் ஊழியர்களும் ஒன்றிணைந்து செயற்படுவதை வகையிலான முக்கிய ஒப்பந்தமொன்றில் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கோவிட்19 தொற்றிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும், மனித வளப் பயன்பாட்டை மேலும் மேம்படுத்துவதற்கும், தொழில்துறையின் உந்துதலில் ஒரு முன்னோடி மைல்கல்லாக, கூட்டு ஆடைத் தொழிற்சங்கங்களுக்கும் (JAAF) தொழிற்சங்கக் கூட்டமைப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று (MoU) கைச்சாத்தானது.

JAAF இலங்கையில் ஆடைத் தொழிலில் முதன்மையான அமைப்பாகும் மற்றும் தொழிற்சங்கக் கூட்டமைப்பானது இத்துறையில் மூன்று முன்னணி தொழிற்சங்கங்களைக் கொண்டுள்ளது. அதாவது சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவைகள் ஊழியர் சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்கம் மற்றும் கடல்சார் தேசிய சங்கம் ஆகியனவாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களை தொழிற்சாலை இருதரப்பு சுகாதார குழுக்களுக்கு பரிந்துரைக்கலாம். இலங்கையில் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் அனைத்து உற்பத்தி ஆலைகளாலும் நெருக்கமாக கடைபிடிக்கப்படுவதை இந்த குழுக்கள் உறுதி செய்கின்றன.

2021 இலும் தனது வெற்றிப் பாதையை தொடர்கிறது OPPO

2021ஆம் ஆண்டு ஒரு சவாலான ஆண்டாக இருந்தபோதிலும், திறன் மற்றும் புத்தாக்கத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு அந்த வருடத்தில் பல வாய்ப்புகள் ஏற்பட்டதாக, முன்னணி கையடக்கத் தொலைபேசி மற்றும் உபகரணங்கள் உற்பத்தி தரக்குறியீடான OPPO தனது சமீபத்திய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. 2021 ஆனது, OPPO வின் வணிகத்தில் 17ஆவது ஆண்டைக் குறிக்கின்றது. குறிப்பாக ஒரு கையடக்கத் தொலைபேசித் தயாரிப்பாளராக இருந்து, கடந்த பத்து ஆண்டுகளில் தொழில்துறையில் ஒரு முன்னோடியாக அதன் பயணத்தை பிரதிபலிக்கிறது.

2021 ஆம் ஆண்டில், OPPO அதன் முதன்மையான Find X3 Pro ஸ்மார்ட்போனுக்காக 'EISA BEST PRODUCT ADVANCED SMARTPHONE 20212022' எனும் மதிப்பைப் பெற்றது. இது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக, அதன் சிறப்பான அர்ப்பணிப்புக்கு சான்றாக விளங்குகின்றது. முன்னணி வீட்டுப் பாவனை மற்றும் இலத்திரனியல் உபகரண விற்பனையாளரான Abans PLC உடனான கூட்டாண்மையின் 5ஆவது ஆண்டு நிறைவை இலங்கையில் OPPO கொண்டாடியதுடன், அதன் கூட்டாண்மை தொடர்பான மேலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தைப் புதுப்பித்துள்ளது.

கடந்த வருட பயணம் குறித்து கருத்துத் தெரிவித்த XINDA Lanka (OPPO Sri Lanka) வின் பிரதான நிறைவேற்று அதிகாரி Bob Li, "எமது உள்ளூர் வாடிக்கையாளர்களிடமிருந்து அதிகரித்து வரும் ஆதரவு மற்றும் விசுவாசத்திற்காக நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். 2022ஆம் ஆண்டில் தொழில்நுட்பத்தை மலிவு விலையிலும் மற்றும் அனைவரும் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதற்கான எமது நோக்கிற்கு அமைய, உங்களுக்கு மேலும் சிறந்ததை வழங்க நாம் எதிர்பார்க்கிறோம்." என்றார்.

GHG உறுதி செய்யப்பட்ட கோழிப்பண்ணை நிறுவனமாக நியு அந்தனீஸ் பார்ம்ஸ்

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலைபேறான செயன்முறைகளை பின்பற்றுவதை உறுதி செய்யும் வகையில், நாட்டின் கோழிப் பண்ணைத் துறையில் உறுதியான நாமத்தைக் கொண்டுள்ள நியு அந்தனீஸ் பார்ம்ஸ் (பிரைவட்) லிமிடெட், பெருமைக்குரிய Greenhouse Gas (GHG) சான்றிதழைப் பெற்றுள்ளது. ISO 140641:2018 நியமங்களுக்கமைய உறுதி செய்யப்பட்டு, நெதர்லாந்தைச் சேர்ந்த கட்டுப்பாட்டு யூனியன் சான்றளிப்பு அமைப்பிடமிருந்து இந்த சான்று வழங்கப்பட்டுள்ளது.

இதனூடாக, நாட்டின் முதலாவது ஒரே GHG (Greenhouse Gas) சான்றிதழைப் பெற்ற கோழி இறைச்சி உற்பத்தியாளராக நியு அந்தனீஸ் பார்ம்ஸ் திகழ்கின்றது. தனது முழு விநியோகத் தொடரிலும் காபன் கரிசனை மிகுந்த வழிமுறை பின்பற்றப்படுவதை உறுதி செய்கின்றது. வலுச் சேமிப்பு நடவடிக்கைகள், பொறுப்பு வாய்ந்த கழிவு அகற்றல் கட்டமைப்புகள், சூரிய வலுப் பாவனைக்கு மாறுதல், தன்னியக்கமயமாக்கலுக்கு மாறுவதனூடாக கடதாசி பாவனையைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகளினூடாக இந்த GHG வெளியேற்றம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

சூழலுக்கு நட்பான முறையில் கோழி இறைச்சியை உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு கிடைத்த சான்றாக இந்த சான்றிதழ் அமைந்துள்ளது. 'HarithaHari' கோழி இறைச்சியினூடாக இயற்கையான பசுமை வழங்கப்படுவதுடன், சரியான சுவை மற்றும் நறுமணம் போன்றவற்றுடன், சரியான போஷாக்கும் கிடைக்கின்றது. இறைச்சியில் அவசியமான அமினோ அமிலங்கள் அடங்கியிருப்பதுடன், 100 சதவீதம் இயற்கை வழிமுறைகளைப் பின்பற்றி, பாதுகாப்பான முறையில் உற்பத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. விலங்கு நலன்புரி பணிகள், பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்கள் போன்றன அமெரிக்காவின் தேசிய கோழிஇறைச்சி சம்மேளனத்தின் நியமங்களை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளன.

நியு அந்தனீஸ் பார்ம்ஸ் என்பது GMP, HACCP மற்றும் ISO 22000 சான்றுகளைப் பெற்ற நிறுவனமாக அமைந்திருப்பதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச ஹலால் சான்றுகளையும் பெற்றுள்ளது. பாரம்பரிய பிளாஸ்ரிக் அல்லது பொலிதீன் மூலப் பொருட்களை பயன்படுத்தி பொதியிடுவதிலிருந்து மாறி, கொம்போஸ்டாக மாற்றக்கூடிய பொதியிடலை பின்பற்றும் இலங்கையின் முதலாவதும், ஒரே கோழி இறைச்சி உற்பத்தியாளராக திகழ்கின்றது.

Personal Care Assistant பாடநெறிக்கு புலமைப் பரிசில்களை வழங்கும் IIHS

இலங்கையின் சுகாதாரச் சேவைகள் கற்கைத் துறையில் முதன்மை நிறுவனமாக விளங்கும் IIHS (International Institute of Health Sciences), சர்வதேச அங்கீகாரம் பெற்ற Personal CareAssistant (PCA) தொழில் வல்லுனர்களை உருவாக்கும் நோக்கத்துடன் பின்தங்கிய கிராமப் பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதாரப் பயிர்ச் செய்கை மேம்பாட்டுத்திட்டம் இராஜாங்க அமைச்சின் ஒருங்கிணைப்புடன், அங்கீகரிக்கப்பட்ட NVQ Level 3 நிகழ்ச்சித் திட்டமொன்றை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து ரூபா 100,000 புலமைப் பரிசில்களை வழங்கும் திட்டமொன்றை தொடங்கியுள்ளது. கனிவான இதயம் அழகான வாழ்க்கை எனும் எண்ணக்கருவின் கீழ் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் க.பொ.த சாதாரணத் தரப்பரீட்சையில் தோற்றியவர்கள் இணைந்து கொள்ளமுடியும்.

மூன்றுமாத பாடநெறியைத் தொடர்ந்து Personal Care Assistant (PCA) சான்றிதழ் வழங்கப்படுவதோடு பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்கின்றவர்கள் உள்நாட்டிலோ அல்லது சிங்கப்பூர், மலேசியா, இஸ்ரேல், மத்திய கிழக்கு நாடுகள் போன்ற நாடுகளிலோ தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்பப்படுவார்கள். வெளிநாடுகளில் மாதமொன்றுக்கு ரூபா 120,000 தொடக்கம் ரூபா 250,000 வரையிலான அதிக ஊதியத்தை பெறக்கூடிய இத் தொழில்துறைக்கு உலகெங்கிலும் பெரும் வரவேற்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

IIHS நிறுவனத்துடன் இணைந்த நாடெங்கிலும் அமைந்துள்ள 20 நிலையங்களில் "Study Now – Pay Later"எனும் திட்டத்தின் கீழ் கற்கமுடியும். வீட்டுப் பணிப் பெண்களுக்கு பதிலாக ஆற்றல்மிக்க தொழில் வல்லுனர்களை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்புவதன் மூலம் அதிக அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கும், அரசாங்கத்தின் நோக்கங்களின் ஒன்றானஅறிவுசார்ந்த பொருளாதாரமொன்றை கட்டியெழுப்புதல்திட்டத்தின் மூலம் நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு வளமான வாழ்க்கைத் தரத்தை அடைவதற்கும் இந்நிகழ்ச்சித் திட்டம் பெரிதும் உதவுமென IIHS நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் கித்சிறி எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

vivo 2021 : உலகளாவிய ஸ்மார்ட்போன் தரக்குறியீட்டிற்கு மற்றுமொரு வெற்றிகரமான வருடம்

பல்வேறு தயாரிப்பு அறிமுகங்கள், மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை, உலகளாவிய தடம் பதிவு, வெற்றிகரமான நிகழ்வுகள், அதிக விற்பனை ஆகியவற்றுடன், உலகளாவிய முன்னணி ஸ்மார்ட்போன் தயாரிப்பாளராக உருவெடுத்துள்ள vivo, இலங்கையில் மற்றுமொரு வெற்றிகரமான ஆண்டைக் நிறைவு செய்துள்ளது. Canalys இனது கூற்றின் அடிப்படையில், உலகளாவிய ஸ்மார்ட்போன் சந்தையில் vivo நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

2022 ஆம் ஆண்டை மிகப் பெரிய மற்றும் வெற்றிகரமான ஆண்டாக எதிர்நோக்கியுள்ள நிலையில், இந்த ஆண்டில் vivoவின் அனைத்து சாதனைகளையும் திரும்பிப் பார்ப்போம்.

இந்த ஆண்டு vivo தனது தயாரிப்பு வகைகளை வியக்கத்தக்க அளவில் மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இது V தொடரில் இரண்டு ஸ்மார்ட்போன்களை அறிமுகப்படுத்தியது, 44MP OIS Night Selfie System உடனான V21 5G மற்றும் 44MP உடனான Autofocus தொழில்நுட்பத்தைக் கொண்ட V21e ஆகியனவே அவையாகும். இவை தவிர, Y தொடர் சாதனங்களின் வரிசையாக Y1s, Y12s, Y51, Y53s ஆகிய சிறந்த அம்சங்களைக் கொண்ட, சிறந்த விலை கொண்ட சாதனங்களை அது அறிமுகப்படுத்தியது.

V1 ஆனது, ஒரு முழுமையான தனிப்பயனாக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட சர்க்யூட் சிப் ஆகும், இது vivo ஆல் வெளியிடப்பட்ட, புகைப்படவியல் மற்றும் வீடியோ செயலிகளில், முன்னணி காட்சி தரத்தைப் பெற அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, vivoவின் புகைப்படவியல் தொகுதி வடிவமைப்பிற்கு ஏற்ற வகையில், viewfinder தோற்றம் மற்றும் வீடியோ பதிவு போன்ற ஸ்மார்ட்போன் பயன்பாட்டுக் காட்சிகளை மேம்படுத்துவதன் மூலம் இமேஜிங் சிப் V1 பயனர் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

2021 இன் முதலாவது காலாண்டில், உலகின் இரண்டாவது வேகமாக வளர்ந்து வரும் 5G ஸ்மார்ட்போன் தரக்குறியீடாக vivo மாறியது. 19 மில்லியன் சாதனங்கள் சந்தைக்கு அனுப்பப்பட்டதுடன், இது முந்தைய காலாண்டின் அடிப்படையில் 62 சதவீத அதிகப்பாகும். vivo 5G மொபைல் அனுபவத்தில் புதுமைகள் மற்றும் முன்னேற்றங்களில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது.

இவ்வாண்டின் ESG முன்முயற்சி – இலங்கை விருதைப் பெற்ற பைராஹா ஃபார்ம்ஸ்

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் முன்னோடி கோழி உற்பத்தியாளரான பைராஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி ஆசியா FMCG விருதுகளில், 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டின் சுற்றுச்சூழல் சமூக ஆளுமை முன்முயற்சியின் வெற்றியாளராக கௌரவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன்முறையாக பிரெய்லியில் எழுதப்பட்ட சிக்கன் (கோழி) ரெசிபிகளின் செய்முறைப் புத்தகம் வெளியிடப்பட்டது, கண் பார்வையற்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வடிவத்தில் வாசிப்பதற்கும் சமைத்து மகிழ்வதற்கும் இது உதவும். புத்தகத்தை விளம்பரப்படுத்துவதன் மூலமும் அது பார்வையற்றவர்களைச் சென்றடைவதுடன், இந்தப் பிரச்சாரத்தின்போது நிறுவனம் சிறந்த அடைவுகளையும் பெற்றுள்ளது. நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் பிரெய்லி செய்முறை புத்தகம் என்பதைத்தாண்டி, சமைப்பதில் உள்ள மகிழ்ச்சியை மேலும் பண்முகப்படுத்தக் கூடியவகையில் விளம்பரப்படுத்த முடியும் என்ற பெருமையை கொண்டுள்ளது.

பைராஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி நாடு முழுவதும் உள்ள பார்வையற்றோருக்கான 18 பள்ளிகளுக்குப் பிரெய்லி புத்தகங்களை நன்கொடையாக வழங்கி தமது பங்களிப்பை விரிவுபடுத்தியுள்ளது. தொற்றுநோய் காரணமாக, தனிப்பட்ட முறையில் புத்தகங்களை வழங்க முடியவில்லை. அதற்குப் பதிலாக, பிரெய்லியில் எழுதப்பட்ட குறிப்புகளைக் கொண்ட புத்தகங்கள் பரிசுப் பெட்டிகளில் கூரியர் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

எங்கள் நுகர்வோர்களின் உள்ளங்களுக்கு தயாரிப்பை எவ்வாறு சரியாக எடுத்துச் செல்வது?" என்ற கேள்வியை நிறுவனம் எதிர்கொண்டது. சந்தையில் சகல நுகர்வோர் பிரிவினரும் திருப்தியடைய வேண்டும் மற்றும் அவர்கள் அனைவரும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

வாரபலன்*

09.01.2022 - 15.01.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

மேஷம்

தேவையான அளவுக்கு பணவரவு இருந்தாலும், திடீர் செலவு களால் சிலருக்குக் கடன் வாங்க நேரிடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தந்தையுடன் ஏற் பட்டி ருந்த மனஸ்தாபம் நீங்கும். அரசாங்க வகையில் இழுபறியாக இருந்த காரியம் முடிய சிறிது பொறுத்தி ருக்கத்தான் வேண்டும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதி கரிக்கும். மற்றவர்களால் உங்களுக்கு ஏற் பட்ட அவப் பெயர் நீங்கும். அலுவலகத்தில் வேலைச்சுமை அதிக ரிக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து நடந்துகொள் வது அவசியம்.

ரிஷபம்

சூரியன், சுக்கிரன் இணைந்து எட்டாம் வீட்டில் பயணம் செய்வதால் பேச்சில் கவனம் தேவை. பய ணங்களில் நிதானம் அவசியம். ராசியில் உள்ள ராகு சில நேரங்களில் மனக்குழப்பத்தை தருவார். உடல் ஆரோக் கியத்தில் கவனமும் நிதானமும் தேவை. அப்பாவழி உறவினர்களால் பிரச்சினை வரலாம். வெளிநாடு வாய்ப்புகள் தேடி வரும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். நல்ல வேலை கிடைக்கும். அரசு வேலையில் இருப் பவர்கள் கவனம் தேவை. அலுவலகத்தில் மேலதிகா ரிகளிடம் கவனம் தேவை. பெற்றோர்களின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்.

மிதுனம்

இந்த வாரமும் சூரியன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் ஏழாம் வீட்டில் பயணம் செய்கின்றன. மூன்று கிரகங் களின் பார்வை உங்கள் ராசிக்கு கிடைக்கிறது. சமூகத் தில் உங்களின் கௌரவம் மதிப்பு கூடும். சுய தொழில் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். சந்திரன் சஞ்சாரம் சாதகமாக உள்ளது. குருவின் பார்வையும் குதூகலத்தைத் தருகிறது. வங்கிக் கடன் கிடைக்கும். போட்டித்தேர்வுகளில் வெற்றிகள் கிடைக்கும். பொரு ளாதார வளம் நன்றாக இருக்கும். ஒன்லைன் பண பரிவர்த்தனையில் கவனம் தேவை. தாய்மாமா வழி உறவினர்களிடம் விட்டுக்கொடுத்து செல்லவும். அற்பு தங்கள் நிறைந்த வாரம்,

கடகம்

அற்புதங்கள் நிறைந்த வாரம், வேலை தொழிலில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். மாணவர்களுக்கு படிப்ப தில் இருந்த சிக்கல்கள் நீங்கும். பெண்களுக்கு மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். காதல் கைக்கூடும். திருமண சுப காரியங்கள் கைக்கூடி வரும். நினைத்தது நிறைவேறும் வாரம். ஆறாம் வீட்டில் சூரியன், சுக்கிரன் இணைந்தி ருப்பதால் மறைமுக எதிரிகள் தொல்லை அதிகரிக்கும். பொருளாதாரம் நிலை நன்றாக இருக்கும். பிள்ளை களால் சுப செய்திகள் தேடி வரும். சிலருக்கு நல்ல வேலை கிடைக்கும். அஷ்டம குரு உடல் ஆரோக்கியத் தில் சில சங்கடங்களை ஏற்படுத்துவார். உணவு விசயத் தில் கவனமாக இருப்பது நல்லது. தொழில் கூட்டாளிக ளுடன் நல்லுறவு நீடிக்கும்.

சிம்மம்

இந்த வாரம் உங்களுக்கு அமோகமான வாரமாக அமைந்துள்ளது. வார தொடக்கத்தில் சந்திராஷ்டமம் உள்ளதால் கவனமும் நிதானமும் தேவை. சுப காரியங் கள் அதிகம் நடைபெறும். ராசி நாதன் சூரியன் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் பயணம் செய்வதால் பூர்வீக வழி சொத்துக்கள் கிடைக்கும். வேலை வாய்ப்புகளுக் கான போட்டி தேர்வுகளில் வெற்றி கிடைக்கும். கர்ப் பிணிப் பெண்கள் கவனமாக இருக்கவும். வீடு நிலம் வாங்கும் எண்ணம் நிறைவேறும். தாய் மாமனால் தொல்லை அதிகரிக்கும்.

கன்னி

இந்த வாரம் நவ கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக அமைந்துள்ளது. பெண்களுக்கு பொன்நகை சேர்க்கை ஏற்படும். வண்டி வாகன யோகம் உண்டாகும். புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். வெளியூருக்கு பயணம் செல்லும் நிலை உண்டாகும். திடீர் விரைய செலவுகள் வரும். மனதில் ஏற்பட்ட சஞ்சலங்கள் நீங்கி உற்சாகம் அதிகரிக்கும். நினைத்த காரியம் கைகூடி வரும். மன திடம் அதிகரிக்கும். பேரும் புகழும் கை கூடி வரும். சந்தோஷம் நிறைந்த வாரம். யோகங்கள் நிறைந்த வாரம்.

துலாம்

குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவா தம் வேண்டாம். கோபமான பேச்சினை தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் லாபம் வரும். குழந்தைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். விவசாயம் விருத்தியாகும். எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும். சுபிட்சங்கள் நிறைந்த வாரம் செல்வச் சேமிப்பு அதிகரிக்கும். மனதில் நிம்மதியும் சந்தோஷமும் அதிகரிக்கும். அரசு வேலை செய்பவர்களுக்கு முன்னேற்றம் நிறைந்த வாரம். சம்பள உயர்வு அதிகரிக்கும். தனியார் துறையில் வேலை செய்ப வர்களுக்கு நல்ல தகவல் தேடி வரும். அம்மாவின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்களுடன் இணைந்து சுற்றுலா செல்வீர்கள்.

விருச்சிகம்

கேது உடன் செவ்வாய் இணைந்து உங்கள் ராசியில் பயணம் செய்வதால் தேவையற்ற எண்ணங்களை தவிர்க் கவும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் தகவல் தொடர்பு சிறப்படையும். பூர்வீக சொத்திலிருந்து பணம் கிடைக்கும். வேலையில் முன்னேற்றமும் திடீர் இடமாற் றமும் வரும். குரு உங்கள் ராசிக்கு நான்காமிடத்தில் இருக் கிறார் புதிதாக வாகனம் வாங்கும் அதிர்ஷ்டம் உண்டா கும். அக்கம் பக்கத்தினரின் உதவி கிடைக்கும். எதிரிகள் தொல்லை நீங்கும். அக்கம் பக்கத்தினர் உதவி கிடைக்கும். உற்சாகமான மனநிலையில் இருப்பீர்கள். தொழில் வியா பாரம் விருத்தியாகும் முன்னேற்றம் அதிகரிக்கும்.

தனுசு

இந்த வாரம் உங்களுக்கு வேலையில் முன்னேற் றம் ஏற்படும். அலுவலகத்தில் உயர் அதிகாரிகளின் உதவி கிடைக்கும். அலுவலகத்தில் தேவையற்ற வீண் பேச்சினை தவிர்க்கவும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இளைய சகோதரர்களின் உதவி கிடைக் கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு மன மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடை ஆபரண சேர்க்கை ஏற்ப டும் புதிதாக நகைகளை வாங்குவீர்கள். குடும்பத்திலும் நண்பர்களிடமும் சண்டை சச்சரவினை தவிர்க்கவும், விட்டுக்கொடுத்து செல்வது நன்மையை ஏற்படுத்தும். மாணவர்களுக்கு மனதில் தைரியம் அதிகரிக்கும்.

மகரம்

ராசிநாதன் சனி உங்கள் ராசியில் புதனோடு பயணம் செய்கிறார். வேலையில் பளு கூடும், உடல் உழைப்பு அதிகரிக்கும். இந்த வாரம் பண வரவு அதிகரிக்கும், கூடவே சுப செலவுகளும் வரும். மூத்த உடன் பிறப்புக ளின் உதவி கிடைக்கும். உறவினர்களால் நன்மை உண் டாகும். புதன் உங்கள் ராசியில் சனியோடு சஞ்சரிக்கி றார். திடீர் பண வரவு வரும். வீண் செலவுகளில் கவனம் தேவை. குரு இரண்டாமிடத்தில் இருக்கிறார் பேச்சி னாலேயே காரியம் சாதித்துக் கொள்வீர்கள். பொழுது போக்கு விஷயங்களில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும்.

கும்பம்

சனி பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட கும்ப ராசிக்காரர்களே, நன்மைகள் நிறைந்த வாரமாக அமைந் துள்ளது. சந்திரன் சஞ்சாரம் சாதகமாக உள்ளது. சம்பள உயர்வும் அதிகரிக்கும். அரசு வேலையில் இருப்ப வர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கும். அரசு பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பெண்க ளுக்கு சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக் கும். புதிய பதவிகள் தேடி வரும். திடீர் பண வரு மானமும் சுப விரய செலவுகளும் அதிகரிக்கும். சிலர் வேலை விசயமாக வெளியூருக்கு செல்லும் நிலை உண் டாகும்.

மீனம்

பத்தில் சூரியன், சுக்கிரன் இருப்பதால் பதவியில் வேலை தொழிலில் மாற்றம் ஏற்படும் புதன் லாப ஸ் தானத்தில் இருக்கிறார் புதிய சொத்துக்கள் வாங்கலாம். பங்குச்சந்தை, தரகு கமிஷன் வியாபாரம் சிறப்பைத் தரும். விரய ஸ்தானத்தில் உள்ள குரு சுப விரய செலவு களை ஏற்படுத்துவார். தொழில் முதலீடுகளில் லாபம் இரட்டிப்பாகும். திடீர் மருத்துவ செலவுகள் வரலாம் குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட் டுவது அவசியம். திடீர் மருத்துவ செலவுகள் அதிகரிக் கும்.

குழந்தை இலக்கியத்தை முன்னெடுக்கும் ஹைக்கூ கவிஞர்

தமிழ் இலக்கியத் தளத்தில் கொண் டாடப்படும் எழுத்தாளர்கள் வரி சையில் கவிஞர் மு.முருகேஷ்ம் இடம்பிடித்திருக்கிறார் என்பது பெருமைப் படக்கூடிய விடயமாக எண்ணி மகிழ் கிறேன்

மத்திய அரசால் வழங்கப்படும் குழந்தை இலக்கியத்திற்கான 'பால சாகித் திய புரஸ்கார் விருது'

மு.முருகேஷ் எழுதிய 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை'நூ லுக்கு வழங்கப்பட்டுள்ளது

தமிழில் முப்பதாண்டுகாலமாக எழு திவரும் மு.முருகேஷின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றே சொல்ல வேண்டும். ஜப்பா னிய வடிவமான ஹைக்கூ கவிதைகளின் வழியாக தமிழ் எழுத்துச்சூழலுக்கு நன்கு அறி முகமாகியுள்ள மு.முருகேஷ், குழந்தை இலக்கியத்திலும் முத்திரை பதித்துள்ளார் என்ப தற்கு சிறந்த அங்கீகாரத்தைத் தந்துள்ளது 'பால சாகித்திய புரஸ்கார் விருது'.



குழந்தை இலக்கியம் படைப்பவர்களின் எண் ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் சூழலில் மு.முருகே ஷுக்குக்கி டைத்துள்ள இந்த விருது மூலம் குழந்தை இலக்கியம் படைக்க இனி கூடுதலானோர் வருவார் கள் என்ற நம்பிக்கையை விதைக்கிறது.

படைப்புத்தளத்தில் இயங்க வருபவர் களை அரவணைத்து வழிகாட்டி ஊக்கப் படுத்தும் மு.முருகேஷ், குழந்தை இலக் கியம் படைக்க முன்வருபவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்து, தமிழில் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பாரென முழுமையாக நம்புகி றேன்.

இருபது ஆண்டுகளாக நான் பழகிய வரையில், "நான் பெரிய படைப்பாளி; எனக்கு எல்லாம் தெரியும்" எனும் தலைக்கனம் இல்லாமலும், யார்மீ தும் தேவையற்ற காழ்ப்புணர்ச்சியு டன் கூடிய விமர்சனங்களைப் பகி ராமலும், யாரையும்பெரிய படைப்பாளி, சிறிய படைப்பாளி என்று பாகுபாடு பார்க்காமலும் அனைவருடனும் சமமாக நட்பு பாராட்டும் முருகேஷிடம் இருந்து நிறைய கற்றுக்கொள்ளவும் வேண்டும்.

இலக்கிய அரசியல் செய்யாத அல்லது செய்யத் தெரியாத எல்லோருக்கும் பிடித்தமான சிறந்த மனிதர் என்றும் சொல்லலாம்.

எழுத்தாளர் வல்லிக்கண்ணனைப் போல புதிய எடுத்தாளர்களைத் தட்டிக் கொடுத்து. வளர்த்தெடுப்பதில் மு.மு ருகேஷுக்கு தனி இடம் இருக்கிறது. தனக்கென்று ஒரு வாசகர் பட்டாளத்தை யும் உருவாக்கி வைத்திருப்பது அவரது தனிச்சிறப்புகளுள் ஒன்று.

தமிழில் ஹைக்கூ வடிவத்தைப் பர வலாகக் கொண்டு செல்வதில் முன் னோடியான கவிஞர் மு.முருகேஷ், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத் தில் ஹைக்கூ கவிதைகளுக்கென்றே 'இனிய ஹைக்கூ' எனும் இதழைத் தொடங்கி. தமிழகத்தின் முக்கிய நகரங் களில் 'ஹைக்கூ கவிதைத் திருவிழா, ஹைக்கூ கருத்தரங்கம், ஹைக்கூ பயிலரங்கு ஹைக்கூ கண்காட்சி என பலப்பல முயற்சிகளில் ஈடுபட்டதின் விளைவாக, இன்று தமிழில் ஹைக்கூ கவிதை நிலைத்த புகழினை அடைந் துள்ளது உண்மையே.

மு.முருகேஷின் ஹைக்கூ குறித்த பங்களிப்புகள் அத்தனையையும் தொகுத்து,' தமிழ் ஹைக்கூ நூற் றாண்டில் மு.முருகேஷ்' என்ற நூலை முனைவர் சு.சேகர் வெளியிட்டுள் ளார். ஹைக்கூ எழுத வரும் புதியவர் களுக்கு சிறந்த வழிகாட்டி நூலாக இந்நூல் திகழ்கிறது

தற்போது 'இந்து தமிழ் திசை' நாளி தழில் முதுநிலை உதவி ஆசிரியராகப் பணியாற்றிவரும் இவர், இதுவரை 10 புதுக்கவிதைகள் நூல்கள், 10 ஹைக்கூ நூல்கள். 10 கட்டுரை நூல்கள், 18 குழந்தை இலக்கிய

நந்தவனம் சந்திரசேகரன் ...✍

நூல்கள், 3 புதுக்கவிதைத் தொகுப்பு நூல்கள், 5.ஹைக்கூ தொகுப்பு நூல்களை வெளியிட்டு தமிழ் எழுத்து லகத்திற்கு சிறந்த பங்காற்றியுள்ளார். இவரது நூல்களுக்கு பாரத ஸ்டேட் வங்கியின் சிறந்த கவிதை நூலுக்கான பரிசினை மூன்று முறையும், தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் கலை ஞர்கள் சங்கம் வழங்கும் செல்வன் கார்க்கி விருதினை இரண்டு முறையும், தியாகதுருக்கம் பாரதியார் தமிழ்ச் சங்கம் மற்றும் திருப்பூர் தமிழ்ச் சங்கம் வழங்கிய குழந்தை இலக்கியத் திற்கான பரிசுகளையும் பெற்றுள்ளார்.

குழந்தை இலக்கியத்திற்காகச் சிறப் பாக பணியாற்றியமைக்காக பல்வேறு அமைப்புகள் வழங்கிய சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான விருதும் பெற்றதோடு, மலேசியா, சிங்கப்பூர், குவைத், இலங்கை போன்ற நாடுக ளுக்குப் பயணித்து இலக்கியப் பங்க ளிப்பையும் செய்துள்ளார்.

இவரது ஹைக்கூ மற்றும் புதுக்கவிதைகளை முன் வைத்து 10க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் முனைவர் மற்றும் இளமுனை வர் பட்டத்திற்காக ஆய்வு செய் துள்ளனர். இவர் எழுதிய 160 ஹைக்கூ கவிதைகள் மலை யாளத்தில் மொழிபெயர்க்கப் பட்டு 'நிலா முத்தம்' என்ற நூலாக வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் கதை' நூலி லுள்ள 16 சிறுவர் கதைகளை எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவி சைதன்யா ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க, 'The First Story told by a Daughter to her Mother ' எனும் ஆங்கில நூலாக வெளியாகியுள்ளது.

2011இல் வெளியான தமிழக அரசின் 'சமச்சீர் கல்வி'க்கான பாடத் திட்டத்தில் ஒன்றாம் வகுப்பு தமிழ், அறிவியல், கணிதப் பாடப் புத்தகத்தில் தலா ஒரு பாடலும், 6ஆம் வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் 3 பாடங்க ளையும் இவர் எழுதியுள்ளார்.

ஜப்பானிலுள்ள அகிதா இண்டர்நே ஷனல் ஹைக்கூ அமைப்பு, இவரது 10 ஹைக்கூ கவிதைகளைத் தேர் வுசெய்து, ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்துள்ளது. இவரது 100 ஹைக்கூ கவிதைகள் தமிழ், ஆங்கி லம், இந்தி ஆகிய மூன்று மொழிகளில் 'Let Haiku Blossom' எனும் நூலாக வெளிவந்துள்ளது.

தமிழ் மொழியின் செறிவோடும், காட்சி அழகியலோடும் எழுதப்படும் இவரது ஹைக்கூ கவிதைகளைப் படித்து, பலரும் பாராட்டுவதோடு, தமிழ் ஹைக்கூ வின் அடையாளமாகவும் இவரது கவிதை யைக் காண்கின்றனர். குழந்தை இலக் கியத்தை முன்னெடுக்கும் ஹைக்கூ கவிஞர் மு.முருகேஷ், 'தூண்டில்' ஹைக்கூ இதழின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகிறார்.

இன்னும் பல நூல்களைப் படைக்க வும், தமிழிலக்கியப் பயணத்தைத் தடை யின்றி தொடரவும் மனதார மகிழ்ச்சி யோடு வாழ்த்துகிறேன்.

ஆரோக்கியத் துவாய்கள் பற்றி அறிவோம்

எமது வாழ்க்கையை சிறப்பாக கொண்டு நடாத்துவதற்கு ஆரோக்கிய நடைமுறை களை பின்பற்ற வேண்டிய தேவை யுள்ளது. உளஆரோக்கியமும் உடல் ஆரோக்கியமும் இணைந்து ஒரு மனிதனின் வாழ்நாளை வெற்றிக ரமாக முன்னெடுப்பதற்கு உதவு கின்றன. ஆரோக்கியம் தொடர்பில் கவனமற்று இருப்பதனாலேயே பல உடல்நலப் பிரச்சினைகளை பலர் எதிர்நோக்குகின்றனர். அதிலும் பருவமடைந்த சிறுமிகளும் பெண் களும் தமது ஆரோக்கியம் தொடர் பில் அக்கறையாக உள்ளார்களா? என்பது தொடர்பில் சந்தேகம் எழு கிறது.

பருவமடைந்த சிறுமிகளும், பெண்களும், திருமணமான பெண் களும் மாதாந்தம் மாதவிடாய் எனும் சுழற்சி செயல்முறைக்கு உட்படுகின்றனர். மாதவிடாயானது ஒரு இயற்கை செயல்முறையாகும் ஒவ்வொரு 28 நாட்களுக்கு ஒரு தடவை மாதவிடாய் செயல்முறை நிகழ்கின்றது. இக்காலத்தில் பருவம டைந்த பெண்கள் சுகாதாரமாகவும் ஆரோக்கியமாகவும் தங்களை வைத் துக்கொள்ள வேண்டும். குளித்து சுத் தமாக உடலை வைத்துக் கொள்ள வேண்டும். ஆரோக்கியமான உணவு மற்றும் பழங்கள் என்பவற்றை உட்கொள்ளல், உடல் சோர்வடை யும் வகையில் செயல்படுவதைத் தவிர்த்தல் போன்ற நடைமுறைகள் பெரும்பாலானோர் அறிந்ததே.

ஆனால் நாம் இன்னும் தெளிவுப டுத்திக் கொள்ளவேண்டிய பிரதான அம்சங்களும் மாதவிடாய் காலத்தில் காணப்படுகின்றன.

ஆரம்ப காலங்களில் எமது முன் னோர்கள் தம் மாதவிடாய் கால உள் ளாடைகளுக்காக துணிகளையே பயன்படுத்தினர். ஏன் தற்காலத்தி லும் பல பின்தங்கிய பிரதேசங்க ளில் இந்நிலையே தொடர்கின்றது. ஓரளவு கல்வியறிவு பெற்ற சமூ கத்தில் வாழும் பருவமடைந்த பெண்கள் ஆரோக்கியத் துவாய்க ளைப் பயன்படுத்துகின்றார்கள்

ஆனால், ஆரோக்கியத் துவாய் கள் தொடர்பில் விழிப்புணர்வும் தெளிவும் கொண்டுள்ளார்களா? ஆரோக்கியத் துவாய்களின் தரம் அறிந்து பயன்படுத்துகின்றார்களா? என்பதில் சிக்கல்கள் உள்ளன.

மாதவிடாய் ஏற்படும் காலத்தில் நான்கு தொடக்கம் ஐந்து மணித் தியாலங்களுக்கு ஒரு தடவையே னும் அகற்றி துவாய்களை புதிதாக பயன்படுத்த வேண்டும். குறைந்தது நாளொன்றுக்கு ஐந்து ஆரோக்கியத் துவாய்கள் பயன்படுத்துதல் அவசி யமானதாக கருதப்படுகின்றது. ஒரு மாதத்திற்கு 20 ஆரோக்கியத் துவாய் கள் எனும் அடிப்படையில் வருடம் ஒன்றுக்கு 240 ஆரோக்கியத் துவாய் கள் வரை சராசரியாக ஒவ்வொரு பெண்ணும் பயன்படுத்து கின்றனர். ஆனால் அவற்றின் ஆரோக்கிய நிலை தொடர்பில் தெளிவற்று உள்ளனர் என்பதே உண்மை.

சாதாரண ஆரோக்கியத் துவாய் களைப் பயன்படுத்தும் போது எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்?

பருவமடைந்த பெண்கள் அடிக்கடி ஆரோக்கியத் துவாய்க ளைப் பயன்படுத்தும் போது சருமம் பாதிப்படைகின்றது. பெண்களின் பிறப்புறுப்பு பகுதியில் ஒவ்வாமை, அரிப்பு, எரிச்சல் மற்றும் கொப்பு ளங்கள் ஏற்படுகின்றன. தொடர்ந்து பல வருடங்கள் ஆரோக்கியத் துவாய்களைப் பயன்படுத்துவதால் பெண்களுக்கு கருச்சிதைவு, மலட் டுத்தன்மை போன்றனவும் ஏற்படு கின்றன.

ஆரோக்கியத் துவாய்களில் கலக்கப்பட்ட இரசாயன வேதிப் பொருட்களினால் பிற்காலத்தில் கர்ப்பப்பை புற்றுநோய், மார்ப கப் புற்றுநோய், யோனிக் குழாய் பாதிப்பு போன்ற பாரதூரமான நோய்கள் ஏற்படும் வாய்ப்புள்ள தாக பல வைத்தியர்கள் தெரிவித் துள்ளனர். பெண்களின் குழந்தை இன்மை எனும் நிலையை தீர் மானிக்கும் காரணிகளில் இந்த பொருத்தமற்ற ஆரோக்கியத் துவாய்கள் மிக முக்கியமாக அடை யாளப்படுத்தப்பட்டுள்ளன.

நாம் பயன்படுத்துகின்ற ஆரோக் கியத் துவாய்களில் பல அடுக்குகள் காணப்படுகின்றன. இவ் அடுக் குகளில் இரசாயன பொருட்கள் கலந்தே வடிவமைக்கப்பட்டுள்ளன. ஈரத்தன்மையை உறிஞ்சி வைத்துக் கொள்ளுதல், துர்மணம் வீசுவதை தடுத்து வைத்தல், கசிவைத் தடுத் தல் போன்ற தேவைகளுக்காக இத்தகைய இரசாயன பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு குறிப்பிடப்படும் சில சொற்பிரயோ கங்கள் இதுவரை நாம் அறிந்திராத விஞ்ஞானரீதியான புதிய சொற்க ளாக இருக்கலாம்.

டையாக்சின் ஆரோக்கியத் துவாய் களை தூய்மையான வெண்மை நிறத் தில் பேணுவதற்காக பயன்படும் ஒரு வகையான இரசாயன வேதிப் பொருளாகும். இந்த டையாக்சினில் ஒரு வகையான கொழுப்பு தன்மை காணப்படுகின்றது. இக் கொழுப்பு கொஞ்சம் கொஞ்சமாக உடலில் தங்கிவிடும் இதனால் ஹார்மோன் கள் செயலிழப்பு போன்றன ஏற்பட லாம்.

ரேயான் பருத்தியை விட மலிவா னது ஆரோக்கியத் துவாய்களின் பட் டைகளில் உறிஞ்சும் திறனை அதிக ரிக்க உதவுகின்றது

கசிவு ஏற்படுவதை தவிர்ப்ப தற்காக பிளாஸ்டிக் சீட்கள் வைக் கப்படுகின்றன. இந்த வகையான பிளாஸ்டிக் சீட்கள் காற்றோட்டம் அற்றவையாகும். இவை பற்றீரியாக் களின் வளர்ச்சியை ஊக்குவிக்கின் றன. பெண்களின் பிறப்புறுப்பில் எரிச்சலையும், அரிப்பையும் ஏற்ப டுத்துகின்றது.

சில வகையான வாசனை திரவி யங்கள் துர்நாற்றத்தை தடுப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன. இவற் றில் வெளியில் அறியப்படாத இரசா யனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை இரத்த ஓட்டத்தில் நுழைந்து பிற்காலத்தில் பக்கவிளைவுகளை ஏற்படுத்தி ஒவ்வாமை போன்ற நோய்களுக்கு வழிவகுக்கின்றன.

இவற்றோடு இணைந்ததாக ஸ்டைரீன் குளோரோமீதேன், குளோரோ எதேன், குளோரோஃபார்ம், அசிட்டோன் என்பவற்றோடு பல வகையான இரசாயனப் பொருட்கள் கலந்து ஆரோக்கியத் துவாய்கள் தயா ரிக்கப்படுகின்றன. இத்தகைய இரசா யன பொருட்களின் தீய விளைவுகளி னால் தான் பெண்களின் ஆரோக்கியம் தொடர்பில் சவால்கள் எழுந்துள்ளன.

பாதுகாப்பான ஆரோக்கியத் துவாய் கள்

நச்சுத்தன்மையான ஆரோக்கியத் துவாய்களுக்கு பதிலாக இன்று சந்தை யில் ஆயுர்வேத முறைகளில் தயாரிக்கப் பட்ட பாதுகாப்பான உற்பத்திகள் விற் பனைக்கு உள்ளன. அவை சாதாரண உற்பத்திகளை விடவும் விலை கூடியன வாகும். எதிர்காலத்தை பாதிக்காத பாது காப்பானவற்றைப் பயன்படுத்துவது புத் திசாலித்தனமான ஒன்றாகும்.

நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளும் சூழலுக்கு நட்பானதா? என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். பெரும்பாலான ஆரோக்கியத் துவாய் கள் மண்ணுக்குள் புதைக்கும் போது அது உக்கிப்போகும் தன்மை அற்றவை யாகின்றன. இதனால் நிலம் மாசடை கின்றது, நச்சுத்தன்மை ஆகின்றது. சூழ லுக்கு நேயமான பொருட்களினால் தயாரிக்கப்பட்ட ஆரோக்கியத் துவாய் களை இயன்றளவுக்கு பயன்படுத்து வது சுற்றாடலுக்கும் ஆரோக்கிய மானதாகும்.

எஸ்.மங்களதர்ஷினி ...✍
4ஆம் வருடம்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

வாழ்க்கையை சரள நடையில் தந்திருக்கும் டாக்டர் நித்தி

லண்டனில் அண்மையில் இணையவழியூடாக நடைபெற்ற கலாநிதி இரத்தினம் நித்தியானந்தனின் Kudil and The Headmaster "(குடில் கொண்ட தலைமை ஆசான்) நூல் பற்றி அந்நூல் வெளியீட்டு நிகழ்வில் ஆனந்தராணி பாலேந்திரா ஆற்றிய விமர்சன உரை

ஒவ்வொரு மனிதருடைய வாழ்விலும் இன்பம், துன்பம், ஏற்றம், இறக்கம் இருக்கத்தான் செய்யும். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பல சுவாரஸ்யமான சம்பவங்கள், மகிழ்ச்சியான நிகழ்வுகள், சங்கடமானவை, சவாலானவை, நெகிழ்ச்சியான தருணங்கள் என்று நிறையவே இருக்கும். வேலை, வீடு, குடும்பம், பிள்ளைகள் என்று ஒரு சுழல் வட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் போது இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்க எமக்கு நேரம் இருப்பதில்லை. வயோதிப நாட்களை நாம் நெருங்க நெருங்க எமது இளமைக்காலம், நாம் வாழ்ந்த வாழ்க்கை, பழைய நினைவுகள் எல்லாம் அடிக்கடி வந்து போகும்.

இந்த நிலைக்கு வந்த ஒவ்வொருவரது வாழ்க்கையும் ஒரு புத்தகம்தான். அது கட்டாயம் பதியப்பட வேண்டும். பகிரப்படவேண்டும். நாம், எமது பிள்ளைகள், இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள நிறைய விடயங்கள் உள்ளன. உண்மையில் டொக்டர் நித்தியின் வாழ்க்கை வரலாற்றை 100 பக்கங்களுக்குள் அடக்குவது என்பது மிகக் கடினம். இதனை ஒரு சுருக்கிய வடிவமாகவே நான் பார்க்கிறேன். ஒளிவு மறைவு இல்லாமல் பல விடயங்களைப் பகிர்ந்துள்ளார். First, let me set the scene by telling you a little about my parents என்று ஆரம்பித்து நல்ல சுவாரஸ்யமாக ஒரு கதை சொல்லல் பாணியில் தனது வாழ்க்கையை எழுதியிருக்கிறார். நல்ல சரளமான எழுத்து நடை. சிலர் ஆங்கிலத்திலும் ஏன் தமிழிலும் கூட எழுதும்போது தாம் அறிவு கூடியவர்கள் என்பதைக் காட்டவேண்டும் என்று கடுந்தமிழ், கடுமையான ஆங்கிலச் சொற்களைப் பாவிப்பார்கள். சிலவேளைகளில் டிக்ஷனறியோடுதான் இருந்து இவர்களின் புத்தகங்களை வாசிக்க வேண்டும். நான் அப்படி வாசிக்க ஆரம்பித்துப் பின்னர் கை விட்டிருக்கிறேன். ஆனால் டொக்டர் நித்தியின் எழுத்து எல்லோராலும் இலகுவில் விளங்கக்கூடிய வகையில் இருக்கிறது.

தன்னுடைய பெற்றோரிலிருந்து ஆரம்பித்து தனது படிப்பு, இலங்கையை விட்டு வெளியேறிய காலம், 60களில் லண்டன் வாழ்க்கை, அவர் வேலை பார்த்த சென்ற் மேரீஸ், அவருடைய பிள்ளைகள், மேற்கு லண்டன் தமிழ் பாடசாலை, லண்டன் தமிழ் நிலையம் ,தென்இந்திய நுண்கலைகளின் உயர்ச்சி, லண்டன் தமிழ் முதியோர் நிலையம், சன்றைஸ் வானொலி, சுனாமி கால நினைவலைகள், ரட்ணம் அறக்கட்டளை, செம்மொழி மகாநாட்டில் பிரமுகராக, அவருக்குத் தெரியாமல் ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று கொண்டாட்டங்கள் என 16 அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ளது. பின் இணைப்பாக 'தெரியாத இடத்துக்கு ஒரு பயணம்' என்ற கட்டுரையும் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற மகாநாட்டில் இவர் வாசித்த திருச்செந்தூர் முருகன் பற்றிய தமிழ்க் கட்டுரையும் இணைக்கப்பட்டுள்ளன. பொருத்தமான படங்களும் உள்ளன.

ஒரு மண் வீட்டில் பிறந்த ஒருவர் தன்னுடைய அப்பாவின் வழிகாட்டலில் தன் கடின உழைப்புடனும் விடாமுயற்சியுடனும் ஒரு சிறந்த நிலைக்கு எப்படி வந்தார் என்பதை இந்தப் புத்தகம் மூலம் அறிய முடிகிறது. கல்வியின் முக்கியத்துவத்தை மற்றவர்களும் உணரவேண்டும் என்ற நோக்கோடு தமிழ்மொழி, கலை பண்பாடு புலம்பெயர் தேசத்தில் உயர வேண்டும் என்ற சமூக சிந்தனையுடன் அவர் இடைவிடாது இயங்கியதைப் பார்க்க முடிகிறது. தான் பிறந்த மண்ணை மறவாது அங்கும் சமூக மேம்பாட்டிற்காக தனது தந்தையாரின் நினைவாக ஆரம்பிக்கப்பட்ட ரட்ணம் அறக்கட்டளை மூலம் பலவிதமான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் அவரது தொடர்ந்த பணியை அறிய முடிகிறது. டொக்டர் நித்தியின் ஞாபகசக்தியைக் கட்டாயம் பாராட்ட வேண்டும். ஆண்டு, திகதி, விபரங்கள், பெயர்கள் எல்லாவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார். இது அந்தக் காலத்துக்கு எம்மை அழைத்துச் செல்லும் ஒரு உணர்வை ஏற்படுத்துகிறது.

இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ள சில விஷயங்களை டொக்டர் நித்தி எனக்குச் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னபோதும் நல்ல சுவாரஸ்யமாக இருந்தது. இப்போது எழுத்தில் பார்க்கும்போதும் அதே சுவாரஸ்யம். டொக்டர் நித்தி எனக்கு அறிமுகமானபோது அவருக்கு 50 வயதுக்கு மேல் இருக்கும். நல்ல பண்பான மனிதர். கெட்டிக்காரர். எதையும் நல்ல நிதானமாக, நேர்த்தியாக, நேர்மையாகச் செய்யும் ஒருவர். எனவே அவர் சின்ன வயதிலும் மிக நல்ல கெட்டிக்காரப் பிள்ளையாகத்தான் இருந்திருப்பார் என நினைத்தேன். ஆனால் அவர் கனிஷ்ட பாடசாலையில் படிக்கும்போது வகுப்பில் 31 பிள்ளைகளில் 25ஆவதாக வந்திருக்கிறார். பாலர் வகுப்பில் டபிள் பிரமோஷன். இது அவருடைய கெட்டித்தனத்தால் இல்லை. அவருடைய அப்பாவின் வகுப்பில் படிக்க விருப்பமில்லை, அதனால் இந்தப் பிரமோஷன். சின்ன வயதில் அப்பா ஆங்கிலச் சொற்களைப் பாடமாக்கச் சொன்னபோது ஏமாற்றியிருக்கிறார். அந்தக் கதையை நீங்கள் கட்டாயம் வாசிக்க வேண்டும். டொக்டர் நித்தி பின்னர் லண்டனில் Phd பட்டப்படிப்பை மேற்கொண்டிருக்கிறார். இது அவருடைய விடாமுயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

1959ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டப்படிப்பைக் கற்கச் சென்றபோது A/L இரசாயன பாடத்தில் சித்தியடையாத காரணத்தால் இவருக்கு பொறியியல்துறையில் இடம் கிடைக்கவில்லை. ஆனால் மீண்டும் தன்னுடைய விடாமுயற்சியால் இரண்டாம் வருடம் இரசாயனவியலில் BSc Honours Degree செய்யத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்து பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் வேலை பார்த்திருக்கிறார். அங்கு விஜேவர்த்தன விடுதியின் உதவி வார்டனாகவும் இருந்திருக்கிறார். இது அவருக்கு நிர்வாகத் திறனோடு மாணவர்களை எப்படி வழிநடத்தி அவர்களுக்கு உதவலாம் என்ற அனுபவத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

டொக்டர் நித்தி பொது வாழ்க்கையில் நிறைய நேரம் செலவழித்தாலும் தனது மூன்று பிள்ளைகளான கண்ணன், வள்ளி, காவேரி ஆகியோரை மிக நல்ல நிலைக்குக் கொண்டு வர தனது மனைவியுடன் இணைந்து எவ்வாறு செயற்பட்டார் என்பதை, இரண்டு பேரும் வேலை செய்வதால் பிள்ளைகளைக் கவனிக்க நேரமில்லை என்று சொல்கிற பெற்றோர்கள் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஈற்றன் கல்லூரியில் (Eton College) மகனைப் படிக்க வைத்தபோது அதுவும் அனுமதி கிடைத்தும் ஸ்கொலஷிப் கிடைக்காத பட்சத்தில் பெற்றோர் இருவருமே கஷ்டப்பட்டு உழைத்து அவரைப் படிக்க வைத்தது பாசமும் விடாமுயற்சியும் இணைந்த ஒரு செயல்.

ஒரு பெற்றோராக மேற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலைக்குப் போக ஆரம்பித்து, பின்னர் தலைமை ஆசிரியராக சம்பளம் எதுவும் இல்லாமல் பணியாற்ற ஆரம்பித்து, அதன் பின்னர் லண்டன் தமிழ் நிலையத்தில் இவரது பணி தொடர்ந்தது பலரும் அறிந்ததே. எல்லாமாக 30 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியுள்ளார். இந்த நிறுவனங்கள் இயங்குவதற்கான நிதியை அரச மற்றும் வேறு நிறுவனங்களில் இருந்து பெறுவதில் டொக்டர் நித்தியின் பங்களிப்பு மகத்தானது. பல ஏற்றங்கள் இறக்கங்களைச் சந்தித்தாலும் விமர்சனங்களுக்கு ஆளானாலும் தளராமல் செயற்பட்டிருக்கிறார். லண்டன் தமிழ் நிலையத்தின் நடவடிக்கைகள் பற்றி விளக்கமாக எழுதியிருக்கிறார். பிரித்தானியாவில் தமிழ்ப் பாடசாலைகள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதுபவர்களுக்கு மிகப் பிரயோசனமாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

நூலாசிரியர் கலாநிதி இரத்தினம் நித்தியானந்தனின் குடில் கொண்ட தலைமை ஆசான்

நூல் பற்றி ஆனந்தராணி பாலேந்திரா ஆற்றிய விமர்சன உரை

இனப்பெருக்க கட்டமைப்பு தொடர்பான பொதுவான கட்டுக்கதைகள்

ஒரு அறிவியல் அணுகுமுறை

சோயா என்பது சோயாபீன்ஸ் போன்ற பருப்பு வகைகளில் இயற்கையாகக் காணப்படும் ஒரு புரதமாகும். நீங்கள் டோஃபு, சோயா பால், சோயா சோஸ், மிசோ, டெம்பே மற்றும் பிற உணவுகளில் சோயாவைக் காணலாம். கடினமான சோயா புரதம் TVP (Textured Vegetable Protein) என்றும் அழைக்கப்படுகிறது. இதன் உண்மையான பெயர் Total Soy Protein அல்லது TSP. இது உண்மையில் மிகவும் துல்லியமான விளக்கமாகும், ஏனெனில் இது உண்மையான காய்கறிகளை விட சோயாபீன்களில் அதிகளவு ஆற்றலைக் கொண்டுள்ளது. TVP பெரும்பாலும் இறைச்சிக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுகிறது, ஏனெனில் இது துண்டு துண்டாக வெட்டப்பட்ட மாட்டிறைச்சியைப் போன்றது மற்றும் ஒரு சிறந்த இறைச்சி மாற்றீடாகும். TVPஐ இறைச்சிக்கான துணைப் பொருளாகவும் பயன்படுத்தலாம். இது ஊட்டச்சத்து தரநிலைகளை சந்திக்கிறது மற்றும் பொருளாதார நன்மைகளை வழங்குகிறது. இது அத்தியாவசிய அமினோ அமிலங்களின் நல்ல மூலமாகும் மற்றும் ஒருவரின் உணவில் கால்சியம் மற்றும் மெக்னீசியத்தையும் பெற்றுக் கொடுப்பதில் பங்களிக்கிறது.

பாவனையாளர்கள் மத்தியில் உள்ள சில முக்கிய தவறான எண்ணங்களை கருத்தில் கொள்வோம்.

TVP மார்பக புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறதா?

சில உணவுகள் புற்றுநோயை உண்டாக்கும் என்று நிறைய கட்டுரைகளைப் படித்திருப்பீர்கள். நிச்சயமாக, சோயா மீட் சாப்பிடுவது மார்பக புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கும் என்ற கட்டுக்கதையை நீங்கள் படித்திருக்கலாம் அல்லது கேள்விப்பட்டிருக்கலாம்.

ஈஸ்ட்ரோஜன் என்பது உடலில் ஒருங்கிணைக்கக்கூடிய ஹார்மோன்களின் குழுவாகும், மேலும் செல்களுக்குள் நுழைந்து ஈஸ்ட்ரோஜன் சுரப்பிகளை செயல்படுத்தி, பாலினத்துடன் தொடர்புடைய சில மரபணுக்களை வெளிப்படுத்த உதவும். மனிதர்களாகிய நம் உடலில் பல்வேறு வகையான ஈஸ்ட்ரோஜன்கள் உள்ளன. ஈஸ்ட்ரோஜன் ஒரு ஹார்மோன் ஆகும், இது பாலியல் வளர்ச்சி, கர்ப்பம், பிரசவம் மற்றும் மாதவிடாய் போன்ற சில உடல் செயல்பாடுகளை பாதிக்கிறது. குறிப்பாக பெண்களுக்கு அதிக அளவு ஈஸ்ட்ரோஜன் உள்ளது, இது உடலில் உள்ள இனப்பெருக்க அமைப்பு மற்றும் பிற அமைப்புகளை ஒழுங்குபடுத்த உதவுகிறது.

மனித பாலின ஹார்மோன்களான ஈஸ்ட்ரோஜன் மற்றும் டெஸ்டோஸ்டிரோன் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் சோயாவைப் பற்றி நீண்டகாலமாக கட்டுக்கதைகள் உள்ளன. இந்த யோசனையின் தோற்றம் மற்றும் சோயா மற்றும் புற்றுநோய் ஆபத்து பற்றி அறிவியல் என்ன சொல்கிறது மற்றும் உங்கள் உணவில் சோயாவை சேர்ப்பது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவு ஆகியவற்றுடன் இதை நான் விவாதிப்பேன்.

சோயா ஈஸ்ட்ரோஜன் அல்லது டெஸ்டோஸ்டிரோன் அளவை பாதிக்காது.

மனித ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் ஏற்பி நேர்மறை மார்பக புற்றுநோய் போன்ற சில வகையான புற்றுநோய்களை வளரவும் பரப்பவும் பயன்படுகிறது. சோயாவில் Isoflavones மற்றும் ஈஸ்ட்ரோஜன் எனப்படும் இரசாயனங்கள் உள்ளன. அவை தாவரங்களிலிருந்து வருவதால் அவை பைட்டோ ஈஸ்ட்ரோஜன்கள் என்று அழைக்கப்படுகின்றன. TVP, பாலூட்டிகளில் பைட்டோ ஈஸ்ட்ரோஜன்களாக (அடிப்படையில் ஈஸ்ட்ரோஜனைப் பிரதிபலிக்கும்) செயல்படும் Isoflavones ஈஸ்ட்ரோஜனுடன் ஒத்திருப்பதால், சோயா சாப்பிடுவது மனிதர்களுக்கு மார்பக புற்றுநோயின் அபாயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்று தவறாக நம்புகிறது. இதன் காரணமாக, சோயாவில் உள்ள பைட்டோ ஈஸ்ட்ரோஜன்களை உண்பது அவர்களின் உடலில் ஈஸ்ட்ரோஜனை அதிகரித்து, மார்பக புற்றுநோயின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்று சிலர் கவலைப்படலாம். அவை அந்த முக்கிய ஈஸ்ட்ரோஜன்களைப் போலவே இல்லை, அதே ஈஸ்ட்ரோஜன் ஏற்பிகளை அவை செயல்படுத்தி நமது நாளமில்லா அமைப்பை பாதிக்கலாம்.

இருப்பினும், மனிதர்களில் எந்த ஆய்வும் சோயாவை உட்கொள்வதும் மார்பக புற்றுநோய்க்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லை. ஐசோஃப்ளேவோன்கள் எலிகளில் மார்பக புற்றுநோயின் வளர்ச்சியை ஊக்குவிப்பதாக பரிசோதனை ஆய்வுகள் காட்டுகின்றன. இருப்பினும், இந்த ஆய்வுகள் மனிதர்களில் செய்யப்படவில்லை, மேலும் பரிசோதனை ஆய்வுகள் மனிதர்களுக்கான உணவுகளை பரிந்துரைக்க பயன்படுத்தப்படவில்லை. எலிகள் சோயாவை மனிதர்களை விட வித்தியாசமாக வளர்சிதைமாற்றம் செய்வதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

சில ஆய்வுகள் சோயா மார்பக புற்றுநோயிலிருந்து பாதுகாக்க உதவும் என்று காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, 2014ஆம் ஆண்டில் சில அறிவியல் இதழ்களில் பல ஆய்வுகளின் மெட்டா பகுப்பாய்வின்படி மாதவிடாய் நின்ற பெண்களுக்கு மார்பக புற்றுநோயிலிருந்து பாதுகாப்பதில் சோயா மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்பதைக் கண்டறிந்தது. இதற்கிடையில், 2009இல் இருந்து இரண்டு தனித்தனி ஆய்வுகள் சோயா மார்பக புற்றுநோயிலிருந்து பாதுகாக்க உதவும் என்பதை உறுதிப்படுத்தியது.

ஜர்னல் ஆஃப் தி அமெரிக்கன் மருத்துவ சங்கத்தால் (JAMA) வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, ஷாங்காய் மார்பக புற்றுநோய் சர்வைவல் சர்வேயின் ஒரு பகுதியாக இருந்த சோயாவை சாப்பிட்ட 5,000 மார்பக புற்றுநோயால் தப்பிப்பிழைத்தவர்கள், இறப்பு மற்றும் புற்றுநோய் மீண்டும் வருவதற்கான குறைந்த அபாயத்தைக் கொண்டிருந்தனர். மேலும், அமெரிக்கன் ஜர்னல் ஆஃப் கிளினிக்கல் நியூட்ரிஷனில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, ஷாங்காய் மகளிர் சுகாதார ஆய்வின் ஒரு பகுதியாக இருந்த 73,000 சீனப் பெண்களில் மார்பக புற்றுநோயின் ஆபத்து கணிசமாகக் குறைக்கப்பட்டது மற்றும் இளமைப் பருவம் மற்றும் இளமைப் பருவத்தில் சோயாவை வழக்கமாக உட்கொள்வதாக அறிக்கை அளித்தது.

விஞ்ஞான தரவுகளின்படி, பல தாவரங்களுடன் உணவின் ஒரு பகுதியாக சோயா உணவுகளை உட்கொள்வது மார்பக புற்றுநோயால் தப்பியவர்கள் தங்கள் உடலை கவனித்துக் கொள்வதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

அ. கனகசூரியர் ...✍

மாபெரும் Raigam Tele'es விருது விழா

இலங்கையின் மிகப்பெரிய வருடாந்த தொலைக்காட்சி விழாவாக கருதப்படும் Raigam Tele'es விருதுவிழா எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதி கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக ரைகம் நிறுவனத்தின் தலைவர் ரவி லியனகே தெரிவித்துள்ளார்.

சிறந்த தெலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான ரைகம் டெலீஸ் விருதுவிழா தொடர்பாக அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு அண்மையில் இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ரைகம் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிஷான் தெடொர், தேர்வுக் குழுவின் தலைவர் புத்ததாஸ கலப்பதி, சம்பத் வங்கியின் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி தாரக்க ரன்வல, மொபிடெல் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவுத் தலைவர் ஷியாங்வொங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2020ஆம் ஆண்டுக்கான விருதுகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் பூர்த்தியடைந்துள்ள நிலையில் 2021ம் ஆண்டுக்கான ரைகம் டெலீஸ் விருதுக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சித் துறையில் வருடத்தின் முதல் காலாண்டிலேயே முன்னைய ஆண்டின் நிகழ்ச்சிகள் தொடர்பான விருதுகளை உள்ளூரில் வழங்கும் நிகழ்வாகும். ரைகம் டெலீஸ் விருது விழா நியமன மாலை மற்றும் மாபெரும் விருதுகள் இரவு என இரண்டு பிரமாண்ட விழாக்களைக் கொண்டுள்ளது. விருதுகளுக்கு பரிந்துரைக்கப்படுவோரின் பெயர்களை அறிவிப்பதற்கான நியமனமாலை பெப்ரவரி 25ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நடைபெறவுள்ளதுடன் மாபெரும் விருதுவிழா மார்ச் 26ஆம் திகதி சங்ரிலா ஹோட்டலில் நடைபெறவுள்ளதாக டெலீஸ் விருதுவிழா ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் உருவாக்கம், சிறந்த தொலைக்காட்சி நாடகம், சிறந்த பாடல், சிறந்த தொழில்நுட்பம், சிறந்த கதையம்சம், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த இசை, சிறந்த நடிகர் நடிகை, சிறந்த தொடர் நாடகம், சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி, சிறந்த தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சி, சிறந்த வர்ணனை, சிறந்த கேள்வி பதில் நிகழ்ச்சி, மற்றும் சிறந்த செய்தி வாசிப்பாளர் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்), சிறந்த தொகுப்பாளர் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்), சிறந்த தொலைக்காட்சி சேவை, வருடத்திற்கான சிறந்த அலைவரிசை என பல விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் விருது விழா கலாசாரத்தில் ஒரு புதிய நடைமுறையை விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட அதிக பார்வையாளர்களால் பார்க்கப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு (தொலைக்காட்சி நாடகம், ஊடக நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் தொகுப்புகள்). பொதுவாக மிகவும் பிரபலமான நிகழ்ச்சிகள் குறுந்தகவல்கள் வாக்கெடுப்பில் அறிவிக்கப்பட்ட பார்வையாளர்களின் விருப்பத்தின் பேரில் தீர்மானிக்கப்படுகின்றன. ஆனால் தொலைக்காட்சி பார்வையாளர்களிடையே அதிகம் ஊடுருவிய நிகழ்ச்சிகளாக இருக்காது. எனவே வெளியிடப்பட்ட தரவுகளை அறிவியல் முறையில் பகுப்பாய்வு செய்பவர்களை அங்கீகரிக்க புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ரசனையான ஆஸ்கார் விருது விழாவைப்போன்று ரைகம் டெலீஸ் இறுதி விருது விழாவிற்கு முன்னதாகவே பரிந்துரைக்கப்பட்டவர்களை அறிவிப்பதற்காக நியமன மாலையை அறிமுகப்படுத்தியுள்ளது. கலை மதிப்புகள், படைப்பாற்றல் அல்லது நடிப்புத் திறமைகளை மதிப்பிடுவது மிகவும் தரம் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதற்காக பரிந்துரைக்கப்படும் மூவரும் சமமாக மதிக்கப்படுவார்கள். பாரம்பரியமாக ஒரு வேட்பாளர் மட்டுமே வெற்றியாளராகப் பாராட்டப்பட்டதுடன் மற்ற வேட்பாளர்கள் தங்கள் பெயர்களைக் குறிப்பிடுவதைக் கட்டுப்படுத்தினார். ரைகம் டெலீஸ் இந்த புதிய பாரம்பரிய நியமனமாலையை அறிமுகப்படுத்தி, நட்சத்திர ஹோட்டலில் நடத்தப்படும் விழாவில் வெற்றிக்காக பரிந்துரைக்கப்பட்ட அனைவரும் பாராட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரைகம் டெலீஸ் விருது விழாவில் பரிசு பெறுவோர் மற்றும் பாராட்டு பெறுவோருக்கு ஆண்டுக்கு ரூ. 1,000,000/ ஆயுள் காப்பீட்டுத் தொகையையும் மருத்துவமனை காப்பீட்டுத் தொகையாக 100,000/ ரூபாவும் வழங்கப்படும் ஒரேயொரு விருதுவிழா ரைகம் டெலீஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல் இந்த ஆண்டும் ரைகம் டெலீஸ் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூ. 500க்கும் அதிகமான 3.0 மில்லியன் ரூபா ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பி. வீரசிங்கம் ...✍

டொமினிக் ஜீவா ஞாபகார்த்த விருது

ஈழத்தின் முக்கிய இலக்கிய ஆளுமையான டொமினிக் ஜீவா ஞாபகார்த்தமாக வழங்கப்படவிருக்கும் மல்லிகை ஜீவா விருது 2022 விருது ஈழத்தின் சிறுகதை ஆளுமையான க.கோபாலபிள்ளைக்கு வழங்கப்படவுள்ளது.

இவ்விருது வழங்கல், ஜனவரி 28ஆம் திகதி பிம்பங்கள் வழியே நடைபெறும், முதலாவது டொமினிக் ஜீவா நினைவேந்தல் நிகழ்வில் வழங்கப்படும். க.கோபாலபிள்ளை டொமினிக் ஜீவா போல சாதி அரசியலால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் படைப்புகளை படைத்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி
SMIB இல் வேலை வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, உயர் தரமான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பரந்த வகையில் சேவைகளை வழங்கும் நோக்குடன் வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் உள்ளது. அதற்காக பின்வரும் பதவிகளுக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதில் முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து நாம் விண்ணப்பங்களை கோருகிறோம்.

பிரதிப் பொது முகாமையாளர் - மனித வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்

முக்கிய பொறுப்புகள்

வங்கியின் மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாடுகளின் பொறுப்பாளராக, HRD மற்றும் முகாமைத்துவ பிரதி பொது முகாமையாளரானவர், உட்கட்டமைப்பு சேவைகள் மற்றும் வழங்கல்களின் அனைத்து அம்சங்களினதும் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டை பேணுவது மற்றும் தலைமை அலுவலகம், கிளை அலுவலகங்களின் ஒட்டுமொத்த நிர்வாக செயற்பாடுகளை வழிநடத்துவது மற்றும் நிர்வகித்தல் வேண்டும். சட்ட விவகாரங்களுடன் தொடர்புபட்ட அனைத்து தொழில் தொடர்பான பணி மற்றும் வங்கிக்கு பயனுள்ள மனித வள கொள்கைகளை செயற்படுத்தும் கூட்டு நிறுவன திட்டத்திற்கு ஏற்ப HRM மூலோபாயங்களை உருவாக்குதல் மற்றும் கண்காணிப்பதற்கு அவர் பொறுப்பாக இருப்பதோடு பொருந்துகின்ற நீதிமன்றம்/ தொழிலாளர் நீதிமன்றத்தில் வங்கியை பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும்.

தகைமைகள்

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து மனித வளங்கள் துறையில் இளமாணிப் பட்டம்.

அங்கீகரிக்கப்பட்ட மனித வளங்கள் நிறுவனம் ஒன்றில் இருந்து முழு தொழில்முறை அங்கத்துவம்.

அல்லது

மனித வளங்கள் முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்துடன் ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து முகாமைத்துவம் அல்லது சட்டத் துறையில் இளமாணிப் பட்டம்.

அனுபவம்

தொடர்புடைய துறையில் 15 ஆண்டுகள் அனுபவம். அதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 05 ஆண்டுகள் இருத்தல் வேண்டும் என்பதோடு வங்கி நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் அனுபவம்.

ஊதியம்

சம்பள அளவு: வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதத்திற்கு ரூபா 196,570 - 6895 x 12 - 279,310. இந்த அடிப்படையில் மாதாந்த மொத்த சம்பளம் தோராயமாக இருக்கும்.

வயது - 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (அரச துறை நிறுவனம் ஒன்றின் ஊழியர்களுக்கு வயது எல்லை பொருந்தாது)

IT தலைவர் - ஒப்பந்த அடிப்படை

முக்கிய பொறுப்புகள்

வங்கி நோக்கு மற்றும் வர்த்தகத் திட்டங்களின்படி பயனுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) மீளாய்வு மற்றும் முறைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் இந்த பதவியின் ஒட்டுமொத்த நோக்கமாகும். வர்த்தக இலக்குகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுடன் இணங்கும் பொருட்டு வங்கியின் ICT செயற்பாடுகளுக்கு தொடர்புபட்ட ICT கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்து, முறையான ICT தீர்வுகளை உறுதி செய்தல். வங்கியின் செயற்பாட்டுக்குத் தேவையான வகையில் தேவைப்படும் மென்பொருள் அமைப்புகளை வடிவமைத்தல், மேம்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் முழு பொறுப்பை பெற்றிருப்பதோடு, மூலோபாயத்தை நோக்கியதாக அனைத்து வன்பொருள் அமைப்புகளின் முறையான பராமரிப்பு, பங்கேற்பு மற்றும் பங்களிப்பை உறுதி செய்தல் வேண்டும். சிரேஷ்ட முகாமைத்துவ அணி உறுப்பினராக வங்கியின் செயற்பாட்டு நிர்வாக நடைமுறையின் கீழ், IT பணியாளர்களை நிர்வகித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் வர்த்தக இலக்கு மற்றும் திட்டங்களை நோக்கியதாக அவர்களின் செயல்திறனை கண்காணித்தல்.

தகைமைகள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் அமைப்பு/ கணினி பொறியியல் துறையில் இளமாணிப் பட்டம் அல்லது IT துறையில் இணையான தகைமை. மேலுள்ள தகைமையுடன் சேர்த்து IT தொடர்பான துறையில் முதுமாணிப் பட்டம் சிறப்பு அனுகூலமாக அமையும். உயர் தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பெற்றிருப்பது விரும்பத்தக்கது.

அனுபவம்

வங்கி மற்றும் நிதி நிறுவனத்தில் மொத்தம் 10 ஆண்டுகள் அனுபவம். அதில் சிரேஷ்ட முகாமைத்துவத் தரத்தில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேலும், அபேட்சகருக்கு IBM AS/400 Systems, Java, Dotnet மற்றும் Oracle இல் ஆழமான அறிவு இருத்தல் வேண்டும். IT திட்ட முகாமைத்துவம் மற்றும் இணையப் பாதுகாப்பில் உள்ள திறன் ஓர் அனுகூலமாகும். தனிச்சிறப்புவாய்ந்த எழுத்து மற்றும் வாய்மொழி தொடர்பாடல் திறன் அவசியமாகும்.

ஊதியம்: மாதாந்தக் கொடுப்பனவு

ஒப்பந்தக் காலம்: இரண்டு ஆண்டுகள்

சிரேஷ்ட முகாமையாளர் - சில்லறை வங்கி

முக்கிய பொறுப்புகள்

- ஒட்டுமொத்த சில்லறை வங்கி மூலோபாயத்தை மேம்படுத்தல் மற்றும் நிறைவேற்றல்
- சொத்து வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் இலாபகரமான மற்றும் நிலையான வர்த்தகம் ஒன்றை கட்டியெழுப்புதல், இலக்கு வைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுடன் உறவை ஏற்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்.
- வாடிக்கையாளர் தேவைகளை நிவர்த்தி செய்தல், SMIB இன் சந்தை பங்கை அதிகரித்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு தலைமை அலுவலகம் மற்றும் கிளை வலையமைப்பின் சில்லறை வங்கி செயல்திறனை இயக்குதல்.
- தீர்வு வழி விற்பனை மற்றும் சேவையை வளர்த்தல், வாடிக்கையாளர் முன்மொழிவுகளுடன் இணங்குதல் மற்றும் தடையற்ற வாடிக்கையாளர் அனுபவம் ஒன்றை வழங்குவதற்கு தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளை வழிநடத்துதல்.
- தொழில்துறையில் ஏற்கப்பட்ட சிறந்த நடைமுறைகளை அறிமுகம் செய்வதன் மூலம் சந்தைப் போக்குகள், வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் உற்பத்தி விநியோகத்திற்கு இடையே நெருங்கிய தொடர்பை உறுதி செய்தல்.
- தொழில்துறை தரங்களுக்கு ஏற்ப செயல்திறனற்ற முன்னேற்ற விகிதத்தை நிர்வகித்தல்.
- செயலூக்கமுள்ள நிர்வாகம் மற்றும் Mitigate compliance, செயற்பாடுகள் மற்றும் கடன் இடர், போதுமான வளங்கள் மற்றும் பயிற்சியை உறுதி செய்தல்.

தகைமைகள்

a) ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட வங்கித் துறை, வர்த்தக நிர்வாகம், வணிகம், பொருளியல், கணக்கியல் மற்றும் நிதித் துறையில் இளமாணிப் பட்டம்

அல்லது

b) ICASL/CIMA UK/ ACCA UK வின் அங்கத்துவம் அல்லது IBSL இன் இணை அங்கத்துவம்

அனுபவம்

வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றில் சில்லறை வங்கி, கடன் மதிப்பீடு, கடன் கொடுபாடு, இடர் நடவடிக்கைகள் மற்றும் கடன் மீட்டல் செயற்பாடுகள் துறையில் நிறைவேற்றுனராக எட்டு (08) ஆண்டுகள் அனுபவம். அதில் முகாமையாளர்/ உதவி முகாமையாளராக குறைந்தது நான்கு (04) ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும். அபேட்சகர் சிறந்த தொடர்பாடல் மற்றும் ஆளிடை திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.

ஊதியம்

சம்பள அளவு: வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதத்திற்கு ரூபா 121,090 – 2,620 x 20 – 173,490. இந்த அடிப்படையில் மாதாந்த மொத்த சம்பளம் தோராயமாக இருக்கும்.

வயது – 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (அரச துறை நிறுவனம் ஒன்றின் ஊழியர்களுக்கு வயது எல்லை பொருந்தாது)

சிரேஷ்ட முகாமையாளர் - SME மற்றும் வர்த்தக வங்கி

முக்கிய பொறுப்புகள்

- ஒட்டுமொத்த SME மற்றும் வர்த்தக வங்கி மூலோபாயத்தை மேம்படுத்தல் மற்றும் நிறைவேற்றல்
- சொத்து வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் இலாபகரமான மற்றும் நிலையான வர்த்தகம் ஒன்றை கட்டியெழுப்புதல், இலக்கு வைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுடன் உறவை ஏற்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்.
- வாடிக்கையாளர் தேவைகளை நிவர்த்தி செய்தல், SMIB இன் சந்தை பங்கை அதிகரித்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு தலைமை அலுவலகம் மற்றும் கிளை வலையமைப்பின் SME மற்றும் வர்த்தக வங்கி செயல்திறனை இயக்குதல்.
- தீர்வு வழி விற்பனை மற்றும் சேவையை வளர்த்தல், வாடிக்கையாளர் முன்மொழிவுகளுடன் இணங்குதல் மற்றும் தடையற்ற வாடிக்கையாளர் அனுபவம் ஒன்றை வழங்குவதற்கு தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளை வழிநடத்துதல்.
- தொழில்துறையில் ஏற்கப்பட்ட சிறந்த நடைமுறைகளை அறிமுகம் செய்வதன் மூலம் சந்தைப் போக்குகள், வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் உற்பத்தி விநியோகத்திற்கு இடையே நெருங்கிய தொடர்பை உறுதி செய்தல்.
- தொழில்துறை தரங்களுக்கு ஏற்ப செயல்திறனற்ற முன்னேற்ற விகிதத்தை நிர்வகித்தல்.
- செயலூக்கமுள்ள நிர்வாகம் மற்றும் Mitigate compliance, செயற்பாடுகள் மற்றும் கடன் இடர், போதுமான வளங்கள் மற்றும் பயிற்சியை உறுதி செய்தல்.

தகைமைகள்

a) ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட வங்கித் துறை, வர்த்தக நிர்வாகம், வணிகம், பொருளியல், கணக்கியல் மற்றும் நிதித் துறையில் இளமாணிப் பட்டம்

அல்லது

b) ICASL/CIMA UK/ ACCA UK வின் அங்கத்துவம் அல்லது IBSL இன் இணை அங்கத்துவம்

அனுபவம்

வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றில் SME, கடன் மதிப்பீடு, கடன் கொடுபாடு, இடர் நடவடிக்கைகள் மற்றும் கடன் மீட்டல் செயற்பாடுகள் துறையில் நிறைவேற்றுனராக எட்டு (08) ஆண்டுகள் அனுபவம். அதில் முகாமையாளர்/ உதவி முகாமையாளராக குறைந்தது நான்கு (04) ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும். அபேட்சகர் சிறந்த தொடர்பாடல் மற்றும் ஆளிடை திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.

ஊதியம்

சம்பள அளவு: வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதத்திற்கு ரூபா 121,090 – 2,620 x 20 – 173,490. இந்த அடிப்படையில் மாதாந்த மொத்த சம்பளம் தோராயமாக இருக்கும்.

வயது – 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (அரச துறை நிறுவனம் ஒன்றின் ஊழியர்களுக்கு வயது எல்லை பொருந்தாது)

பொது நிபந்தனைகள்

தேர்வு முறை – வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறையின்படி விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவர்.

நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வு இடம்பெறும்.

ஏனைய நன்மைகள்

- சேமலாப நிதிய பங்களிப்பாக தொழில் வழங்குநர் மூலம் 15% மற்றும் ஊழியர் மூலம் 10% அளிக்கப்படும். வங்கி மூலம் ETF பங்களிப்பு மேற்கொள்ளப்படும்.
- வருடாந்த மிகையூதியம் இரு மாதங்களின் மொத்த சம்பளம்.
- சேவையை உறுதி செய்த பின்னர் சலுகை விகிதங்களில் வீட்டுக் கடன்கள்.
- வங்கியின் மருத்துவ திட்டத்தின் கீழான நன்மைகள்.
- பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்புகளின் பணமாக்கல்.

விண்ணப்ப இறுதித் திகதி – 2022.01.24

எவ்வாறு விண்ணப்பிப்பது

ஆர்வம் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் மற்றும் தமது கல்வி/ தொழில்முறை பதிவுகளின் பிரதிகள் மற்றும் தமது சுயவிபரக் கோவையை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். அனைத்து விண்ணப்பங்களினதும் இரகசியம் கண்டிப்பாக பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகைமை இழப்பாக கருதப்படும். இந்த ஆட்சேர்ப்புக்காக தேர்வு மேற்கொள்ளல், ஒத்திவைத்தல் அல்லது ஆட்சேர்ப்பை ரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த செயற்பாடுகள் மற்றும்/ அல்லது தேர்வு அளவுகோல்களில் மாற்றங்களை செய்யும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி மற்றும் முடிவானது.

விண்ணப்பங்கள் careers@amib.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.

சர்வதேச அரங்கில் இணையற்ற நிறுவனமான LOLC குழுமத்துடன் எல்லையற்ற எதிர்காலத்திற்காக இணைந்திடுங்கள்!

நாட்டை ஊக்குவிக்கும் நிதித்துறையின் ஜாம்பவான்களுடன் இணையுங்கள்

LOLC குழுமத்தின் துணை நிறுவனமான LOLC Finance PLC ஓர் அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனமும், இலங்கையில் தலைசிறந்த முழுமையான நிதித் தீர்வுகளை வழங்கும் அமைப்பாகவும் புகழ் பெற்றுள்ளது. எமது நாடளாவிய விரிவாக்குதல் காரணமாக, தற்கால மற்றும் புதிய வாடிக்கையாளர்களுக்கு நிதித் தீர்வுகளை வழங்குவதற்காக ஆழ்ந்த, திறமை மிக்க, அர்ப்பணிப்புள்ள நபர்களை எம்முடன் இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

30 வயதிற்கு குறைந்தவரா?

நீங்கள் A/L இல் சித்தியடைந்தவரா?

உங்களிடம் மோட்டார் சைக்கிள் மற்றும் செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் இருக்கின்றதா?

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியம், மற்றும் வேலை மேம்பாட்டுக்கான சந்தர்ப்பங்களையும் எதிர்பார்க்கலாம்.

நிறைவேற்று அதிகாரி வணிக மேம்படுத்தல்

பொறுப்புகள் மற்றும் பணிகள்
உடைமைகள் மீதான (Asset Backed) கடன் வழங்கல், கடன் சேகரித்தல் அல்லது கடன் வழங்குதல் மற்றும் சேகரித்தல் தொடர்பான மாதாந்த இலக்குகளை பூர்த்தி செய்யக்கூடிய திறன் முறையான கண்காணிப்பு பொறிமுறையுடன் தனிநபர் கடன் (Portfolio) தரத்தை உறுதி செய்தல், வாடிக்கையாளர்களுக்கு கடன் தொடர்பான தயாரிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் ஆலோசித்தல், வணிக பங்காளிகள் மற்றும் புதிய வணிகங்களை அறிமுகப்படுத்துபவர்களிடம் மிகச்சிறந்த உறவை பேணுதல் போன்றவை இந்தப் பதவியின் முக்கிய அம்சமாகும். இப்பதவி வெளிக்கள பதவியென்பதனால் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாளாந்தம் வாடிக்கையாளர்களை சந்திக்க நேரிடும்.

LOLC பினான்ஸ் கிளை

வட மாகாணம்
கிளிநொச்சி, யாழ்ப்பாணம், சுன்னாகம், முல்லைத்தீவு, மன்னார், நெல்லியடி, வவுனியா

கிழக்கு மாகாணம்
வாழைச்சேனை, சொங்கலடி, மட்டக்களப்பு, திருகோணமலை

பயிற்சி நிறைவேற்று அதிகாரி கடன் தர உறுதிப்படுத்துதல் (மறுவீடு)

பொறுப்புகள் மற்றும் பணிகள்
தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள், கடன் அறவிடுதல்கள் சார்ந்த பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். நிறுவனத்தின் தேவைகளுக்கு ஏற்ப குறித்த பிரதேசங்களில் கடன் அறவிடும் பணிகளை மேற்கொள்வதே தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் முதன்மையான பணியாகும்.

LOLC பினான்ஸ் கிளை

வட மாகாணம்
சுன்னாகம், மன்னார்

கிழக்கு மாகாணம்
திருகோணமலை, கந்தளாய்

நேரடியாக நேர்முகத் தேர்வில் பங்கேற்க இன்றே அழையுங்கள்:
கிழக்கு மாகாணம் - கமல் 0773142544
வட மாகாணம் - கதுமரன் 0777793696

உங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்ப பத்திரத்தை careers@lolcfinance.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது இல.100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய என்னும் முகவரிக்கு தபால் மூலம் பதவியை தலைப்காக குறிப்பிட்டு அனுப்பவும்.

LOLC பினான்ஸ்
www.facebook.com/LOLCFinancepic/
www.lolc.com/lolc-careers/
ஏற்கனவே வைத்திருக்கும் கடனுக்கு கொடுக்கும் தரமிக்க இயற்கை வழி வருக்கும்

இலங்கை அரச மருந்து உற்பத்தியாக்கல் கூட்டுத்தாபனம்

பெறுகை அறிவித்தல்

குத்தகை/வாடகை அடிப்படையில் கட்டிட வசதியொன்றை பெற்றுக் கொள்ளல்

Tender Reference: AD/1/BLG/238/2022

2022 சனவரி 28ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு மூடப்படும்

பின்வரும் அமைவிடங்களில் மற்றும் சுற்றுப்புறங்களில் வாடகை/குத்தகை அடிப்படையில் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் ராஜ்ய ஒசுசல விற்பனைக்கூடங்களை தாபிப்பதற்காக கட்டிடங்களை பெறுவதற்காக கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

- அரளகங்வில
- அம்பலாங்கொட
- அக்குரஸ்ஸ
- பலாங்கொட
- பத்தரமுல்ல
- பிபில
- சிலாபம்
- சாவகச்சேரி
- செட்டிக்குளம்
- தெனியாய
- எஹெலியகொட
- எல்பிட்டிய
- ஏறாவூர்
- கல்கமுவ
- கிரியுல்ல
- கம்பளை
- ஹிங்குராக்கொட
- ஹற்றன் (டிக்ஓய)
- ஜா-எல
- கந்தளாய்
- கிண்ணியா
- கஹாவத்த
- கலவான
- கொலொன்னா
- கரவனெல்ல
- கேகாலை
- கட்டுகஸ்தொட்ட
- கடுவெல
- கல்பிட்டி
- கிளிநொச்சி
- களுவாஞ்சிக்குடி
- காத்தான்குடி
- கிரிபத்கொட
- குளியாப்பிட்டிய
- கடவத்த
- கம்புறுப்பிட்டிய
- கல்முனை
- கஹட்டகஸ்திகிலிய
- ஊர்காவற்துறை
- மெதிரிகிரிய
- மஹியங்கனை
- முல்லேரியாவ
- கல்கிசை/ தெஹிவளை
- மாரவில
- மாங்குளம்
- முல்லைத்தீவு
- மன்னார்
- முருங்கன்
- முழங்காவில்
- மீரிகம
- மாலபே
- நிக்கவெரட்டிய
- நுவரெலியா
- புல்மோட்டை
- பிம்புர
- பாதுக்க
- பொத்துவில்
- பொல்பிட்டிகம
- ரிகிலகஸ்கட
- இராஜகிரிய
- சியம்பலாண்டுவ
- சம்மாந்துறை
- திருகோணமலை
- திருக்கோவில்
- தெல்தெனிய
- தலவாக்கலை
- திஸ்ஸ மஹாராமய
- தலவத்துகொட
- தம்புத்தேகம
- தெல்லிப்பளை
- உடுகம
- வாழைச்சேனை
- வவுனியா
- வத்துபிட்டிவல
- வத்தளை
- வலஸ்முல்ல
- வறக்காபொல
- வெலிமட
- வெள்ளவாய

கட்டிடங்கள் 750-1500 சதுர அடி பரப்புள்ள தரை மாடியை மேலே பட்டியலிடப்பட்ட அமைவிடங்களில் அல்லது அவைகளின் சுற்றுப்புறங்களில் (நகருக்கு மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்) 3 வழி மின்சாரம், நீர், தொலைபேசி, வாகனங்களை நிறுத்தும் வசதிகள் மற்றும் கழிவறை வசதிகள் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றன. உள்ளக வெப்பநிலையை 25°சி இற்கு கீழே வைத்திருப்பதற்கு ஏதுவான வளிச்சீராக்கல் கட்டிடங்கள் சேர்க்கப்பட்ட அம்சமாக கருதப்படும்.

உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி அமைவிட முகவரி, அடைவிட வரைபடம், செயற்படும் இரு தொடர்பு இலக்கங்கள், எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை, சதுர அடியின் இலக்கம், கட்டிட வரைபடம், உறுதியின் பிரதியொன்று, பிரித்தெடுப்பு மற்றும் அமைவிடம் ஆகிய விபரங்கள் அடங்கலான முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு'' என்ற கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2022 சனவரி 28 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வழங்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விதாரர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென்பதுடன் கேள்விகள் கட்டிடத்தின் உரிமையாளரினால் மட்டுமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. முன்வைப்புக்கள் இரு பிரதிகளில் தெளிவாகவும் தனியாகவும் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என குறிக்கப்பட்டு இரு தனியான தபாலுறைகளில் சேர்க்கப்படல் வேண்டும் (ஸ்ரேப்பிள் பின்கள் பாவிக்கப்படக்கூடாது)
2. "கேள்வி இலக்கம், மூடும் திகதி மற்றும் நேரம்'' ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
3. மாற்றுவழியிலான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,
''மெஹேவர பியச'', 16 ஆம் மாடி,
இல. 41, கிருள வீதி, கொழும்பு-05.
தொலைபேசி: 0112-320 356-9

இருண்மை

உணர்வுகள் யாவும் குபுகுபுக்கக் குபுகுபுக்க ஓடி முடித்தாயிற்று.

அதிகாலை, ரம்மியமான அமைதி.

பனி ஈரத்தைக் கிழித்த படியான வெளிச்சக்கீற்று.

உறக்கம் விழிகளைப் பிரிந்து நீண்டநேரம் ஆயிற்று.

நினைவுகள் மனதைக் கிளறத் தொடங்கி விட்டன.

போனவள், போனவள்தான்.

திரும்பிப் பார்க்கவேயில்லை.

பெற்றவளைப் பற்றி ஒருசொட்டும் அக்கறையில்லாமல், அவள் நோயில் விழுந்தாளா...? உண்டாளா...? உறங்கினாளா...? என்ற எண்ணம் கிஞ்சித்தும் இல்லாமலா ஒருத்தி இருப்பாள்.

இது அவளுடைய காலமா...?

இவளுக்கு எல்லாமே முடிந்து போயிற்றா...?

அப்படி என்றால், இந்தக் காலை வேளையில் அரைஉறக்கம் கலைந்து கொட்டக்கொட்ட முழித்திருக்க வைப்பது எது?

ஒற்றையாய் ஒருதாயும், மகளுமாய் இத்தனை நாள் இந்த ஊரை எதிர்த்து வாழ்ந்தாயிற்று

அவளுக்காகவே பார்த்துப் பார்த்துச்சேர்த்து, அவளுக்காகவே உதிரம் பிழிந்து வியர்வையாக்கி அத்தனையையும் ஒருகணத்தில் மறந்துபோனாளா...?

புருஷன் என்று ஒருவன் வரும்போது எல்லாமுமா மறந்துபோகும்?

அயலில் கேலி செய்வார்கள், அம்மாவும், மகளுமாய் இணைபிரியாத தோழிகள் போல் எங்கும் போகிறபோது.

"இப்பிடியே நெடுகலும் திரிய ஏலுமே? மரிபண்ணிப் போகேக்க அம்மாவை விட்டிட்டுத்தானை போகோணும்..."

"அப்பிடி ஒண்டுமில்லை. நான் அம்மாவோடதான் இருப்பன்..."

"இப்பிடியே சொல்லிக் கொண்டிருந்தால் எல்லாக் கலியாணமும் குழம்பித்தான் போகும்..."

ஏரம்பு வாத்தியார் சாதகங்களைப் பிரித்துவைத்துக் கொண்டிருக்கிற தருணங்களில் உரத்துச் சொல்வார்.

"அப்பிடிக் குழம்புறதெண்டால் குழம்பட்டுமன், எனக்கொரு வில்லங்கமுமில்லை"

ஒரு வில்லங்கமும் இல்லை என்றவள் இப்படி ஒரு நொடியில் அறுத்துக் கொண்டு போவானேன்?

"அம்மா..." இந்த வார்த்தையின் நீட்சியில் எத்தனை அர்த்தங்கள் அவளுக்கு.

எவ்வளவு போராட்டங்களின் காயங்கள் உள்ளங்கைகளில் இன்னும் பொருமிக் கொண்டிருக்கின்றன.

"கொஞ்சமாய் எல்லாத்தையும் விளங்கிக் கொள்ளப்பாரம்மா"

எத்தனை பிரச்சினைகள்? எத்தனை இழுக்குகள்?

"உன்னை மாதிரியே நானும் இருந்தால் கொஞ்ச நாளிலேயே நானும் 'டிவோஸ்' வாங்கவேண்டியதுதான்."

எவ்வளவு இலகுவாக அவள் அந்த ஊசியை ஏற்றிவிட்டாள்.

என்னதான் நொந்தாலும், போகிறபோக்கில் அவளை உதறிவிட முடியுமா...?

அவளே, அவளென்று இருந்த உலகம் ஒருநொடியில் சுருங்கிவிட்டது.

இருவராயிருந்த வாழ்க்கை. எவ்வளவு நாட்களுக்கு இருவராகவே இருந்த இதம், திடுமென்று ஒருநாள் ஒப்பற்ற மகிழ்வைப் பரிசளிப்பதுபோல மூவராகியது. மூவரான பிறகு மூர்க்கமாக இவளை இழுத்து வெளியே தள்ளியது போல.

சின்ன இடைவெளி பெருகிப்பெருகிப் பாறையாகி...

இப்போது மனஅழுத்தம் சற்று அதிகமாகி விடுகிறது. தூங்க நினைத்தால் தூங்கமுடிவதில்லை. எதிர்பாராத நேரங்களில் இருந்த இடத்தில் தூக்கம் வந்து விடுகிறது. மின்குமிழ்கள் ஒளிர, ஒளிரத் தூங்கிவிட்டு சாமத்தில் திடுக்கிட்டெழுந்து விளக்குகளை அணைக்க வேண்டியிருக்கிறது. தனிமையின் கிரணங்கள் உடலைப் பற்றிப் பீடித்து எரியவைக்கின்றன.

கொல்கின்ற அமைதி.

இளமை கூடஇருந்தபோது துணிச்சலும் நிறைய.

இப்போது உடல்சோர்வுக்கு வந்தபின் எதுவும் முடியாது போலிருக்கிறது.

ஆண்துணை இல்லாதிருப்பது, அதொன்றும் இவ்வளவு காலத்திலும் கடினமான ஒன்றாய் இருந்திருக்கவில்லை.

ஏதுமொரு விஷஜந்து இரவின் இடுக்குகளில் புகுந்து, உறக்கத்தை அருட்டி விழிக்கவைக்கும் தருணங்களில்தான், ஆணின் தேவை அவர்கள் இருவருக்குமே வேண்டும் போலிருக்கும். இவளால் ஒருபோதுமே அவற்றைக் கொல்ல இயலுவதில்லை. அவளுக்கென்றால் ஒரேபயம். இவள் பின்னால் ஒடுங்குவாள், சிறுவயதிலிருந்து, வளர்ந்து பருவமடைவது வரையிலும்.

இப்போதுதான் அவள்கூட இல்லையே.

வயதும், பருவமும்தான் உயிர்களை எப்படித் தம்வசப்படுத்துகின்றன என்று இவளுக்கு இப்போதும் பேராச்சரியமாய் இருந்தது.

அதைவிடக் காலம், கிரகங்கள் என்று ஏதேதோ சொல்கிறார்கள். இவள் காலத்தில் இவள் அவனைப் பிரிந்தபோது அவர்கள் சொன்னதையெல்லாம் அவள் நம்பவில்லை. ஆனால், இப்போது அவள் பிரிந்தபோது, ஏனோ இதையெல்லாம் நம்பவேண்டும் போல்தானிருக்கிறது.

திடீரென்று இவளுக்கு அவன் ஞாபகம் வந்தது. எங்கே இருப்பான்? பெற்ற பிள்ளையைப் பற்றி ஒருசிறிதும் எண்ணாமல் புறப்பட்டுப் போனவன், அவனுடைய வாரிசுதானே அவள். அவளும் அவன் செய்ததைத்தானே செய்வாள்.

எல்லாரும் எல்லார் வழியிலும் போய் விட்டார்கள். இனி நாட்களை எண்ணிக்கொண்டிருப்பதைத் தவிர வேறுவழி...?

அவள் செய்தது தவறு என்று யார் சொல்லமுடியும்? அவளுடைய இயல்பிலிருந்து அவள் எப்படி வழுவ முடியும்?

உலகம் இப்படித்தான் இயங்குகிறது. இப்படித்தான் இயங்கும். இனி அவள் மற்றவளின் வாழ்க்கையில் தலையிட முடியாது.

"தன்ரை வாழ்க்கையை அழிச்சது போதாதெண்டு பிள்ளையின்ரை வாழ்க்கையையும் அழிக்க வெளிக்கிட்டாள்."

ஊர் சொல்லும். ஊர் என்ன மகளே சொல்கிறாள்.

"உன்னை மாதிரி என்னையும் தனிச்சிருக்கச் சொல்லுறியோ...?"

வாய்விட்டு அவளே சொல்லியாயிற்று.

நினைத்தால் அப்படியும் தோன்றுகிறது.

தான் வாழாத வெப்பிசாரம் மகள் வாழ்க்கையையும் ஒரு பிசாசாக உண்டு விடத் தருணம் பார்க்கிறதோ?

"ஏன் பிள்ளை இப்பிடிச் செய்யிறாய்...?"

அவள் ஒரு அளவுக்கு மிஞ்சி மகளை வழிநடத்தக் கூடாதோ...?

இன்னும் சிறுகை பற்றி நடக்கும் மதலையென அவள் மகளை நினைத்திருக்கக் கூடாதோ?

அவளுக்கு வயது வளர்ந்துகொண்டே போகிறது. அவள் வெறும் பிஞ்சல்ல. காயாகி, கனியாவாள்.

"இப்பிடித்தான் நீ அப்பாவையும் கலைச்சிருப்பாய்"

வார்த்தைகளில் அவள் ஊசியை வைத்துத் தைத்தாள்.

உலுப்பப்பட்ட கொப்பிலிருந்து பழங்கள் உதிர்வதுபோல அவள் நெஞ்சிலிருந்த உயிர்ப்பெல்லாம் வடிந்து சொட்டியது.

ஒரு வரன்முறை, ஒழுங்கு அதற்குக் கட்டுப்படாவிட்டால் இவளுக்குக் கோபம் வந்து விடுகிறது.

"ஒரு பொருளை எடுத்தால் அந்த இடத்தில வைக்கோணும்."

"தேத்தண்ணி குடிச்சா கோப்பை கழுவிவைக்கத் தெரியாதோ..?."

"மரக்கறி நூற்று அறுபது ரூபா வெண்டால் மிச்சம் நாப்பது ரூபா எங்கை?

அவன் கட்டுக்கடங்காமல் சுற்றித்திரிந்தவன். அவனை யாரும் இதுவரைக்கும் கேள்வி கேட்டதில்லை. அப்படிப்பட்டவனுக்கு இவளோடு வாழ்ந்த வாழ்க்கை தித்திக்கவில்லை.

இவளுடைய சட்டதிட்டங்களுக்கு அவனால் கட்டுப்பட முடியாமல் போகவே அவளிடம் சொல்லிக்கொள்ளாமலே அவன் ஊரை விட்டுப் போய் விட்டான். இப்போது இருக்கிறானோ, இல்லையோ அதுவும் தெரியாது.

அவன் போனவீச்சு இவளுக்கொரு ஓர்மத்தைக் கொடுத்தது. வயிற்றில் தங்கியதன் வம்சத்தைப் பற்றிக்கூட நினைத்துப் பார்க்காமல் போனவன் இல்லாமலே வாழ்ந்து காட்டவேண்டுமென்று நினைத்தாள். அவனது குணத்தை உரித்து வைத்தே பிறந்திருந்த மகளுக்கு விளையும் பயிரிலேயே பாடம் புரிய வைத்தாள். அவளுக்கு அம்மாவைத் தவிர வேறு உலகம் இல்லை. அம்மா சொல்வதுதான் சரி. வேறெதையும் பின்பற்றுவதற்கான தெரிவுகள் அவளிடம் இருந்திருக்கவில்லை.

இப்போது, அவளுக்கென்றொரு வாழ்க்கை.

அவளுக்கே உரித்தான பிரத்தியேக குணங்களை வரவேற்கத் தயாராயிருக்கிற கணவன்.

இறுக்கமும், கட்டுப்பாடுமாய் வாழ்ந்தவள் அந்த இறுக்கத்துக்கு வெளியே வீசுகின்ற தென்றலை நுகர்கிறாள்.

அவன் அந்த சாளரங்களைத் திறந்து விடுகிறான்.

அம்மா பாவம், இருளுக்குள்ளேயே வாழ்ந்து விட்டாள்.

இந்தச் சட்டதிட்டங்களுக்கு அப்பாலான இயல்புநிலையை அவள் மனம் எப்போது நுகரப்போகிறதோ...?

"அம்மா, இவ்வளவுநாள் எனக்காகவே தேஞ்சு, தேஞ்சு உழைச்சனீங்கள், இனியாவது ரெஸ்ட் எடுங்கோ, எங்கையாவது வெளியை போய்வருவம் அம்மா...?"என்பாள் அவள்.

"சும்மா காசைக்கரியாக்கக் கூடாது, இப்ப என்ன அவசரம் ஆறுதலாய்ப் போவம்..."

என்பாள் இவள்.

அவளது கணவன் வீட்டுத் தேவைக்கான பொருள்களை மொத்தமாய் வாங்கி வந்து போடுவான்.

"அவர் என்ன இப்பிடிச் சாமானுகளைக் கொண்டந்து கொட்டுறார். கொஞ்சம் சிக்கனமா இருக்கச் சொல்லு பிள்ளை."

"ஏன் அம்மா, அவர் தானே உழைக்கிறார், அவரிண்டை விருப்பத்துக்கு அவர் கொஞ்சம் சிலவழிக்கட்டுமன்..."

இவளின் முகம் சுண்டிப்போனது. இனி இவளது உழைப்புத் தேவை இல்லை என்கிறாளா?

இருக்கும் பயன்போய் வெறும் செல்லாக்காசாகி விட்டாளா அவள்?

"நானும் உப்பிடிச் சிலவழிச்சிருந்தால் உனக்கு உப்பிடி ஒரு வாழ்க்கை கிடைச்சிருக்காது..."

"அது சரி அம்மா. ஆனா, அவருக்கும் சில விருப்பங்கள் இருக்கும் தானே.."

"அந்த விருப்பங்களுக்கெல்லாம் இப்ப இடம் குடுத்தால் பிறகு பிள்ளை குட்டி எண்டு வரேக்கை நீ தான் கஷ்டப்பட வேண்டி இருக்கும்...."

"அதுக்கென்ன அம்மா அவருக்காக கொஞ்சம் கஷ்டப்பட்டுப் போறன்...."

அவள் அவனுக்காகக் கஷ்டத்தை ஏற்றுக் கொள்வதாய்ச் சொன்னது இவளுக்குப் பிடிக்கவில்லை. .அவளுக்கு கஷ்டம் வரக்கூடாது என இவள் பார்த்துப் பார்த்துச் செய்ய, அவள் எங்கிருந்தோ வந்த ஒருவனைக் கொண்டாடிக் கொண்டிருப்பது இவளுள் அனலை ஊற்றியது.

"நீங்கள் நினைச்சதத்தான் செய்து கொண்டிருக்கப் போறீங்களேண்டால் பிறகெதுக்கு இஞ்சை இருக்க வேணும்...? எங்கையெண்டாலும் போய் நீங்கள் நினைச்ச மாதிரி இருங்கோவன்...?"

அவள் இந்த வார்த்தையை எதிர்பார்க்கவில்லை. நடுங்கிப் போய் விட்டாள். அவள் பொறுத்துக் கொண்டாலும், கட்டிய கணவனுக்கு முன் இந்தச் சொற்களைத் தடுத்து நிறுத்த அவளுக்குத் தெரியாமல் போயிற்று. ரோஷக்காரனான அவன் உடனேயே புறப்பட்டு விட்டான். அவனுக்குப் பின்னால் அவளும் போய் விட்டாள்..

ஓர்மத்தோடு வாழ்ந்து பழகிப்பழகி வாயில் வருகின்ற வார்த்தைகள் எல்லாமே கறாராக வருவதை இவளால் உணரமுடிந்தது. எழுந்து வெளியே வந்தாள். வாசற்படியில் அப்படியே சரிந்து உட்கார்ந்தாள். என்ன செய்வதென்று தெரியவில்லை. இதுகாலவரைக்கும் ஒரு குறிக்கோள் இருந்தது. அவளை ஒருவனுக்கு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று. இப்போது அதுவும் முடிந்தது. இனி எதுவுமில்லை. சமையல், சாப்பாடு எதைச் செய்து என்ன ஆகப் போகிறது...?வாழ்க்கையில்என்னத்தைச் சாதித்தோம் என்று புரியவில்லை.

இவளுக்கு அவள் கணவனின் ஞாபகம் வந்தது.

எண்ணி ஒருவருஷம் தான் கூடவாழ்ந்தான்.

அவன் ஒரு பிள்ளைப் பூச்சியாகத்தான் இருந்தான். அவனை நினைத்தால் அவன் எந்த விதத்தில் மோசமாக இருந்தான் என்று தெரியவில்லை.

அவன் தான் வாழ்ந்த வாழ்க்கையைத்தான் இங்கே வாழ்ந்தான். வாழமுடியாத விடத்துக் கிளம்பிவிட்டான்.

ஆனால் அவள்...? இங்கே பிறந்து இங்கே வாழ்ந்த வாழ்வையேயல்லவா உதறிவிட்டுப் போய்விட்டாள்...?

ஆக, தவறு எங்கே இருக்கிறது? இவளிடத்தில்தானா...?

அவன் சிரித்துக் கொண்டிருப்பது போல இவளுக்குத் தோன்றியது.

அவசர அவசரமாக உள்ளே போனாள்.

தனது உடைகள் சிலதை எடுத்துப் பிரயாணப்பைக்குள் அடுக்கினாள்.

பக்கத்து வீட்டில் திறப்பைக் கொடுத்து விட்டுச் சொன்னாள்.

"ஒருவேளை பிள்ளை வந்தால் திறப்பைக் குடுங்கோ...?'

"தூரப்பயணம் போலை..."

"ஓமோம், நான் வன்னிக்குப் போறன். அவரைக் கண்டுபிடிச்சுக் கூட்டிவாறதாய் முடிவெடுத்திட்டன்..."

மனதிலிருந்த இருண்மை கொஞ்சம் விலகினாற் போலிருந்து.

தாட்சாயணி ...✍

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 05



திரு/திருமதி.செல்வி .....

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி .....

.....

.....

....

திகதி **கையொப்பம்**

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :05

இடமிருந்து வலம்

(01) இவ்வாரத்தில் இது புதுவரவு.
(03) மனதை வருத்தும் துக்க உணர்வு.
(06) இது மழைக்காலம். (திரும்பியுள்ளது)
(07) மன அமைதி.
(08) ஒன்றைச் செய்யுமாறு விடுக்கப்படும் துணிவுமிகு அழைப்பு.
(10) விபத்தில் அல்லது அசம்பாவிதத்தில் உயிரிழப்பு. (திரும்பியுள்ளது)
(11) தீய உள்நோக்கம். (திரும்பியுள்ளது)
(14) சமயம்.
(15) குற்றவாளியை கண்டுபிடிப்பதற்கு உதவும் தடயம் அல்லது தகவல்.
(16) குறிப்பிடத்தக்க நிகழ்வு. (குழம்பியுள்ளது)
(18) உயர்ந்து வளரும் மரம். (திரும்பியுள்ளது)
(19) அலுவலகப் பணி அல்லது கற்றல் செயற்பாடுகள் நடைபெறாதிருக்கும் காலம்.
(22) இதுவும் ஒரு உணவுப் பண்டம்.
(23) அழுக்கு, களங்கத்தையும் குறிக்கும்.
(24) வெயில், மழைக்குரிய பாதுகாப்பு சாதனம். (திரும்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

(01) மனத்திடம், துணிவு.
(02) ஓர் உறவு முறை.
(03) வேகவைத்த அரிசி.
(04) இது ஒரு வாழை இனம்.
(05) சோகம், ஏமாற்றத்தை வாயால் வெளிப்படுத்தும் நிலை. (குழம்பியுள்ளது)
(07) பரந்து வளரும் பெருவிருட்சம்.
(08) சூளுரை.
(09) எழுதப்பட்ட வாக்கியம் குழம்பிக் காணப்படுகிறது.
(12) நிகழ்ச்சிகள் நடத்துவதற்குரிய கட்டடம். (குழம்பியுள்ளது)
(13) ஒன்றைச் செய்வதற்கு ஏற்ற வசதி அல்லது ஒன்றுக்கொன்று பொருத்தமானது.
(16) உபயோகம் அல்லது பயன்பாடு. (குழம்பியுள்ளது)
(17) திடீரென வரும் மேல்நிலை அல்லது அந்தஸ்து.
(20) நெருக்கடி, தட்டுப்பாடு.
(21) வேண்டுவது கிடைக்காத நிலையில் அல்லது கருமம் நிறைவேறாததால் ஏற்படும் வருத்தம். (தலைகீழ்)

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 04

விடைகள்

இடமிருந்து வலம்

01. குபேரன் 04. அவதி 07. உறுதி
09. சனி 10. சாயல் 11. கயவன்
13. பதம். 14. முதிரை 16. பகடி
19. சாதனை 20. ஆர்வம் 21. வலை.
22. தோசை 23. சக 24. சிகை
25. தம்பி

மேலிருந்து கீழ்

01. குயில் 02. சாரதி 03. உன்
05. வண்ணி 06. வசதி 08. பயறு
12. கம்பர் 13. தரை 14. முதலை
15. தினை 17. கவசம் 18. கழதம்
19. சாவடி 20. ஆசை 22. தோகை
22. மாலை

பாராட்டு பெறுவோர்

1. எம்.ஆர்.எப். அஸ்மா,
கல்பொக்க, வெலிகம.

2. பி. பேரின்பராஜா,
இல. 44, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

3. ஏ.சி. ஸ்ரீதரன்,
மாதங்கஹவத்த லேன்,
கொழும்பு 06.

4. எஸ். ஜனன்யா,
பாடசாலை ஒழுங்கை,
வவுனியா.

5. எம்.சி.எப். ஷீமா,
புகையிரத நிலைய வீதி,
உக்குவளை.

6. கே. பத்மநாதன்,
தெஹிகலகந்துர,
நாரங்கலை,
ஹாலி எல.

7. எஸ். சத்தியவதனி,
பிரதான வீதி, பாலமுனை,
மண்டூர்.

8. மல்லிகாதேவி பத்மநாதன்,
டெமேரியா குறூப், பசறை.

9. மங்கையற்கரசி மனோகரன்,
லேடிமனிங் டிறைவ், மட்டக்களப்பு.

10. கே. புண்ணியநேசன்,
சாரதா வீதி,
காரைதீவு 05.

கசப்பு

‘பிலவ’ என்றழைக்கப்படும் இப்போதைய நிகழ் தமிழ் ஆண்டில் ‘மார்கழி’ கழிந்து தானே ‘தை’ பிறக்கும்? தைப் பொங்கல் வரும்?

நமது அரசுத்திணைக்களம் ஒன்று மார்கழியை மறந்து போனதே...!?

“பொங்கும் மங்களம் எங்கும் தங்கும்” என வாழ்த்து வழங்க ‘தையலாள்’ ஆங்கில ஜனவரி 14ல் வருகை தர முன்பே ‘கை தக்காதை’ என்று ‘தை’யை வரவேற்று, உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றி’ல் பதிந்துவிட்டது!

என்றாலும், தமிழ் பேசும் அரசு ஓய்வூதியக்காரர்கள் மட்டுமே இதை அறிந்திருப்பார்கள்.

ஏனையோர் இந்தப் பத்தி எழுத்தில் புரிந்து புருவம் உயர்த்திடுக.

அரசு ஓய்வூதியத் திணைக்களம் இவ்வாண்டு முழுமைக்குமான ஓய்வூதியக் கொடுப்பனவு தினங்களை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அந்தத் திணைக்களத்தின் தமிழ் அறிவித்தல் இப்படிப் பதியப்பட்டிருக்கிறது.

- ★ **தை 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை.**
- ★ **மாசி 10ஆம் திகதி வியாழக்கிழமை.**
- ★ **பங்குனி 10ஆம் திகதி வியாழக்கிழமை.**
- ★ **சித்திரை 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை.**

இப்படியே எஞ்சியுள்ள எட்டுமாதங்களின் திகதிப் பட்டியல்களும்.

07 வெள்ளி, 10 வியாழன், 10 வியாழன், 08 வெள்ளி என்றெல்லாம் பதியப்பட்டிருப்பது, முறையே ஜனவரி 07, பெப்ரவரி 10, மார்ச் 10, ஏப்ரல் 08 என ஆங்கில மாதப் பெயர்களையும் திகதிகளையுமே குறிக்கும்.

இதற்குச் சரியான தமிழ் மாதப் பெயர்களும் திகதிகளும் முறையே, **மார்கழி 23, தை 28, மாசி 26, பங்குனி 25** என்றே, அனைத்துத் தமிழ் நாட் திகதி அட்டவணைகளில் பதியப்பட்டிருக்க

முதல் ஓய்வூதியக் கொடுப்பனவு, ஜனவரி 07லில் வரும் மார்கழி 23தை அன்று என்பது அடியோடு மறந்து போனது மார்கழி மழையாலும் குளிராலுமா என்று கேட்கத் தோன்றுகிறது!

ஒரு ‘மார்கழிப் பாவை’ யை (ஆண்டாள்) பார்க்கத் தவறிப்போய், குழறுபடி நடந்திருப்பதால் ஓய்வூதியத் திணைக்களத்தின் இறுதி மாதக் (டிசம்பர்) கொடுப்பனவு அவர்கள் பட்டியலிட்டிருப்பது போல் மார்கழி 09ல் வராது,

கார்த்திகை 23! மூத்தத் தமிழ் ஓய்வூதியர் கவனத்திற்கொள்க.

இனிப்பு

கிழக்கிலங்கைத் தேனகத்தில் காத்தநகர் (காத்தான்குடி) கல்முனை மருதமுனை, மருதூர் (சாய்ந்தமருது) நிந்தவூர் இலக்கிய வாசம் நகரந்து மேலும் பயணித்தால் **பாலமுனை!**

அங்கே பாலங்கள் உண்டா, முனைகள் எங்கெங்கே என்றெல்லாம் கள ஆய்வு செய்யாமல் ஒரு **‘பாவேந்த’**லின் அமைதியான,

பாவேந்தல்
பாலமுனை பாறூக்

அழகான, அருள் நிறை இல்லத்தில், கால் பதிப்பவர்கள் பல பரப்பரப்புக் காட்சிகளைப் பார்ப்பார்கள் இன்றைய ஞாயிறு இளம் காலைப் பொழுதில்!

இன்னும் ஏழே நாட்களில் அந்தப் பாலமுனை மண்ணிலேயே அந்தப் பாவேந்தலுக்குப் பொன்விழாக் கொண்டாட்டங்கள் கலை இலக்கிய ஆர்வலர்களால்!

அவர் தம் மரபு – புதுக்கவிதை, குறும்பு(பா) ஆளுமைகளில் ஈர்க்கப்பட்டவர்கள் எடுக்கும் பொன்விழா!

இந்த இடத்தில் என்னைப் பற்றிய உண்மையை வெளிச்சமிட்டு விடுகிறேன்.

எனக்குக் கவிதை வராது! வந்தாலும் எழுத மாட்டேன். குருநாதர் **‘கல்கண்டு’ தமிழ்வாணன்** கட்டளை!

எவ்வாறாயினும், **புரட்சிக்கமாலின் ‘பாரதி யார்?’** தமிழக ‘மணி விளக்கு’ சஞ்சிகையில் பார்த்தவன் கிண்ணியா **‘அண்ணல்’ சாலிஹ்** ஆசிரியருடன் பழகி அவர் கவிதையில் லயித்தவன்.

கல்முனை **பஸீல் காரியப்பர்** என் ‘லைட் ரீடிங்’கில் சொக்கி கொழும்பில் ஒட்டி உறவாடிய பொழுது, ‘அழகான இரு சோடிக்கண்கள், கொம்பனித்தெரு, அல் இக்பால் வித்தியாலய ஆசிரியர் ஓய்வறையில் உருப்பெறுகையில் நேரில் கண்டு ரசித்தவன்.

அப்புறம், பொத்துவில் **‘யுவன்’ எம்.ஏ. கபூர்** என்பானின் மரபுக் கவிதைகளில் களிப்புற்று. ஒரு பொழுது’ **அழாதே சிரி’** கவிதை நாடகமொன்றை வானொலிக்காக வீட்டிலேயே சிறை வைத்து எழுதச் செய்து ஒலிபரப்புக்கு ஏற்பாடு செய்தவன்.

இப்படி இன்னும் சிலர், அனைவருமே கிழக்கிலங்கை தான். ஒருவர் மட்டும் வடபுல சில்லாலை **“தான் தோன்றிக் கவிராயர்”**

இந்த வகையில் **‘தினபதி’** துவங்கிய காலத்தில் **“ஒரு பாறூக்”** தலையெடு’ ப்பதைக் கண்டவன். ஆனால் என்னைப் போன்றே நாடக ஆர்வமிக் கவராக, நடிக சிகாமணியாகத் திகழ்ந்தவாறு ‘தினபதி’ வழிக்கவிஞராகிக் கொண்டிருக்கிறார் என்பதை எல்லாம் அறியாதவனாகப் பழையதையும் (மரபு) புதியதையும் ரசித்தேன்.

காலங்கள் பல கால் பந்தாட்டம் ஆடிய பிறகு, 2011ல், தமிழகத்தில் ஓர் இஸ்லாமிய இலக்கியமாநாடு இஸ்லாம் வளர்ந்த காயல்பட்டினத்தில் அம்மாநாட்டு அரங்கிலே அவர் ஆளுமை கண்டு அதிசயப்பட்ட பிறவி நான்!

அப்புறம்...? அப்புறம்..?

அதே 2011ல் பொக்கைவாய் முத்துப் புன்னகைப் பூத்து **ஒரு தோட்டப்பாய் மூத்தம்மா**(2011) என் அருகில்! அழைத்து வந்து வரும் ‘பாவேந்த’லே!

‘வாப்பா, கொழும்பூர் மானா. இந்த உயரமான என் மகனை உன் நல்ல மனம் வாழ்த்தணும். நீ சீதேவியா இருப்பே” எனக் கொஞ்சல்! (கெஞ்சல் அன்று)

என்னையும் விடமூத்த மூதாட்டியும். தான் சார்ந்த சமூகத்தின் யதார்த்தங்களையும் சிக்கல்களையும் தேங்காய்ப் புட்டுப் போல் பிட்டுப் பிட்டுவைக்கும் அனுபவ சாலியுமான உம்மா எங்கே, நான் எங்கே?

கூனிக் குறுகிப் போகிறேன். மூத்தம்மா கையில் இரு புத்தகங்கள். படிக்கத் தெரிந்த மனுசியா?

“வாப்பா மானா, நான் படியாதற்குறி! என் கையால் ஒனக்குத் தரணுமாம்! பாறூச் சொல்லுறான் இந்தா புடி”

அதுவரையில் அந்த உயரமான இலங்கை வங்கி உத்தியோகத்தரின் எந்தப் படைப்பையும் தொட்டிராத நான் அந்தருமை மூதாட்டியின் பொற்கரங்களிலிருந்து பெற்றுக் கொள்கிறேன்.

- ★ எஞ்சியிருந்த பிரார்த்தனைகளோடு’ 2012
- ★ பாலமுனை குறும்பாக்கள்’ 2013 இந்தக் ‘கொழும்பானுக்கு மேற்படி முதல் நூல் என்ன சொல்கிறது?

கிழக்கில் ஏற்பட்டுப்போன இன விரிசலைப் புடம் போட்டு அதிரவைக்கிறது. கடந்த மூன்று தசாப்த காலத்தில் முற்றும் முழுதாக மாறிப் போன் தமிழ் முஸ்லிம் உறவுகள் குறித்த மனஉளைச்சலை உள்ளது உள்ளபடி உரைத்து வைத்துப் பெரும் கவலை கொள்ளச் செய்கிறது.

இரண்டாவதில் ‘ஒரு நூறு குறும்புகள்’ குறும்பாவடிவில் அதிலொன்றை என் ‘லைட் ரீடிங்’ பக்கத்தில் தினகரன் வாரமஞ்சரியில் வெளியிடவும் செய்கிறேன். அது. இப்பொழுது மீண்டும். காரணம், இன்றைக்கும் என்றைக்கும் பொருந்தும்.

‘முகநூலில் படம் போட்டவேளை
முகம் பதித்துப் ‘பிரண்டு’ ஆனாள் வாலை
இஸ்கைப்பில் கதைவளர்ந்து
இவளணைந்தாள் நேரில்
சுகம் பெற்றான்,
போனான் அக்காளை!’
2013ல் பார்க்க வைத்த பாலமுனையே!
2020லும் பார்ப்பது கட்டாயமாகி
விட்டதே பாவேந்தலே! பல்
லாண்டு பல்லாண்டு வாழ்வீர் பவள
விழா காண! பிரார்த்தனைகள்.

குற்றவாளி விட்டுச் செல்வான் ஒரு துப்பு
அது தான் அவன் செய்யும் பெரிய தப்பு!

10

சிறிது நேரம்,

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்து விட்டு,

கோபால்தான் பேசினான். “கொஞ்சம் சின்ன வயசிலேயே அவளுக்கு கலியாணமாகி விட்டது சேர்! அவள் இப்போது கண்டியில் இருக்கிறாள்!”

“அப்படீன்னா காதல் கல்யாணமா?”

“ம்...!”

“எங்காவது வேலைக்குப் போறாளா?”

“திருமணத்திற்கு முன்பு ஒரு சிறிய கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தை கிடைத்த பிறகு வேலைக்கு போவதை நிறுத்தி விட்டாள்.

“வீட்டுக்காரர் என்ன செய்கிறார்?”

“லொரி டிரைவராக ஒரு மொதலாளி கிட்ட வேலை செய்கிறார்!”

“இந்த மரணத்தைப் பற்றி ஜனனி என்ன சொல்கிறா?”

“என்ன நடந்த தென்றே தெரியாமல் தான் சேர் அவளும் தவித்துக் கொண்டிருக்கிறாள்!”

பாடசாலையில் கற்கும் காலத்தில் தீபிகா டியூஷன் கிளாஸ் எதுக்கும் போனாளா?”

“ஆமாம் சேர்... மூன்று பாடங்களுக்கு டியூஷன் கிளாசுக்குப் போனாள்?”

“டியுஷன் கிளாசுக்கு எங்க போனா?”

“இரண்டு பாடங்களுக்காக கொழும்புக்கும்... ஒரு பாடத்திற்காக நீர் கொழும்புக்கும் போனாள்!”

“கிளாசுக்கு போகும் போது தனியாகவா போவாள்?”

“இல்ல சேர்... அவளுக்கு இன்னும் இரண்டு கூட்டாளிகள் இருந்தார்கள்!”

“அவர்களுடைய பெயர் என்ன? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்!”

“ஒருத்திபெயர் ஜீவிதா... அவள் பக்கத்து கிராமம். தீபிகாவிற்கு நெருங்கிய கூட்டாளி இவள் தான். மற்றவள் டவுனில் இருக்கிறாள்.

“அவள் பெயர் என்ன?”

“அவள் பெயர் மல்லிகா அவங்களுக்கு ரெண்டு மூணு கடை இருக்கு... கொஞ்சம் வசதியான வங்க...!”

“சரி இந்த மூன்று பேரில் பல்கலைக்கழகத்துக்கு போனது தீபிகா மட்டும் தானா?”

“ஆமாம் சேர்... அவங்க ரெண்டு பேரும் நல்ல மாக்ஸ் எடுக்கல்ல...!”

“ம்... இவர்களைத் தவிர ஊரில் வேறு யாருடன் தீபிகா அதிகமாகப் பழகினாள்?”

“எங்களுக்கு தெரிந்த வரையில் அப்படி யாருடனும் அவள் அதிகம் பழகியதாகத் தெரியவில்லை யாரைக் கண்டாலும் அன்பாகப் பேசுவாளா?”

“இந்த ஜீவிதாவுக்கும் மல்லிகாவுக்கும் திருமணமாகி விட்டதா?”

இல்லசேர் ஜீவிதாவுக்கு விரைவில் திருமணமாகப் போவதாக சொன்னாள் மல்லிகா அதைப்பற்றிதான் இன்னும் நினைக்கவே இல்லை என்றாள்!”

“உங்கள் மகள் தீபிகா தீபனை விரும்பியதற்கு இந்த கோபால் குடும்பம் ஏன் அவ்வளவு கடுமையாக எதிர்த்தது?”

“பல வருடங்களாகவே எங்கள் இரண்டு குடும்பங்களுக்குமிடையே இந்த காணித் தகராறினால் ஜென்மப் பகை இருந்தது!”

“அதாவது பெரியவர்களிடையே தான் பகை இருந்ததே தவிர பிள்ளைகளுக்கு மத்தியில் அப்படி இருக்கவில்லை என்று சொல்ல வர்றீங்களா?”

“இன்ஸ்பெக்டர் இப்படிக் கேட்டதும், பெற்றோர்கள் இருவரும்

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பதில் எதுவும் கூறவில்லை!

ஆனாலும்,

அந்த கேள்விக்கு அவர்களிடமிருந்து,

பதிலை எதிர்பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

“என்ன கோபால் நான் கேட்ட கேள்விக்கு இன்னும் நீங்கள் பதில் சொல்லவில்லையே...?”

“ஆமாம் சேர் நீங்கள் சொன்னது உண்மைதான். பெரியவர்களிடையே தான் அந்த பகை இருக்கிறதே தவிர பிள்ளைகளிடம் அப்படி எதுவும் இருக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால் தீபிகாவும் தீபனும் சிறுவயதில் இருந்து இணைபிரியாத நண்பர்களாகவே இருந்தார்கள்.

“இருவருமே மிக நெருங்கிய உறவினர்களா?”

“ஆமாம் சேர்... எனது மனைவியின் அண்ணன் மகன்தான் தீபன்!”

“தீபாவையும் தீபனையும் போல் கஜனும் மோகனும் நல்ல நண்பர் என்பதும் உண்மையா?”

“உண்மைதான் சேர்... மிகவும் நெருங்கிய நண்பர்கள்”

“சரி என்ன இந்த காணித் தகராறு?”

“எங்கள் பாட்டா காலத்தில் அவருக்கு சொந்தமான சில காணிகளில் தீபனின் உறவினர்கள் குடியேறி இருந்தார்கள். இதைப் பெறுவதற்காக அவர் வழக்கு போட்டார், இதனால் சில காணிகள் எங்களுக்கு கிடைத்தது. சில காணிகள் கிடைக்காமல் போய்விட்டது. இதைபெற்றுக் கொள்வதற்காகத்தான் அடிக்கடி சண்டை நடந்து கொண்டிருக்கும். காலப்போக்கில் அது பகையாகவே மாறிவிட்டது!”

“இரண்டு மாதத்திற்கு ஒரு முறைதான் தீபிகா வீட்டிற்கு வருவாளா?” மூன்று மாதங்களுக்கு ஒருமுறைதான் வருவாள் சேர்!” “அதாவது பல்கலைக்கழகத்தில் லீவு விட்ட பிறகுதான் வருவாள். இல்லையா?” “ஆமாம் சேர்?”

“அப்படி வரும் நாட்களில் அவள் வெளியே எங்கும் போவாளா?”

“இல்லை சேர்... தனியாக வீட்டிலேயே இருப்பாள்!”

“கடைசியாக அவள் எப்போது வீட்டுக்கு வந்தாள்?”

“இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்குமுன் இரண்டு முறை விடுமுறையில் வந்தாள்

“அதாவது ஏப்ரல் மாதம்?”

“ஆமாம்”

“புத்தாண்டுக்கு முன்பாக?”

“ஆமாம் தமிழ் சிங்கள, புத்தாண்டின் போது மகள் இங்கே தான் இருந்தாள்!”

“அந்த நாட்களில் அவசரமாக வெளியே எங்கும் போய் வந்தாளா?”

“ம்... அந்த விடுறையின் போதுதான் கெம்பசில் உள்ள நண்பர்களுடன் பிக்னிக் போய் வந்தாள்!”

“எங்கே போனார்கள் என்று தெரியுமா?”

“ம்... மகள் சொன்னதைப் பார்த்தால் வட்டவளைக்கு போய் அந்த நீர் வீழ்ச்சியைப் பார்த்து விட்டு அந்த வளைவில் இருக்கும் பாதாளத்தையும் பார்த்து விட்டு வரத்தான் போயிருப்பார்கள் என்று நினைக்கிறேன்!’



இதையே தான் அன்று விசாரித்தபோது தீபனின் நண்பன் பிரதீபனும் சொன்னது இன்ஸ்பெக்டருக்கு ஞாபகம் வந்தது.

பிரதீப் சொன்னது உண்மை தான் என்பது இப்போது அவருக்கு இன்னும் உறுதியாகியது.

“அந்த டிரிப்பில் தீபனும் கலந்து கொண்டானா?”

“போயிருக்கலாம் சேர்... நான் அதைப்பற்றியெல்லாம் விசாரிக்கவில்லை கெம்பஸ் நண்பர்களுடன் டிரிப் ஒன்று போவதாகத்தான் என்னிடம் சொன்னார்!” என்றாள் தீபிகாவின் அம்மா.

“இந்த இடத்தைப் பார்த்தற்கு தீபிகா இதற்கு முன்பு போயிருக்கிறாளா?”

“இல்லை சேர்... அந்த பகுதிக்கு நாங்கள் கூட இன்னும் போனதில்லை!”

“அந்த டிரிப் போய் வந்த பிறகு தீபிகா என்ன சொன்னாள்?”

“மலைமீது ஏறியதாகச் சொன்னாள். நீர் வீழ்ச்சியைப் பார்த்ததாகச் சொன்னாள். தூர நோக்கிக் கண்ணாடியின் உதவியுடன் பாதாளத்தையும் பார்த்ததாகச் செய்தது சுவையாக இருந்தது என்று சொன்னாள்!”

“இதற்கு முன்னாலும் நதி இந்த மாதிரி டிரிப் எல்லாம் போயிருக்கிறாளா?”

“ஆமாம் சேர்... கெம்பஸ் நண்பர்களுடன் ஒருநாள் மட்டும் டிரிப் போய் வருவாள். இரண்டு மூன்று நாட்கள் தங்குறமாதி எல்லாம் போக மாட்டாள். போய்வந்து தான் போன இடங்களைப் பற்றியெல்லாம் மகிழ்ச்சியுடன் சொல்லுவாள்.

“இந்த மாதிரியான டிரிப்பின் போது தீபனும் வந்தானா என்று நீங்கள் கேட்பதில்லையா?”

“எதுக்கு சேர் நாங்க போய் அதெல்லாம் கேட்க வேண்டும். அவள் என்றுமே தீபனை மறக்க மாட்டாள் என்பது எங்களுக்குத் தான் தெரியுமே இது அவள் தலை விதிசேர்!”

“இப்படி சொல்லி விட்டு கண்ணீர் விட்டாள் மங்களா.

“சரி இதற்கு மேலும் ஏதும் தேவை என்றால் நான் உங்களை வந்து சந்திக்கிறேன். விரைவில் இந்த கொலைகாரனை நான் பிடித்து விடுவேன். நீங்கள் கவலைப்படாமல் இருங்கள்!”

அவர்களிடம் இருந்து விடைபெற்றார் இன்ஸ்பெக்டர்.

அடுத்தவாரம் கொலைகாரன் அவரை சந்திக்க நேரில் வரப்போகிறான் என்பது இன்ஸ்பெக்டருக்கும் தெரியாது.

(இளமை வளரும்)

படித்ததும் பகர்வதும் 78

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

மீண்டும் பாடசாலைகளுக்கு..!

புதுவருடம் பிறந்துள்ளது. மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அடுத்த வாரத்திலிருந்து பாடசாலைகள் முழுமையாக இயங்கவுள்ளன. இது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பொருத்தமட்டில் சாதகமான நிலைமையாகும்.

மாணவர்களுக்கான வகுப்புகள் இணைய வழிகள் மூலம் நடத்தப்பட்டாலும் அவை நேரடியான, வகுப்பு முறையான கற்பித்தலுக்கு எந்த வகையிலும் ஈடாக முடியாது. இதனை நன்கு புரிந்து கொண்டு பெற்றோர் தமது பிள்ளைகளை தவறாது பாடசாலைக்கு அனுப்ப உரிய நடவடிக்கைகள் எடுப்பது அவசியம்.

கொரோனா பரவுகிறது, போக்குவரத்து கஷ்டமாக உள்ளது. பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்து செல்லவும், அங்கிருந்து மீண்டும் வீட்டுக்கு அழைத்து வரவும் காலத்தை செலவழிப்பது கஷ்டமாக இருக்கிறது. இவை போன்ற பொருத்தமற்ற காரணங்களைக் கூறிக்கொண்டு பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்வதை தவிர்க்கவோ, அசிரத்தையாக இருக்கவோ கூடாது.

இதேவேளை பாடசாலை செல்லும் தமது பிள்ளைகளின் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் போதிய கவனம் செலுத்தத் தவறக்கூடாது. எல்லோரும் அறிந்திருக்கின்ற, கட்டயாமாக தவறாது கடைப்பிடிக்க வேண்டிய முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற நடைமுறைகளை கட்டாயமாக கடைப்பிடிக்குமாறு பிள்ளைகளை அறிவுறுத்தவும், பழக்கவும் வேண்டும். உரிய வயதை அடைந்த பிள்ளைகளுக்கு கோவிட் 19 தடுப்பூசிகளை உரிய நேரத்தில் வழங்கவும் தவறக்கூடாது.

பாடசாலைக் கல்வி என்பது வெறுமனே புத்தகப் படிப்போடு நின்றுவிடுவதில்லை. மாறாக மாணவரது ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து, அவர்களது ஆளுமைகளை விருத்தி செய்யும் பாரிய பணியை முன்னெடுக்கிறது. இதனாலேயே பாடசாலைகள் பிள்ளைகளின் வாழ்க்கையில் மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது.

இத்தகைய விடயங்களை நன்கு சிந்தித்து, தமது பிள்ளைகள் பாடசாலை செல்லவும் தமது பிள்ளைகளின் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை உறுதிப்படுத்தி பாடசாலைக் கல்வியை தடையின்றித் தொடரவும் ஒவ்வொரு பெற்றோரும் வழி செய்வது அவர்கள் மீதுள்ள தலையாய கடமையாகும்

நெஞ்சுக்கு நீதி

உறவுகள் வாழ்க்கையில் மகிழ்ச்சியின் சாவிகள்
உணர்ந்து நீ செயல்படின் திறந்திடும் வாசல்கள்
சிறப்புகள் நிதம் வந்து குவிந்திடும் நன்மைகள்
சிறப்புற நனவாகும் உன் எதிர்கால கனவுகள்

சிந்தனை செய் மனமே

கவிதை நூல் 'ஆத்தங்கர'

கலைமாமணி உடப்பூர் வீரசொக்கனின் கவிதை நூல் 'ஆத்தங்கர'. மண் வாசனை கமழும் அவரது கவிதைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. இவர் தனது கவிதைகள் பற்றி இவ்வாறு கூறுகின்றார்,

"கவிதை உண்மை வெளிப்பாட்டின் ஊற்றின் கூறு அது உணர்வில் தவழ்ந்து, உள்ளத்தில் சங்கமமாகி எண்ணத்தில் வெளிவரும் போது கவிதையாக மலர்கின்றது. இத்துடன் உறவின் உணர்ச்சிகள் கூர்மை பெறும் கவிதைகள் எக்காலத்திலும் பேசப்படுவதினால் வாழ்வு வளம்பெறும் வாழும் என்பது ஐயமில்லை. எனது உள்ளக்கிடைக்கின் உணர்வுகள் ஆத்மார்த்தம் பெறும்போது அதை பாடுபொருளாக கொண்டு கவிதைகள் யாத்துள்ளேன்."

தென் இந்திய பானையபுரம், அபிநய சேக்கிழார் அதியமான், உடப்பூர் வீரசொக்கனின் ஆத்தங்கர' பற்றி கூறும்போது, "இவரின் கவிதை நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள், பல்வேறு இதழ்களில் வெளிவந்த கவிதைகளின் தொகுப்பாகும். மொத்தத்தில் உடப்பூர் வீரசொக்கன் கலை, சமூகம், நாடு, ஆன்மீகம் என அனைத்து துறைகளிலும் பயணிப்பது பாராட்டுக்குரியது" என்று குறிப்பிடுகிறார்.

இவரது கவிதை நூலில் இடம்பெற்றுள்ள ஒரு கவிதை இங்கே,

பணம் பணம் பாடித்திரியும்
பரதேசி பாடகனும் வேண்டாம்
தானம் தானம் என்று தானம் வழங்கும்
தனபந்தவனும் தரணிக்கே வேண்டாம்
மாற்றாம் தோட்டத்து மகிமை மதிக்கா
அறிவாளியும் மண்ணில் வேண்டாம்
மாற்றத்தை விரும்பி வாக்களிக்கா
வாக்காளரும் வேண்டவே வேண்டாம்

நூல்: **ஆத்தங்கர**, ஆசிரியர்: **கலைமாமணி உடப்பூர் வீரசொக்கன்**, முதற்பதிப்பு: **09 ஒக்டோபர் 2019**, பக்கங்கள்: **5 + 100**, விலை: **300.00**, வெளியீடு: **உடப்பு இளம் தாரகை வட்டம்**, தொடர்புகளுக்கு: **0767887775**

சரித்திரத்தில் ஒரு சம்பவம்

மரியாதைக்குரியவராக மாற...

இறைஞானி பெரியார் லுக்மான் அவர்களுக்குக் மக்கள் கொடுத்த மரியாதையைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஒருவர் அவரை அணுகி, "பனூ ஹஸ்ஹாஸ் கோத்திரத்தின் அடிமையாக இருந்த அதே லுக்மானா நீ?" என்று ஏளனமாகக் கேட்டார்.

அதற்கு பெரியார் லுக்மான் அமைதியாக "ஆம்!" என்றார்கள்.

அப்போது அவர், "நீங்களும் ஆடு மேய்த்த அதே நபரா?" என்று கேட்டபோது "ஆம்!" என்றே பதில் வந்தது.

அந்த நபர் மீண்டும் கேட்டார், "நீங்களும் கருமையான நிறம் கொண்டவர்தானே?" அதற்கு பெரியார் லுக்மான், "எனது கருமையான நிறம் அனைவருக்கும் தெரியும்தானே. உண்மையில் என்னைப் பற்றி உங்களை ஆச்சரியப்படுத்துவது எது?" என்று வினவினார்.

அதற்கு அந்த நபர், "மக்கள் உங்கள் கூட்டத்திற்கு வந்து உங்கள் ஆலோசனையை ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது." என்று கூறினார்:

அப்போது இறைஞானி பெரியார் லுக்மான், அவருக்கு இப்படி அறிவுரை பகர்ந்தார்கள்: "இளைஞனே! நான் கூறும் விடயங்களை நீங்கள் கடைப்பிடித்தால், இதே கௌரவத்தையும், மரியாதையையும் நீங்கள் பெறலாம்:

- உங்கள் பார்வையைத் தாழ்த்துங்கள்
- உங்கள் நாக்கைக் கட்டுப்படுத்துங்கள்
- தூய்மையான மற்றும் ஆகுமானதை உண்ணுங்கள்
- உங்கள் அந்தரங்க உறுப்புகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள்
- உண்மையை கடைப்பிடியுங்கள்
- உங்கள் மீதான நம்பிக்கைகளை நிறைவேற்றுங்கள்
- உங்கள் விருந்தினர்களை மதியுங்கள்.
- உங்கள் அண்டை வீட்டாரை கவனித்துக் கொள்ளுங்கள்
- உங்களுக்கு அவசியமில்லாதவற்றிலிருந்து விலகி இருங்கள்

இந்த குணங்கள்தான் என்னை நீங்கள் மதிக்கும் இந்த உயர்ந்த நிலைக்கு உயர்த்தியது."

ஒருவர் பரம்பரை அல்லது தோலின் நிறத்தின் அடிப்படையில் மரியாதைக்கு உரியவராகவும், கண்ணியத்துக்குரியவராகவும் மாறுவதில்லை. மாறாக ஒருவரிடம் உள்ள நற்குணங்களே அவரை உயர்த்துகின்றன.

நொறுக்குத் தீனி

2022ல் நீண்ட வார இறுதி விடுமுறை நாட்கள்

சனி, ஞாயிறு தினங்களோடு சேர்ந்ததாக விடுமுறை நாட்கள் வரும்போது அவ்வாரங்கள் நீண்ட விடுமுறை நாட்களாக அமைந்து எல்லோருக்கும் குதூகலத்தைக் கொடுக்கின்றன. ஒவ்வொரு வருடமும் ஆரம்பிக்கும்போது கலண்டர்களை பார்க்கும் அனைவரும் அதில் எத்தனை விடுமுறை நாட்கள் உள்ளன என்பதையும், அவற்றில் எவை சனி, ஞாயிறு தினங்களோடு சேர்ந்ததாக வந்து நீண்ட வார இறுதி விடுமுறை நாட்களாக அமைந்துள்ளன என்பதையும் ஆர்வத்தோடு அவதானிக்கத் தவறுவதில்லை..

நீண்ட வார இறுதி விடுமுறை நாட்கள் அமையும்போது பலரும் அவற்றில் பயணங்கள் போகவும், சுற்றுலாக்கள் செல்லவும், திருமணங்கள் போன்ற விசேட வைபவங்களை நடாத்தவும், முக்கிய வேலைகளை செய்து முடிக்கவும் முன்கூட்டியே திட்டமிடுகின்றனர். இதனால் அதிக நீண்ட வார இறுதி விடுமுறை நாட்கள் பெரும்பாலும் அனைவருக்கும் மகிழ்ச்சியையே தருகின்றன என்றால் எவராலும் மறுக்க இயலாது.

இதன்படி 2022ஆம் ஆண்டு அதிக நீண்ட வார இறுதி விடுமுறை நாட்களைக் கொண்ட வருடமாகக் அமைந்து பலரையும் மகிழ்விக்கிறது. இந்த 2022ம் ஆண்டில் ஜூலை, செப்டம்பர், டிசம்பர் மாதங்களைத் தவிர்ந்த ஏனைய எல்லா மாதங்களிலும் சனி, ஞாயிறு நாட்களோடு இணைந்ததாக நீண்ட வார இறுதி விடுமுறை நாட்கள் அமைந்துள்ளன.

2022 ஆம் ஆண்டிற்கான காலண்டரின்படி, இந்த நீண்ட வார இறுதி விடுமுறைகளை அல்லது நீண்ட விடுமுறைகளாக அமையக்கூடிய நாடகளைத் தெளிவாக காணக்கூடியதாக உள்ளது. இவை பின்வருமாறு இடம்பெற்றுள்ளன:.

- ஜனவரி மாதம் 14, 15, 16, 17 ஆம் திகதிகள்
- பெப்ரவரி மாதம் 04, 05,06 ஆம் திகதிகள்
- மார்ச் மாதம் 17, 19, 20 ஆம் தி திகதிகள்
- ஏப்ரல் மாதம் 13, 14, 15, 16, 17 ஆம் திகதிகள்
- ஏப்ரல், மே மாதங்களில் 30, 01, 02, 03, திகதிகள்
- மே மாதம் 14, 15, 16 ஆம் திகதிகள்
- ஜூன் மாதம் 11, 12, 14 ஆம் திகதிகள்
- ஆகஸ்ட் மாதம் 11, 13, 14 ஆம் திகதிகள்
- ஒக்டோபர் மாதம் 22, 23, 24 ஆம் திகதிகள்
- நவம்பர் மாதம் 05, 06, 07 ஆம் திகதிகள்

இவை 2022 ஆம் ஆண்டில் நீண்ட வார இறுதி விடுமுறை நாட்களாகக் காணப்படுகின்றன.

தகவல் களஞ்சியம்

குழந்தைகளுக்கு வீட்டுப் பாடங்கள் வழங்கத் தடை

சீனாவில் குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரையிலானோருக்கு மன ஆரோக்கியத்தை பாதிக்கும் வகையிலான செயல்பாடுகளை அந்நாட்டு அரசு தடை செய்து வருகிறது.

இதனடிப்படையில், பாடசாலை குழந்தைகளின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் அவர்களுக்கு வீட்டுப்பாடங்கள் வழங்குவது, விசேட வகுப்புகள் நடத்துவது உள்ளிட்ட நடைமுறையை தடை செய்வதற்கான சட்டவரைவை சீனா தயாரித்துள்ளது.

மேலும், குழந்தைகள் இணையத்தில் அதிக நேரம் செலவழிப்பதைத் தடுக்கவும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் அதிக நேரம் செலவழிப்பதிலும், அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதிலும் கவனம் செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சட்டவரைவு தயாரிப்புப் பணி முழுமையடைய உள்ள நிலையில், 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இது நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

குரலற்றவர்களின் குரலாக விளங்கிய பேராயர் டெஸ்மன் டுட்டு

டெஸ்மன் டுட்டு என்றதும் எவருக்கும் சட்டென நினைவுக்கு வருவது அவரது வசீகரிக்கும் முகமும் புன்னகையும் தான். தென்னாப்பிரிக்கா உலகுக்கு அறிந்த இரண்டாவது கொடை என்றும் அவரை வர்ணிக்கலாம். நெல்சன் மண்டேலா போராளியாக இருந்து அஹிம்சை வழிக்குத் திரும்பியவர். இவர் ஆன்மிகத்தில் இருந்தபடியே அஹிம்சை வழியில் தன் போராட்டங்ளை வெற்றியை நோக்கி முன்னெடுத்தவர். சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்று அப் பரிசுக்கே கனம்சேர்த்தவர்.



இவர் காலத்தில் சாதிக்க முடியாதவை எனக் கருதப்பட்டவற்றை எதிர்த்து நின்று சாதித்துக் காட்டியவர். தன் வெற்றிகளை மக்களிடம் சமர்ப்பித்த பேராயர் டெஸ்மன் டுட்டு, அவற்றை விருதுகளாகக் கைகளில் ஏந்தி மனம் மகிழ்ந்தவர். உலகளாவிய சமூக சேவையாளர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர். தனது 90வது வயதில் கடந்த 26ஆம் திகதி பொக்சிங் தினத்தன்று மூப்பின் காரணமாக அமைதியாக காலத்தில் கரைந்தார்.

இவர் தென்னாப்பிரிக்காவின் கிளெர்க்சுடோர்ப் என்ற இடத்தில், 1931 ஆம் ஆண்டு அக்டோபர் ஏழாம் திகதி ஒரு ஏழைக் குடும்பத்தில் கலப்பு சோசா, மோட்சுவானா பாரம்பரியத்தில் பிறந்தார். 1955 இல் நோமலிசோ என்பவரை மணந்தார். இவர்களுக்கு நான்கு குழந்தைகள். 1960 இல்,அங்கிலிக்கன் குருவானவராக நியமிக்கப்பட்டு, 1962 இல் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் இறையியல் கற்று பட்டம் பெற்று 1966 இல் ஆப்பிரிக்காவுக்குத் திரும்பினார்.

தென்னாபிரிக்காவின் இறையியல் மதப்பள்ளியிலும், பின்னர் போட்ஸ்வானா, லெசோத்தோ, சுவாசிலாந்து பல்கலைக்கழகங்களிலும் கற்பித்தார். 1972இல், லண்டனைத் தளமாகக் கொண்ட ஆபிரிக்காவிற்கான இறையியல் கல்வி நிதியத்தின் இயக்குநரானார். 1975 இல் மீண்டும் தென்னாப்பிரிக்கா திரும்பி, முதலில் ஜோஹன்னர்ஸ்பேர்க்கில் உள்ள புனித மரியாள் பேராலயத்தின் தலைவராகவும், பின்னர் லெசோத்தோ ஆயராகவும் பணியாற்றினார். 1978 முதல் 1985 வரை தென்னாப்பிரிக்க தேவாலயங்களின் பேரவையின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். இது இவரது பின்புலம்.அவரது இன்னொரு முகம் சமூக அரசியலுடன் பின்னிப் பிணைந்தது.

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராகக் குரல் கொடுத்த இவர், மனித உரிமை செயற்பாட்டாளாராகவும் விளங்கினார். இவர் 1985தொடக்கம் 1986 வரை ஜோஹன்னர்ஸ்பேர்க் அங்கிலிக்க ஆயராகவும், 1986தொடக்கம் 1996 வரை கேப் டவுன் பேராயராகவும் பணியாற்றினார். இப்பதவிகளில் பணியாற்றிய முதலாவது கறுப்பு ஆபிரிக்கர் இவராவார். இங்கே தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை என்றால் என்ன என்பதையும் பார்க்க வேண்டும்.

சரிசமமாக வாழ வேண்டிய ஒரு குறிப்பிட்ட இனத்துக்கான உரிமைகளை மறுத்து அந்த இனத்தோரை ஒதுக்கி வைப்பதே இன ஒதுக்கல் கொள்கை. இதை ஆங்கிலத்தில் (எப்பதீட்) என்று அழைப்பார்கள். தென்னாபிரிக்காவின் பெரும்பான்மை இனம் கறுப்பினத்தாரே. அவர்களே மண்ணின் மைந்தர்கள். 1652ம் ஆண்டளவில் தென்னாபிரிக்காவின் கேப் டவுனுக்கு வந்த டச்சு, ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு குடியேற்றவாசிகள் பல்கிப் பெருகினர். அவர்களே பின்னர் பேராயர் என அழைக்கப்பட்டனர். இம் மூன்று மொழிகளிலும் கலந்து உருவான மொழியே அப்ரிகான்ஸ் மொழி. இச் சிறுபான்மை போயர்கள் கல்வி, வல்மை,போர்த்தந்திரம் போன்றவற்றில் சிறந்து விளங்கியதால் தென்னாபிரிக்காவை ஆளும் வர்க்கத்தினராக மாறினர். கறுப்பினத்தவரின் நாட்டை சிறுபான்மை வெள்ளை போயர்கள் ஆழத் தொடங்கியது இப்படித்தான். சொந்தநாட்டு மைந்தர்களை போயர்கள் அடிமை போல் நடத்தினர்.

1948ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற போயர்களின் தேசிய கட்சி, தமது வசதிகளை மென்மேலும் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு இந்த இன ஒதுக்கல் கொள்கையை சட்டமாகக் கொண்டு வந்தது. வெள்ளையர் வசிக்கும் பகுதிகளில் கறுப்பர் வசிக்க முடியாது. ஒன்றாக அமர்ந்து சாப்பிடவோ, பயணிக்வோ முடியாது. கல்வி மறுக்கப்பட்டது. எனவே உயர் வேலை வாய்ப்புகளும் இல்லை.

பெயரளவில் தன்னாட்சி உரிமை வழங்கப்பட்ட கறுப்பினத்தவர்கள் பாண்டுஸ்தான் எனப்பட்ட பத்துப் பழங்குடித் தாயகங்களில் குடிகளாக்கப்பட்டனர். இவைகளுள் நான்கு பெயரளவில் தனி மாநிலங்கள் ஆயின. இந்த பழங்குடித் தாயகங்கள் பரப்பளவில் மிகச் சிறியனவாகவும், நாட்டின் வளமற்ற நிலப்பகுதிகளை உள்ளடக்கியனவுமாக இருந்தன.

பெரும்பாலான கறுப்பினத் தென்னாபிரிக்கர் தமக்கென ஒதுக்கப்பட்ட தாயகங்களில் வசிக்கவில்லை. வெள்ளை இனத்தவருக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த கறுப்பினத்தவரின் வாக்குரிமை இல்லாமலாக்கப்பட்டது. அரசு, கல்வி, மருத்துவ வசதி, பொதுச் சேவைகள், என்பவற்றில் பாகுபாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்ததுடன், கறுப்பினத்தவருக்கு வெள்ளையரிலும் தரக் குறைவான வசதிகளையே வழங்கியது. கறுப்பினப் பாடசாலைகளின் கல்வி முறை அவர்களைக் கூலியாட்களாக உருவாக்குவதாகவே அமைந்தது.

இந்த இனவொதுக்கல் முறை உள்நாட்டில் குறிப்பிடத்தக்க எதிர்ப்புக்களை உருவாக்கியது. தொடராக இடம்பெற்ற மக்கள் எழுச்சிகளையும், எதிர்ப்புக்களையும், காவல்துறையின் கொடூரமான அடக்குமுறை மூலம் அரசு ஒடுக்கியது. இதனால், மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவு பெருகியது. மக்கள் நேரடியாகவும், அரசியல் வழிமுறைகள் மூலமும் காட்டிய எதிர்ப்புக்களை, நீதி விசாரணை இன்றித் தடுத்து வைத்தல், சித்திரவதை, செய்தித் தணிக்கைகள், கட்சிகளைத் தடை செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அரசு அடக்க முயன்றது. விடுதலை இயக்கங்களான ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரஸ், கறுப்பின உணர்வு இயக்கம், அசானிய மக்கள் அமைப்பு, பரந்த ஆபிரிக்க காங்கிரஸ், ஐக்கிய சனநாயக முன்னணி, போன்ற இயக்கங்கள் தடைசெய்யப்பட்டன.

தென்னாபிரிக்காவின் இந்த இன ஒதுக்கல் கொள்கைக்கு உலகளாவிய எதிர்ப்பு கிளம்பியது. சர்வதேச விளையாட்டுகளில் கலந்துகொள்வதற்கு தடை விதிக்கப்பட்டது. ஐ.நா உறுப்புரிமை நீக்கப்பட்டது. பெரும்பாலான நாடுகள் தென்னாபிரிக்கவை பகிஷ்கரித்தன. இத்தகைய தொடர் அழுத்தங்களும் போயர் நிர்வாகத்துக்கு எதிரான உள்ளூர் மக்களின் எதிர்ப்பும் அதிகரிக்கவே போயர் அரசு இறங்கி வந்தது.

நெல்சன் மண்டேலாவை சிறையில் இருந்து விடுவித்தது. தேர்தல் நடந்து மண்டேலா தலைமையில் சுதேசிகளின் ஆட்சி மலர்ந்தது. 1994 பொதுத் தேர்தலுக்குப் பிறகு, மண்டேலா தலைமையில் அமைந்த அரசில் டெஸ்மன் டுட்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். நிறவெறியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, இவர் சுயபால்சேர்க்கை உரிமைகளுக்காக பிரச்சாரம் செய்தார். இஸ்ரேலிய, பாலத்தீனிய மோதல்கள், ஈராக் போருக்கு எதிரான அவரது எதிர்ப்பு மற்றும் தென்னாபிரிக்க அரசுத் தலைவர்களான தாபோ உம்பெக்கி, ஜேக்கப் சூமா ஆகியோர் மீதான அவரது விமர்சனப் பார்வை போன்ற பல்வேறு விடயங்களில் அவர் தனது கருத்துக்களை தயக்கமின்றி முன்வைத்தார்.

2010இல் பொது வாழ்விலிருந்து ஓய்வு பெற்ற போது டெஸ்மன் டுட்டு தென்னாபிரிக்காவின் பெரும்பான்மையான கறுப்பின மக்களிடையே பரவலாக பிரபலமடைந்திருந்தார்.இவரது நிறவெறி எதிர்ப்பு செயல்பாட்டிற்காக சர்வதேச அளவில் பாராட்டப்பட்டு அமைதிக்கான நோபல் பரிசை பெற்றுக்கொண்டார். மேலும் 1986 ஆம் ஆண்டு மனிதத்திற்கான அல்பேர்ட் சுவைட்சர் பரிசையும், 1987ஆம் ஆண்டு பாசெம் இன் டெர்ரிச பரிசையும், 1999 ஆம் ஆண்டு சிட்னி அமைதிப் பரிசையும், 2005 ஆம் ஆண்டு இந்தியாவின் உயர் கௌரவமான காந்தி அமைதிப் பரிசையும் பெற்றார். 2009 ஆம் ஆண்டு இவருக்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் சுதந்திரப் பதக்கம் வழங்கப்பட்டது. தனது மேடைப் பேச்சுக்களையும் மேற்கோள்களையும் பல நூல்களாகத் தொகுத்துள்ளார்.

இவர் தான் சார்ந்த கறுப்பினத்தவரின் உரிமைக்காக மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் குரல் கொடுத்து வந்தார் என்பது கவனிக்கதக்கது. எய்ட்ஸ், காசநோய், சுயபால்சேர்க்கையாளர் மீதான வெறுப்பு, திருநங்கை உரமைகள், வறுமை, இனப்பாகுபாடு என ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அவரது குரல் இறுதிவரை கேட்டுக்கொண்டே இருந்தது.

பேராயர் டுட்டு அவர்களின் மரணத்தை உறுதி செய்த தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோச விடுதலை பெற்ற ஒரு தென்னாப்பிரிக்காவை மக்களுக்கு வழங்கியவர் எனக் குறிப்பிட்டது முற்றிலும் பொருத்தமானதே. ஏனெனில் ஏனையோர் பயணிக்க பாதை போடுவதுதான் மிகப்பெரிய பணி.

போல்ராஜ் சந்திரமதி
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 09ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 ஜனவரி 09 ஞாயிற்றுக்கிழமை

பாரோக்களுக்கே தண்ணிகாட்டியவர்கள்

பண்டைய எகிப்து நாகரிகம் பிரமாண்டமானது. பிரமீடுகளைக் கட்டி உலகையே பிரமிக்க வைத்தது. கி.முவுக்கு முந்திய காலத்தில் உலகில் எகிப்து பாரோக்களை வெல்ல ஆளில்லை என்று தான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இராட்சத கப்பல்களுடன் வந்த கூட்டம் ஒன்று அடிக்கடி எகிப்தைத் தாக்கிவிட்டுச் சென்றிருக்கிறது.

கி.மு 1250 ஆம் ஆண்டு தான் இவர்கள் முதல் முறை தோன்றினார்கள். பயங்கரமானவர்களாக இருந்தார்கள். கடைசியில் முதலாவது ரம்சிஸ் தான் இவர்களை வீழ்த்தினார். பின்னர் 1178 ஆம் ஆண்டு தீடீரென்று காணாமல்போனார்கள். இவர்கள் யார், எங்கிருந்து வந்தார்கள் என்று இன்று வரை யாருக்கும் தெரியவில்லை. ஆய்வாளர்கள் இவர்களை வேறு வழியின்றி பொதுவாக 'கடல் மக்கள்' என்று அழைக்கிறார்கள்.

11 மணி நேர மல்யுத்தம்

ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியொன்று தொடர்ச்சியாக 11 மணிநேரம் விளையாடப்பட்டது என்றால் நம்புவீர்களாக.

1912 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 75 கிலோ கிராம் எடைப்பிரிவில் நடந்த மல்யுத்த அரையிறுதி போட்டியே இவ்வாறு நீண்ட நேரம் விளையாடப்பட்டது. இதில் ரஷ்யாவின் மார்டின் கிளைன் மற்றும் பின்லாந்தின் அல்பிரைட் அஸிகெயினன் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

மிக நீண்ட நேரமாக இருவரும் விட்டுக்கொடுக்காமல் போராட போட்டி 11 மணிநேரமாக நீடித்தது. இறுதியில் மார்டின் கிளைன் போட்டியில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெற்றார்.

சரியாக 11 மணி 40 நிமிடங்கள் போராடியே கிளைன் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதில் பரிதாபம் என்னவென்றால் கிளைன் மிக நீண்டநேரம் போட்டியில் பங்கேற்றதால் அடுத்த நாள் நடைபெறவிருந்த இறுதி ஆட்டத்தில் அவரால் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இறுதிப் போட்டியில் அவருடன் மோதவிருந்த ஸ்வீடனின் கிளீஸ் ஜோஸன் போட்டியின்றி தங்கப்பதக்கத்தை வென்றதோடு கிளைனுக்கு வெள்ளிப்பதக்கத்துடன் திருப்தி அடையவேண்டி ஏற்பட்டது.

எனினும் இந்த போட்டி மல்யுத்த வரலாற்றில் மிக நீண்டநேரம் விளையாடப்பட்ட ஆட்டமாக பதிவானமை அதில் பங்கேற்ற இரு வீரருக்கும் பெருமைக்குரிய செய்தி தான்.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

வேகத்தடையை மீறிய முதலாமவர்!

வேகமாக வாகனத்தை செலுத்தியதற்கு தண்டப் பணம் செலுத்தவது என்பது இன்று சர்வசாதாரணமானது. ஆனால் இந்த சாகசத்தை நிகழ்த்திய முதலாமவரின் பெயர் ஜகொப் ஜெர்மன் என்பவராவர். 1899 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இது நிகழ்ந்தது.

அப்போது பயன்பாட்டில் இருந்த மின்சாரக் கார் வண்டி ஒன்றையே இவர் ஓட்டி இருக்கிறார். அந்தக் காலத்தில் அத்தனை வேகமாகவாக செல்ல முடியும் என்று ஆச்சரியப்பட வேண்டாம்.

அவர் அந்தக் காரை செலுத்திய வேகம் வெறுமனே 12 மைல்கள். ஆனால் வீதிகளில் வண்டிகளை மணிக்கு நான்கு மைல் வேகத்திலேயே செலுத்த முடியும் என்று சட்டம் இருந்தது.

இதன்போது ஜெர்மனுக்கு தண்டப் பணம் விதிக்கப்படவில்லை. நேராக சிறை சென்று கம்பி எண்ணினார்.

இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், வேகத் தடையை மீறி காரை செலுத்திய ஜெர்மனை பொலிஸார் ஒருவர் தனது சைக்கிளில் வேகமாகச் சென்று பிடித்தது தான் கதையின் திருப்பம்.

பொறுமை இழந்த மாணவனின் விளையாட்டு

1823 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் வொர்விக்ஷயரில் அமைந்துள்ள ரக்பி பாடசாலை மாணவர்களுக்கு இடையில் கால்பந்து போட்டி ஒன்று நடைபெற்றது.

இந்த போட்டியில் விளையாடிய மாணவன் ஒருவன் வித்தியாசமாக சிந்தித்தான். காலால் உதைத்தபடி எதிரணி கோலுக்குள் பந்தை செலுத்த அவனுக்கு பொறுமை இல்லை. பதிலாக அவன் போட்டியின் இடையில் காலால் உதைத்துக் கொண்டிருந்த பந்தை கைக்கு எடுத்து எதிரணி கோலை நோக்கி ஓடினான்.

இது கால்பந்து விதியை மீறும் செயலாகும்.

ஆனால் இவ்வாறு கால்பந்து விதியை மீறிய அந்த மாணவன் புதிய விளையாட்டு ஒன்றையே கண்டுபிடித்தான். அதுதான் ரக்பி விளையாட்டாகும். சர்வதேச அளவில் விளையா டப்பட்டுவரும் ரக்பி விளையாட்டு உருவானது இவ்வாறுதான்.

இவ்வாறு கால்பந்து போட்டியில் பந்தை கையில் எடுத்த அந்த மாணவனின் பெயர் வில்லியம் வெப் எலிஸ் ஆகும். இவரே ரக்பி விளையாட்டின் தந்தை என்று அழைக்கபடுகிறார். இவரது பெயரிலேயே ரக்பி உலகக் கிண்ண போட்டி நடத்தப்படுகிறது.

அருங்காட்சியகத்தில் இருக்கும் ரொட்டித் துண்டு

செர்பிய இராணுவ வீரர் அலெக்சா சிட்ராகொவிக் தனது தாய் சுட்டுத்தந்த ரொட்டித் துண்டு ஒன்றை எட்டு ஆண்டுகள் வைத்திருந்தார். அதாவது பல்கான் போர் மற்றும் முதலாம் உலகப் போரில் பங்கேற்ற அவர் தனது உயிரை காத்தது இந்த ரொட்டியின் அதிர்ஷ்டம் என்று நம்பினார். எனவே போருக்குச் செல்லும்போது இந்த ரொட்டியை மறக்காமல் எடுத்துச் சென்றார். இந்த ரொட்டி இருப்பதாலோ என்னவோ பல சந்தர்ப்பங்களில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார். இந்த ரொட்டியின் மகிமை முழு செர்பிய நாட்டுக்கும் தெரிந்ததாலோ என்னவோ இன்று அந்த ரொட்டித் துண்டு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

மனிதநேயமிக்க சேவை உணர்வைக் கொண்ட சாரணர் இயக்கத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய பேடன் பவல்

தன்னலமற்ற மனித நேயமிக்க சேவை உணர்வைக் கொண்ட சாரணர் இயக்கத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் சேர் றொபேர்ட் ஸ்டீபன் ஸிமித் பேடன் பவல் ஆவார். இவர் ரெவரண்ட் பேடன் பவல் என்பவரின் மூன்றாவது திருமணத்தில் பிறந்த எட்டு ஆண்களைக் கொண்ட பத்துக் குழந்தைகளில் ஏழாவதாக லண்டனில் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி பிறந்தார். பேடன் பவலுக்கு மூன்று வயதாக இருக்கும்போது இவரது தந்தையார் காலமானார். பேடன் பவல் புலமைப்பரிசில் பெற்று சாடெர் ஹவுஸ் பாடசாலையில் கல்வி கற்றார்.

பேடன் பவல் 1876 ஆம் ஆண்டில் பிரித்தானிய இராணுவத்தில் இணைந்து தளபதியானார். இராணுவத்தில் இணைந்து கொண்ட பேடன் பவல் இந்தியா, கனடா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலும் பணிபுரிந்தார். ஆங்கிலத் தளபதி பேடன் பவல் 1906 ஆம் ஆண்டு வாய்மை, நேர்மை, நம்பகத் தன்மை, தேசப்பற்று, நேசம், ஜீவகாருண்யம், மரியாதை, தைரியம், துணிவு போன்ற ஆளுமை விருத்திகளைக் கொண்டு மனித நேயப்பண்புகளுடன் சேவைகள் மூலம் சமூகத்துடன் ஒன்றிணைந்த அமைப்பாக மிளிரும் 'எதற்கும் தயாராக இரு' எனும் தொனிப்பொருளைக் கொண்ட சாரணர் இயக்கத்தை தோற்றுவித்தார்.

பேடன் பவல் 1907 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் பணியாற்றிய காலத்தில் சாரணர் இயக்கத்தின் முதல் முயற்சியாக 20 சிறுவர்களுடன் தொடங்கினார். பேடன் பவல் 1908 ஆம் ஆண்டு 'சிறுவர்களுக்கான சாரணியம்' என்ற நூலை வெளியிட்டார். தனது நூல்கள் வெற்றிகரமாக விற்பனையாகின்றதையும் அவை பல இளைய மற்றும் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு பயன்படுவதையும் கண்டார். பேடன் பவல் 1910 இல் பெண்கள் சாரணர் இயக்கத்தையும் தொடங்கினார். பேடன் பவலின் பாரியார் சீமாட்டி ஒபேவா பேடன் பவல் பெண்கள் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து உலகெங்கும் வியாபிக்க வழிகோலினார்.

1910 இல் தான் சாரணியம் உலகெங்கும் பரவத் தொடங்கியது. 1916 இல் குருளை சாரணர் இயக்கமும் 1918 இல் ரோவர்ஸ் சாரணர் இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

06.08.1920 இல் பேடன் பவல் தனது தலைமையில் உலக சாரணர்களை ஒன்றிணைத்து சாரணர் ஜம்போரி ஒன்றை இங்கிலாந்தில் நடாத்தினார். இந்நிகழ்வின்போது பேடன் பவல் உலகின் பிரதம சாரணர் என பிரகடனப்படுத்தப்பட்டார். பேடன் பவலை இங்கிலாந்தின் 5 ஆம் ஜோர்ஜ் மன்னர் 'கில்வெல் பிரபு' என பெயர் சூட்டி, பாராட்டி கௌரவித்தார். அன்று முதல் நான்காண்டுகளுக்கு ஒருமுறை சாரணர் ஜம்போரி உலக நாடுகளில் நிகழ்கின்றது. முதலாவது சாரணியர் உலக ஜம்போரி (உலக சாரணியர்களை ஒன்றிணைக்கும் பாசறை) 1920ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஒலிம்பியாவில் நடைபெற்றது.

தற்போது சாரணர் இயக்கங்கள் 216 நாடுகளில் செயல்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடுதலான நாடுகளில் செயல்படும் தொண்டு நிறுவனமாக சாரணர் இயக்கம் விளங்குகின்றது. உலகம் முழுவதிலும் 54 மில்லியன் சாரணர்கள் உள்ளனர்.

இலங்கையில் 1912 ஆம் ஆண்டு மாத்தளை கிறிஸ்துவ அரச கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் சாரணர் இயக்கம் 1917 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 1921 ஆம் ஆண்டும் 1934 ஆம் ஆண்டும் பேடன் பவல் தனது மனைவி ஒபேவா பேடன் பவலுடன் இலங்கைக்கு விஜயம் செய்து சாரணிய நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தார்.

சமூகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தன்னை மேம்படுத்திக் கொள்ளவும், சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கான பயிற்சிக் களமாக பாடசாலைகளில் மாணவ, மாணவியர்களுக்கான சாரணர் இயக்கம் உலகளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சாதி, மத வேற்றுமை கடந்து சகோதர மனப்பான்மையுடன் சமூகத்தை அணுகுவதற்கான நல்ல பண்பாட்டினை மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறது.

சாரணிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட பலர் இன்று உலகில் பலதுறைகளிலும் பெயர் பதித்திருப்பதைக் காணலாம். உதாரணமாக, முதன்முதலாக சந்திரனில் காலடியெடுத்து வைத்த நீல்ஆம்ஸ்ரோங் ஒர் சாரணியரே இவர் அமெரிக்காவின் ஈகிள் ஸ்கவ்ட் விருது பெற்றவர். சந்திரனில் இதுவரை காலடி பதித்து நடந்த 12 பேரில் 11 பேர் சாரணர்கள். நாஸாவின் தலைவராக இருந்தவர் ஜேம்ஸ் லோவல் ஒரு சாரணர். உலகப் புகழ் பெற்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப்.கென்னடி ஒரு குருளை சாரணராக இருந்தவர். அமெரிக்க ஜனாதிபதிகள் வரிசையில் பில் கிலிண்டன், ஜோர்ஜ் புஷ் போன்றோர்களும் சாரணர்களே. உலகப் புகழ் பெற்ற மைக்ரோசொப்ட் மென்பொருள் நிறுவனத்தின் உரிமையாளர் பில் கேட்ஸ் ஒரு சாரணர். இவ்வாறான பல சாரணியர்கள் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

சமூகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தன்னை மேம்படுத்திக் கொள்ளவும், சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கான பயிற்சிக் களமாக பாடசாலைகளில் மாணவ, மாணவியர்களுக்கான சாரணர் இயக்கம் உலகளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சாதி, மத வேற்றுமை கடந்து சகோதர மனப்பான்மையுடன் சமூகத்தை அணுகுவதற்கான நல்ல பண்பாட்டினை மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறது. வயது வந்தோர்க்கான கல்வி, சாலை விதிமுறைகளை மேற்கொள்ளுதல், விழா நடைபெறும் காலங்களில் கூட்டத்தினைக் கட்டுப்படுத்துதல், மரங்களை நடுதல் போன்ற பணியினைச் சாரணர் இயக்கத்தினர் செய்து வருகின்றனர்.

பேடன் பவல் தனது இறுதிக் காலத்தில் மனைவியோடு கென்யாவில் வசித்தார். கென்யாவில் 1941 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி தனது 84 ஆம் வயதில் பேடன் பவல் காலமானார்.

உலக சகோதரத்துவத்தையும் தியாகச் சேவையுணர்வையும் இலட்சியமாகக் கொண்ட சாரணியத்தின் மூலமாக உலக நாடுகளில் சமாதானத்தையும் சகோதரத்து வத்தையும் கட்டியெழுப்புதல் வேண்டும் என்பதே பேடன் பவலின் எதிர்பார்ப்பாகும்.

பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்

சினிமாவில் வில்லன்களின் ஆளுமை....

ராவணன் இல்லாத ராமாயணம் எவ்வாறிருக்கும்.....!
கௌரவர்கள் இன்றி மஹாபாரதம் எழுச்சியுறுமா.....!
சூரபத்மன் அற்ற முருகன் புராணமா.....!

சிங்கமும், புலியும் இல்லாத வனங்கள் எவ்வாறு பெருமை கொள்ளாதோ அவ்வாறே சினிமாக்களில் வில்லன்கள் இன்றி சுவாரஸ்யம் இருக்காது.

திரையுலகின் ஆளுமை, கதாநாயகனாக நடிக்கும் நாயகர்களின் கரங்களை மட்டுமே தழுவுவதற்கு மூலக் காரணமாக அமைந்தவர்கள், இவர்களுக்கெதிராக எதிர்மறை வேடங்களில் வியாபிக்கும் வில்லன் வேடங்களில் நடிக்கும் கலைஞர்களே.

தமிழ்த்திரையில் பெரும்பாலும் புகழின் உச்சத்தை தொட்ட வில்லன்களில்,

டி.எஸ்.பாலையா, ரஞ்சன், எஸ்.ஏ.நடராஜன், எம்.என்.நம்பியார், எம்.ஆர்.ராதா, பி.எஸ். வீரப்பா, எஸ்.ஏ.அசோகன், ஆர்.எஸ்.மனோகர், எஸ்.ராம்தாஸ், கே.கண்ணன், ஓ.ஏ.கே.தேவர், பிரகாஷ்ராஜ், ரகுவரன், .மன்சூர் அலிகான்.. அவ்வரிசையில் சமீப காலங்களில் அதிரடியாக கலக்கி கொண்டிருப்பவர் எஸ்.ஜே.சூர்யா.....!

இவர்களில் ஆரம்ப காலங்களில்...

01.டி.எஸ்.பாலையா

"சதிலீலாவதி"ராமநாதன் என்ற வில்லன் வேடத்தில் அறிமுகமானவர் டி.எஸ்.பாலையா. இப்படத்தில் இவரது நடிப்பை படத்தின் இயக்குநர் எல்லிஸ்.ஆர்.டங்கன் வெகுவாக பாராட்டினார். தியாகராஜா பாகவதர் நடித்த "அம்பிகாபதி"யில் வில்லனாக, வாழ்க்கையில் வில்லனாக மணி என்ற பாத்திரத்தில் பாலையாவின் கொடூர நடிப்பைக் கண்ட பெண்கள் பாவி படுபாவி என திட்டினார்களாம், எம்ஜியாரின் "மதுரை வீரனில் இவர் ஏற்று நடித்த நரசப்பன் என்ற வில்லன் வேடம் படத்தின் சிறப்புக்கு மெருகூட்டியது."நாங்கள் வீரனை பின்னோக்கி துரத்திச் சென்றோம், அவனோ எங்களை முன்னோக்கிச் சென்று விட்டான்"என நையாண்டியாக சொல்லும் கட்டம் நகைச்சுவை கலந்த வில்லத்தனம். ",தாய்க்குப் பின் தாரம்,படத்தில் பண்ணையாராக இவர் நடித்த தோரணை வெகு பிரமாதம். சிவாஜி கணேசனின் "சித்தூர் ராணி பத்மினி" யில் அலாவுதீன் கில்ஜி வேடம், தூக்குத் தூக்கியில் வடநாட்டு சேட்டு நக்ராம் பாத்திரம் படு ஜோர்.

பாதுகாப்பு படத்தில் குடிகாரன் வேடத்தில் இவர் கொண்ட கோலம் மிக அருமை. டி.எஸ். பாலையா தனது வித்யாசமான உச்சரிப்பு, உடல்மொழி நடிப்பில் அசத்திய கலைஞராவார்.

02.ரஞ்சன்...

ரிஷ்யசிருங்கர் படத்தில் அறிமுகமானார்.

ஜெமினியின் "சந்திரலேகா" படத்தின் வெற்றிக்கு இவரின் வில்லத்தமான நடிப்பும் ஒரு காரணமாக அமைந்தது. ஒரு காட்சியில் ரஞ்சன் கர்ஜிக்கும்போது அவர் வளர்க்கும் நாயும் குரைக்கும், இவருக்கு வெறிபிடித்திருப்பதை நாயை உவமானம் காட்டி காட்சியை அர்த்தப்படுத்தியிருப்பார் இயக்குனர் எஸ். எஸ்.வாசன். இப்படத்தில் இவர் ஏற்ற வேடம் "ஸஷாங்கன்". மேலும் ஜெமினியின்"மங்கம்மா சபதம்"படத்தில் சுகுணன்,ஜெயபாலன் என தந்தை மகனாக இரட்டை வேடத்தில் இவர் நடித்த நடிப்பு அக்காலத்தில் பிரமாதம். இதில் தந்தை சுகுணன் வேடத்தில் வில்லனாக நடித்த ரஞ்சனின் நடிப்பு அபாரம்.

03.எஸ்.ஏ.நடராஜன்.

டி.ஆர்.சுந்தரம் இயக்கிய "சதி சுகன்யா" படத்தில் அறிமுகமானார்.

மந்திரிகுமாரி படத்தில் ராஜகுரு (எம். என். நம்பியாரின்)மகனாக வரும் பார்த்திபன் வேடத்தில் ஈனஸ்வரக் குரலில் இவர் நடித்த வில்லன் பாத்திரம் மிகப்பிரமாதம்."வாராய் நீ வாராய் ", பாடல் காட்சியில் இவரின் அபிநயம் அற்புதம். அமுதவல்லி படத்தில் இவர் தோன்றும் வேடம் படு வில்லத்தனமாக அமைந்தது. மனோஹராவில் வசந்தசேனையுடன் (டி.ஆர்.ராஜகுமாரி) உக்ரசேனன் பாத்திரத்தில் இவர் மிரட்டி நடித்த நடிப்பு வெகுப்பிரமாதம். கலைஞரின் வசனங்களை எஸ்.ஏ. நடராஜன் அமர்க்களமாக பேசி ஜாலம் செய்திருப்பார்.

"சிறையில் விஜயா குழந்தை பெற்றிருக்கின்றாளாம் "ஆம் அழியப் போகும் நேரத்திலே அரும்பு முளைத்திருக்கின்றது

" நாடகமே உலகம், நாளை நடக்கப் போவதை யார் அறிவார் ", பழரசம் அருந்துங்களேன்,

முதலில் உன் பார்வை ரசம் அருந்துகின்றேன் கண்ணே" போன்ற வரிகளை அனாயாசமாக பேசி அசத்தியிருப்பார் நடராஜன். ஈனஸ்வரக் குரலில் இவர் சிரிக்கும் சிரிப்பு விஷம் கலந்ததைப் போல் சில படங்களில் சதி நிறைந்ததாக இருக்கும்.

04.நடிகவேள் எம்.ஆர்.ராதா..

உலக சினிமா வரலாற்றில் இவர் போன்ற கலைஞரை ஹொலிவுட்டிலும் காண முடியாது. "ராஜசேகரன் ஏமாந்த சோனகிரி" படத்தில் அறிமுகமானார்.

எத்தனை திறமை வாய்ந்த நடிகராயினும் இவரின் நடிப்பிற்கு முன் துரும்பு என்றால் மிகையாகாது. படப்பிடிப்புகளில் சிவாஜி, எம்ஜியார், ஜெமினிகணேசன் போன்ற பெரிய நடிகர்கள் இவருடன் நடிக்கும் போது சர்வ ஜாக்கிரதையாக இருப்பார்களாம். ஓரிரு வசனங்களில் தனது வித்யாசமான கரகரத்த குரலில் பேசி படத்தின் போக்கு சிறப்பாக அமைய வித்திட்டவர் நடிகவேள்.

பாகப்பிரிவினையில் "வெளிநாட்டில் நீராவில கப்பல் செஞ்சி கடல்ல உடுறான், இங்க நீராவில புட்டு செஞ்சி உள்ள உடுறான்", தாயைக் காத்த தனயனில் "பத்திக்கையை எரி,பந்தலப் பிரி, ரத்தக்கண்ணீரில் இவர் தோன்றும் ஒவ்வொரு காட்சியும் அட்டகாசம். பாவமன்னிப்பில் ஆளவந்தார் பாத்திரத்தில் நடித்த எம்.ஆர். ராதாவின் நடிப்பு அபாரம்.

சந்திரோதயத்தில் " ஒலகமே திருந்துனாலும் நா திருந்தவே மாட்டேன்", வசனம் நையாண்டி நிறைந்தது. பச்சை விளக்கு,மணியோசை,

சித்தி, ஆலயமணி, கற்பகம், நானும் ஒரு பெண், ஹலோ மிஸ்டர் ஜமீன்தார், பலே பாண்டியா போன்ற படங்களில் நடிகவேள் எம்.ஆர். ராதாவின் நடிப்பை சினிமா உலகம் என்றுமே மறக்காது.

05.எம்.என்.நம்பியார்...

தமிழ்த் திரையில் இவரின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. இவரின்றி சிவாஜி கணேசன், போன்ற உச்ச நட்சத்திரங்களின் வரலாறுகளை எவராலும் வரைய இயலாது.

"பக்த ராமதாஸ்"படத்தில் அறிமுகமான நம்பியார் அக்காலத்தில் சில படங்களில் கதாநாயகனாக நடித்தார். பின்னர் மக்கள் திலகம் எம்ஜியாருடன் இணைந்து வில்லன் வேடங்களில் நடிக்கவே அதுவே இவரின் சினிமா வாழ்க்கையில் நிரந்தரமானது.

சர்வாதிகாரி, திருடாதே, காவல்காரன், எங்க வீட்டுப் பிள்ளை, படகோட்டி, ஆயிரத்தில் ஒருவன், குடியிருந்தகோயில், வேட்டைக்காரன், நாளை நமதே, சிரித்து வாழ வேண்டும்,நேற்று இன்று நாளை, உரிமைக்குரல், பல்லாண்டு வாழ்க, நீதிக்குத் தலைவணங்கு

மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் போன்ற படங்களில் மக்கள் திலகம் எம்ஜியாருடன் இணைந்து நம்பியார் நடித்த பாத்திரங்கள் மறக்க முடியாதவைகள். அதுபோல் சிவாஜி கணேசனுடன் நடித்த உத்தமபுத்திரன்,

தங்கப்பதுமை, அம்பிகாபதி,சித்தூர் ராணி பத்மினி, ஹரிச்சந்திரா, தில்லானா மோகனாம்பாள், எங்க ஊர் ராஜா, தெய்வ மகன், சிவந்த மண், ராமன் எத்தனை ராமனடி, சவாலே சமாளி, ராஜ ராஜ சோழன், பொன்னூஞ்சல், சத்தியம், மன்னன் வந்தானடி, மிருதங்கச் சக்ரவர்த்தி, சங்கிலி, தராசு, வாழ்க்கை, வம்ச விளக்கு, நீதியின் நிழல், ராஜரிஷி, கிருஷ்ணன் வந்தான், ஜல்லிக்கட்டு போன்ற படங்களிலும்,ஜெமினி கணேசன், முத்துராமன், ஜெய்சங்கர், கமல், ரஜினிகாந்த், சத்யராஜ், விஜயகாந்த், பாக்யராஜ் மற்றும் விஜய், பிரஷாந்த் போன்ற நடிகர்களுடனும் நம்பியார் நடித்துள்ளார். கைகளை பிசைந்த வண்ணம் விழிகளை திகிலாக உருட்டி மிரட்டி நடிப்பதில் நம்பியாருக்கு நிகர் நம்பியாரே. ஸ்ரீதரின் நெஞ்சம் மறப்பதில்லை படத்தில் இவரின் விகாரமான ஒப்பனையும், மிரட்டலும், ஜமீன் திமிரும் கொண்ட நடிப்பும் மிக அருமை.சிவந்த மண்ணில் திவான் வேடத்தில் சர்வாதிகாரியாக நம்பியார் நடித்த விதம் மிக அருமை. ஹிந்தி வில்லன் நடிகர் பிரான் பாராட்டிய கலைஞர் நம்பியார். ஆயிரத்தில் ஒருவனில் ஆர்.கே.சண்முகத்தின் வரிகளுக்கு நம்பியார் அருமையாக உயிரூட்டியிருப்பார். எங்கே அந்தச்சிலை, சினம் கொண்ட யானை என்ன செய்யும் தெரியுமா, நீ எப்போதும் அற்பமான பொருளுக்குத் தான் ஆசைப்படுவாய் போன்ற வசனக்காட்சிகள் பிரமாதம்.

06.பி.எஸ்.வீரப்பா..

அட்டகாசமான சிரிப்பு இவரது நடிப்புக்கலைக்கு மூலதனமாக அமைந்தது தமிழ் சினிமாவின் பொக்கிஷம் பி.எஸ்.வீரப்பா.

கே.பி.சுந்தராம்பாளின் சிபாரிசில் "மணிமேகலை"என்ற படத்தில் அறிமுகமானார். தமிழில் முதல் பஞ்ச் வசனங்களுக்கு சொந்தக்காரர் வீரப்பாவே.

"மகாதேவியில் கருணாகரன் வேடத்தில் " அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி", அத்தான்.. இந்த சத்தான வார்த்தையில் கருணாகரன் செத்தான்",வேதநாயகர் வேதனை நாயகனாவதேன்",என்ற வசனமும்,வஞ்சிக்கோட்டை வாலிபனில் "சபாஷ் சரியான போட்டி " என்ற வசனமும் தமிழ் சினிமா வரலாற்றில் தடம்பதித்த சுவடுகளாகும். வீரக்கனல், ஆனந்த ஜோதி, சக்கரவர்த்தி திருமகள், அலிபாவும் நாற்பது திருடர்களும் (திருடர் தலைவன்

அபூஹுசைன் பாத்திரம் இன்றளவிலும் மறக்க முடியாத பாத்திரமாகும்).

07.எஸ்.ஏ.அசோகன்...

ஜெமினியின் பிரமாண்டமான தயாரிப்பான "ஔவையார்"படத்தில் அறிமுகமானார் அசோகன். இது சத்தியம்,கார்த்திகை தீபம், வல்லவனுக்கு வல்லவன், கார்த்திகை தீபம்,

ஆக்கம்:எஸ்.கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

தொடர்ச்சி அடுத்த வாரம்

மனைவி : "ஏங்க!.. புண்ணியம் செய்தவர்களை இங்கிலீஷ்'ல எப்படி சொல்லுவாங்க??"
கணவன் : Unmarried னு சொல்லுவாங்க"

மனைவி: நேத்திக்கு நான் வைரத் தோடு கேட்டப்ப முடியவே முடியாதுன்னு தலையை அங்கிட்டும் இங்கிட்டுமா ஆட்டுனீங்க.. இப்ப மட்டும் வாங்கி வந்திருக்கீங்க...?
கணவன்: ஓ அதுவா... பொண்டாட்டி ஆசைப்பட்டதை வாங்கித் தராட்டி, அடுத்த ஜென்மத்திலேயும் அவளே பொண்டாட்டியா வருவானு பெரியவங்க சொன்னாங்க.. அதான், எதுக்கு வம்புன்னுதான் .. !
மனைவி: !!!!!!!!!!!!!!!

மனைவி:உங்களை பார்க்காமலே கல்யாணத்துக்கு OK சொன்னேன். நான் தான் தியாகி...!!
கணவர்: உன்னை பார்த்த பின்னாலும், கல்யாணத்துக்கு OK சொன்னேன். நான் தானே பெரிய தியாகி....!!!

சன்யாசிக்கும் சம்சாரிக்கும் என்ன வித்தியாசம்?
புலித்தோலில் தூங்குபவர் சன்யாசி.
புலியுடனேயே தூங்குபவார் சம்சாரி.

Daddy....இந்த அப்ளிகேஷன்லே, 'மதர் டங்க்' குன்னு இருக்கு... என்ன எழுத..??.." "ரொம்ப நீளம்னு எழுது..."

கல்யாணம் பண்ணின ஒரு ஆம்பள நிம்மதியா இருக்கான்னா
ஒன்னு அவனுக்கு கெடச்ச மனைவி "வரமா" இருக்கனும்
இல்ல ஊருக்கு போன மனைவி "வராம" இருக்கனும்

கணவன் : எதை பார்த்தாலும் உன் முகம்தான் தெரியுது டார்லிங்,
மனைவி : அப்படியா எங்க இருக்கிங்க..?
கணவன் : "Zoo"ல இருக்கேன்..ma
மனைவி :

மனைவி: ஏங்க இறந்து போனதுக்கு அப்புறம் பெண்கள் எல்லாம் சொர்க்கத்துக்கு போவாங்களாமே? அப்படியா?
கணவன்: அப்படித்தான் சொல்றாங்க..
மனைவி: அப்ப நீங்க எங்கே போவிங்க?
கணவன்: நீங்க எல்லோரும் அங்கே போயிட்டா இங்க எங்களுக்கு சொர்க்கம்தானே?

மழை, மனைவி இரண்டிற்கும் என்ன ஒற்றுமை???
ரெண்டுமே இல்லாதப்போ எப்ப வரும்ன்னு ஏங்குவோம்.. வந்தா ஏண்டா வந்ததுதுன்னு புலம்புவோம்

புத்தகங்களை வெளியிடுவதை விடவும் முக்கியமானது அவை மக்களை சென்றடைவது

ஷேஹா ஸகி எனும் பாத்திமா ஸகியா

நேர் மறையான விமர்சனங்களை எந்தளவு சந்தோஷமாக ஏற்றுக்கொள்கின்றீர்களோ அதே அளவு எதிர்மறையான விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். அவ்வாறானதொரு மனநிலையை உங்களால் உருவாக்கிக்கொள்ள முடியுமாயின் இத்துறையில் நிச்சயம் வளர்ச்சி பெறலாம் என்கிறார் இளம் பெண் எழுத்தாளர் ஷேஹா ஸகி எனும் பாத்திமா ஸகியா. செந்தூரத்துக்கு அவர் வழங்கிய நேர்காணல்

கே: உங்களை பற்றிய ஒரு சிறு அறிமுகத்தை எமது வாசகர்களுக்கு கூறுங்கள்?

ப: என்னுடைய சொந்த பெயர் பாத்திமா (z)ஸகியா ஆனால் ஷேஹா (z)ஸகி என்ற புனைப்பெயரலே எழுதி வருகின்றேன். இப்போது கணக்காளராக பணியாற்றுகின்றேன். என்னுடைய கதைகளை ஒலிப்பதிவாக வெளியிடுவதற்கு “கதைக்குள்ள போலாமா” என்ற யூடீப் சேனல் ஒன்றை யும் ஆரம்பித்திருக்கிறேன்.

கே: உங்கள் பாடசாலை வாழ்க்கை பற்றி கூறுங்கள்?

ப: “ம்.....பாடசாலையில் நன்றாக கல்வி கற்கும் முதல் மேசை மாணவியாகவே பாடசாலை வாழ்க்கை முழுவதும் இருந்தேன். இருந்தும் சாதாரண தர பரீட்சையின் போது ஏற்பட்ட உடல்ரீதியான பிரச்சினைகளால் சிறந்த பெறுபேற்றைப் பெற முடியவில்லை. திருப்தி படுத்தவில்லை. அதனாலே உயர்தரத்தில் கணக்கியல் துறையை தேர்ந்தெடுத்து நல்ல பெறு பேற்றை பெற்றுக்கொண்டேன். அதனையே என் வாழ்க்கையில் கிடைத்த முதல் வெற்றியாக பார்க்கின்றேன்.”

கே: உங்களுக்கு இலக்கிய ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?

ப: இலக்கியத்தில் நான் ஆர்வம் காட்டக் காரணம் எனது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகளே சிறு வயதில் நிறைய புத்தகங்கள் வாசித்தேன். இருப்பினும் காலப்போக்கில் அது இல்லாமல் போய்விட்டது. தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக , நான் மனம் உடைந்து விரக்தியில் இருந்தபோது, கதை எழுதும் எனது ஆற்றலை வெளிக் கொணர்ந்தவர் எனது நண்பியே! நிறைய கதைகளை வாசிப்பதன் மூலம் வந்த ஆர்வமே இன்று என்னை எழுத்தாளர் ஆக்கியிருக்கிறது. என் நண்பி மூலம் ஏற்பட்ட இவ் ஆர்வம், என் முதல் கதையை என் நண்பர்கள் ஐவரின் குணப்பாத்திரங்களை கொண்டே எழுத தூண்டியது.

கே: இலக்கியத் துறையில் ஆர்வம் இல்லையெனில் வேறு எந்த துறையை தேர்ந்தெடுத்திருப்பீர்கள்?

ப: ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு இலட்சியம் கொண்டு வாழும் பெண்ணாகவே இருந்தேன்

எந்த வொரு நிலையான இலட்சியமும் என்னிடம் இருக்கவில்லை. பாடசாலை காலத்தில் கூட தமிழில் பெரிதாக ஆர்வம் செலுத்தவில்லை. அந்த பட்டியலில் எழுத்தாளர் என்பது இடம்பெற்றிருக்கவில்லை. ஆனால் வாழ்க்கை எதிர்பார்க்காததையே அதிகம் தரும் என்பதை என் வாழ்வில் நிரூபித்துவிட்டது.

கே: முதல் முதலில் எழுதிய படைப்பு எது?

ப: முதல் படைப்பை அறிய தரும் முன் எதில் முதல் படைப்பை வெளியிட்டேன் என்று சொல்ல விரும்புகிறேன்... இந்த எழுத்து த் துறைக்காக நான் முதலில் பயன்படுத்திய இணைய தளம் “பிரத்திலிப்” ஆகும். இது நிறைய எழுத்தாளர்களுக்கு ஒரு அடித்தளமாக காணப்படுகிறது.

முதலில் ஒரு வாசகராக அதனுள் நுழைந்த என்னை எழுத்தாளராக மாற்றியது அதுதான். அதில் பதிவிட்ட “தூர எறிந்து விடு மனமே” எனும் சிறு கதையே எனது முதலாவது படைப்பாகும்

கே: முதன் முதலில் உங்கள் படைப்பு வெளிவந்த அத்தருணம் பற்றிக் கூறுங்கள்.

ப: அதை இரண்டு விதமாக கூறலாம். ஒன்று இணையத்தில் வெளிவந்தது மற்றையது புத்தகமாக வெளிவந்தது. இணையத்தில் வெளியிட்ட சிறுகதைக்கு சிறிதளவே வரவேற்பு கிடைத்தது . மிகவும் குறைந்தளவு விமர்சனங்களும் ,விருப்பங்களும் பகிரப்பட்டாலும் எனக்கு அதுவே பெரும் மகிழ்ச்சியை கொடுத்தது . அடுத்தது புத்தகமாக வெளிவந்த படைப்பு . அது என் மிகப்பெரிய கனவு என்றும் கூறலாம்.பல தடைகளை தாண்டியே எஸ் எம் எஸ் (sms) எனும் பதிப்பக தளத்தில் நடாத்திய sms அழகிய சங்கமம்2 எனும் ஓர் நாவல் போட்டியில் பங்கு பற்றி “உன்னாலே உயிர்த்தேனே உயிர் காதலே” என்ற நாவலை எழுதினேன். 7வது இடத்தில் வெற்றியும் பெற்றேன்.அ துவே முதல் முதலில் புத்தகமாக வெளிவந்த என் படைப்பு . அது நான் எழுதிய நான்காவது கதையாகும். அந்த தருணத்தை விபரிக்க வார்த்தைகள் இல்லை என்னிடம் .

கே: இதுவரையில் உங்கள் படைப்பில் வெளிவந்த நூல்கள் பற்றி கூறுங்கள்

ப: இதுவரையில் நான் 7 நாவல்களை எழுதி உள்ளேன்

1 உன்னிடத்தில் என்னை வீழ்த்துகிறாயடி
2 என்னை தீண்டாதே என் ஜீவனே
3 காதல் போதையடி நீ எனக்கு
4 உன்னாலே உயிர்த்தேன் உயிர் காதலே
5 அனல் பார்வை அறி
6 லவ் ஆர் ஹேட் மீ
7 போட்டிக்கானது

இதில் 4 நாவல்கள் “அமேசன் கின்டல்” எனும் வளைதளத்தில் உள்ளன.எனது நான்காவது மற்றும் 5வது நாவல்களே புத்தகங்களாக வெளிவந்தன . 7வது நாவலின் பெயரை போட்டி காரணமாக வெளியில் சொல்ல முடியாது உள்ளது.

கே: உங்களது படைப்புக்களுக்கு ஊடகத்துறை எந்தளவுக்கு களம் அமைத்துத் தந்தது என கருதுகிறீர்கள்?

ப: உண்மை யைக் கூற வேண்டுமெனில் ஊடகத்துறையினாலே எனக்கான அடையாளத்தை என்னால் ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. இணையத்தில் தமிழ் நாவல்களுக்கு என்று நிறைய வலைத்தளங்கள் உள்ளன. அவற்றிலேயே என் கதைகள் அனைத்தையும் பதிவிட்டேன். எனது பெயருக்காக கதைகளை வாசிக்கும் வாசகர்கள் கூட எனக்கு கிடைத்தார்கள். அந்த வலைத்தளங்கள் மூலமே இப்போது எனது இரு கதைகள் புத்தமாக உருப்பெற்றுள்ளன. அதற்கு ஊடகத்துறை மிகப்பெரிய களம் அமைத்தது என்றே சொல்லலாம்.

கே: உங்களுடைய அதிகமான நாவல்கள் காதல் உணர்வை முதன்மைப்படுத்தியே உள்ளனவே அதற்கான காரணம் என்ன?

ப: ஆம், என்னுடைய எல்லா நாவல்களும் காதல் உணர்வை அதிகம் வெளிப்படுத்துவதாகவே உள்ளன. காரணம்,நான் விரும்பி வாசிக்கும் நாவல்கள் அனைத்தும் காதல் நாவல்களே. நான் ஆர்வமாகவும் , ஆசையாகவும் எழுதுவது காதல் உணர்வை அதிகம் வெளிப்படுத்தும் நாவல்களையே

கே: உங்கள் படைப்புக்களின் மூலம் நீங்கள் கூற விரும்பவது என்ன?

ப: “என்னுடைய எல்லா க் கதைகளுமே. காதல் உணர்வை அதிகம் வெளிப்படுத்துவதாக காணப்பட்டாலும் பெண் உரிமை, பாலியல் துஷ்பிரயோகம், விவசாயம், வளங்களை பாதுகாத்தல், உறவுகளின் முக்கித்துவம் போன்ற பல சமூக கருத்துக்களை உள்ளடக்கியே உள்ளேன்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

ஹர்ஷதா ஜிப்ரி
இலங்கை இதழியல் கல்லூரி

1950 இல் இலக்கிய பயணத்தை ஆரம்பித்த பெரிய கிண்ணியா கலாபூசணம் எம். ஈ. எச். எம். தௌபீக்

இலக்கிய உலகின் மூத்த எழுத்தாளர் வரிசையில் 1950 ம் ஆண்டு தன் இலக்கிய பயணத்தை எதுவித ஆர்ப்பாட்டமின்றி அமைதியான முறையில் எழுதத் தொடங்கினார். பெரிய கிண்ணியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஓய்வு நிலை அதிபர் கலாபூசணம் எம். ஈ. எச். எம். தௌபீக், மர்ஹூம்களான எகுத்தார் ஹாஜியார் ஜொஹரா உம்மா தம்பதியரின் புதல்வராவார். தனது இல்லறத் துணைவியாக அபீபா உம்மாவைக் கரம் பிடித்தார். மூன்று பெண்களும், மூன்று ஆண்களுமாக ஆறுபிள்ளைகள் உள்ளனர்.

தனது ஆரம்பக் கல்வியை தி/ பெரிய கிண்ணியா அரசினர் ஆண்கள் வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை மாத்தளை வின்சஸ்டர் கல்லூரியிலும் கற்றார். அப்பாடசாலையின் அதிபராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மர்ஹூம் ஏ. சீ. எஸ். ஹமீட் கடமையாற்றினார். எனக்கு அரசியலில் ஈடுபடும் நோக்கமுண்டு. உங்க குடும்பமும் அரசியலிலுள்ளது. நீங்களேன் அரசியலில் ஈடுபடக் கூடாது..? ஏன் மறுப்புத் தெரிவிக்கிறீர்கள்.? என அடிக்கடி வினாத்தொடுப்பாராம்.

பள்ளிப்பருவத்தில் இலக்கிய ஈடுபாடுள்ளதால்" சுடர்மதி" என்னும் கையெழுத்துச் சஞ்சிகை மாத இதழின் ஆசிரியராகத் திகழ்ந்தார். இதில் மாணவர்களின் கட்டுரைகள், கவிதைகள், கதைகள், நகைச் சுவைத்துணுக்குகள், பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டி, சிந்தனைத் துளிகள், மாணவர் கருத்துக்கள் என்பன சேர்க்கப்பட்டன.

அன்று தமிழகத்திலிருந்து வெளியான இஸ்லாமிய இதழான " பிறை" சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றார். தொடர்ந்து தினபதி, தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, நவமணி, விடிவெள்ளி, மித்திரன் போன்ற தேசிய பத்திரிகைகளுக்கு எழிலி, இரா சபீக், இப்னு எகுத்தார் ஆகிய புனைப் பெயர்களில் எழுதினார். வீட்டிலே நூலகம் அமைத்து அரசியல், வரலாறு, விளையாட்டு,கவிதை, கதை, நாவல்கள், பாடல்கள்,தமிழ், ஆங்கிலம், சிங்களம்,சமய சம்மந்தமான நூல்கள்,சஞ்சிகைகள், பத்திரிகைகள் காணப்பட்டன. மர்ஹூம்களான வாஹிட் அதிபர், முத்தலிப் அதிபர், பி. ஸி. சமட் ஆசிரியர், ஜெய்லான் ஆசிரியர் போன்றோர் நூலகத்தை தன்கு பயன்படுத்தியதாகக் கூறினார்கள். இவை இளம் வயதிலேயே இலக்கியத்திலுள்ள ஈடுபாட்டைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. எழுத்தாளர்களான மர்ஹூம் பாணந்துறை நிஸ்வான் ஆசிரியர், வெலிப்பன்னை அத்தாஸ் அதிபர், கிண்ணியா அலி அக்பர் அதிபர், மன்னார் கலைவாதி கலீல் விரிவுரையாளர் போன்றோர் நெருங்கிய நண்பர்களாவர்.

தற்போதைய வயோதிப காலத்திலும் பத்திரிகை, நூல்கள் வாசிப்பதில் பின்நிற்பதில்லை. இன்றும் பலர் பழைய வரலாறுகள், சம்பவங்களைக் கேட்டறிவதற்கு நாடி வருகிறார்கள். புராணக்கதைகள், இலக்கிய நயம் என்பவற்றைச் சுவைபடக் கூறுவார்.

இலங்கைக்கு யாகுவர்கள் குடியேறிய வரலாற்றை வீரகேசரிப் பத்திரிகையில் கட்டுரையாக எழுதிப் பலரது பாராட்டையும் பெற்றார் கள். பல்வேறு இடங்களிலிருந்தும் நேர்காணல் செய்தனர்.

மாளிகா கந்தையிலுள்ள" இலங்கை யாகுவர் சங்கம்" இவரை வரவழைத்து யாகுவர்களின்

வரலாற்றைப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கிக் கௌரவித்தது. அத்துடன் " மலேசியா" சென்றுவர அனுமதியளித்த போதும், தனது கடைசி மகனின் திருமணம் காரணமாகச் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டார். காயல் பட்டணத்தில் நடைபெற்ற இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் கிண்ணியா கவிஞரகளான மரஹூம் ஏ. எம். எம். அலி , அலிஅக்பர் , சஜாத் போன்றோருடன் கலந்து கொண்டார்கள்.

1970ம் ஆண்டு" நெஞ்சம் கவர்ந்த நாஸர்" நூலையும், 1974 ம் ஆண்டு அட்டாளைச் சேனை ஆசிரியர் கலாசாலையில் சிறுவர் இலக்கிய நூலையும் வெளியிட்டார். அப்போது விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே நூல் வெளியீடு செய்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் , ஐம்பது வருடங்களுக்கு மேலாக கிண்ணியா சஹ்தியா அரபுக் கல்லூரி நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவராகச் சேவையாற்றினார். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும்இக் கல்லூரியில் ஓதினார்கள். ஓதிமுடித்தவர்களுக்குப் பட்டமளிப்பு விழா நடாத்திச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார். வருடா வருடம்

மீலாத் விழா நடைபெற்று சஹ்தியா அரபுக் கல்லூரி மாணவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

திருகோணமலை மாவட்ட " தேசிய கல்வி ஊழியர் சங்கத்தில் பதினேழு வருடங்களாகப் பணியாற்றித் தனது சகோதரரின் அரசியல் வழிகாட்டல் ஆலோசராகவும் செயற்பட்டார். இணக்க சபை உறுப்பினராகவும் செயலாற்றினார்.

அன்று தொடக்கம் இன்று வரை குறுக்கெழுத்துப் போட்டிகள், சொற்புதிர், வினாக்கள் போன்றவற்றைப் பத்திரிகையில் பார்த்தால் மிக விருப்பத்தோடு பூர்த்தி செய்வார். பரிசுகள் பெறுவார். நவமணி " பரிசு மழை" போட்டியில் கலந்து மூன்றாம் பரிசாக" மடிக் கணினி" கிடைக்கப் பெற்றார்.2019 ம் ஆண்டு முதலாம் பரிசு " உம்ரா" பயண அனுமதி கிடைத்து பரிசளிப்பு விழா மீடியா போரம் தலைவர் என். எம். அமீன் அவர்களின் தலைமையில் கோலாகலமாக நடை பெற்றது. இது தனது வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாகும்.

2010ம் ஆண்டு முதலமைச்சர் விருதும், சிரேஷ்ட பிரஜை விருதும், சாமஸ்ரீ விருதும், 2011 ம் ஆண்டு கலைஞர்களுக்காக வழங்கப்படும் கலாபூசண அரச விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்

பாடசாலை ஆசிரியராகவும், அதிபராகவும் 34 வருடங்கள் கடமையாற்றி பல மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருந்து ஓய்வு பெற்றார்

ஜெனீரா ஹைருல் அமான்

Senthooram செந்தூரம்

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணண்

ஏ.எல். விசுவம்.
மடுல்சீமை.

கேள்வி: முன்னணி நடிகர்கள் எல்லாம் முன்பைப் போல் இப்போது அதிகப் படங்களில் நடிப்பதில்லையே...ஏன்?

பதில்: அவர்கள் கேற்கும் 'ரேட்'தான் காரணம். முன்னணி நடிகர் ஒருவருக்கு கொடுக்கின்ற பணத்தை வைத்து இப்போது சில தயாரிப்பாளர்கள் ஒரு படத்தையே தாயரித்து விடுகிறார்கள். இதனால்தான் இப்போதெல்லாம் நிறையவே புது முகங்கள் அறிமுக மாகிறார்கள். இது கூட ஒரு நல்ல விஷயம்தானே..ம்...

எம்.மலர்ராணி
கொழும்பு13

கேள்வி : சினிமா உலகில் "வயதுக்கு வந்த " நடிகர் யார் என்று சொல்லுங்கள் பாருப்போம் ஒரு 'க்ளூ'அவர் இப்போது உயிரோடு இல்லை.

பதில்

"மேஜர்"சுந்தரராஜன்!
என்ன ஒகேவா!

எம்.மாகிரட்.
எலபடகம..

கேள்வி : சமீப காலத்தில் தமிழ் சினிமாவில் அதிகம் பேசப்பட்ட நடிகைகள் யார்?

பதில் : முதல் இடத்தில் இருப்பவர் நயன்தாரா. கடந்த ஆண்டுவரை முதல் இடத்திலேயே நிலைத்து நின்றார். கடந்த ஆண்டு அவர் நடித்து வெளிவந்த படங்கள் இரண்டு. 'நெற்றிக்கண்', 'அண்ணாத்த'. நெற்றிக்கண் படத்தில் அவர் பார்வை இழந்தவராக நடித்து தன் திறமையை வெளிப்படுத்தியிருந்தார். 'அண்ணாத்த'படத்தில் ரஜனி காந்த் ஜோடியாக நடித்து ரஜினி ரசிகர்களால்'அண்ணி'என்று பாசமாக அழைக்கப்பட்டார்.

அடுத்த படியாக இரண்டாவது இடத்தைப் பிடித்தவர் ரணாவத். 'தலைவி'படத்தில் ஜெயலலிதா வேடத்தில் நடித்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.தனது திறமையான நடிப்பின் மூலம் ஜெயலலிதாவை அப்படியே பிரதி பலித்தார்.

இவர்களை அடுத்து 'ஜெய்பீம்' படத்தில் செங்கேனி கதாபாத்திரத்தில் நடித்த விஜோமோல், திட்டம் இரண்டு'படத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டராக நடித்த ஜஸ்வர்யா ராஜேஸ், உடன் பிறப்பு படத்தில் தஞ்சை பெண்ணாக நடித்த ஜோதிகா,'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தில் நடித்த நந்திதா ஆகியோரும் கடந்த ஆண்டில் ரசிகர்களால் பேசப்பட்ட கதநாயகிகள் பட்டியலில் இருக்கிறார்கள்.

ஆர் .எம். இக்பால்.
கல்முனை.

கேள்வி : சமீபத்தில் வெளியான 'புஷ்பா'ஒரு பாடலுக்கு மட்டும் கவர்ச்சி நடனம் ஆடிய நடிகை சமந்தாவுக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியிருக்கிறதாமே ?



பதில் : இது பற்றி சமந்தா என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

நான் நல்ல கதா பாத்திரத்தில் நடித்தேன். சில மோசமான கதாபாத்திரத்திலும் நடித்துள்ளேன்... ஒரு தொகுப்பாளராகவும் இருந்துள்ளேன். சீரியசாக வரும் பாத்திரங்களிலும் நடித்துள்ளேன். தான் செய்யும் எல்லா வேலைகளிலும் சிறந்து விளங்க நான் கடினமாக உழைத்து வருகிறேன்....கவர்ச்சி என்பது கடினமான வேலை. செய்து வருகிறேன்...விமர்சனங்கள் ஒருபக்கம் இருந்தாலும் மக்கள் பாடலை கொண்டாடி வருவது மகிழ்ச்சியாக இருக்கிறது'இவ்வாறு சமந்தா கூறியுள்ளார்...

ஆர்.எஸ். சுதாகர்.
வத்தளை.

கேள்வி: ரஜனிகாந்த் மிகவும் குஷியாக இருக்கிறாராமே.. ?

பதில்: ம். இருக்காதா பின்னே....'அண்ணாத்த'படம் ஓ டி டி தளத்தில்... வெளியான பிறகும் தமிழகத்தில் பல தியேட்டர்களில் 50நாட்களை கடந்துஓடிக் கொண்டிருக்கிறது. இது தொடர்பாக ஜூம் செயலியில் பேசி ஓடியோ வெளியிட்டுள்ளார் ரஜனி. அதில், "பல இடர்களைத்தாண்டி அண்ணாத்தா படத்தை முடித்தோம். எதிர் விமர்சனம், மழை, ஆகியவற்றைக்கடந்து அண்ணாத்தா படம் வெற்றி பெற்றுள்ளது. நல்லவர்களை ஆண்டவன் சோதிப்பான்....கைவிடமாட்டான். 'என்று கூறியுள்ளார்.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

'வெந்து தணிந்தது காடு'

நடிகர் சிம்பு நடிக்கும் 'வெந்து தணிந்தது காடு' படத்தின் புதிய அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது.

நடிகர் சிம்பு நடிப்பில் சமீபத்தில் வெளியான 'மாநாடு' திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் நடிகர் சிம்பு நடிக்கும் திரைப்படம் 'வெந்து தணிந்தது காடு'.

'வெந்து தணிந்தது காடு' திரைப்படத்தை வேல்ஸ் பிலிம்ஸ் நிறுவனம் சார்பாக ஐசரி கணேஷ் தயாரிக்கிறார். மேலும் இந்த படத்திற்கு ஏ.ஆர் ரகுமான் இசையமைக்கிறார். இந்த திரைப்படத்தின் பர்ஸ்ட்லுக் வெளியான போது அதில் இடம்பெற்றிருந்து சிம்புவின் லுக் பலருக்கும் ஆச்சரியத்தை கொடுத்தது.

இந்த படத்தில் முத்து என்ற வித்தியாசமான கதாபாத்திரத்தில் சிம்பு நடித்து வருகிறார். இதன் முதல்கட்ட படப்பிடிப்பு திருச்செந்தூரில் ஆரம்ப மானது. அதைத் தொடர்ந்து சென்னையில் படப்பிடிப்பு நடந்தது.

இந்த நிலையில் புத்தாண்டை முன்னிட்டு படத்தின் அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்தப் படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு தொடங்கியதாகவும் இந்த படத்தில் சிம்புவின் ஜோடியாக நடிக்க சித்தி இத்னானி நடிப்பதாகவும் இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனன் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில் சித்தி இத்னானி பாவை என்ற கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பதாக தெரிவிக்க ப்பட்டுள்ளது. சித்தி இத்னானி ஒருசில தெலுங்கு மற்றும் குஜராத்தி படங்களில் நடித்துள்ளார். தமிழில் இவர் நடிக்கும் முதல் படம் இது என்பது குறிப்பிட த்தக்கது.

"வெந்து தணிந்தது காடு"

தமிழகத்தில் நடிகர் சிம்புவின் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படமும் இதே தலைப்பு தான்.

ஆனால் இன்று பல சர்வதேச விருதுகள் பெற்று தன் திரைப்படத்தின் முதற்பார்வையை வெளியிட்டிருக்கின்றனர் வெந்து தணிந்தது காடு திரை குழுவினர்.

தயாரிப்பாளர்களே கால் பதிக்க தயங்கும் மண்ணுக்குள் எங்கள் கதைகளை நாங்களே சொல்ல வேண்டும் என்ற முன்னெடுப்புடன் 160 பேரிடம் 3 வருடமாக சிறுக சிறுக சேர்த்த பணத்தின் மூலம் இத்திரைப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

எங்களுக்கான சினிமா அல்லது எங்களுக்கான திரைமொழி என்று ஈழ சினிமாவின் உருவாக்கத்திற்காக போராடும் கலைஞர்கள் இவர்கள்.

பல குறும்படங்களின் சர்வதேச வெற்றியாளர், மதிசுதா இயக்கத்தில் உருவாகியிருக்கும் முதல் திரைப்படம் வெந்து தணிந்தது காடு.

ஒளிப்பதிவு பிரதீபன் செல்வம், படத்தொகுப்பு மணிகண்டன், இசை பத்மயன், கலை நியூட்டன், தயாரிப்பு நிர்வாகம், மக்கள் தொடர்பு ஜெனோசன் ராஜேஸ்வர் என பல கரைஞர்கள் இத்திரைப்படைப்பில் பணியாற்றியிருக்கின்றார்கள்.

இதில் படத்தொகுப்பைச் செய்த மணிகண்டன் (சென்னை) , ஒளிப்பதிவு செய்த பிரதீபன் செல்வம் (இலங்கை) , ஒலிச் சேர்க்கை செய்த K.V சுப்ரமணியம் (கேரளா) ஆகியோர் இந்தியாவின் பூனே திரைப்படக்கல்லூரியில் சிறப்பு பட்டம் பெற்றவர்களாவர்.

எங்கள் கதைகளுக்கான திரைப்படத்திற்கு எமது மக்களின் ஆதரவு மிக முக்கியம் எனவே இப்படைப்பை மற்றவருக்கும் கொண்டு சேர்க்க உதவும்படி அன்போடு வேண்டி நிற்கின்றார் இயக்குனர் மதிசுதா.

இத்திரைப்படத்தில் பாத்திரமேற்று நடித்த இலங்கையின் பல கலைஞர்கள் படப்பிடிப்பு நாள் முழுவதும் அதே தளத்தில் குடும்பமாக வாழ்ந்து நடித்திருந்தார்கள். எனவே எமது களத்தில் உருவாகும் திரைப்படத்திற்கு ஆதரவு வழங்குவோம்.

Behindwoodsல் அவளதிகாரம்..!

ஈழத்தின் சினிமா படைப்புகள் பேசப்பட வேண்டிய களம் இலங்கையை தாண்டி பிரவேசிப்பது அங்கீகாரத்திற்குரிய விடயம்.

ஈழ சினிமா வளர்ந்து தனக்கான கட்டமைப்பை நிறுவி வரும் நிலையில் குறிஞ்சி கிறியேசன்ஸ் நிறுவனத்தின் படைப்புகள் இலங்கை மீடியாக்கள் மட்டுமல்லாமல் தென்னிந்தியாவிலும் இது ஒரு ஈழ சினிமா உருவாக்கம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

திலக் , கௌசி ராஜ் நடிப்பில் கதிரின் இயக்கத்தில், பத்மயனின் இசையிலும், வட்சுவின் ஒளிப்பதிவிலும் உருவாகியிருக்கும் அழகிய காதல் பாடல் அவளதிகாரம்.

ஜெனோசன் ராஜேஸ்வர் இந்த படைப்பை தயாரித்து வெளியிட்டிருக்கின்றார்.

காத்து வாக்குல ரெண்டு காதல்

"நான் பிழை" என்ற பாடல் வெளியிடப்பட்டுள்ளதாக விக்னேஷ் சிவன் தெரிவித்துள்ளார்.

விக்னேஷ் சிவன் இயக்கி விஜய் சேதுபதி, நயன்தாரா, சமந்தா நடித்துள்ள படம் காத்துவாக்குல ரெண்டு காதல். ரொமான்டிக் காமெடி படமான இதனை ரௌடி பிக்சர்ஸ் மற்றும் செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ளன. இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

இந்த படத்தின் முதல் சிங்கிளான ரெண்டு காதல் பாடல் கடந்த ஆண்டு காதலர் தினத்தன்று வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து செகண்ட் சிங்கிளான டு டு டு பாடல், விக்னேஷ் சிவனின் பிறந்தநாளான செப்டம்பர் 18 ம் திகதியன்று வெளியிடப்பட்டது. அனிருத் இசையமைத்து, தானே பாடி ஆடிய இந்த பாடல் அனைவரிடமும் பாராட்டை பெற்றதுடன், ரசிகர்களையும் பெரிதும் கவர்ந்தது.

இந்நிலையில் படத்தின் அடுத்த பாடலான "நான் பிழை" என்ற பாடல் நாளை வெளியிடப்படும் என விக்னேஷ் சிவன் தெரிவித்துள்ளார். இந்த பாடல் ரிலீசை முன்னிட்டு விஜய் சேதுபதி, நயன்தாரா இருக்கும் புதிய போஸ்டர் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பாடல் எப்படி இருக்கும் என்பதை பார்க்க ரசிகர்கள் ஆர்வமாக காத்திருக்கிறார்கள்.

தமிழ் சினிமாவில் மிகவும் பிரபலமான காதல் ஜோடிகளாக வலம் வரும் விக்னேஷ் சிவன் மற்றும் நயன்தாரா தற்போது புத்தாண்டை கொண்டாட துபாய்க்கு சுற்றுலா சென்றுள்ளனர். அங்கு பல்வேறு இடங்களுக்கு இருவரும் சேர்ந்து சுற்றுலா சென்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல ஆயிரம் கொடுத்து டிக்கெட் வாங்கிய ரசிகர்கள் ... ரத்து செய்யப்பட்டதா சன்னி லியோனின் நடன நிகழ்ச்சி?

சன்னி லியோனை கண்டித்து போராட்டங்கள் நடைபெற்றதால் அவருடைய நடன நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

புதுச்சேரியில் புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு மாநில அரசு அனுமதி அளித்தது. இதனால் நேற்று முன்தினம் புதுவை கடற்கரை பகுதியில் புத்தாண்டு உற்சாகமாக கொண்டாடப்பட்டது.

குறிப்பாக புதுவை பழைய துறைமுக வளாகத்தில் நேற்று முன்தினம் 3 நாட்களுக்கு இசைநிகழ்ச்சி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிகழ்ச்சியில் கவர்ச்சி நடிகை சன்னி லியோன் பங்கேற்பார் என தெரிவிக்கபட்டு இருந்தது. இந்த செய்தி இளைஞர்கள் பலரின் கவனத்தையும் ஈர்த்தது.

சன்னி லியோனை வரவேற்று புதுவையில் ஆங்காங்கே பேனர்கள் வைக்கப்பட்டு இருந்தன. சன்னி லியோன் பங்கேற்பார் என்றதும் ஆயிரக்கணக்கான டிக்கெட்களும் விற்று விட்டன. இதற்காக ரூ. 2500 முதல் ரூ.5000 வரை கட்டணம் வசூலிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆனால் இதற்கு பல்வேறு சமூக அமைப்புகள் சன்னி லியோன் பங்கேற்கும் நிகழ்ச்சிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். போராட்டத்திலும் ஈடுபட்டனர். அவர்கள் பழைய துறைமுக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த சன்னி லியோனின் பேனரை கிழித்தனர். இதற்கிடையே நேற்று முன்தினம் இரவு இசை நிகழ்ச்சி திட்டமிட்டபடி நடைபெற்றது.

ஆனால் இதில் சன்னி லியோன் பங்கேற்றதாக தெரியவில்லை. டிசம்பர் 30 ஆம் தேதி அவர் புதுவை வந்தது உறுதியான நிலையில், அவரை கண்டித்து போராட்டங்கள் நடைபெற்றதால் அவருடைய நடன நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதாக தெரிகிறது.

தொடர்ந்து நடிகை சன்னி லியோன் இரவோடு, இரவாக புதுவையை விட்டு சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது. சன்னி லியோன் பங்கேற்பார் என்று நினைத்து டிக்கெட் வாங்கிய ரசிகர்கள் இதனால் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பெண் எழுத்தாளர்

கலாபூஷணம் சுலைமா சமி இக்பால் 23

மாவனல்லை

கழுத்துறை மாவட்டத்தின் தர்ஹா நகரைப் பிறப்பிடமாகவும் மாவனல்லையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட காலாபூஷணம் சுலைமா சமி இக்பால் 44 வருடங்களாக கலைத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கிறார். இவர் துந்துவையைச் சேர்ந்த மர்ஹூம் அப்துல் சமி, தர்ஹா நகரைச் சேர்ந்த உம்முத்துமீமா சமி ஆகியோரின் புதல்வியாவார். இவரின் கணவர் மாவனல்லையைச் சேர்ந்த அல்ஹாஜ் மௌலவி ஏ. சீ. எம். இக்பால் பாஸி. இவர் எக்மி பதிப்பகத்தின் உரிமையாளராவார்.

இவரது மகள்கள் இருவர் சிறந்த சிறுகதை எழுத்தாளராக பயணித்துக் கொண்டிருக்கின்றனர். இவரது மகன் பிரபல ஓவியராகவும், குறுந்திரைப்பட நடிகராகவும், இயக்குனராகவும் உள்ளார். இவரது கணவர் அண்மையில் காலமாகி விட்டார்.

திருமணத்திற்கு பின் இவர் எழுத்திற்கு ஆர்வமும் ஊக்கமும் தந்தவர் கணவர்தான் என மகிழ்வுடன் கூறுகிறார். இவரின் கணவர் சமூகத்தில் 35 வருடங்கள் வரை ஓர் உலமாவாக பள்ளிவாசல்களில் பணி புரிந்த அவருக்கு சமூகத்தோடு நெருங்கிய தொடர்பிருந்தது. இதனால் கதைகளுக்கு நல்ல கருப்பொருள் தந்தவர் கணவர்தான் எனவும் கடைசியாக வெளியிட்ட "உண்டியல்" எனும் சிறுகதைத் தொகுதியை இவரின் கணவர் அவரின் குரலிலே பதிவு செய்து விழிப்புலனற்றவர்களுக்கு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் இவர் விழிப்புலன் இழந்தவர்களுக்கான கல்வி நெறியில் பயிற்சி பெற்று திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் கண்பார்வையற்ற பிள்ளைகளுக்கு சில வருடங்கள் கற்பித்துள்ளார். தர்ஹா நகர் முஸ்லிம் பெண்கள் மத்தியக் கல்லூரியில் கல்வி கற்று அங்கேயே 3 வருடங்கள் ஆசிரியையாகப் பணிபுரிந்தார்.

1977ம் ஆண்டு பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே எழுதத்த தொடங்கினார். நிறைய பத்திரிகைகளிலும் எழுதியதோடு நிறைய இலக்கியப் போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசில்களும் பெற்றுள்ளார்.1984 முதல் 1995 வரை பத்து வருடங்களாக இலங்கை வானொலியின் மாதர் மஜ்லிஸ்

நிகழ்ச்சிக்கு பிரதித் தயாரிப்பாளராக இருந்தார். இதன் மூலம் எழுதப்படிக்கத் தெரியாதவர்களும் இவர் கருத்தை விரும்பிக் கேட்டார்கள்.

மேலும் இவர் பல்வேறுபட்ட இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டதால் எழுத்திற்காக பிரதேச, மாவட்ட, மாகண,

தேசிய, சர்வதேச ரீதியில் பல பரிசுகளும் தங்கப் பதக்கங்களும் பெற்றுள்ளார். 1997ம் ஆண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை ரீதியில் நடாத்திய "திசைமாறிய தீர்மானங்கள்" எனும் தலைப்பிலான சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றமைக்காக காலஞ் சென்ற அமைச்சர் எம். எச் .எம் . அஷ்ரப் அவர்களால் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் 2008ம் ஆண்டு இந்தியாவில் நர்கிஸ் சஞ்சிகையும், மல்லாரிப் பதிப்பகமும் இணைந்து நடாத்திய சர்வதேச நாவல் போட்டியில் இவர் எழுதிய "ஊற்றை மறந்த நதிகள்" என்ற நாவல் நான்காம் இடத்திற்கான பரிசைப் பெற்றுக்கொண்டது. 2009 ஆம் ஆண்டு அதே இடத்தில் நடந்த சிறுகதை கவிதைப் போட்டிகளிலும் இவரது ஆக்கங்கள் ஆறுதல் பரிசைப் பெற்றுள்ளது.

இவரின் இலக்கியத்துறைப் பயணத்தில் இதுவரை கிடைக்கப்பெற்ற விருதுகளாக

2002 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் 2009 ஆம் ஆண்டு அகில இன நல்லுறவு ஒன்றியம் கலாஜோதி விருதும் 2016 ஆம் ஆண்டு தடாகம் கலை இலக்கிய வட்டம் தமிழ் மாமணி விருதும்

2019 ஆம் ஆண்டு சபரகமுவ மாகாண சபை சர்வதேச மகளிர் தின விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

44 வருட இலக்கிய சேவைக்காக 2020 ஆம் ஆண்டு அரச கலாபூஷண

விருதும் அண்மையில் இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதுவரையில் இவர் ஆறு புத்தகங்கள் வெளியிட்டுள்ளார்.

1. வைகறைப்பூக்கள் : 1987
2. மனச்சுமைகள் : 1988
3. திசைமாறிய தீர்மானங்கள் : 2003
4. ஊற்றை மறந்த நதிகள் : 2009
5. நந்தவனப் பூக்கள் : 2016
6. உண்டியல்

போன்றனவாகும்.

மேலும் இவர் கூறுவதாவது நாம் எழுதும் எழுத்துக்களானது சமூகத்தின் தேவைகள், யதார்த்தங்கள், அவலங்கள், சீர்கேடுகள் என்பவற்றை எழுத வேண்டும். வெறும் கற்பனைகளை விட்டு விட்டு உண்மைகளை எழுதினால் பலருக்கும் பிடிக்கும். தனது கதைகளில் மாற்றுத்திறனாளிகளைப் பற்றி நிறைய எழுதியுள்ளேன் . அவர்கள் அனுபவிக்கும் சோகங்கள், துயரங்கள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை எழுதியுள்ளேன். எனது கதைகள், நாவல் என்பவற்றை இலங்கையின் பார்வையற்றோர் சங்கம் குரல் பதிவாக, இறுவட்டாக பதிவு செய்துள்ளது. இதனால் எனது நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் உள்ள பார்வையற்றவர்கள் கேட்டுப் பயன் பெறுகிறார்கள் என கூறுகிறார்.

இவர் புத்தகங்களை வெளியிடும் போது அடைந்த கஷ்டங்களையும், சிரமங்களையும், வீண் செலவுகளையும் கணவர் அறிந்து கொண்டு தனக்காக, இவர் வெளியீடுகளை பதிப்பிக்கவென எக்மி பதிப்பகத்தை 2006 ஆம் ஆண்டளவில் ஆரம்பித்துள்ளார். இவரது 04 புத்தகங்களையும், மகள் இன்ஷிராஹ் இக்பாலின் 02 புத்தகங்களையும் இன்னும் பிரபலங்கள் சிலரின் புத்தகங்கள் என 15 இற்கும் மேற்பட்ட புத்தகங்களை தனது பதிப்பகத்தால் வெளியிட்டுள்ளார். இத்தனை வருடங்களாக தனது எழுத்துக்களை கம்பியூட்டரில் தட்டச்சு செய்பவரும் அவர் தான். முழுப்புத்தகங்களையும் அவரே தயாரித்து அச்சகங்களுக்கு கொடுப்பார். இப்பொழுது அவர் உயிருடன் இல்லாதது தனக்கும் தன் குடும்பத்திற்கும் மட்டுமல்ல, தன் எழுத்துக்களுக்கும் பாரிய நஷ்டமாகும். அவரின் இறப்பிற்குப் பின்னால் எதையும் எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது எனக் கூறுகிறார்.

இவர் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கு கூறுவதாவது நிறைய நூல்களை வாசிக்க வேண்டும்.

சமூகத்தை நேசித்து சமூகத்திலுள்ள குறைநிறைகளை எழுதப் பழக வேண்டும்.

நமது மார்க்கத்தின் வரையறைக்குட்பட்டு அதன் வரம்புகளை மீறாது சமூகத்திற்கு கொடுக்கவேண்டிய விழிப்புணர்வை கொடுக்க வேண்டும் என வளர்ந்து வருகின்றவர்களுக்கு தனது கருத்துக்களை முன்வைத்து கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் மனம் திறந்து தனது பதில்களை வழங்கியுள்ளார்.

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி.

சசிகலா - பேலியாகொடை

இர்ஷாத் மாஜித்

உமர் கைஸான் - குருநாகல்

சாரீக் அமீன் - மடவள பசார்

திலக் , கௌசி ராஜ் நடிப்பில் கதிரின் இயக்கத்தில், பத்மயனின் இசையிலும், வட்சுவின் ஒளிப்பதிவிலும் தயாரிக்கப்பட்டிருக்கும் படம் அவளதிகாரம்..!ஜெனோசன் ராஜேஸ்வர் தலைமையிலான அவளதிகாரம்..! படக்குழுவினர்.

விதுர்ஷன் - பெரியகல்லாறு

மகேந்திரன்

கிஷாலன் - மோதரை கடற்கரை

செல்ஃபி உலா

ராஜினி - மோதரை

அக்ஷயன் - வத்தளை

ஜெயக்குமார் - ஹுப்புத்தளை

சுபாஷினி - கொச்சிக்கடை

5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

நிறம் தீட்டுங்கள்

இடைவெளி நிரப்புங்கள்

சீ.....பு

நா.....

வா.....து

நா.....காலி

க.....காரு

ஆ.....தை

தே.....

த.....சர்

க.....

ச.....கரம்

வழிகாட்டுங்கள்

சரியான விடையை எழுதுங்கள்



வருமானத்தை விட இறைவனின் அருளை நாடியே சேவையாற்றுகிறேன்

41 வருடங்களாக பள்ளிவாசலில் முஅத்தினாக பணியாற்றும் ரம்ஸி

பள்ளிவாசல்களில் இஸ்லாமிய மார்க்க நெறிமுறைகளை செவ்வனே நெறிப்படுத்தி செயல்படுத்தும் முஅத்தின்மார்களில் நீர்கொழும்பு, பெரியமுல்ல ஜும்மா பள்ளிவாசலின் பிரதம முஅத்தின் அல் ஹாஜ் ஹசன்தீன் மொஹமட் ரம்ஸியும் ஒருவர். அல் ஹாஜ் ஹசன்தீன் மொஹமட் ரம்ஸியை "நான் ரொம்ப பிஸி" பகுதிக்காக பெரியாமுல்ல ஜும்மா பள்ளிவாசலில் சந்தித்தேன்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான 60 வயதுடைய அல் ஹாஜ் ஹசன்தீன் மொஹமட் ரம்ஸி நீர்கொழும்பு, பெரியமுல்ல ஜும்மா பள்ளிவாசலில் 41 வருடங்களாக தொடர்ந்தும் முஅத்தினாக கடமையாற்றி வருகின்றார்.

கேள்வி: நீர்கொழும்பு, பெரியமுல்ல ஜும்மா பள்ளிவாசல் உலகப் புகழ் பெற்றது. சுமார் 150 வருட காலங்கள் பழைமையான இந்த பள்ளிவாசலில் நீங்கள் எவ்வாறு முஅத்தினாக சேர்ந்து கொண்டீர்கள்?

பதில்: இந்த பள்ளிவாசல் எனது வீட்டுக்கு மிகவும் அருகாமையிலே அமைந்துள்ளது. சிறிய வயதிலேயே நான் இந்த பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக வருவேன். அப்போது இந்த பள்ளிவாசலில் காலஞ்சென்ற கண்ணியத்துக்குரிய பெரிய ஆலிம் சாஹிப் பிரதம கதீப்பாக கடமையாற்றிக் கொண்டு இருந்தார். அவர் தென் இந்தியாவின் காயல்பட்டணதைச் சேர்ந்தவர். அவரிடம் மிகவும் பணிவான முறையில் கண்ணியமாக நான் நடந்து கொள்வேன். சிறந்த மார்க்க அறிஞர். அவர் என்னை பாங்கு சொல்வதற்கு அழைப்பு விடுப்பார். அதுதான் பள்ளிவாசலுடன் என்னை தொடர்பு வைப்பதற்கான பிரதான காரணமாகும். இதுவே எனது ஆரம்பமும் ஆகும் .

கேள்வி: உங்களுடைய பாடசாலைக் கல்வியைப் பற்றி கூற முடியுமா ?

பதில்: நான் நீர்கொழும்பு, பெரியாமுல்ல அல் ஹிலால் மத்திய கல்லூரியிலே கல்வி கற்றேன். 7ம் வகுப்பு வரையில் படித்தேன். ஆனாலும், பாடசாலைக் கல்வியை விடவும் பள்ளிவாசல் மற்றும் குர்ஆன் மத்ரஸா ஆகிய இரு இடங்களிலேயே எனது இளமைக் காலம் அதிகமாக கழிந்தது.

கேள்வி: பெரியமுல்ல, ஜும்மா பள்ளிவாசலில் முழு நேர முஅத்தினாக நீங்கள் கடமையாற்ற இணைந்தது பற்றி?

பதில்: பள்ளிவாசலுடன் மிகவும் நெருக்கமாக இருந்த அன்றைய காலகட்டத்தில் அப்போதைய பெரியாமுல்ல ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகக் குழுவே என்னை பள்ளிவாசலின் முழு நேர முஅத்தினாக நியமனம் செய்தது. அப்போது முழு ஊர் மக்களும் எனக்கு ஆதரவு தெரிவித்தனர். அதனை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன்.

கேள்வி: 41 வருடங்களாக பள்ளிவாசலுடனேயே தொடர்பு வைத்து மிக நீண்ட காலத்தைக் கழித்த நீங்கள் உங்களுடைய இளமைக் காலத்தில் நண்பர்களுடன் பழகும் வாய்ப்புக்கள் கிட்டவில்லையா?

பதில்: இஸ்லாமிய மார்க்கக் கல்வியிலேயே எனது முழு ஆர்வமும் இருந்தது. வேறு எவைகளிலும் தொடர்பு வைக்கவில்லை. இதனால் ஜும்மா பள்ளிவாசலிலேயே காலத்தைக் கழித்தேன். 23 வயதிலேயே முழு நேர முஅத்தினாக பள்ளிவாசலில் கடமையாற்றுவதற்கு ஆரம்பித்தேன். மார்க்க அறிஞர்களே எனது இளமைக் கால நண்பர்களாக இருந்தனர்.

கேள்வி: பள்ளிவாசலில் முஅத்தினாக சேர்ந்து சேவை செய்ய ஆரம்பித்த போது உங்களுக்கு ஏதாவது ஊதியம் வழங்கப்பட்டதா?

பதில்: எனக்கு அப்போது சிறிய கொடுப்பனவொன்றை நிர்வாக குழு வழங்கி வந்தது. அதனை நான் மிகவும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டேன்.

கேள்வி: முஅத்தின் வேலை நேரங்கள் எப்படியானவை ?

பதில்: இந்த தொழிலை அல்லாஹ்வின் பொருட்டை நாடியே செய்து வருகின்றேன். தினமும் அதிகாலை 3.00 மணி தொடக்கம் பள்ளிவாசலில் சுபஹ் தொழுகைக்குரிய சகலவிதமான ஏற்பாடுகளையும் செய்வேன். பின்னர், காலை 8 மணியளவில் வீட்டுக்குச் சென்று எனது குடும்ப நலன்களுக்கான விடயங்களையும் மேற்கொள்வேன். முற்பகல் 11.00 மணியளவில் மீண்டும் பள்ளிவாசலுக்கு வந்து லுஹர் தொழுகைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வேன். பின்னர் அஸர் தொழுகைக்காக 3 .00 மணிக்கு வருவேன். இவ்வாறு ஒவ்வொரு தொழுகைக்காகவும் பாங்கு சொல்வதையும் அதேபோன்று தொழுகைக்குரிய ஏற்பாடுகளையும் செய்வேன்.



கேள்வி: புனித மக்கா நகருக்குச் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றும் வாய்ப்பு உங்களுக்கு கிட்டியுள்ளதா ?

பதில்: ஆம், எமது பெரியமுல்ல ஜும்மா பள்ளிவாசலின் முன்னாள் தர்மகர்த்தா மர்ஹும் அல்ஹாஜ். ஆப்தீனின் மூத்த மகன் மர்ஹும் அல்ஹாஜ் கலீல் ஹாஜி அவர்களது சொந்த செலவில் என்னை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா நகருக்கு அனுப்பி வைத்தார் . அவருக்காக நான் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

கேள்வி: கொரோனா வைரஸின் தொற்று மிகவும் தீவிரமாக பரவிக் கொண்டிருந்த காலத்தில் நாட்டிலுள்ள சகல பள்ளிவாசல்களிலும் ஜும்மா தொழுகை மற்றும் ஏனைய தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை.

இதன் போது நீங்கள் கடமை புரியும் பள்ளிவாசலின் நிலைமை எவ்வாறு இருந்தது ?

பதில்: நான் எனது கடமைகளை உரிய நேரங்களில் வந்து ஒழுங்காக செய்தேன். நீர்கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனையின் கீழ் பள்ளிவாசலின் நடவடிக்கைகள் அனைத்தும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டன. அல்லாஹ் போதுமானவன் .

கேள்வி: கொரோனா தடுப்பூசிகளை மக்கள் தற்போது ஏற்றிக் கொண்டுள்ளனர். பள்ளிவாசலில் தொழுகைகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன?

பதில்: பொதுச் சுகாதாரப் பிரிவினர் வழங்கியுள்ள சுகாதார வழிகாட்டலின் அடிப்படையின் கீழ் தொழுகைகள் அனைத்தும் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கேள்வி: பள்ளிவாசலின் கடமைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பகுதி நேர வேலைகள் ஏதும் செய்து வருகின்றீர்களா?

பதில்: எமது பிரதேசத்திலுள்ள சில வீடுகளில் நான் குர்ஆன் ஓதுவதற்கான முறையான பயிற்சிகளை வழங்கி வருகின்றேன். இதனால் எனது முஅத்தின் வேலைக்கு எவ்வித பாதிப்புமில்லை.

கேள்வி: இன்றைய காலகட்டத்தில் வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகரித்துள்ளது. உங்களுடைய வருவாய்கள் அதாவது வருமானங்கள் எவ்வாறு உள்ளது?

பதில்: எமது பள்ளிவாசலின் தற்போதைய நிர்வாகக் குழு என்னுடைய தேவைகளுக்கு ஏற்ப ஊதியமொன்றை எனக்கு வழங்கி வருகின்றது . அதனை வைத்து சமாளிப்பு செய்கின்றேன். மேலும், பகுதி நேர குர்ஆன் வகுப்புகளை நடாத்தியும் சுமாரான வருமானமொன்றையும் பெற்றுக் கொண்டு வருகின்றேன். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கை செலவை சமாளிப்பது தற்போது கஷ்டமான காரியம் தான்.

மொஹமட் ருஸ்மான்

(படங்கள் ; நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

திருமணத்திற்கு தயாராகும் பெண்களுக்கு...!

சரும பராமரிப்பு:

திருமணத்தன்று ஒப்பனை செய்துகொண்டாலும், அழகை மேம்படுத்திக்காட்டுவதற்கு சரும ஆரோக்கியம் முக்கியமானது. திருமண நாளுக்கு மூன்று மாதத்திற்கு முன்பாகவே, முறையான சரும பராமரிப்பை மேற்கொள்ள வேண்டும். இது திருமண நாளின்போது முகத்தின் பொலிவை அதிகரிக்கும். மருத்துவர் மற்றும் அழகுக்கலை நிபுணரின் ஆலோசனையோடு பகல் மற்றும் இரவு நேர சரும பராமரிப்பு முறைகளை செய்ய வேண்டும். ரசாயனப் பொருட்கள் கலந்த அழகு சாதனப் பொருட்களுக்கு பதிலாக, இயற்கை முறையில் தயாரித்த பொருட்களை பயன்படுத்துவது நல்லது.

உணவில் கவனம் தேவை:

விலை அதிகமான கிரீம்கள், பேஸ் பேக்குகள் போன்றவற்றை வெளிப்பூச்சாக பயன்படுத்தினாலும், நாம் உட்கொள்ளும் சத்தான உணவில்தான் சருமத்தின் உண்மையான ஆரோக்கியம் அடங்கியுள்ளது. எனவே ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடுவது அவசியம். எண்ணெய்யில் பொரித்த உணவுகள், துரித உணவுகளை தவிர்த்து காய்கறிகள், பழங்களை உணவில் சேர்த்துக்கொள்வது சருமத்திற்கு சிறந்தது.

உறக்கம் முக்கியம்:

உணவு, சரும பராமரிப்பு போலவே, போதுமான உறக்கம் அவசியமானது. எட்டு மணி நேரம் ஆழ்ந்த அமைதியான இரவு உறக்கம் மன மகிழ்ச்சியை தருவதோடு, உடல் ஆரோக்கியத்திற்கும் வழி வகுக்கும். இது கண்களை சுற்றியுள்ள கருவளையத்தை நீக்குவதோடு, புத்துணர்ச்சியையும் கொடுக்கும்.

உடற்பயிற்சி அவசியம்:

தினமும் மிதமான உடற்பயிற்சிகளை செய்வதன் மூலம், உடலையும், மனதையும் இளமையாக வைத்துக்கொள்ள முடியும். உடற்பயிற்சி செய்வதால் சரும ஆரோக்கியம் மேம்படும். தேவையற்ற கொழுப்பு கரையும். உடலின் ஆற்றல் அதிகரிக்கும். முகத்தின் பொலிவு கூடும். திருமணத்துக்கு பின்பும் இதைப் பின்பற்றலாம்.

மனநலன் பேணுதல்:

உடல் நலன் போலவே, மன நலன் பேணுதலும் முக்கியமானது. திருமணத்தின் மூலம் ஆண்பெண் இடையிலான புது உறவு தொடங்குவதோடு மட்டுமில்லாமல், புதிய சொந்தங்கள், உறவுகள் போன்றவற்றையும் சந்திக்க நேரிடும். அவற்றின் மூலம் வரும் மகிழ்ச்சி, சிக்கல் அனைத்தையும் எதிர்கொண்டு அரவணைத்து செல்ல வேண்டும்.

புத்தகங்களை வெளியிடுவதை...

ஆம் பக்கத் தொடர்ச்சி

கே: இதுவரையில் உங்களை கவர்ந்த எழுத்தாளர் யார்? இறுதியாக நீங்கள் விரும்பி வாசித்த படைப்பு எது?

u: என்னை கவர்ந்த எழுத்தாளர் என்று என்னால் யாரையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் அவர்களின் தனித்துவத்தை கொண்டு எழுதுகிறார்கள். நல்ல கதைகளை கொண்டு எழுதும் அனைத்து எழுத்தாளர்களும் என்னை கவர்ந்தவர்களே. விரும்பி வாசித்த நாவல் எதுவென்றால் “மயங்குகிறாள் மாது” என்ற ஒரு நாவலாகும். மிகவும் மனதை உருக வைத்த நாவலாகும்.

கே: உங்கள் படைப்புக்களுக்கு இதுவரையில் கிடைத்த பாராட்டுக்கள் பற்றி கூறுங்கள்?

u: விருதுகளும், சான்றிதழ்களும் மாத்திரம் பாராட்டு அல்ல “wow,nice, amazing” என்ற சிறு சொற்களும் கூட எனக்கு மிகப்பெரிய பாராட்டாகவே தெரிந்தன. அவை எனக்கு மிகவும் சந்தோஷத்தையும் கொடுத்தன. வாசகர்கள் எனக்கு கொடுத்த சிறிய சிறிய நல்ல விமர்சனங்களும் எனக்கு பெரிய பாராட்டாகவும், ஊக்குவிப்பாகவுமே இருந்தன. முதல் முறை ஒரு பாராட்டு கிடைத்த போது அது எவ்வளவு சந்தோஷம் கொடுத்ததோ அதே அளவு சந்தோஷம் இன்று வரையில் தொடர்கிறது.

கே: உங்களது எதிர்கால முயற்சிகள் பற்றி குறிப்பிடுங்கள்?

u: இதே கேள்வி ஒரு வருடத்திற்கு முன்பு என்னிடம் வினவப்பட்டிருந்தால் நிட்சயமாக எனது ஒரு படைப்பாவது புத்தகமாக வெளிவர வேண்டும் என கூறியிருப்பேன். ஆனால் இப்போது 2 புத்தகங்கள் வெளியிட்டுள்ளேன். இருப்பினும் புத்தகங்கள் வெளியிடுவதை விடவும் முக்கியம் அவை மக்களிடம் சென்றடைவது. இக்காலகட்டத்தில் புத்தகங்கள் வாசிப்போரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அதனால் என்னுடைய எதிர்கால முயற்சியாக வெளிநாடுகளில் பயன்பாட்டில் உள்ளது போன்று இலங்கையில் நடமாடும் இலவச புத்தகசாலை ஆரம்பிக்க முயலுகின்றேன். அதன்மூலமாக சிறுவர் முதல் பெரியவர் வரை வாசிப்பு வளர்ச்சி பெறும் என நம்புகிறேன்.”

கே: உங்களைப் போன்று இலக்கிய துறையில் வளர்ந்து வரும் இளம் படைப்பாளர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

u: நேர் மறையான விமர்சனங்களை எந்தளவு சந்தோஷமாக ஏற்றுக்கொள்கின்றீர்களோ அதே அளவு எதிர்மறையான விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். அப்படி ஒரு மனநிலை உங்களால் உருவாக்கிக்கொள்ள முடியுமாயின் இத்துறையில் நிட்சயம் வளர்ச்சி பெறலாம். இத்துறையில் பயணிக்கும் யாவரும் கசப்பான தருணங்களை கடந்து சென்றே ஆகவேண்டும். அதை சந்தோஷமாக கடக்க முயலுங்கள். இதுவும் கடந்து போகும் என்ற என்று பயணம் செய்தால் எதுவும் கடந்து போவது நிட்சயம்.

கே: இளைஞர்களின் வாசிப்பு குறைந்து இணைய பாவனை அதிகரித்து வரும் இந்நிலையில் வாசிப்பை மேம்படுத்த என்ன செய்யலாம்?”

u:ஆம், அந்தக் காலத்தில் இணையம், தொலைபேசி எதுவும் இல்லாமல் வாசிப்பையே பொழுதுபோக்கை அனைவரும் கொண்டிருந்தனர். ஆனால் தற்போது அப்படி இல்லை வேலைப்பளு, தொலைபேசி, இணையம் எனக் காலம் செல்கிறது. ஆனால் அவர்கள் பாவிக்கும் அதே தொலைபேசி, இணையத்தில் புத்தகங்களை வாசிக்கக்கூடிய வலைத்தளங்களும் அதிகமாகவே காணப்படுகின்றன. அதனைப் பயன்படுத்திக் கூட வாசிப்புத் திறனை தற்கால இளைஞர்கள் வளர்த்து கொள்ளலாம். அதுமட்டுமன்றி, சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பரிசுகள் வழங்கும் போது அதை ஒரு புத்தகமாக கொடுத்தால் ஒரு வாசகரை நிட்சயமாக உருவாக்கலாம் என நம்புகிறேன்.”

பழங்குடி பெண்ணின் போராட்டமே "ஜெய்பீம்"!

மலையடிவார மக்களுக்கு நடக்கும் அநீதியை எதிர்த்து அதிகாரிகளை கண்டித்து போராடிய வழக்கறிஞர் சந்துருவின் உண்மைக்கதை ஜெய்பீம்.

1993ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மலையடிவாரத்தில் வாழும் பழங்குடியினர் பொருளாதார ரீதியாகவும் கல்வி அறிவு இல்லாமலும் வாழ்ந்து வருகின்றனர். இந்த இருளர் இன மக்கள் சந்திக்கும் துயரங்கள் குறித்து வெளியான படமே ஜெய்பீம் திரைப்படமாகும்.

நடிகர் சூர்யா ஜோதிகா இணைந்து தயாரித்துள்ள ஜெய்பீம் திரைப்படத்தில் மணிகண்டன், ரஜிஷா விஜயன், லிஜோ மோல் ஜோஸ், பிரகாஷ்ராஜ் மற்றும் நடிகர் சூர்யா முதலியோர் நடித்துள்ளனர்.

இப்படம் அமிசோன் பிரைம் தளத்தில் (2021 நவம்பர் 2) வெளியிடப்பட்டது. காவல் நிலையத்தில் இருந்து காணாமல் போன கணவனைக் கண்டுபிடிக்க போராடும் பழங்குடி பெண்ணின் போராட்டமே ஜெய்பீம் படம்.

இருளர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர் ராசாகண்ணு. செங்கல் சூலையில் வேலை, பாம்பு பிடித்து காட்டுப்பகுதியில் விடுதல் என எல்லா வேலைகளையும் தனது குடும்பத்திற்காக செய்து வருகிறார். இவரின் மனைவி செங்கேணி கணவர் மீது தீரா காதல் கொண்டவள். இருளர்களின் எலி வேட்டை, பாம்பு பிடித்தல், பேச்சு வழக்கு, சாவு சடங்குகள் என ஒவ்வொன்றையும் நுட்பமாக பதிவு செய்துள்ளார் இயக்குனர் ஞானவேல்.

மனைவி செங்கேணி கணவன் மேல் அதீத அன்பு கொண்டவள். கல்வீடு கட்டித்தருவதே இலட்சியமாக இருக்கும் இந்த தம்பதியினரின் காதல் காட்சிகள் மிக அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் ஊர்த்தலைவரின் வீட்டில் பாம்பு புகுந்துவிட அதை பிடித்து காட்டில் விடுகிறார்.

கல்வீடு கட்டவேண்டும் என்ற கனவில் ஊர் மக்களோடு இணைந்து மாவட்டம் தாண்டி செங்கல் சூலையில் வேலை செய்கின்றார் ராசாகண்ணு. பாம்பு பிடித்த இடத்தில் நகைகள் காணாமல் போக ராசாகண்ணு மேல் திருட்டு பலி விழுகின்றது. ராசாகண்ணுவின் மனைவி, நண்பர்கள், சகோதரிகள் என அனைவரும் பொலிஸாரின் சித்திரவதைக்கு ஆட்படுகின்றனர். பின்னர் ராசாகண்ணுவும் அவரது நண்பர்களான இருட்டப்பன், மொசக்குட்டியும் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிவிடுகின்றனர். கணவரின் நிலை அறியாது கர்ப்பிணி பொண்ணாக தவிக்கிறார் செங்கேணி. கணவரை தேடி பொலிஸ் நிலையத்திற்குச் செல்லும் போது அவளை தரம் குறைவாக நடாத்தும் காவல்துறையினர் அவளின் கணவர் மற்றும் நண்பர்கள் தப்பி சென்றுவிட்டதாக கூறுகின்றனர். உண்மையில் ராசாகண்ணு தப்பித்து விட்டாரா? நகைகளை திருடியது யார்? போன்ற பல கேள்விகளோடு அவர்களுக்கு நியாயம் பெற்றுத் தரும் வழக்கறிஞராக சூர்யா வருகின்றார். பின்னர் சூர்யா வாதாடி அவர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுத்தாரா? இல்லையா என்பதே படத்தின் கதை.

பலரை உண்மையாகவே அந்த கதாபாத்திரத்திற்கு சென்று நடிக்க வைத்திருப்பது போல அதிலும் ராசாகண்ணு கதாபாத்திரத்தில் நடித்த மணிகண்டனும், செங்கேணி கதாபாத்திரத்தில் நடித்த லிஜோ மோல் ஜோஸும் உண்மையிலேயே எம் மனதை கலங்கவைக்கின்றனர். மொசக்குட்டி, இருட்டப்பன் கதாபாத்திரம் அனுபவம் உள்ள நடிகர்களையே மிஞ்சும் அளவுக்கு அசத்தியுள்ளனர்.

பொதுவாக பிரபல நடிகர் என்றாலே ஒரு சண்டை காட்சியை வைத்து விடுவார்கள். ஆனால் நல்லபடியாக இந்த திரைப்படத்தில் சண்டை காட்சியை வைத்து கதை சுவாரஸ்யத்தை குறைக்காமல் இருந்தது நல்லது. அதிகார கட்டமைப்பு தன்னை சார்ந்தவர்களை பாதுகாக்க என்னவெல்லாம் செய்யும் என்பதை சந்துருவாக வரும் சூரியாவிற்கு பணத்தில் பெரிதாக முக்கியத்துவம் இல்லை என்றாலும் கதையை நகர்த்தி செல்லக்கூடிய ஒரு வேடத்தில் சூர்யா நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தில் ஆசிரியையாக வரும் கர்ணன் பட நாயகி ரஜிஷா விஜயனுக்கு ஒரு சில காட்சிகளைத் தவிர பெரிதாக ஒரு வாய்ப்பும் இல்லை. 1995 காலகட்டப் பகுதி குடிசைகள், செங்கல்சூலை, பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என அனைத்திலும் கலை இயக்குனர் கதிரின் உழைப்பு தணித்து தெரிகின்றது. S.R கதிரின் ஒளிப்பதிவு காவல் நிலைய சிறை வன்முறை கொடூரத்தை கண்முன் எமக்குக் காட்டுகின்றன. சோன்ரோல்டனின் இசை படத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்கின்றது. தப்பு பன்றவங்களுக்கு பதவி, பணம், சாதினு நிறைய இருக்கு. பாதிக்கப்பட்டவர்களுக்கு நாமதானே இருக்கம், பொலிஸ்காரங்க பாம்பு கடிச்சி வந்தாலும் காசு வாங்காம வைத்தியம் பார்ப்பேன் சார், ஜனநாயகத்தை நிலை நிறுத்தனும்னா சில நேரங்கள்ல சர்வாதிகாரத்த கையில் எடுத்துதான் ஆகணும், இருக்கங்கள்லையே ரொம்ப மோசமானவன் பொலிஸ்காரன்தானு நினைக்கிற வக்கீலும் ரொம்ப மோசமானவன் வக்கீல்தானு நினைக்கிற பொலிஸ்காரனும் சேர்ந்து இந்த கேஸ்ல உண்மைய கண்டு பிடிக்கப்போரம் போன்ற அழகான

வசனங்கள் படத்தை தாங்கி பிடிக்கின்றன.சிறையில் இருந்து வெளிவந்த கைதிகளை சாதி பெயர் கேட்டு பொலிஸ் துறையினர் கையாளும் விதம் முதல் காட்சியிலேயே நம்மை அதிர வைக்கின்றார் இயக்குனர்

ஞானவேல். நம்பிக்கையை இருளில் இருந்து இருளர்கள் வாழ்வுக்கு வெளிச்சம் போடும் பாதையை இருளர் பாதுகாப்பு சட்டம் தொடங்கிய பின்னணியை பெரும் உழைப்புடன் பதிவு செய்த விதம் அருமையாக இருந்தது.

என்றாலும் ஜெய்பீம் படம் திரையிடப்பட்ட போது அதற்கான விமர்சனங்கள் பலவாறு முன்வைக்கப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குதாக்கல் செய்யப்பட்டது. அந்தவகையில் உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு புனையப்பட்ட இப்படத்தில் உண்மை கதையில் உள்ள பெயரையே திரைப்பட கதாப்பாத்திரங்களுக்கும் வைக்கப்பட்டது. இந்த சம்பவத்தில் வழக்கறிஞராக இருந்த சந்துரு அவர்களின் பெயரையே திரைப்படத்தில் சூர்யா ஏற்றார். இந்த சம்பவத்தை விசாரித்த காவல் துறை அதிகாரி பெருமாள் சாமியின் பெயரே திரைப்படத்திலும் கையாளப்பட்டதோடு இறந்த ராசாகண்ணுவின் பெயரே திரைப்பட கதாபாத்திரத்திற்கும் வைக்கப்பட்டது. இச் சம்பவத்தில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரியின் உண்மையான பெயர் அந்தோணி. ஆனால் திரைப்படத்தில் குரு மூர்த்தி என பெயர் மாற்றப்பட்டுள்ளது. வழக்கு தொடுத்த பார்வதியின் பெயரை திரைப்படத்தில் செங்கேணி எனவும் மாற்றியுள்ளார்கள். இது இக்கதையை திசை திருப்புவதாக அமைந்துள்ளது என குற்றம்சாட்டப்பட்டது. பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக சென்ற ராசா கண்ணு அடித்துக் கொல்லப்படுகின்றார். இந்த செய்தியை பொலிஸ் கான்ஸ்டபிள் SI குருமூர்த்திக்கு தொலைபேசி அழைப்பெடுத்து சொல்கின்றார். குருமூர்த்தியின் வீட்டின் சுவரில் தீச்சட்டி கலண்டர் ஒன்று காணப்படுகிறது. இந்த தீச்சட்டி வன்னியர் சங்கத்தை குறிப்பதாகும். இந்த சம்பவம் நடந்த மாவட்டத்தில் வன்னியர் சமூகத்தினர் அதிக அளவில் வாழ்கின்றனர். அங்கு ஆண்டுதோறும் வன்னியர் சங்கத்தினர் தீச்சட்டி குறியீடுள்ள கலண்டர்களை எல்லோருக்கும் கொடுப்பார்கள். எல்லோரது வீடுகளிலும் இந்த கலண்டர் காணப்படும். எனவே இந்த காவல்துறை அதிகாரி வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதை கூறாமல் கூறுகின்றார் ஞானவேல். வன்னியர் சமூகத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் இந்து சமயத்தை சேர்ந்தவர்கள். இருந்த காரணத்தினால் இந்த சம்பவத்தில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரியின் பெயர் அந்தோனி. (கிறிஸ்டியன் பெயர்) அந்தோனி என்ற பெயர் திரைப்படத்தில் குருமூர்த்தி என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் எப்படி வன்னி சமூகத்தை இழிவு படுத்த முடியும் என்ற கேள்வி எழுகின்றது. இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் பார்வதி. இவருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக அவரை அரவணைத்து அவருக்காக வழக்கு வாதாடியவர் கொம்யுனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோவிந்தன் என்பவர். இவர் ஒரு வன்னிய சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். இவர் பதினாறு வருடங்கள் இந்த சட்ட போராட்டத்தை மேற்கொண்டார். இதற்காக தான் திருமணமும் சொய்துகொள்ளவில்லை. ஆனால் இவருடைய பெயர் திரைப்படத்தில் எந்த இடத்திலும் பயன்படுத்தப்படவில்லை. காரணம் இத்திரைப்படத்தின் இயக்குனர் ஞானவேல் வன்னியர் சமூகத்தை மாத்திரமே குறிப்பிட வந்துள்ளார் என்பதை திட்டவட்டமாக அறிய முடிகின்றது. இத்தகைய அம்சங்களால் இத்திரைப்படம் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் வெற்றி திரைப்படமாக மிளிர்கின்றது.

ரு. திஸ்னாகுமாரி
நான்காம் வருடம்
ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

கொழும்பு டீ. எஸ். சேனாநாயக்க கல்லூரியின் மஜ்லிஸ் உறுப்பினர்கள்

கொழும்பு டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியின் 41 ஆவது வருடாந்த இஸ்லாமிய தினம் கடந்தவாரம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றபோது இஸ்லாமிய மஜ்லிஸ் பொறுப்பாசிரியை பிர்தௌஸியா பாறூக் மற்றும் சக ஆசிரியர், ஆசிரியைகளுடன் பாடசாலை இஸ்லாமிக் மஜ்லிஸ் உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட படம்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.